உ

கணபதி துணை.

ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளின் வரப்பிரசாதியாய்

திருவண்ணாமலையில் எழுந்தருளியிருந்த

ஸ்ரீ அருணகிரிநாதர்

திருவாய்மலர்ந்தருளிய

திருப்புகழ்

மூலமும்-உரையும்.

முதற்பாகம்-100

மூன்றாம் பதிப்பு.

இஃது

வித்வான், சூளை-அப்பன்செட்டியார் மாணாக்கர்

ம-ா-ா-ஸ்ரீ, மாங்காடு,

வடிவேலு முதலியாரால் எழுதப்பட்டு,


புருஷோத்தம் அண்ட் கம்பெனியாரால்,

சென்னை-சூளை,

ஸ்ரீலட்சுமி நாராயண விலாசம் பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1913





ரிஜிஸ்டர் காப்பிரைட்.

ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளின் வரப்பிரசாதியாய் திருவண்ணாமலையில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ அருணகிரிநாதர் திருவாய்மலர்ந்தருளிய திருப்புகழ் பதவுரை:—முதற் பாகமாகிய இப்புத்தகத்தை டருஷோத்தம் அண்ட் கம்பெனியார் அவர்கள், சகல சுதந்திரங்களும் தாமே பெற்றுக்கொண்டபடியால் வேறொருவர் அச்சிடாதபடிக்கு சென்னையிலும், புதுவையிலும், காரைக்காலிலும் காபிரைட் ரிஜிஸ்டர் செய்திருக்கின்றனர்.

மேற்படி யாரனுமதியின்றி யாவரேனும் பேர்மாற்றியாவது, முன்பின் சங்கதிகளைப் புரட்டியாவது, சங்கதிகளைத் திருத்தியாவது, அச்சிடுவாராயின் 1867-ம் வருஷத்திய 25-வது ஆக்டின் 20-வது பிரிவின் 6-வது விதியின்படி நஷ்டத்திற்கு உத்தரவாதிகளாகியும், பினல்கோர்ட்டாரவர்கள் சட்டத்திற்கு விரோதஸ்தர்களுமாவார்களென்றறிக.

மூன்றும் பதிப்பு காபி-1000.

இப்படிக்கு

மாங்காடு-வடிவேலு முதலியார்.

முதற்பதிப்பின் முகவுரை.

கடல் புடைசூழ்ந்த இந்நில வுலகின்கண் மகாமகத்துவம் பொருந்திய திருவண்ணாமலையில் குருபீடமாய் எழுந்தருளி யிருந்த ஸ்ரீ அருணகிரிநாதர் மிகவும் அரிதில் அருளிச்செய்த இந்நூலானது பாலர் முதல்வயோதிகர் ஈறு உள்ளார்க்கு பயன் பட்டுவருதல் யாவரு முணரத்தக்கதே. ஆயின் அந்நூல் பல வேறு சந்தங்களா னமைந்திருப்பதின் கற்றுவல்லோர்க்கும் சொல்முடிபு, பொருள்முடிபு முதலியவைகள் தெற்றென வுணர்தல் அருமையினும் அருமை ஆகலின் நாகரிகம் பரவி வரும் இக்காலத்திலும் அதற்குரிய ஒரு உரை இல்லாதிருப் பின் அதுபெருங் குறைபாமென்றெண்ணி அதற்குத் தக்க ஒரு பதப்பொருள் எழுதியிருக்கின்றனன். இது வெகு விரை வில் நடந்தேறியதால் சில இடங்களில் என்னாலியன்றவாறு எழுதநேரிட்டது. இவ்வுரையில் வழுஉக்கள் எங்காவது உள தாயின் கற்றுவல்லோர் குறைகூறிப் புறஞ்சொல்லாது எடுத் துத் தெரிவிப்பின் அவைகளையும் என்னாலியன்றவாறு எமக்கு அதிலுள்ள சந்தேகங்களையும் பெரும்புலவர் பாலுணர்ந்து மறுபதிப்பில் அச்சிடக் கடைமைப்பட்டவனா யிருக்கிறேன்.

மா. வடிவேலன்.

மூன்றாம் பதிப்பு.

முதலிரண்டு பதிப்புக்களைக் கண்ணுற்ற சிலதிராவிடசிகா மணிகள் எடுத்துக்காட்டிய வழுஉக்களையும் எழுத்துப் பிழை களுங்களைந்து இம்மூன்றாம் பதிப்பு வெளியிடப்பட்டது.

புருஷோத்தம் அண்ட் கோ.

உ

கணபதி துணை.

ஸ்ரீசுப்பிரமணியக்கடவுள் வரப்பிரசாதியாய்

திருவண்ணாமலையில் எழுந்தருளியிருந்த

ஸ்ரீலஸ்ரீ. அருணகிரிநாதர் திருவாய்மலர்ந்தருளிய

திருப்புகழ்.

மூலமும் — உரையும்.

காப்பு.

வெண்பா.

எல்லாரு ஞானத் தெளிஞரே கேளீர்சொல்
கல்லெல்லா மாணிக்கக் கல்லாமோ - பொல்லாக்
கருப்புகழைக் கேட்குமோ கானமயில் வீரன்
திருப்புகழைக் கேட்குஞ் செவி.

(ப-ரை) எல் ஆரும் - பிரகாசம்பொருந்திய, ஞானத்தெளிஞரே (இருவகை) ஞானத்தெளிவையு மடைந்தவர்களே! கேளீர் - (நான் சொல்லுவதைக்) கேளுங்கள், சொல் - சொல்லப்படுகின்ற, கல்லெல்லாம்-(சாதாரண) கற்களெல்லாம், மாணிக்கக்கல்லாமோ-மாணிக்க மென்னும் கல்லாகுமோ? ஆகாது. (அதுபோல) கானம் - காட்டில் வாழ்

கின்ற, மயில்-மயில்வாகனத்தையுடைய, வீரன் - பராக்கிரமசாலியாகிய முருகக்கடவுளுடைய,திருப்புகழைக்கேட்குஞ்செவி-பிரதாபம் விளங்குகின்ற திருப்புகழ் என்னும் நூலைக்கேட்குஞ்செவியானது, பொல்லாத-கொடிய, கருப்புகழை கேட்குமோ-ஜன்மத்தாலுண்டாகும் புகழ்ச்சியைக் (ஜீவகதையை) கேட்குமோ? கேளாது. (எ-று)

ஞானம் தேஜோமயமுடைய தென்பார், 'எல்லாருஞ்ஞானம்' எனவும். உண்மைவிஷயத்தை உணர்வோர்கள் இருவகை ஞானிகளேயென்பார், 'தெளிஞரேகேளீர்' எனவும், மற்றகற்களெல்லாம் இந்நூலாகாவென்பார் 'கல்லெல்லா மாணிக்கக்கல்லாமோ' எனவும் அசுரரை வென்ற மற்றைத் தேவர்கள் போலாது இவன் வென்றது ஞானேயேயென்பார், 'கானமயில் வீரன் எனவும், இறைவன் பெருமையை உள்ளபடியே சிரவணஞ்செய்பவர் வேறு விஷயர்திகளை காதால் கேளாரென்பார் 'பொல்லாக் கருப்புகழைக் கேட்குமோ கானமயில்வீரன் திருப்புகழைக் கேட்குஞ்செவி' எனவுங்கூறினர்.

இங்ஙனமன்றி கானமயில்வீரன் திருப்புகழைக் கேட்குஞ்செவி என்றதை இறைவனுக்கேயாக்கி திருப்புகழைக் கேட்கின்ற இறைவனுடைய செவியானது கருப்புகழைக்கேட்குமோ எனவுரைத்தலுமாம்.

இருவகை ஞானம் என்றது, பரஞானம் அபரஞானங்களே.

கலிவிருத்தம்.

திருப்புகழ் படிக்குமவர் சிந்தைவருவாலே
ஒருத்தரை மதிப்பதிலை யுன்றனருளாலே
பொருப்பரை மிகப்பொருது வென்றுமயின் மீதே
தரித்தொரு நிருத்தவிகை நின்றபெருமாளே.

(பதை) பொருப்பரை-குறிஞ்சிநிலத்தில்வசிக்கும்வேடர்களை, மிக-மிகுதியும், பொருது-போர்செய்து, வென்று-வெற்றிகொண்டு, மயில்

மீதுதரித்து-மயில் வாகனத்தின்மீது ஆரோகணித்து, ஒரு-ஒப்பற்ற, திருத்தணிகைநின்ற-திருத்தணிகையில் எழுந்தருளியிருக்கின்ற, பெருமாளே-சுப்பிரமணியக்கடவுளே, உன்றன் அருளால்-தங்களுடைய திருவருள் விசேஷத்தால், திருப்புகழ்படிக்கும் அவர்-திருப்புகழ் என்னும் நூலைப்படிக்கின்ற அவர்களுடைய, சிந்தை-மனத்தினது, வலுவால்-பலத்தினால், ஒருத்தரை-யாரையும், மதிப்பதில்லை - மதிப்பது இல்லையாகும். (எ று)

முதன் மூன்று வக்களும் அசைகள். பெருமான் பெருமாள் என ஈறுதிரிந்தது.

வள்ளிநாயகியை நோக்கித் தினைப்புனஞ் சென்றகாலத்தில் அங்கு எதிர்த்த வேடர்களோடு யுத்தஞ்செய்து வென்று மயில்மீது ரூபத்தைக் காட்டினாரென்பார், 'பொருப்பரை மிகப்பொருதுவென்று மயின்மீதேதரித்து' எனவும், இச்சொரூபத்தை திருத்தணிகை யம்பதில் எழுந்தருளியிருக்கக் காணலாமென்பார், 'ஒரு திருத்தணிகைநின்ற பெருமாளே' எனவும், இறைவனுடைய திருவருள் விளங்குகின்ற இந்நூலைக் கற்பவர்களுக்குக் கல்வி சாதுரியமும் முருகக்கடவுளுடைய திருவருளுமுண்டா மென்பார், 'திருப்புகழ் படிக்குமவர் சிந்தைவலுவாலே ஒருத்தரை மதிப்பதிலை யுன்றனருளாலே' எனவுங் கூறினார்.

பொருப்பரை என்றதற்கு சூராதிகளுடைய வஞ்சங்களை எனவும் கொள்ளலாம். அன்றி பொருப்பு - பொருப்பர் எனப் போலியாக்கி கிரௌஞ்சகிரியை எனவும் கொள்ளலுமாம்.

எண்சீர்க்கழி நெடில் ஆசிரியச் சந்தவிருத்தம்.

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
யீசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே

கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொரு ணீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்தபெரு மாளே

(ப-ரை) ஆதி-பிரதமக்ஷேத்திரமான, அருணாசலம் அமர்ந்த-திருவண்ணாமலையில் எழுந்தருளியிருந்த, பெருமாளே!- முருகக்கடவுளே, ஏறும்- ஆரோகணிக்கத்தக்க, மயில்ஏறி - மயில்வாகனத்தின்மேல்ஏறி, விளையாடும் முகம்ஒன்றே-திருவிளையாடல் செய்கின்ற முகம் ஒன்றும், ஈசனுடன்-பரமேசுவரனோடு, ஞானமொழி-ஞானோபதேசமான வார்த்தைகளை, பேசும்முகம் ஒன்றே-பேசுகின்ற முகம்ஒன்றும், கூறும்-சொல்லுகின்ற, அடியார்கள் வினை-அடியார்களுடைய இருவினைகளை தீர்க்குமுகம் ஒன்றே- ஒழிக்கின்றமுகம் ஒன்றும், குன்றுருவ-கிரௌஞ்சகிரியானது உருவும்படி, வேல்-வேலாயுதத்தை, வாங்கி நின்றமுகம் ஒன்றே-விட்டிருந்த முகம் ஒன்றும், மாறுபடு-விரோதித்த, சூரரை-சூரபன்பன் முதலியவர்களை, வதைத்த முகம் ஒன்றே-கொன்ற முகம் ஒன்றும், வள்ளியை - வள்ளிநாச்சியாரை, மணம்புணர - கலியாணஞ்செய்துகொள்ள, வந்த-எழுந்தருளிவந்த, முகம்ஒன்றே-முகம்ஒன்றும், (ஆக) ஆறுமுகம் ஆனபொருள்-ஆறுமுகமாக எழுந்தருளினபொருளே, நீ அருளல்வேண்டும்-நீ திருவருள்செய்ய வேண்டும். (எ-று)

ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுள் ஆறுமுகத்துடன் அமர்ந்திருந்து ஒவ்வொரு கிர்த்தியங்களிலும் ஒவ்வொரு முகத்துடன் செய்தார் என்பது கருத்து.

ஈசனுடன் ஞானமொழி |பேசலாவது பிரமதேவனைக் குறித்து பரமேசுவரனுக்கு பிரணவோபதேசஞ் செய்தமை.

சர்வ காரியங்களையும் நிறைவேற்றுதற்கே ஆறு திருமுகங்களுடன் வெளிவந்தாரென்பார், 'ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்' எனக் கூறினர்.

இதுவன்றி நக்கீரதேவர் திருவாய் மலர்ந்தருளிய திருமுருகாற்றுப்படையில்,

"மாவில் கொள்கைத் தந்தொழின் முடிமார்
மனனேர் பெழுதரு வாணிற முகனே
மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுக மொருமுக
மார்வல ரேத்த வமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்து வரங்கொடுத் தன்றே யொருமுக
மந்திர விதியின் மரபுளி வழாது
அந்தணர் வேள்வியோர்க் குமே யொருமுக
மெஞ்சிய பொருளை யேமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் குமே யொருமுகஞ்
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கி
கருவிகொள் நெஞ்சமொடுகளம் வேட்டன்றே யொருமுகம்
குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றேயாங்கம்
மூவிரு முகனு முறையமர்ந் தொழுகலின்' என்று புகன்றிருக்கின்றமையினறிக.

விநாயகர் துதி.

1. தத்தன தனதன தத்தன தனதன
தத்தன தனதன — தனதான.

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகு

மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை யுத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட வெழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த வச்சிவ னுறைரத
மச்சது பொடிசெய்த வதிதீர
வத்துய ரதுகொடு சுப்பிரமணிபடு
மப்புன மதனிடை யிபமாகி
யக்குற மகளுட னச்சிறு முருகனை
யக்கண மணமருள் பெருமாளே

(ப-ரை) கைத்தலம்-கைகளில், நின்ற-நிறைந்திருக்கின்ற, கனி-கனிகளும், அப்பம்-அப்பமும், அவல் அவலும், பொரி-பொரியும், கப்பிய - உண்ணுகின்ற, கரிமுகன் - யானைமுகத்தையுடைய விநாயகனுடைய, அடி-திருவடிகளை, பேணி-பணிய, கற்றிடும்-கற்றுக்கொண்ட, அடியவர் - அடியார்களுடைய, புத்தியில்-மனத்தின்கண், உறைபவர்-வசிக்கப் பெறுபவர் வினை-இருவினையானது, கற்பகம் என-கற்பக விருக்ஷத்தின் வண்டுபோல, கடிது-சீக்கிரமாக, ஏகும்-போகும், (ஆகையால்) மத்தமும்-ஊமத்தை மலரையும், மதியமும்-சந்திரனையும், வைத்திடும்-தரித்திருக்கின்ற, அரன்மகன்-சிவபெருமானுக்குப் புத்திரனாகிய, மல்-மல்யுத்தத்தில், பொரு - வெற்றிபொருந்திய, திரள்புயம்-திரண்ட புஜங்களையுடைய, மதயானை-மும்மதங்களையுடைய யானையும், மத்தள வயிறனை-மத்தளம்போலும் வயிற்றினையுடையவனும், உத்தமி புதல்வனை-உத்தமியாகிய பரமேசுவரியின் திருக்குமாரனும், (ஆகிய) முத்

தமிழ் அடைவினை-இயல் இசைநாடகம் என்னும் மூன்று தமிழ்களின் கிரயத்தை, முற்படு கிரிதனில்-தலைமையாகிய மேருமலையில், முற்பட-தலைமைப்பட, எழுதிய-எழுதின, முதல்வோனே-முன்னவனே, முப்புரம்-திரிபுரங்களையும், எரிசெய்த எரித்த, அச்சிவன்-அந்தச்சிவபெருமானவர், உறை - எழுந்தருளிய, ரதம்-ரதத்தினுடைய, அச்சது-அச்சினை, பொடிசெய்த-ஒடித்துப்பொடியாக்கிய, அதிதீர-மிகுந்த தைரியமுடையவனே, அத்துயரது-அந்தத்துன்பத்தை, கொடு-கொண்டு, சுப்பிரமணி-முருகக்கடவுளானவர், படு-அடைந்த, அப்புனம் அதனிடை-அந்தத் தினைப்புனத்தில், இபமாகி-யானையாய், அக் குறமகளுடன்-அந்தவேடப்பெண்ணாகிய வள்ளிநாச்சியாருடன், அச்சிறு முருகனை-தனக்குச்சிறியவராகிய அந்த முருகக்கடவுளை, அக்கணம்-அந்தச் சமயத்தில், மணம் அருள் - விவாகஞ்செய்வித்த, பெருமாளே-பெருமாளே! (உன்னை) மட்டு-மணமானது, அவிழ்-வீசுகின்ற, மலர்கொடு-புஷ்பங்களைக்கொண்டு அர்ச்சனைசெய்து, பணிவேன்-வணங்குவேன்.

முத்தமிழ் அடைவுஎன்றது பாரதத்தை, இதை ஸ்ரீவிநாயகக் கடவுள் மேருமலையாகிய ஏட்டினில் தமது கொம்பாகிய எழுத்தாணியால் எழுதினாரென்பது இதனை.

"நீடாழியுலகத்து மறைநாலொடைந்தென்று நிலைநிற்கவே
வாடாததவவாய்மைமுனிராஜன் மாபாரதஞ்சொன்னநாள்
ஏடாகமாமேருவெற்பாகவங்கூரெழுத்தாணிதன்
கோடாக வெழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ"
[என்பதினாலும்,

(முப்புரமெரிசெய்த வச்சிவனுறைரத - மச்சதுபொடிசெய்த). என்றது

சிவபெருமான் திரிபுரங்களைச் சங்காரஞ்செய்யு நிமித்தம் தேவதச்சனால் கொண்டுவோ்து விடப்பட்ட ரதத்தின்மேல் ஸ்ரீவிநாயகக்கட

வுளை துதிக்காமல் ஆரோகணித்ததால் அந்தாதத்தின் அச்சு ஒடிந்த தென்பது இதனை.

> "தச்சுவிடுத்தலுந் தாமடியிட்டலும்
> அச்சுமுறிந்ததென்றுந் தீபற
> அழிந்தனமுப்புரமுந்தீபற" என்பதினாலும்,

'அத்துயரதுகொடு சுப்பிரமணிபடு மப்புனமதனிடை யிபமாகி அக்குறமகளுட னச்சிறுமுருகனை யக்கணமணமருள் பெருமாளே' என்றது ஸ்ரீ சுப்பிரமணியரை யணைவதற்குத் தவம்புரிந்த திருமால் புத்திரியாராகிய வள்ளிநாய்ச்சியார் குறவர் குலக்கொடியாய்த் தினைப்புனங் காத் தமரும்போது அவர் திருக்கருத்து முற்றும்படி இளைய பிள்ளையார் விருத்தவடிவாய்ச் சென்றுகுறையிரக்க, அவ்வேண்டு கோளுக்கிணங் காத அவ்வள்ளியாரிணங்க மூத்தபிள்ளையாரை நினைத்தருளியகாலத்தில் அவர் யானைவடிவங்கொண்டு சினந்து வருவதற்கு அஞ்சி அந்நாய்ச்சியார் இறுகப்புல்லினர் என்பது இதனை.

> " அந்தப்பொழுதி லறுமாமுகற்கிரங்கி
> முந்திப்படர்கின்ற மொய்குழலாள்முன்னாகத்
> தந்திக்கடவுட்டனி வாரணப்பொருப்பு
> வந்துற்றதம்மா மறிகடலேபோன்முழங்கி"

> " அவ்வேலையில்வள்ளி யச்சமொடுமீண்டுதவப்
> பொய்வேடங்கொண்டுநின்றபுங்கவன்றன்பாலணுகி
> இவ்வேழங்காத்தருள்கவெந்தைநீர்சொற்றபடி
> செய்வேனெனவொருபாற் சேர்ந்துதழீஇக்கொண்டனளே?

ன்பவற்றால் அறிக.

சுப்பிரமணியர் துதி.

2. தத்தத்தன தத்தத்தனதன
தத்தத்தன தத்தத்தனதன
தத்தத்தன தத்தத்தனதன— தனதான.

முத்தைத்தரு பத்தித் திருநகை
யத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர — னெனவோது
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்து மூவர்க்கத் தமரரு — மடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
மொற்றைக்கிரி மற்றைப்பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியி — லிரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயன் மெச்சித் தருபொருள்
பட்சத்துடன் ரட்சித் தருளுவ — தொருநாளே
தித்தித்திசை யொக்கப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்க நடிக்கக் கழுகொடு — கழுகாடத்
திக்குப்பரி வட்டக் கலைகொடு
சித்ரப்பவு ரிக்குத் திகுதிகு
திக்குத்திகு திக்குத்ரிகடக — மெனவோதும்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப்பிடியென முதுகூகை
கொட்புற்றெழு நட்புற்றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக்குலகிரி
குத்துப்பட வொற்றிப்பொரவல பெருமாளே

(ப-ரை) முத்தைத்தரு-முத்தைப்போன்ற, பத்தி திருநகை-தந்த பந்தியையுடைய, அத்திக்கு இறை - தெய்வயானைக்குத்தலைவனாகிய, சத்தி-வேலாயுதத்தையுடைய, சரவணன்-சரவணபவனும், முத்திக்கு-மோட்சத்துக்கு, ஒருவித்து-ஒப்பற்றவித்தும், குருபரன்-உயர்ந்தஞானாசிரியனுமாவன், எனஓதும்-என்றுசொல்லுகின்ற, முக்கண் பரமற்கு-மூன்றுகண்களையுடைய சிவபெருமானுக்கு, சுருதியின் முற்பட்டது-வேதங்களில் முதன்மையாகிய பிரணவத்தை, கற்பித்து-உபதேசஞ் செய்து, இருவரும்-பிரமவிஷ்ணுக்களிருவரும், முப்பத்து மூவர்க்கத்து அமரரும்-முப்பத்து முக்கோடி தேவர்களும், அடிபேண-திருவடிகளை வணங்கவும், பத்துத்தலைதத்த - இராவணனுடைய பத்துத்தலைகளும் தத்தும்படி, கணைதொடும்-பாணப்பிரயோகஞ்செய்த, ஒற்றைகிரி-உதய கிரியில், மற்றைப்பொழுது-வேறோர்நாளில், ஒருபட்டப்பகல்-ஒருநடுப் பகலில், வட்டத்திகிரியில்-சக்கரவாளகிரியில், இரவாக-இராத்திரியாக, பத்தற்கு-அர்ச்சுனனுக்கு, இரதத்தைக்கடவிய-இரத சாரத்தியஞ்செய்த, பச்சைப்புயல்-விஷ்ணுவானவர், மெச்சித்தருபொருள்-மகிழ்ந்துகொடுத்த பொருளாகிய வள்ளி நாய்ச்சியாரை, ரட்சித்தருளுவது காப்பாற்றுவதும், ஒருநாளே-ஒருநாளில், தித்தி-தித்தியென்கிற சத்தமான் திசைஒக்க-அஷ்ட திசைகளிலும் ஒன்றாக, பரிபுரநிர்த்தப் பதம்வைத்து-நூபுரத்தை யணிந்தநடனஞ் செய்கின்ற திருவடிகளால், பயிரவி-பயிவியென்னும் ராகதாளங்களால், திக்கொக்கநடிக்க-அஷ்டதிசைகளிலுங்

கேட்குப்படி நடனஞ்செய்ய, கழுகொடுகழுகாட- கழுகுக்களெல்லாங் கூத்தாடவும், திக்குப்பரிவட்டக்கலைகொடு-திக்குகளில் பரிவட்டமென்கிற கலையைக்கொண்டு, சித்ரப்பவுரிக்கு-விநோதமாகிய பவுரிக்கூத்தில், திகுதிகு திக்குத்திகு திக்குத்திரிகடகமென வோதும்-இந்தநாதத்தோடு சொல்லப்படுகின்ற, கொதுப்பறைகொட்ட - மிக்கவாத்தியங்கள் சத்திக்க, களமிசை-யுத்தகளத்திலே, குக் குக் குகு குக் குக் குகுகுகு-என்கிற சத்தத்துடன், குத்திப்புதைபுக்குப்பிடி என-குத்திப்புதைபுகுந்து பிடிஎன்று, முதுகூகை-கிழக்கூகைகள் கூவ, கொட்புற்றெழு-பராக்கிரமத்தோடு எழுகின்ற, நட்புற்ற-விருப்பங்கொண்டு, அவுணரை-இராட்சதர்களை, வெட்டிப்பலியிட்டு-கொன்றுபலிகொடுத்து, குலகிரிகுத்துப்பட-கிரௌஞ்சகிரியானது குத்துப்பட, ஒற்றி-மோதி, பொரவல்ல வெற்றியடைய வல்லமையுள்ள, பெருமாளே-முருகக்கடவுளே.

அத்திக்கிறை என்றது தெய்வயானையை அத்தியென்னும் சாதாரண யானைகளுக்கு தேவலோகத்து யானை தலைமைத் தன்மை பூண்டிருத்தலின் என அறிக.

திருப்பரங்கிரி.

3\. தனத்தனந்தன தனதனதனதன
தனத்தனந்தன தனதனதனதன
தனத்தனந்தன தனதனதனதன—தனதான.

அருக்குமங்கையர் மலரடிவருடியுங்
கருத்தறிந்தபி னரைதனிலுடைதனை
யவிழ்த்துமங்குள வரசிலைதடவியு மிருதோளுற்
றணைத்துமங்கையி னடிதொறுநகமெழ
வுதட்டைமென்றுப விடுகுறிகளுமிட
வடிக்களந்தனின் மயில்குயில்புறவென மிசவாய்விட்

டுருக்குமங்கையின் மெழுகெனவுருகிய
சிரத்தைமிஞ்சிடு மநுபவமுறுபவ
முரக்கையின்கனி நிகரெனஇலகிய முலைமேல்வீழ்ந்
துருக்கலங்கிமெ யுருகிடவமுதுகு
பெருத்தவுந்தியின் முழுகிமெயுணர்வற
வுழைத்திடுங்கன கலவியைமகிழ்வது தவிர்வேனோ
இருக்குமந்திர மொழிவகைமுனிபெற
வுரைத்தசம்ப்ரம சரவணபவகுக
விதத்தவிங்கித மிலகியவறுமுக வெழில்வேளென்
றிலக்கணங்களு மியலிசைகளுமிக
விரிக்குமம்பல மதுரிதகவிதனை
யியற்றிசெந்தமிழ் விதமொடுபுயலிசை புனைவோனே
செருக்குமம்பல மிசைதனிலசைவற
நடித்தசங்கரர் வழிவழியடியவர்
திருக்குருந்தடி யருள்பெறவருளிய குருநாதா
திருக்குழந்தையு மெனவவர்வழிபடு
குருக்களின்திற மெனவருபெரியவ
திருப்பரங்கிரி யுறைபவசரவண பெருமாளே.

(ப-ரை) இருக்கு இருக்குவேதத்திற் சொல்லுகின்ற, மந்திரம்-மந்திரங்களின், மொழிவகை சொல்லுங்கிரமங்களை, முனிபெற-அகஸ்திய முனிவர் அடையும்படி, உரைத்த-உபதேசஞ்செய்த, சம்ப்ரம-சம்ப்ரமனே, சரவணபவ-சரவணபவனே, குக-குகனே, இதத்த இங்கித மிலகிய-மிக்க இன்பமான உட்குறிப்பை வெளியில்காட்டுகின்ற, அறுமுக-ஆறுதிருமுகங்களையுடையவனே, எழில்வேள்-அழகியமதனனே,என்று என்று, இலக்கணங்களும்-இலக்கணநூற்களும், இயல் இசைத்தமிழ்

களும்-இயல்களும் இசைகளும், மிகவிரிக்கும்-வெகுவாக விரித்துப்பேசுகின்ற, அம்பல-அழகிய பலவகைப்பட்ட, மதுரித-இனிப்பான, கவிதனை-திருப்பாடல்களை, இயற்றுசெந்தமிழ்விதமொடு-செந்தமிழ் நடையில் யாப்பிலக்கணத்தின் கிரமத்தோடு, புயமிசைபுனைவோனே-தோளில்தரிப்பவனே! செருக்கும்-வெற்றிபேசுகின்ற, அம்பலமிசைதனில்-அம்பலத்தின்கண், அசைவற-யாதோரசைவுமில்லாமல், நடித்தசங்கரர்-நடனஞ்செய்த சிவபெருமானுக்கு, வழிவழியடியவர்-பாரம்பரியமாக வந்த அடியார், திருக்குருந்தடி - திருக்குருந்த மரத்தின் கீழ், அருள்பெற - திருவருள்பெற, அருளிய-திருவருள்செய்த. குருநாதா-ஆசாரிய மூர்த்தியே, திருக்குழந்தையும் என-அழகிய குழந்தையுமாவாயென்று, அவர்-அச்சிவ பெருமானானவர், வழிபட்டு-வணங்கிய, குருக்களின் திறம்என - ஆசாரியமூர்த்தியின் தன்மையாக, வரும் - வெளிவந்த, பெரியவ-தலைவனே. திருப்பரங்கிரி யுறைபவ-திருப்பரங்கிரி என்னும் திவ்யக்ஷேத்திரத்தில் வசிப்பவனே! சரவணபெருமாளே-சரவணப் பொய்கையில் வளர்ந்த முருகக்கடவுளே, மங்கையர்-பெண்களுடைய, அருக்கு-அரக்கைப்போன்ற, மலரடிவருடியும்-மலரடிகளைப் பிடித்தும், கருத்தறிந்தபின்- (அவர்களுடைய) உள்ளக்கருத்தை யுணர்ந்தபின்னர், அரைதனில்-அரையில், உடைதனை-வஸ்திரத்தை, அவிழ்த்தும்-நீக்கியும், அங்குள்ள அரசிலை தடவியும்-அவ்விடத்தி லிருக்கின்ற அரசிலை ரூபத்தைத் தடவியும், இருதோள்உற்று-இரண்டு தோள்களைப் பொருந்தி, அணைத்தும்-சேர்த்தும், அங்கையின்-அழகிய கைகளினால், அடிதொறும்-இடங்களெல்லாம், நகம்எழு-நகக்குறிதோன்ற, உதட்டை மென்று-உதட்டைக்கடித்தும், பல்இடு-பல்லாற் கறிக்கப்பட்ட, குறிகளும்இட-அடையாளங்களையுங் கொடுக்க, அடிக்களந்தனில்-அடிக்கழுத்தினால், மயில்குயில்புறவு என-மயிலென்றும், குயிலென்றும், புறா என்றும், மிகவாய்விட்டு-மிகுதியாக வாயாற்சொல்லியும், உருக்கும் அங்கியின்மெழுகென உருகிய-உருக்குகின்ற நெருப்பிற்பட்ட மெழுக்கைப்போல உருகின, சிரத்தைமிஞ்சிடு-மிகுந்த சிரத்தையுடைய, அறபலம்

உறபவம்-அறுபவமானது பொருந்திய பவரூபத்தையுடைய, உரக்கையின் கனிக்கிரளனைய-மார்பினிடத்தில் சனிக்கு ஒப்பாக, இலகிய-விளங்குகின்ற, முலைமேல்வீழ்ந்து-முலையின்மேல் விழுந்து, உருகலங்கி-மனங்கலங்கி, மெய்யுருக்கிட-சரீரமானது உருக, அமுதூறும்-அமிர்தத்தைச் சிந்துகின்ற, பெருத்த உந்தியின் முழுகி-பலத்தசுழியில் முழுகி, மெய் உணர்வற - உண்மையுணர்ச்சியானது ஒழிய, உழைத்திடும்-வருத்துகின்ற, கனகலவிமைய உடர்ந்த புணர்ச்சியை, மகிழ்வது-மகிழ்ச்சிகொண்டிருப்பதை; தவிர்வேனோ-விடுவேனோ. (எ-று)

'கருத்தறிந்தபின் அரைதனில் உடைதனையவிழ்த்து மங்களவாதிலை தடவியும் என்றது' ஒரு பெண்ணானவள் ஒரு புருஷனை இச்சித்தபோது அவன் தன்னோடு கலவிசெய்ய விரும்பினதையும் விரும்பாததையுமுணர்ந்தே அவளிடத்தில் சரசசல்லாப லீலைவிளைக்க வேண்டும். அங்ஙனம் விளைக்குங்கால் அவளுடைய கருத்தையுள்ளபடி யுணர்ந்த பின்னரே அவளுடைய வஸ்திரத்தை யவிழ்த்து மதனநூலிற்சொல்லிய லீலைகளி லொன்றாகிய அல்குலைத் தடவுதல் என்னும் லீலையைச் செய்யலாமென்பது.

கனியிருப்பது மரத்திலாதலின், மார்பை மரத்திற்கு உவமித்துக் கூறினர்.

உதட்டைக்கறித்தல் நகக்குறி உண்டாக்குதல் முதலியவை கலவியின் அங்கங்களெனவறிக.

4. தனத்தனந்தன தனதனதனதன
தனத்தனந்தன தனதனதனதன
தனத்தனந்தன தனதனதனதன—தனதான.

கறுக்குமஞ்சன விழிபிணையயில்கொடு
நெருக்கிநெஞ்சற வெறிதருபொழுதொரு
கனிக்குளின்சுவை யமுதுகுமொருசிறு " நகையாலே

களக்கொடுங்கலி வலைகொடுவிசிறிய
மனக்கெழுந்திரு மெனமனமுருகவொர்
கவற்சிகொண்டிட மனைதனிலழகொடு கொடுபோகி
நறைத்தபஞ்சணை மிசைதனின்மனமுற
வளைந்தணைந்தவி னிணைமுலையதிர்பொர
நகக்கழுந்திட வமுதிதழ்பருகிய மிடறாடே
நடித்தெழுந்தால் குழகுழகுழவென
விசைக்குநன்கொடு மனமதுமருகிட
நழுப்புநஞ்சன சிறமிடுபமற வருள்வாயே
நிறைத்ததெண்டிரை மொகுமொகுமொகுவென
வுரைத்தரஞ்சுளி முடிநெறுநெறுவென
நிரைத்தவண்டமுங் கிடுகிடுகிடுவென வரைபோலும்
நிவர்த்ததிண்கழ னிசிசரருமொடு
சிரக்கொடுங்குவை மலைபுரைதர விரு
நிணக்குழம்பொடு குருதிகள்சொரிதர வடுதீரா
திறற்கருங்குழ லுமையவளருளுறு
புழைக்கைகமும்மத கயமுகமிகவுள
சிவக்கொழுந்தென கணபதியுடவரு மிளையோனே
சினத்தொடுஞ்சம ணுரைபடநிறுவிய
பரற்குளன்புறு புதல்வநன்மணியுகு
திருப்பரங்கிரி தனிலுறைசரவண பெருமாளே.

(ப-ரை) நிறைத்த-வரிசையான, தெண்டிரை-தெளிந்த அலைகளையுடைய சமுத்திரமும், மொகுமொகுமொகுவென-மொகுமொகுமொகு

வெனவும், உரத்த-மார்பிலுள்ள, கஞ்சுளி-சட்டையும், முடி-சிரசும், நெறு நெறுவென-நெறுநெறுவெனவும், நிரைத்த-வரிசையாகிய, அண்டமும்-அண்டங்களும், கிடுகிடுகிடுவென-கிடுகிடுகிடுவெனவும், வரைபோலும்-மலையைப்போலும், நிவர்த்த-உயர்ந்த, திண்கழல்-பலம்பொருந்திய வீர கண்டாமணியைத்தரித்த, நிசிசரர் - இராட்சதர்களுடைய, உரமொடு-மார்பினுடன், சிரம்-தலைகளுமாகிய, கொடுந்தலை-கொடியகூட்டங்கள், மலைபுரைதர - மலையைப்போலாகவும், இரு-நிருத்த, திணக்குழம்பொடு-நிணக்குழம்புகளும், குருதிகள்-இரத்தங்களும், சொரிதர-சிந்தவும், அடு திரா-அடித்துக்கொன்ற தமியிபரமுள்ளவனே! திறன்-வெற்றிபொருந்திய, கருங்குழல்-கறுத்த கூந்தலையுடைய, உமையவள்-உமாதேவியினுடைய, அருள்உற-திருவருளைப் பெற்றிருக்கின்ற, புழைக்கை-துவாரம் பொருந்திய துதிக்கையையும், முப்பதம்-மூன்று பதங்களையுமுடைய கயம்முகம்-யானைமுகத்தை, மிகவுள-மிகவும் பெற்றிருக்கின்ற, சிவக்கொழுந்தென-சிவக்கொழுந்தைப்போல, கணபதியுடன்வரும் - விநாயகக்கடவுளுடன் எழுந்தருளிவருகின்ற, (இளையோனே) முருகக்கடவுளே! சினத்தொடும் - கோபத்துடனே, சமன்-எமனானவன், உதைபட - உதைபடும்படி, நிறுவிய-நிறுத்தின, பரற்கு-சிவபெருமானுக்கு, உள்-மனத்தில், அன்புற-மிகுந்த அன்பையுடைய, புதல்வ-குமாரனே-நல்மணியும்-- நல்ல ரத்தினங்களைச் சிந்துகின்ற, திருப்பரங்கிரிதனில்-திருப்பரங்கிரி என்னுமிடத்தில், உறை-வாசஞ்செய்கின்ற, சரவணபெருமாளே சரவண பவனென்னும் பெருமாளே, கறுக்கும்-கறுத்த, அஞ்சனம்-மைதீட்டிய, விழியினை-இரண்டுகண்களாகிய, அயில்கொடு-வேலாயுதத்தைக்கொண்டு, நெருக்கி - வருத்தப்படுத்தி, நெஞ்சுற - மனத்தில் பொருந்த, எறிதருபொழுது வீசும்பொழுது, ஒருகனிக்குள்-ஒருபழத்திற்றுள், இன்சுவை-இனிமையாகிய சுவையையுடைய, அமுது-அமிர்தத்தை, உகும்-சிந்துகின்ற, ஒரு சிறுநகையாலே-ஒப்பற்ற புன்சிரிப்பினால், களம்-கள்ளத் தன்மையயுடைய, கொடுங்கலி-கொடுமையான

துன்பமாகிய, வலைகொடுவிசிறி-வலையைக்கொண்டுவிசிறி, எம்மனைக்கு-எம்முடைய வீட்டுக்கு, எழுந்திரும்என-எழுந்திருங்களென்று, மன முருக-மனமானது உருகும்படி, ஒரு கவற்சிகொண்ட-ஒரு விருப்பமுண்டாக்க, மனைதனில்-வீட்டில், அழகொடு கொடுபோகி - அழகுடனே அழைத்துக்கொண்டுபோய், கறைத்தபஞ்சணை மிசைதனில் - குற்றம் பொருந்திய பஞ்சுசயநத்தில், மனம்உற-மனம்பொருந்த, கலவியின்-சம்போகத்தில், இணைமுலை எதிர்பொர - இரண்டு முலைகளும் எதிரே மோத, நகத்து-நகத்தினால், அழுந்திட-அழுந்தும்படி, அமுது-அமிர்தம் பொருந்திய, இதழ் - இதழினை, பருகிய - குடித்த, மிடறூடே-கழுத்துடனே, நடித்து-நடனஞ்செய்து, எழுங்குரல்-கிளம்புகின்ற குரலானது, குமுகுமுகுமுவென-குமுகுமுகுமுவென்று, இசைந்து-சொல்லி, நன்கொடு-நன்மையுடனே, மனமது-மனமானது, மறுகிட-வருந்த, நழுப்பு-கருவுகின்ற, நஞ்சன-விஷம்போன்ற, சிறுமியர்-சிறுபெண்ணினுடைய, துயர்அற-துன்பமானது ஒழிய, அருள்வாய்-திருவருள் செய்வாய் எ-று.

5. தனதந்தன தந்தன தந்தன
தனதந்தன தந்தன தந்தன
தனதந்தன தந்தன தந்தன—தனதான.

சருவும்படி வந்தன னிங்கித
மதனென்றிடு மம்புலி யுஞ்சுடு
தழல்கொண்டிடு மங்கையர் கண்களின் வசமாகி

சயிலங்களு மன்றல் பொருந்திய
பொழிலின்பயில் தென்றலு மொன்றிய
தடவஞ்சனை தன்றி யெழுந்திடு திறமான-

இரவும்பக லன்றியு நின்றிடு
குயில்வந்திசை தந்தன் வென்றிட
விருகண்கள் துயின்றிட வன்றியு மபலான

விவனெஞ்சு புகுந்தன்பத னென்றிடு
முடல்கொண்டு வருந்திய வஞ்சக
னினியுன்றன் மலர்ந்தில கும்பத மடைவேனோ

திருவென்றில் விளங்கிய வண்டர்கள்
மனையின்றயி ருண்டவ னெண்டிசை
திகழும்புகழ் கொண்டவன் வண்டமிழ் பயில்வோர்பின்

திரிகின்றவன் மஞ்சு நிறம்புனை
பவன்மிஞ்சு திறங்கொள வென்றடல்
செயதுங்க முகுந்தன் மகிழ்ந்தருள் மருகோனே

மருவுங்கட லுந்துமி யுங்குட
முழவங்கள் குமின்குமி னென்றிட
வயமொன்றிய செந்திலில் வந்தருள் முருகோனே

மதியுங்கதி ரும்புய லுந்தின
மறுகும்படி யண்ட மிலங்கிட
வளர்கின்ற பரங்கிரி வந்தருள் பெருமாளே.

(ப-ரை) திரு-லட்சுமியை, வென்று-ஜெயித்து, இல்-ஆயர்பாடியில், விளங்கிய-இருந்த, அண்டர்கள்-இடையர்களுடைய, மனையின்-வீட்டில், தயிர்-தயிரை, உண்டவன்-குடித்தவனும், எண்திசை-அஷ்டதிக்குகளிலும், திகழும் - விளங்குகின்ற, புகழ்-கீர்த்தியை, கொண்டவன்-அடைந்தவனும், வண்தமிழ்-வளப்பம்பொருந்திய தமிழை, பயில்

வோர்பின் - பழந்துவோர்க்குப்பிறகே, திரிகின்றவன்-போன்றவனும், மஞ்சு நிறம்புனைபவன் - மேகநிறத்தை யடைந்தவனுமாகிய, மிஞ்சு-மிகுந்த, திறம்கொள் - வல்லமையைக்கொண்ட, வென்று-ஜெயித்து, அடல்செப்-பலம்பொருந்திய, துங்க-பரிசுத்தத்தையுடைய, முகுந்தன்-விஷ்ணுவானவன், மகிழ்ந்தருள் - மகிழ்ச்சி கொண்டிருக்கின்ற, மருகோனே-மருமானுயுள்ளவனே! மருவும்-பொருந்தின, கடல்-கடலைப் போல் சப்திக்கும், துந்துமியும்-துந்துபியும், குடமுழவங்கள்-குடவாத்தியமும் குமின்குமின் என்று சத்திக்கவும், என்றிட-குமின்குமின் அயம் - நீர்வளமானது, ஒன்றிய - பொருந்திய, செந்திலில் - திருச்செந்திற்பதியில்,வந்தருள்-எழுந்தருளியிருக்கின்ற, முருகோனே-முருகக்கடவுளே, மதியும்-சந்திரனும், கதிரும்-சூரியனும், புயலும்-மேகமும்,தினம்-நாள்தோறும்,மறுகும்படி-தடையாயபடி, அண்டம்-ஆகாயத்தில்,இலங்கிட-விளங்க, வளர்கின்ற-வளர்ந்திருக்கின்ற, பரங்கிரி-திருப்பரங்கிரியில், வந்தருள்-எழுந்தருளியிருக்கின்ற, பெருமாளே-சுப்பிரமணியக்கடவுளே! இவ்விதம்வண்ணத்தைவிளைவிக்கின்ற, மதன்-மன்மதனானவன், சருவும்படி-கிட்டும்படி, வந்தனன் - வந்தேன், என்றிடும்-என்றுசொல்வான், அம்புலியும்-சந்திரனும், சுடும்-காய்கின்ற, தழல்-அக்கினியை, கொண்டிடும்-கொள்வான், (ஆகையால்) மங்கையர்-பெண்களினுடைய, கண்களின்-விழிகளினுடைய, வசமாகி-வசப்பட்டு, சயிலங்களும்-மலைகளிலும் மன்றல்-வாசனை, பொருந்திய-கலந்திருக்கின்றபொழிலின்-சோலைகளிலும், பயில்-வாசஞ்செய்கிற, தென்றலும்-தென்றற்காற்றும், ஒன்றிய பொருந்தின, தட-விசாலமான, அஞ்சுனை-அழகிய சுனைகளிலும், துன்றி-நெருங்கி;எழுந்திடு-கிளம்புகின்ற, திறமான-பலத்தையுடைய,இரவும் பகலும்-இராத்திரியும் பகலும், அன்றியும்-இல்லாமல், நின்றிடும்-இருக்கின்ற, குயில்-குயில்கள், வந்து-வந்து, இசை-இராகங்களை, தந்தன-தன, என்றிட-என்றுபாட,இருகண்கள்-இரண்டுகண்களும், துயின்றிட-தூங்க, அன்றியும்-அல்லாமலும், மயலான-மயக்கத்தையுடைய, இவன்,

இவனுடைய, நெஞ்சு-மனமானது, பதன்பதன் என்றிடும்-பதைக்கும்-உடல்கொண்டு - சரீரத்தினோடு, வருந்திய-வருத்தப்பட்ட, வஞ்சகன்-வஞ்சகத்தையுடைய கொடியனான நான், இனி-இனிமேலாவது, உன்றன்-உன்னுடைய மலர்ந்து-விகசித்து இலகும்-விளங்குகின்ற, பதம்-திருவடிகளை, அடைவேனோ-சேர்வேனோ? (எ-று.)

மன்மதனானவன் உயிர்களை பஞ்ச பாணங்களால் எய்வதும், சந்திரனானவன் கிரணங்களால் சுடுவதும் சுபாவமென்பார், 'சருவும்படி வந்தனனிங்கித மதனென்றிடு மம்புலியுஞ்சுடு தழல்கொண்டிடும்' எனவும், இவர்கள் இவ்விதஞ் செய்வதினாலேயே பெண்கள்மாயையில் சிக்கவேண்டியிருக்கிறதென்பார், 'மங்கையர் கண்களின் வசமாக' எனவும்; அகோராத்திரம் குயிலினங்கள் தங்களுடைய இனிய சொற்களால் போகப்பிரியத்தை யுண்டுபண்ணுகின்றனவென்பார், 'சயிலங்களு மன்றல்பொருந்திய பொழிலின்பயில் தென்றலுமொன்றிய தடவஞ்சனை துன்றியெழுந்திடு திறமான இரவும் பகலன்றியு நின்றிடு குயில்வந்திசை தந்தனவென்றிட விருகண்கள் துயின்றிடவன்றியு மயலான இவனெஞ்சு பதன்பதனென்றிடு முடல்கொண்டு வருந்திய வஞ்சகன்' எனவும்; இப்படிப்பட்ட காமிகள் 'இறைவனை யடைவது கஷ்டந்தானென்பார்' 'இனியுன்றன் மலர்ந்திலகும்பத மடைவேனோ' எனவும். முருகக்கடவுள இடையர்கள் வீட்டில் திருட்டுத் தயிருண்ட விஷ்ணுமூர்த்தியின் மருகனே யாவானென்பார், 'திருவென்றில் விளங்கிய அண்டர்கள் மனையின் தயிருண்டவன்' எனவும கூறினர்.

திருவென்றில் விளங்கிய வண்டாடுள் என்றதை திரு+வென்று+இல்+விளங்கிய+அண்டர்கள் எனப்பிரித்து இலட்சுமியை அழகால் வென்று ஆயர்பாடியில் விளங்கின இடையப்பெண்கள் என்று பொருளுரைத்துக்கொள்க. அம்பம்=நீர்.

6. தனத்தனந் தந்ததான
தனத்தனந் தந்ததான
தனத்தனந் தந்ததான—தனதான.

வரைத்தடங் கொங்கையாலும்
வளைப்படுஞ் செங்கையாலு
மதித்திடுங் கொண்டையாலு [illegible] மனைவோரும்

வடுப்படுந் தொண்டையாலும்
விளைத்திடுஞ் சண்டையாலு
மருட்டிடுஞ் சிந்தைமாதர் வசமாகி

எரிப்படும் பஞ்சுபோல
மிகக்கெடுந் தொண்டனேனு
மெனப்படுந் தொந்தவாரி கரையேற

விசைத்திடுஞ் சந்தபேத
மொலித்திடுந் தண்டைசூழு
மிணைப்பதம் புண்டரீக மருள்வாயே

சுரர்க்குவஞ் சஞ்செய்சூரன்
கிளங்கிளைஞ் சம்மரோடு
துளங்கெழுந் தண்டகோள மளவாகத்

துரத்தியன் றிந்த்ரலோக
மழித்தவன் சம்ப்ரதாயங்
கடப்படுஞ் சண்டவல்ல விடுவோனே

செருக்கெழுந் தும்பர்சேனை
துளக்கவென் றண்டமூடுந்
தொனித்திடுஞ் சங்கபாணி மருகோனே

தினைப்புனஞ் சென்றுலாவு
குறத்தியின் னன்பராகுந்
திருப்பரங் குன்றமேவு பெருமாளே.

(ப-ரை) விளக்கிரௌஞ் சுடதோடு - விளங்குகின்ற கிரௌஞ்ச பர்வதத்துடன், துளங்கு எழுந்து-அசைந்து கிளம்பி, அண்டகோளம் அளாவாக-பிரமாண்ட கோளகையின் வரைக்கும், துரத்தி-ஓட்டி அன்று-பூர்வத்தில்,இந்திரலோகம்-தேவேந்திரலோகத்தை, அழித்தவன்-கெடுத்தவனுமான, சுரர்க்கு-தேவர்களுக்கு, வஞ்சஞ்செய்-கபடத்தைச் செய்கின்ற சூரன்-சூரபத்மன்மேல், சம்ப்ரதாயம்-கடலானது, சுடப்படும்-சுடப்படுகின்ற தன்மையையுடைய, சண்டவேலை-வெற்றிபொருந்திய வேலாயுதத்தை, விடுவோனே-பிரயோகஞ் செய்தவனே! செருக்கு எழுந்து-இறுமாப்போடு, உம்பர்சேனை - தேவர்களுடைய சேனையானது, துளக்க என்று-விளக்கக்கடவது என்ற, அண்டமூடும்-ஆகாயம் வரைக்கும் மூடுகின்ற, தொனித்திடும் - சப்தத்தைச்செய்கின்ற, சங்கபாணிமருகோனே-பாஞ்ச சன்னியமென்னும் சங்கைத்தரித்த அஸ்தத்தையுடைய விஷ்ணுவின் மருமகனே! தினைப்புனம்சென்று-தினைப்புனத்திற்குப்போய், உலாவ-உலாவும்பொருட்டு, குறத்தியின்-வள்ளிநாய்ச்சியாரின். அன்பராகும் - ஆசையுள்ளவரான, திருப்பரங்குன்றம்-திருப்பரங்குன்றம் என்னுந் திவ்வியக்ஷேத்திரத்தில், மேவு-எழுந்தருளியிருக்கின்ற, பெருமாளே-இறைவனே! வரைத்தடங்கொங்கையாலும்-மலைபோலும் விசாலித்த தனங்களாலும், வளைப்படுஞ் செங்கையாலும்-வளையல்களணிந்த செவந்தகையினாலும், மதித்திடும்-மதிக்கப்படுகின்ற; கொண்டையாலும் - கொண்டையினாலும்; அனைவோரும் - யாவரும், வடுப்படும்-துன்பத்தையனுபவிக்கின்ற, தொண்டையாலும்-தொண்டையினாலும், விளைத்திடும்-உண்டாகின்ற, சண்டையாலும்-போரினாலும், மருட்டிடும் - மயக்கத்தை உண்டாக்குகின்ற, சிந்தை-மனத்தையுடைய

மாதர்வசமாகி-பெண்களுடைய வசப்பட்டு, எரிப்படும் பஞ்சிபோல-அக்கினியிற்பட்டபஞ்சைப்போல, மிகக்கெடும்-மிகுதியும்கெட்டுப்போகின்ற, தொண்டனேனும்-அடியேனாகியநானும், தொந்தவாரிஎனப்படும்-ஆசையாகிய சமுத்திரத்தினது, கரையேற-கரையிலேற, இசைத்திடும்-சப்திக்கின்ற, சந்தபேதம்ஒலித்திடும்-பலவகைச்சந்தங்களைஒலிக்கின்ற தண்டைசூழும்-சதங்கைகள் சூழ்ந்திருக்கின்ற, இணைப்பதம்-இரண்டு திருவடிகளாகிய, புண்டரீகம்-தாமரைகளை, அருள்வாய்-திருவருள் செய்வாயாக.

மங்கைகள் முலைமுதலிய அவயங்களால் மயக்குவது சுபாவமென்பார், 'வரைத்தடங் கொங்கையாலும் வளைப்படுஞ் செங்கையாலும் மதித்திடுங் கொண்டையாலும் வடுப்படுந் தொண்டையாலும் விளைத்திடுஞ் சண்டையாலும் மருட்டிடுஞ் சிந்தை மாதர்வசமாகி' எனவும்; அந்த மாயையை ஒழித்து திருவருள் செய்யவேண்டியவன் இறைவனே என்பார், எரிப்படும் பஞ்சிபோல மிகக்கெடுந் தொண்டனேனு மெனப்படுந் தொந்தவாரி கரையேற விசைத்திடுஞ் சந்தபேத மொலித்திடுந் தண்டைசூழு மிணைப்பதம் புண்டரீக மருள்வாயே" எனவும் கூறினர்.

7. தனனதந்த தத்தத்தனந்த
தனனதந்த தத்தத்தனந்த
தனனதந்த தத்தத்தனந்த—தனதான.

கருவடைந்து பத்துற்றதிங்கள்
வயிறிருந்து முற்றிப்பயின்று
கடையில்வந்து தித்துக்குழந்தை வடிவாகி
கருவியங்கெ டுத்துச்சுரந்த
முலையருந்தி விக்கிக்கிடந்து
கதறியங்கை கொட்டித்தவழ்ந்து நடமாடி

அரைவடங்கள் கட்டிச்சதங்கை
யிடுகுதம்பை பொற்சுட்டிதண்டை
யவையணிந்து முற்றிக்கிளர்ந்து வயதேறி

யரியபெண்க ளட்பைப்புணர்ந்து
பிணியுழன்று சுற்றித்திரிந்த
தமியனுன் க்ருபைச் சித்தமென்று பெறுவேனோ

இரவிபிந்த்ரன் வெற்றிக்குரங்கி
னரசரென்று மொப்பற்றவுந்தி
யிறைவனெண் கினக்கர்த்தனென்று நெடுநீல

னெரியனும்ம ருத்துச்சிறந்த
வனுமனென்று மொப்பற்றவண்ட
ரெவருமந்தி வர்க்கத்தில்வந்து புனமேவ

அரியதன்ப டைக்கர்த்தனென்று
மசுரர்தங்கி ளைக்கட்டைவென்ற
வரிமுகந்தன் மெய்ப்பித்தபண்பின் மருகோனே

யயனையும்ப டைத்துச்சினந்து
வுலகமும்ப டைத்துப்பரிந்து
வருள்பரங்கி ரிக்குட்சிறந்த பெருமாளே.

(ப-ரை.) இரவி-சூரியனும், இந்திரன்-தேவேந்திரனும் வெற்றி ஜெயம்பொருந்திய, குரங்கின் அரசர் என்றும் - குரங்குச்சேனைகளுக்குத் தலைவராகவும், ஒப்பற்ற-சமானமில்லாத. உந்தி இறைவன் பிரம தேவனானவன், எண்கின கர்த்தனென்றும்-கரடிக் கூட்டங்களுக்குத்

தலைவனாகவும், நெடுநில னெரியனும் - எமனும் அக்சினி பகவானும், மருத்து-வாயுதேவனும், சிறந்த அனுமனும்-உயர்ந்த அநுமானும், ஒப்பற்ற அளவில்லாத, அண்டர் எவரும்-தேவர்களெல்லாம், மந்திவர்க்கத்தில்வந்து-குரங்குகளாகவந்து, புனமேவ - யுத்தகளத்தில் வந்திருந்த அரி - ஸ்ரீராமரானவர், அதன்படைக் கர்த்தனென்று-இப்படியமைந்த படைகளுக்குத் தலைவராக, அசுரர்தம் கிளைக்கட்டை வென்று-இராக்கதக் கூட்டங்களைச் செயித்து, அரிமுகுந்தன் - விஷ்ணுவின், மெய்ப்பித்த பண்பின் - உண்மைக் குணத்தையுடைய, மருகோனே-மருமகனே! அயனையும்படைத்து-ப்ரமனையுஞ் சிருஷ்டித்து, சினந்து-அவன்மீதே கோபங்கொண்டு, உலகமும் படைத்து-உலகத்தாரைச் சிருஷ்டித்து, பரிந்து-விரும்பி, அருள்-திருவருளையுடைய, பரங்கிரிக்குள்-திருப்பரங்கிரியில், சிறந்த-உயர்ந்த, பெருமாளே-முருகக்கடவுளே! கருவடைந்து-கர்ப்பமாகத்தங்கி, பத்துற்றதிங்கள்-பத்துமாதங்கள், வயிறிருந்து முற்றிப்பயின்றும்-வயிற்றிலே யிருந்து மாதம் பூர்த்தியாகி, கடையில்-கடையாக வந்து, உதித்து-வந்து பூமியில் பிறந்து குழந்தைவடிவாகி-குழந்தைரூபமாகி, கழுவி அங்கு எடுத்து-அப்பொழுது கழுவி-எடுத்து, சுரந்த-வெளிப்பட்டுவந்த, முலைஅருந்தி-முலைப்பாலைக்குடித்து, விக்கிக்கிடந்து-விக்கலெடுத்துக் கொண்டிருந்து, கதறி அங்கைகொட்டி தவழ்ந்து-அழுது கைகொட்டித் தவழ்ந்து, அரைவடங்கள் கட்டி-அரைஞாண்கயிறுகளைக் கட்டி, சதங்கை-சிலங்கையும், இடுகுதம்பை-காதணியும், பொற்சுட்டி-பொற்சுட்டியும், தண்டை-தண்டையும், அவை அணிந்து-ஆகிய அவைகளைத்தரித்து, முற்றிக்கிளர்ந்து-வயதேறி, அரியபெண்கள்-அருமையான பெண்களுடைய நட்பையுணர்ந்து - சினேகத்தைக் கலந்து, பிணிஉழன்று - அதனால் நோய்ப்பட்டு, சுற்றி திரிந்த - சுற்றிச்சுற்றித் திரிந்த, தமியன்-அடியேனான நான், உன்-உன்னுடைய, கிருபைச்சித்தம்-கிருபை யுள்ளத்தை, என்று பெறுவேனோ-எப்பொழுது அடைவேனோ? (எ-று.)

தாயின் வயிற்றில் பத்துமாதம்வரைக்கு மிருந்தே வெளிவந்தே னென்பார், 'கருவடைந்து பத்துற்ற திங்கள் வயிற்றிருந்து முற்றிப் பயின்று கடையில் வந்துதித்துக் குழந்தைவடிவாகி' எனவும்; பிறகு விக்கல் முதலிய ரோகங்களால் பீடிக்கப்படுதல் சுபாவந்தானென்பார், 'கழுவியங்கெடுத்துச் சுரந்த முலையருந்தி விக்கிக்கிடந்து கதறியங் கை கொட்டித்தவழ்ந்து நடமாடி' எனவும்; இங்ஙனமிருந்தும் வயதேறின வுடன் மதனலீலையை விரும்புகிறவ னுனேனென்பார், 'வயதேறியரிய பெண்கள் நட்டைப்புணர்ந்து' எனவும்; அதனுல் அளவில்லா ரோகங் கள் உண்டாமென்பார், 'பிணியுழன்று' எனவும் இப்படிப்பட்டவனுக விருந்தாலும் அவனும் இறைவனுடைய 'திருவருளை யடையவேண்டி யவனே யாவானென்பார், 'தமியனுன் க்ருபைச் சித்தமென்று பெறு வேனே' எனவும்; இக்கிருபை செய்யவேண்டியவன் ஸ்ரீவிஷ்ணு மூர்த் திக்கு மருகனுன ஸ்ரீ சுப்பிரமணிய னுவானென்பார், 'இரவியிந்திரன் ......வரி முகுந்தன் மெய்ப்பித்த பண்பின் மருகோனே' எனவும், இவன் எழுந்தருளியிருப்பது திருப்பரங்கிரியா மென்பார், அருள் பரங் கிரிக்குட் சிறந்த பெருமாளே' எனவுங் கூறினுர்.

8\. தந்தனத் தந்ததன
தந்தனந் தந்ததன
தந்தனந் தந்ததன—தனதான.

மன்றலங் கொந்துமிசை
தந்தனந் தந்தவென
வண்டினங் கண்டுதொடா குழன்மாதர்

மண்டிடுந் தொண்டையமு
துண்டுகொண் டன்பின் மிக
வம்பிடுங் கும்பசன தனமார்பின்

ஒன்றவம் பொன்றவிழி
கண்டவங் கங்குழைய
வுந்தியென் ஷின்றமடு விழுவேனை

புன்சிலம் புங்கனக
தண்டையுங் கிண்கிணியு
மொண்கடம் பும்புனையு மடிசேராய்

பன்றியங் கொம்புகம
டம்புயங் கஞ்சுரர்கள்
மண்டையென் பங்கமணி பவர்சேயே

பஞ்சரங் கொஞ்சுகிளி
வந்திருந் தைந்துகா
பண்டிதன் றம்பியெனும் வயலூரா

சென்றுமுன் குன்றவர்கள்
தந்தபெண் கொண்டுவளர்
சண்பகம் பைம்பொன்மலர் செறிசோலை

திங்களுஞ் செங்கதிரு
மங்குலுந் தங்குமுயர்
தென்பரங் குன்றிலுறை பெருமாளே.

(ப-ரை.) பன்றியங் கொம்பு-பன்றிக்கொம்பையும், கமடம்-ஆமை ஓட்டையும், புயங்கம்-சர்ப்பங்களையும், சுரர்கள் மண்டை என்பு-தேவர்களுடைய மண்டை ஓட்டையும், அங்கம் அணிபவர்சேயே-சரீரத்தில் தரித்துக் கொள்ளுகிறவருடைய புத்திரனே, பஞ்சரம் - கூண்டிலிருக்கின்ற, கொஞ்சுகிளி-கொஞ்சுகின்ற கிளியானது,வந்திருந்து-வந்திருந்து;

ஐந்துகரபண்டிதன்-ஐந்து கைகளையுடைய பண்டிதனாகிய விநாயகனுடைய, தம்பியெனும் - தம்பியென்று சொல்லுகின்ற, வயலூரா-வயல் சூழ்ந்த திரு நாட்டிலுள்ளவனே! முன்-முன்னே, குன்றவர்கள்சென்று-வேடர்களிடத்தில்சென்று, தந்த-அவர்களால் கொடுக்கப்பட்ட பெண் கொண்டு - பெண்ணாகிய வள்ளிநாய்ச்சியாரைக்கொண்டு, வளர்-வளர்கின்ற, சண்பகம்-சண்பகமும், பைம்பொன்மலர்-பசியபொன்போலும் கொன்றைமலரும், செறி-நிறைந்திருக்கின்ற,சோலை-சோலையின்கண், திங்களும் செங்கதிரும்-சந்திரனும் சூரியனும், மங்குலும்-மேகமும், தங்கும்-தங்குகின்ற, உயர் - உயர்ந்திருக்கின்ற, தென்பரங் குன்றிலுறை பெருமாளே-திருப்பரங்குன்றில் எழுந்தருளியிருக்கின்ற பெருமாளே! மன்றலங் கொந்துமிசை-வாசனையுடைய பூங்கொத்தின்மேல், தந்தனம் தந்தவென-தந்தனந்தந்தவென்னுஞ் சத்தத்துடனே, வண்டினம் கண்டு தொடர் வண்டுகள் பார்த்துத் தொடர்கின்ற, குழல்மாதர்-கூந்தலையுடைய பெண்கள், மண்டிடும்-மிகுந்த தொண்டையமுது-நாவின் அமிர்தத்தை, உண்டு-கொண்டுபுசித்து, அன்பின்-அன்பினால், மிக-மிகவும், வம்பிடும்-கச்சிறுக்கிய, கும்பகன தனமார்பின்-கும்பம்போலும் கனத்த தனத்தையுடைய மார்பில், ஒன்ற-பொருந்தவும், அம்பொன்றவிழி-விழியில் சலமானது பொருந்தவும், கண்ட-பார்த்த, அங்கப்-சரீரமானது, குழைய-குழையவும், உந்தியென்கின்ற-உந்திஸ்தான மென்கின்றமடுவிழுவேனை-மடுவில் விழுகின்ற என்னை, உன்-உன்னுடைய, சிலம்பும்-சத்திக்கின்ற கனக தண்டையும்-கனக மிழைத்தை தண்டையும், கிண்கிணியும்-கிண்கிணியென்னும் ஆபரணமும், ஒண்-ஒள்ளிய கடம்பும்-கடப்பமாலையும், புனையப்-தரிக்கின்ற, அடிசேராய்-திருவடிகளில் சேர்ப்பாயாக. (எ-று.)

பெண்கள் கூந்தலில் மலர்களுண்டென்பார், 'மன்றலங் கொந்துமிசை தந்தனந்தந்தவென' எனவும், அதில் வண்டுகள் மொய்க்கின்ற சுபாவமுண்டென்பார், 'வண்டினங் கண்டுதொடர் குழல்மாதர்' என

வும், மசன லீலாவிநோதத்தை யநுபவித்தங் காலத்தில் இதழமுதுண்ணல் பரம்பரை யாகையால், 'மண்டிடுந்தொண்டை யமுதுண்டு கொண்டன்பின்மிக வம்பிடுங் கும்பகன தனமார்பின்' எனவும், பெண்களுடைய அல்குல் என்கிற மடுவிலேயே யாவரும் மூழ்கிவிடும் வழக்கம் உண்டென்பார், ஒன்றவம் பொன்றவிழி கணடவங் கங்குழைய வுந்தியென் கின்றமடு விழுவேனை' எனவும், இப்படிப்பட்டவர்களையும், திருவடியில் சேர்த்துக்கொள்ள வேண்டியது இறைவனுடைய கடமையென்பார், 'உன்சிலம் புங்கனக தண்டையும் கிண்கிணியு மொண்கடம்பும் டினையு மடிசேராய்' எனவும், சிவபெருமான் பன்றிக்கொம்பு முதலியவைகளை அணிந்துள்ளவனென்பார், 'பன்றியங் கொம்புகம டம்புயங் கஞ்சுரர்கள் மண்டையெலு பங்கமணிபவர்' எனவும், அவருக்குச் சுப்பிரமணியன் புத்திரனே யாவானென்பார், 'சேயே' எனவும், ஸ்ரீவிநாயகக்கடவுளுக்குஞ் சகோதரனுவானென்பார், பஞ்சரங் கொஞ்சுகிளி வந்திழிந் தைந்துகர பண்டிதன் தம்பியென்றும் வயலூரா' எனவும், வேடர்களால் கொடுக்கப்பட்ட வள்ளி நாய்ச்சியாரை இறைவன் மணந்துகொண்டானென்பார், 'சென்றுமுன் குன்றவர்கள் தந்தபெண்கொண்டு' எனவும், சந்திரசூரிய மேக மண்டலங்கள் வரைக்கும் சோலைகள் உயர்ந்திருக்கின்ற திருப்பரங்கிரியே இறைவன் எழுந்தருளியிருக்கிறானென்பார், 'வளர்சண்பகம் பைம்பொன்மலர் செறிசோலை திங்களுஞ் செங்கதிரு மங்குலுந் தங்குமுயர் தென்பரங் குன்றிலுறை பெருமாளே, எனவுங் கூறினர்.

9. தனனதானன தந்தனதந்தன
தனனதானன தந்தனதந்தன
தனனதானன தந்தனதந்தன—தனதான.

கயலமாதும ருங்கதிபுந்துதி
செயவொணாதம டந்தையர்சந்தன
களபசீதள கொங்கையிலங்கையி லிருபோதே

சலியநாள்தெரி வஞ்சனையஞ்சன
விழியின்மோகித கந்தசுகந்தரு
கரியவேணியி லிந்துமுகந்தனின் மருவாதே

அமலமாகிய சிந்தையடைந்தகல்
தொலைவிலாத அறம்பொருளின்பமு
மடையவேயி துணர்ந்ததனிந்தபி னருள்தானே

யறியுமாறுபெ றும்படியன்பினி
னினியநாதசி லம்புபுலம்பிடு
மருணலாடக கிண்கிணிதங்கிய வடிதாராய்

குமரிகா ளிபயங்கரிசங்கரி
கவுரிநீலிப ரம்பரையம்பிகை
குடிலைகோகினி சண்டினிகுண்டலி யெமதாயி

குறைவிலாளுமை மந்தரியந்தரி
வெகுவிதாகம சுந்தரிதந்தருள்
குமரமூஷிக முந்தியவைகர கணராயன்

மமவிநாயக னஞ்சுமிழ்கஞ்சுகி
யணிகஜானன னின்பமொரம்புலி
மவுலியானொரு சிந்தையுகந்தரு ளிளையோனே

வளரும்வாழையு மஞ்சளுமிஞ்சிய
மிடைவிடாது நெருங்கியமங்கல
மகிமைமாநகர் செந்திலில்வந்தருள் பெருமாளே.

(ப-ரை) குமரி காளி பயங்கரி சங்கரி-குமரி, காளி, பயங்கரி, சங்கரி, கவுரிநீலி பரம்பரை யம்பிகை-கவுரி, நீலி, பரம்பரை, அம்பிகை குடிலை கோகினி, சண்டினி, குண்டலி எமதாயி குடிலை, யோகினி, சண்டினி, குண்டலி, எம்முடைய ஆயி, குறைவிலாள் உமை மந்தரி யந்தரி-யாதொரு செல்வத்திலும் குறைவில்லாதவள்: உமை, மந்தரி, அந்தரி, வெகுவிதாகடி சுந்தரி-வெகுவிதாகடி, சுந்தரி, என்னும் எம்முடைய தாயானவள், தந்தருள்-பெற்றருளிய, குமர-குமாரக்கடவுளை, மூலத்தெழுந்திய வைங்கர கணராயன்-பெருச்சாளிவாகனத்தில் ஏறிய ஐந்து கரங்களையுடைய கணபதியு, மமவிநாயகன் நம்முடைய விக்கின விநாயகனும், நஞ்சு உமிழ் விஷதங்கத்தின, கஞ்சுகிபணி-பாம்புசட்டையை யணிந்திருக்கின்ற, கஜானனன்-யானை முகத்தையுடையவன், இன்பன்-இன்பத்தையுடையவன், ஓர் அம்புலிமௌலியான்-ஒரு சந்திரனைச்சடா பாரத்தில் தரித்தவனான சிவன் ஒரு சிந்தை உகந்தருள் இளையோனே, தம்முடைய மனத்தால் மகிழ்ச்சியடைகின்ற இளையபெருமாளே! வளரும் வளருகின்ற, வாழையும்-வாழை மரங்களும், மஞ்சளும்-மஞ்சள் செடிகளும், இஞ்சியும்-இஞ்சிச்செடிகளும், இடைவிடாது நெருக்கிய-எப்பொழுதும் அடர்ந்திருக்கின்ற, மங்கல மகிமைமாநகர்-மங்களகரம் பொருந்திய மகிமையையுடைய மகத்தாகிய நகரமான, செந்திலில் வந்தருள்பெருமாளே-திருச்செந்திற் பதியில் எழுந்தருளியிருக்கின்ற பெருமாளே, கமலமாதும் அருந்ததியுந் துதிசெயவொணாத-லட்சுமியும் அருந்ததியும் துதிசெய்து வணங்குதற்குக்கூடாத, மடந்தையர்-பெண்களுடைய, சந்தன களபசீதள கொங்கையில்-சந்தனச் சேறுபூசிய சீதளமான கொங்கையில், அங்கையில் இருபோதே-அழகியகையினால் பகற்குறி

யிரவுக்குறியாகிய விருவேளையில் இருவேளையில், களவுநூல் தெரி-களவியலினுணர்ந்த, வஞ்சனை-வஞ்சனையையுடைய, அஞ்சனவிழியின்-மைதீட்டிய கண்களினாலும், மோகிதகந்தசுகந்தரு கரிய ஓதியின்-மோகங்கொள்ளத்தக்க கந்தம்வீசுகின்ற சுகத்தைக்கொடுக்கின்ற கறுத்த கூந்தலினாலும் இந்து முகந்தனில்-சந்திரனைப்போன்ற முகத்தினாலும், மருளாதே-மயக்கத்தையடையாமல், அமலமாகிய சிந்தையடைந்து-பரிசுத்தமான மனத்தைப்பெற்று, அகல்தொலைவிலாத அறம்பொருள் இன்பமும்-அகன்ற ஒழிவில்லாத தருமப்பொருள், இன்பம் என்னும் இவைகளையும், அடைய-பொருந்த, ஓதி-உணர்ந்து சொல்லத்தெரிந்து, தணிந்தபின்-நீங்கினபின், அருள்தானே யறியுமாறு-திருவருளைத்தானே யுணரும்படி,பெறும்படி-அடைய, அன்பினில்-அன்பினால், இனியநாத சிலம்புபுலம்பிடு-இனிமையான நாதத்தையுடைய சிலம்பானது சத்திக்கின்ற, அருணவாடக்கிண்கிணி-சூரியனைப்போலும் பொற் கிண்கிணியானது, தங்கிய-இருக்கின்ற, அடிதாராய்-திருவடிகளைத் திருவருள் செய்யவேண்டும். (எ-று.)

உலகத்தில் பெண்களின் மேல் வைத்திருக்கின்ற ஆசையினால் அவர்களை உயர்வாக நினைக்கிற வழக்கமிருப்பதால் அவர்களுக்கும் லட்சுமியும் அருந்ததியும் இழிந்தவர்களென்றே சொல்லவேண்டிவருமென்பார், 'கமலமாது மருந்ததியுந் துதிசெயவொணாத மடந்தையர்' எனவும், பெண்களுடைய முலையினாலும் கண்களாலும், கூந்தலினாலுமே ஆடவர் மயங்குகிறதென்பார், 'சந்தனகளபசீதள கொங்கையிலங்கையி லிருபோதே களவுநூல்தெரி வஞ்சனையஞ்சன விழியின்மோகிதகந்த சுகந்தரு கரியவோதியிலிந்து முகந்தனின் மருளாதே' எனவும், எப்படிப்பட்டவர்களாக விருந்தாலும் இறைவனுடைய திருவருள் கிடைக்கவேண்டுமென்பார், 'அமலமாகிய சிந்தையடைந்த கல்தொலைவிலாத

வறம் பொருளின்பமு மடையவோதி யுணர்ந்து தணிந்தபி னருள்தானேயறியு மாறு பெறும்படியன் பினி னினியநாத சிலம்புலம்பிடு மருணவாடக கிண்கிணிதங்கிய வடியாராய்' எனவும், திருச்செந்திற் பதியானது வாழைமுதலிய வளமுள்ளதென்பார். 'வளரும்வாழையுமஞ்சளுமிஞ்சியு மிடைவிடாது நெருங்கியமங்கல மகிமைமாநகர் செந்தில் வந்தருள் பெருமாளே', எனவுங் கூறினர்.

10. தனதனன தந்ததந்தன
தனதனன தந்ததந்தன
தனதனன தந்ததந்தன—தனதான.

இருகுழையெ றிந்தகெண்டைக
ளொருகுமி ழடர்ந்துவந்திட
விணைசிலைநெ ரிந்தெழுந்திட வணைமீதே
யிருளளக பந்திவஞ்சியி
னிருகலைபு டன்குலைந்திட
விதழமுத ருந்தியின்புறு மனமாய
முருகொழுக லந்தசந்தன
மளறுபடு குங்குமங்கமழ்
முலைமுகடு கொண்டெழுந்தொறு முருகார
முழுமதிபு ரந்தசிந்துர
வரிவையரு டன்கலந்திடு
மறிவிலனை யன்பிறந்திட வருள்வாயே
எரிவிடநி மிர்ந்தகுஞ்சியி
னிலவொடுவெ றுந்தகும்பையு
மிதழியொட ணிந்தசங்கரர் களிகூரு

யிமையவர்த ருங்குயில்
மரகதநி றந்தருங்கிளி
யெனதுயிரெ னுந்திரியம்பிகை   பெருவாழ்வே

அரவ்வடம லம்புகிங்கிணி
பரிபுரநெ ருங்குதண்டைக
ளணிமணிச தங்கைகொஞ்சிட   மயின்மீதே

யகமகிழ்வொ டுஞ்சரிக்கம்
வருகுமர முன்றிலின்புற
வலைபொருத செந்தில்தங்கிய   பெருமாளே.

(ப-ரை) எரிவிடம் நிமிர்ந்த குஞ்சியில் - எரிகின்ற விஷமானது தலை தூக்கியிருக்கின்ற சடாபாரத்தின்கண், நிலவொடு எழுந்த கங்கையும் இதழியோடு அணிந்த-சந்திரன், கங்கை, கொன்றைப் பூமாலை இவைகளைத் தரித்த, சங்கரர்க்கினிகூரும்-சிவபெருமானுனவர் சந்தோஷிக்கின்ற, இமையவர் தருங்குயில்-தேவர்களால் தரப்பட்ட குயிலும், மரகத நிறந்தருங்கிளி-பச்சைக்கிளியும், எனது உயிரெனுந் திரியம்பிகை-என்னுடைய உயிர் என்று சொல்லப்படும் திரியம்பிகையுமான தெய்வயானையம்மையினுடைய, பெருவாழ்வே-செல்வமே, அரா - இடுப்பில், வடம் அலம்பு கிங்கிணி பரிபுர நெருங்க தண்டைகள் அணி சதங்கை கொஞ்சிட- அரைஞாணும், சத்திக்கின்ற கிண்கிணியும், பரிபுரமானது நெருங்குகின்ற தண்டைகளும் அழகிய சதங்கையுஞ் சத்திக்க, மயில்மீது அகமகிழ்வுகொண்டு - மயில்வாகனத்தின்மேல் மனசந்தோஷத்துடன், சஞ்சரிக்க வருகுமர-எப்பொழுதும் எழுந்தருளிவருகின்ற குமரனே! முன்றிலின்புறம் அலைபொருத - முற்றத்தில் அலையானது வந்து மோதும்படி, செந்தில் தங்கிய பெருமாளே - திருச்செந்திற் பதியின்கண் எழுந்

தருளி யிருக்கின்ற பெருமானே! இருதழை எறிந்த கெண்டைகள்-இரண்டு காதுகள் வரைக்கும் நீண்ட கண்களானவை, ஒருதமிழ் அடர்ந்துஉந்திட-ஒப்பற்ற கும்மிழாய மூக்கினை நெருங்கிமோதவும், இணைசிலை நெரிந்தெழுந்திட-இரண்டு சிலைஎன்று சொல்லப்படும் புருவங்கள் நெரித்து எழவும், அணைமீதே படுக்கையின்மேல் இருளளக பந்திவஞ்சியின் இருகலையுடன் குலைந்திட - பெண்ணின் இருண்ட கூந்தலும் பெரிய வஸ்திரமும் சீர்கேடடைய, இதழ் அமுது அருந்து சிங்குவின் - அதராமிர்தத்தைப் பானம் பண்ணுகிற நாக்கினுல் மனமாய - மனமானது நிலைகலங்க, முருகொடுகலந்த சந்தனவளறுபடு குங்குமங் கமழ் முலைமுகடு கொண்டெழுந்தோறும் - வாசனையுடன் கலந்திருந்த சந்தனச்சேறும் குங்குமமும்வீசும் முலையாகிய மேட்டைக்கொண்டு எழுந்திருக்கும்போதெல்லாம், முருகாா-சரீரத்தில் வாசனையானது வீச, முழுமதி புரந்த சிந்துர வரிவையருடன் கலந்திடும்-முழுச்சந்திரனுகிய நெற்றியில் தீட்டிய சிந்துரப் பொட்டினையுடைய பெண்களுடன் சேரும், அறிவிலன் நலம்பிறந்திட அருள்வாயே-அறிவீனனுகிய நான் நன்மையை யடைந்துய்யத் திருவருள் செய்வாயாக. (எ-று)

பெண்களுடைய கண்களைக் கெண்டை மீனுக்கு ஒப்பாகக் கூறுவது சுபாவமும் அக்கண்கள் காதை மோதும்படி யிருப்பதும் பரம்பரையென்பார், 'இருதழை யெறிந்த கெண்டைக ளொருதமிழடர்ந்துவுந்திட' எனவும், பெண்களுடைய புருவங்கள் நெரியுங் குணமுடையனவென்பார், 'இணைசிலைநெரிந்தெழுந்திட' எனவும், படுக்கையில் கூந்தல் முதலியவைகள் உருக்குலையுந்தன்மையையடையுமென்பார், 'அணைமீதே யிருளளக பந்திவஞ்சியி னிருகலையுடன் குலைந்திடவிதழமுதருந்துசிங்குவின் மனமாய' எனவும், பெண்கள் வாசனையோடுகூடின சந்தன முதலியவைகளை மார்பில் பூசிக்கொள்ளுவது சகசமென்பார், ,முருகொடுகலந்த சந்தன வளறுபடு குங்குமங்கமழ் முலைமுகடு கொண்டெ

மூன்றொரு முருகாஎ முழுமதிபுரந்த சிந்துர வரிவையருடன் கலந்திடு மறிவிலனலம் பிறந்திட வருள்வாயே' எனவும், இறைவனான சுப்பிரமணியக்கடவுளிடத்தில் சிவபெருமானுக்கு மிகவும் மகிழ்ச்சியுண்டாமென்பார். 'எரிவிடமிமிர்ந்த குஞ்சியினிலவொடுவெழுந்த கங்கையு மிதழியொ டணிந்த சங்கரர் களிகூரு மிமையவர்தருங் கருங்குயில் மரகத திறந்தருங் கிளியென துயிரெனுந்திரி யம்பிகை பெருவாழ்வே' எனவும் கூறினார்:

11. தந்ததானன தானன தந்ததானன தானன
தந்ததானன தானன—தனதான.

வெஞ்சரோருக மோகடி கஞ்சமோகய லோநெடு
வின்பசாகர மோவடு வகிரோமுன்
வெந்துபோனபு ராதன சம்பராரிபு ராரியை
வென்றசாயக மோகரு விளையோக
வஞ்சமோஅப ராதவர் நெஞ்சமோவெகு மாமட
நங்கைமார்தப யோதர மிசைமூழ்கி
சம்ஸாரமோஜிந கூதள கந்தமாலிகை தோய்தரு
தண்டைசேர்கழ லீவது மொருநாளே
பஞ்சபாதக தாருக தண்டனீறெழ வானவர்
பண்டுபோலம ராபதி குடியேற
பங்கயாசனர் கேசவ ரஞ்சலேலெயன மால்வரை
பங்கநீறெழ வேல்விடு மிளையோனே
செஞ்சடாடவி மீமிசை கங்கைமாதவி தாதகி
திங்கள்சூடிய நாயகர் பெருவாழ்வே
செண்பகாடவி யாகிய துங்கமாமதில் சூழ்தரு
செந்தில்மாநகர் மேவிய பெருமாளே

(ப-ரை) பஞ்சபாதக தாருக தண்டனீறெழ-பஞ்சமா பாதகங்களாகியவைகளெல்லாம் துகள்பட, வானவர்-தேவர்கள், பண்டுபோல் அமராபதி குடியேற-முன்போலவே தேவலோகத்தில் குடியேறவும், பங்கயாசனர்கேசவர் - பிரமனும் விஷ்ணுவும், அஞ்சலேயென - பயப்பட வேண்டா மென்றுசொல்ல, மால்வரை பங்கநீறெழ வேல்விடும் இளையோனே - பெரியமலையானது துகள்படும்படி வேலாயுதத்தைப் பிரயோகஞ்செய்தருளிய முருகனே! செஞ்சடாடவிமீமிசை-செவந்த சடாபாரத்தின்மேல், கங்கை-கங்காதேவியும், மாதவி-குறுக்கத்தியும், தாதகி-கொன்றையும், திங்கள் சந்திரனும், ஆகிய இவைகளை, சூடியநாயகர் பெருவாழ்வே-தரித்திருக்கின்ற சிவபெருமானுடைய பெரியவாழ்க்கையே! செண்பகா டவியாகிய-சண்பகக்காடான, துங்கமாமதில் சூழ்தரு-பரிசுத்தம் பொருந்திய பெரிய மதில்கள் சூழ்ந்திருக்கின்ற, செந்தின்மா நகர் மேவிய பெருமாளே-திருச்செந்திற்பதியில் எழுந்தருளியிருக்கின்ற இளையபெருமாளாகிய சுப்பிரமணியக் கடவுளே! கண்-கண்கள், வெஞ்சரோருகமோ விருப்பத்தையுடைய தாமரையோ, கடுநஞ்சமோ-கடியவிடமோ, கயலோ-சேல்கெண்டையோ, நெடுவின்பசாகரமோ-நீண்ட சுகக்கடலோ, வடுவகிரோ-மாம்பிஞ்சின் பிளவோ, முன் முன்னே, வெந்துபோன புராதன சம்பராரி புராரியைவென்ற சாயகமோ - எரிந்தபழமையான மன்மதனானவன் சிவபெருமானைவென்றபாணமோ கருவிளையோ-கருவிளை மலரோ, யமதூதர்நெஞ்சமோ எமதூதர்களுடைய மனமோவெனும், மாமடநங்கைமாதர் பயோதரம் - மகத்தாகிய இளமைபொருந்திய பெண்களுடைய கூந்தலில், மிகமுழ்கி-மிகவும்முழுகி, சங்கையோ சங்கையோ, இருகூதளகந்த மாலிகைதோய்தரு - இரண்டு கூதளமான கந்தமாலிகையானது படிந்த, தண்டைசேர்கழல் சதங்கையணிந்த திருவடிகளை, ஈவதும் ஒருநாளே-கடாட்சிப்பதும் ஒருநாளாகும்.

பெண்கள் மாய்கையில் சிக்கிப் பரிதபிக்கும் என்னை நின் திருவடியைத் தந்து ஆண்டருள் செய்யவேண்டும் என்பது கருத்து.

12\. தனனதனதன தனதனதனதன
தனனதனதன தனதனதனதன
தனனதனதன தனதனதனதன— தனதான.

களபமொழுகிய புளகிதமுலையினர்
கடுவுமமிர்தமும் விரவியவிழியினர்
கழுவுசரிபுழு கொழுகியகுழலின ரெவரோடும்

கலகமிடுகய லெறிகுழைவிரகியர்
பொருளிலிளைஞரை யழிபடுமொழிகொடு
தளரவிடுபவர் தெருவினிலெவரையு நகையாடிப்

பிளவுபெறினுமி லளவளவொழுகியர்
நடையிலுடையினி லழகொடுதிரிபவர்
பெருகுபொருள்பெறி லமளியிலிதமொடு-குழைவோடே

பிணையுமணைபவர் வெறிதருபுனலுணும்
வசவனிதையர் முடுகொடுமணைபவர்
பெருமையுடைய வருறவினைவிடவிநல் புரிவாயே

அளையிலுறைபுலி பெருமகவயிறதா
பசுவினிறைமுலை யமுதுணநிரைமகள்
வசுவனுடுபுலி முலையுணமலையுட னுருகாநீ

ளடவிதனிலுள பலவகைகள் தளிர்விட
மருளமதமொடு களிறுகள் பிடியுட
னசலமொளியுயர் பறவைகணிலவர விரல்சேரோம்

தொளைகள்விடுகுழை விரன்முறைதடவிய
விசைகள்பலபல தொனிதருகருமுகில்
சுருதியுடையவ னெடியவன்மனமகிழ் மருகோனே

துணைவகுணதர சரவணபவநம
முருககுருபர வளரறுமுககுக
துறையிலலையெறி திருநகருறைதரு பெருமாளே,

(ப-ரை) அளையிலுறைபுலி பெறும்மகவயிறது - காட்டில் வாசஞ் செய்கின்ற புலியானது பெற்ற புலிக்குட்டியின்வயிறு, பசுவின் நிறை முலைபமுதுண-பசுவின்பாலைக் குடிக்கவும், நிறைமகள் வசுவனொடுபுலி முலையுண-பசுங்கன்றுகள் புலியின் முலைப்பாலைக் குடிக்கவும், மலையுடன் உருகாநீள் அடவிதனில்-மலையினோடு உருகாநின்ற நீண்டகாட்டிலிருக்கின்ற உலவைகள் தளிர்விட-காற்றுகள் தளிரைக்காட்டவும்,மருளமத மொடுகளிறுகள் பிடியுடன் அகல-மதங்கொண்ட ஆண்யானைகள் பெண்யானைகளுடன் போகவும், வெளியுயர்பறவைகள் நிலம்வர-ஆகாயத்தில் பறக்கின்ற பட்சிகளெல்லாம் பூமியில்வரவும், விரல்சேர்-விரல்கள் பொருந்துகின்ற, ஏழ்தொளைகள் விடுகுழை - ஏழுதொளைகளிலும் விடுகின்ற புள்ளாங்குழலு, விரல்முறைதடவிய விசைகள் பலபல தொனிதருகருமுகில்-விரல்களால் முறையே தடவினமையின் ஏற்படும் பலவகைப்பட்ட தொனியைக்கொடுக்கின்ற கறுத்த மேகம்போல் பவனும், சுருதிஉடையவன் நெடியவன் - வேதத்தையுடையவனாகிய விஷ்ணுமூர்த்தி மனமகிழ்மருகோனே - மனஞ்சந்தோஷிக்கின்ற விஷ்ணுமூர்த்திக்கு மருகனே! துணைவ-உயிர்த்துணையே! குணதர-குணதரனே சரவணபவநம-சரவணபவனே நமஸ்காரம், முருக-முருகனே! குருபர-பரனுக்கு குருவே! வளர்அறுமுக-வளர்கின்ற ஆறுதிருமுகத்தையுடையவனே! குக-குகனே! துறையில் அலைஎறி - திருநகர் உறைதரு பெருமாளே-நீர்த்துறையில் அலைகள் மோதுகின்ற திருச்செந்திற் பதியில்

எழுந்தருளியிருக்கின்ற பெருமானே! களபம் ஒழுகிய-கலவைச்சந்தனம் ஒழுகுகின்ற, புளகிதமுலையினர்-பூரிப்பையுடைய முலையையுடையவர்களும், கடுவும் அமிர்தமும் விரவியவிழியினர் - விஷமும் அமிர்தமும் கலந்த கண்ணையுடையவர்களும், கழுவுசரி யழகொழுகியகுழலினர்-மிகுந்த சரியான அழகு ஒழுகுகின்ற கூந்தலையுடையவர்களும், எவரோடுங் கலகமிடு-யாரோடுங் கலகத்தைச்செய்கின்ற, கயல் எறி குழை விரகியர்-கண்களை வீசுகின்ற செவியாளர்களும், பொருளில் இளைஞரையழிப்படுமொழிகொடு - பொருளினால் பாலியர்களை கெடுத்துவிடக்கூடிய சொற்களைக்கொண்டு, தளரவிடுபவர்-அப்பாலியர்களைத் தளரச்செய்கின்றவர்களும், தெருவினினில் எவரையும் நகையாடி-தெருவில் யாரைப் பார்த்தாலும் அவர்களிடத்தில் நகைத்து பிளவுபெறிலதி லளவளவொழுகியர்-அவர்கள் பிளவைப்பெற்றால் அளவுக்குத்தக ஒழுகுகின்றவர்களும், நடையில் உடையினில் அழகொடு திரிபவர்-நடையாலும் வஸ்திரத்தாலும் மிக்க அழகுடனே திரிந்துகொண்டிருப்பவர்களும், பெருகு பொருள்பெறில்-மிகுந்த திரவியத்தைப் பெற்றால், அமளியில் - படுக்கையில், இதமொடு குழைவோடேபிணமும் அணைபவர்-நன்மையுடன் பிணமானாலும் மனமிசைந்து சேர்பவர்களும், வெறுதரு புனலுணும் வசவனிதையர்-வெறுக்கக் கூடியஜலத்தை உண்ணும் வாசனையோடு கூடியவர்களும், முடுகொடுமேணபவர் - வேகத்துடன் சேர்பவர்களும், முடுகொடு மணைபவர்-வேகத்துடன் சேர்பவர்களும். பெருமையுடையவர்-மிக்க கீர்த்தியையுடையவர்களுமான பெண்களுடைய, உறவினை விடஅருள்புரிவாய் - சினேகத்தை விட்டுவிடும்படி திருவருள் செய்வாய். (எ-று)

சமுத்திரத்தின் அலைகளால் மோதப்பட்ட திருச்செந்திற் பதியில் வாழ்கின்ற ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுளே! தேவரீர் பெண்களுடையமகா மாயையில் சிக்கித்திரிகின்ற அடியேனை அவ்விதம் போகாதபடிசெய்து ஆண்டருளவேண்டும் என்பது கருத்து.

13. தந்ததனதான தந்ததனதான
தந்ததனதான—தனதான.

கன்றிவருநீல குங்குமபடீர
கஞ்சமலர்மேவு முலைகாட்டி
கங்குல்செறிகேச நின்றுகுலையாமை
கண்கள் கடைகாட்டி விலைகாட்டி
நன்றுபொருடேடு வென்றுவிலைபேசி
நம்பிவிடுமாத ருடனாட்ட
நஞ்சுபுசிதேரை யங்கமதுவாக
நைந்துவிடுவேனுக் கருள்வாயே
குன்றிமணிபோல செங்கண்வரிநாகங்
கொண்டபடம்வீசு மணிகூர்வாய்
கொண்டமயிலேறி குன்றிடியமோதி
சென்றவடிவேலைக் கொடுபோர்செய்
மன்றல்கமழ்பூசுந் தெங்குதிரள்சோலை
வண்டுபடவாவி புடைசூழ
மந்திநடமாடு செந்திநகர்மேவு
மந்தசுரகால பெருமாளே.

(ப-ரை,) குன்றிமணிபோல-குன்றிமணியின் நிறத்தைப்போலும், செங்கண்வரிநாகம்-செவந்த கண்களையும் வரிகளையுமுடைய நாகப்பாம்பானது, கொண்டபடம்வீச-கொண்டிருக்கின்ற படத்தை யெடுத்தாட்டும்படி, அணிகூர்வாய்-அழகியகூரியவாயை, கொண்டமயில்லறி-பெற்

றிருக்கின்ற மயில்வாகனத்தில் ஆரோகணித்து, குன்றிடியமோதி-கிரௌஞ்சகிரியானது இடிந்து விழும்படிமோதி, சென்றவடிவேலைக் கொடுபோர்செப்-போன வடித்த வேலாயுதத்தைக்கொண்டு யுத்தஞ்செய்கின்ற, மன்றல்கமழ்-வாசனைவீசுகின்ற பூகம்-பாக்குமரங்களும், தெங்கு தென்னைமரங்களும், திரள்சோலை-நெருங்கித் திரண்டிருக்கின்ற சோலையில், வண்டுபட-வண்டுகளிருக்கும்படி, வாவிபுடைசூழும்-குளங்கள்சமீபத்தில் சூழ்ந்திருக்கின்ற, மந்திநடமாடு - குரங்குகள் கூத்தாடுகின்ற, செந்தில் நகர்மேவு - திருச்செந்திற் பதியில் எழுந்தருளியிருக்கின்ற, அந்த சுரகால பெருமாளே-அந்த ராட்சதர்களுக்குக் காலனான இளைய பெருமாளான சுப்பிரமணியக் கடவுளே! கன்றிவருநீல இளமைபொருந்திய நீலநிறத்தையும், குங்குமபடீர கஞ்சமலர்மேவு-குங்குமப்பூ பச்சைக் கர்ப்பூரம் தடவிய தாமரைமலரையணிந்த, முலைகாட்டி-முலையைக் காட்டி, கங்குல்செறி-இருள் நிறைந்திருக்கின்ற, (அதாவது கறுத்த) கேசம்-அளகபாரமானது, நின்று இருந்து, குலையாமை - கெடாமையாக, கண்கள்கடைகாட்டி-கடைக்கண்களைகாட்டி, விலைகாட்டி-இவ்வளவென்று விலையைச் சுட்டிக்காட்டி, நன்றுபொருள்தீது வென்றுவிலைபேசி-நல்ல பொருள்களையெல்லாம் தீதென்றுசொல்லி விலைபேசி, நம்பிவிடு மாதருடன் நாட்டம்-நம்பிவிடுகின்ற பெண்களுடைய நாட்டமான, நஞ்சுபுசி-விஷத்தைப்புசித்து, தேரையங்கமதுவாக-தேரை உடம்புபட்டு நைந்துவிடுவேனுக்கு அருள்வாய்-வருத்தப்படுபவனுக்குத் திருவருள்செய்வாய். (எ-று)

பெண்களுடைய தனங்கள் உபயோகத்தால் நீலநிறத்தையடையது எவ்விடத்துஞ் சகசந்தானென்பார், 'கன்றிவருநீலம்' எனவும், ஸ்தனங்கள் வாசனையோடுகூடியன வென்பார், 'குங்குமபடீரகஞ்சமலர் மேவு முலைகாட்டி' எனவும். பெண்கள் கூந்தலை இருட்டாகக் கூறப்படுவது சகசமென்பார், 'கங்குல்செறிகேசம்' எனவும் கண்களால் சாடை காட்டுஞ் சுபாவமுண்டென்பார், 'நின்றுகுலையாமை கண்கள்கடைகாட்

டி விலைகாட்டி, எனவும், வேசைகள் விலைகட்டியறுத்து நேர்பவர் என்பார், 'நன்றுபொருடது வென்று விலைபேசி நம்பிவிடமாதருடனுட்டம்' எனவும், அதனால் தேரையைப்போல் சரீரமாய்விடுமென்பார், 'நஞ்சபுசி தேரையங்கமதுவாக நைந்துவிடுவேனுக்கு' எனவும், யாவருக்குந் திருவருள்செய்ய இறைவன் கடமைப்பட்டவனென்பார், அருள்வாயே' எனவும் நாகத்தைவாயில் பற்றியிருக்கின்ற மயில்வாகனத்தில் ஆரோகணிப்பவனும், கிரவுஞ்சமலையை ஊடுருவச்செற்றவனும், செந்தில்நகர் வாழ்பவனும் ஸ்ரீசுப்பிரமணியனுவானென்பார், 'குன்றிமணிபோலசெங் கண்வரிநாகங் கொண்டபடம் வீசுமணிகூர்வாய்-கொண்டமயிலேறிகுன் றிடியமோதி சென்றவடிவேலைக் கொடுபோர்செய் - மன்றல்கமழ்பூநகந் தெங்குதிரள்சோலை வண்டுபடவாவி புடைசூழ - மந்திநடமாடு செந் தினகர்மேவு மந்தசுரகாலபெருமாளே' எனவுங் கூறினர்.

14. தனத்தந்தானன தானனதானன
தனத்தந்தானன தானனதானன
தனத்தந்தானன தானனதானன—தனதான.

அனிச்சங்கார்முகம் வீசிடமாசறு
துவட்பஞ்சானத டாகம்விடாமட
வனத்தின்றாவிகு லாவியசீறடி மடமாது

ரருக்கன்போலொளி வீசியமாமர
கதப்பைம்பூணணி வார்முலைமேன்முக
மழுத்தும்பாவியெ னுவிபேடேறிட நெறிதாராய்

வினைச்சண்டாளனை வீணனைநீணிதி
தனைக்கண்டாணவ மானநிர்மூடனை
விடைக்கன்பாய்நுகர் பாழனையோர்மொழி பகராதே

விகற்பக்கூறிடு மோகவிகாரனை
யறத்தின்பாலொழு காதமுதேவியை
விழித்துன்பாதுகை நீதரநானருள் பெறுவேனோ

முனைச்சங்கோலிடு நீலமகோததி
யடைத்தஞ்சாதவி ராவணனீள்பல
முடிக்கன்றோர்கணை யேவுமிராகவன் மருகோனே

முளைக்குஞ்சீதநி லாவொடுபாய்விரி
திரைக்கங்காநதி தாதகிகூவிள
முடிக்குஞ்சேகரர் பேரருளால்வரு முருகோனே

தினைச்செங்கானக வேடுவரானவர்
திகைத்தந்தோவென வேகணியாகிய
திறற்கந்தாவளி நாயகிகாமுறு மெழில்வேலா

சிறக்குந்தாமரை யோடையின் மேடையில்
நிறக்குஞ்சூல்வளை பால்மணிவீசிய
திருச்செந்தூர்வரு சேவகனேசுரர் பெருமாளே.

(ப-ரை.) முனைச்சங்கு ஒலிடு - முனைகின்ற சங்கு கூட்டங்களானவை, சத்திக்கின்ற, நீலமகோ ததியடைத்து - நீலநிறம்பொருந்திய சமுத்திரத்தையடைத்து, அஞ்சாத இராவணன்-பயப்படாத இராவணனுடைய, நீள்பலமுடிக்கு-மிகுந்த பலம்பொருந்திய முடிக்கு, அன்று ஒரு கணை ஏவும் இராகவன் மருகோனே-பூர்வத்தில் ஒரு அம்பைப் பிரயோகஞ்செய்த விஷ்ணுமூர்த்தியினுடைய மருமகனே! முளைக்குஞ்சீத நிலாவொடு-உதிக்கின்ற குளிர்ந்த சந்திரனுடன், பாய்விரிதிரை-பரவி விரிந்தஅலைகளையுடைய, கங்காநதி-கங்கையையும், தாதகி-கொன்றைமலரையும், கூவிளம்-வில்வபத்திரியையும் முடிக்குஞ்சேகரர்-தரித்திருக்கின்ற

சந்திர சேகராது, பேரருளால்வரும்-மிக்க திருவருளால் உதயமான, முருகோனே-முருகக்கடவுளே! தினைச்செங் கான வேடுவரானவர் - தினைப் புனத்தில் காட்டுவாசிகளான வேடர்கள், திகைத்து அந்தோ என-மன மருண்டு அந்தோ! என்று அதிசயிக்க, சணியாகிய - வேங்கைமரமான, திறல்கந்தா-சாமார்த்தியமுள்ள கந்தனே! வள்ளிநாயகி காமுறும் எழில் வேலா-வள்ளிநாய்ச்சியார் ஆசைப்படும் அழகிய வேலாயுதனே! சிறக்குந்தாமரை ஓடையின் விளங்குகின்ற தாமரைமுளைத்திருக்கின்ற ஓடையின், மேடையில்-மேட்டில், நிறக்குஞ் சூல்வளை - வண்ணமான கர்ப்பங்கொண்ட சங்குகள், பால்மணி வீசிய - பால்போலும் சங்கமணியை வீசிக்கொண்டிருக்க திருச்செந்திலவரு - திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கின்ற, சேவகனே சுரர் பெருமாளே - சேவகனே தேவர்களுக்குத் தலைவனே? அணிச்சம் கார்முகம்வீசிட-அனிச்சமலரையும் இந்திர வில்லையும்வீச,மாசறு-குற்றமற்ற, துவள் - துவளுகின்ற,பஞ்சான-செம்பஞ்சைப்போன்ற, தடாகம் விடா-குளத்தில்விடாத, மடஅனத்தின் - இளமைபொருந்திய அன்னத்தினுடைய, தூவிகுலாவிய - சிறகுவிளங்கின, சீறடிமடமானர்-சிற்றடியையுடைய இளம்பெண்களுடைய,அருக்கன்போல் சூரியனைப்போல், ஒளிவீசிய-தேஜஸைக்காட்டின, மாமகத்தாகிய, மரகதபைம்பூண்-மரகதத்தாலாகிய ஆபரணங்களை, அணி-தரித்திருக்கின்ற, வார்முலைமேல் கச்சிறுக்கிய முலையின்மேல், முகம் அழுத்தும்பாவியன்-முகத்தை அழுத்துகின்ற பாவியாகிய என்னுடைய ஆவி ஈடேறும்படி நெறிதாராய்-நன்மார்க்கத்தைக் கொடுப்பாய், வினை சண்டாளனை-இருவினைகளையுடைய சண்டாளனை, வீணனை-வீணனவனை நீள்நிதி தனைக்கண்டு-மிகுந்த நிதியைக்கண்டு, ஆணவமான - ஆணவத்தையடைந்திருந்த, நிர்மூடனை-மிக்கமூடனை, விடக்கு அன்பாய் நுகர் பாழனை-மாமிசத்தை அன்பாகத்தின்னும் பாழானவனை, ஓர்மொழிபகராது-ஒரு சொல்லைச்சொல்லாமல், விகற்பங்கூறிடும்-வித்தியாசங்களைச் சொல்லும், மோகவிகாரனை-மோகங்கொள்ளும் விகாரனை, அறத்தின்

பால் ஒழுகாத மூதேவியை-தருமவழியிற் சொல்லாத மூதேவியை,விழித்து-பார்த்து, உன்பாதுகை-உனதுடைய திருவடிகளை, நீதர-நீகொடுக்க, நான் அருள்பெறுவேனோ-நான் திருவருளை அடைவேனோ? (எ-று).

பெண்கள் மாயையில் சிக்கித்திரிவேனை தேவரீர் திருவடிதந்து ரட்சிக்கவேண்டும் என்பது கருத்து.

திருப்பழநி மலை.

15. தனதனன தானதந்த தன்னதன தனதந்த
தனதனன தானதந்த—தனதான.

கருவினுரு வாகிவந்து வயதளவி லேவளர்ந்து
கலைகள்பல வேதெரிந்து மதனாலே
கரியகுழல் மாதர்தங்க ளடிசுவடு மார்புதைந்து
கவலைபெரி தாகிநொந்து மிகவாடி
அரகரசி வாயவென்று தினமுநினை யாமனின்று
மறுசமய நீதியொன்று மறியாமல்
அசனமிடு வார்சடங்கள் மனைகடலை வாசனின்று
மனதுதினமு நாணமின்றி யழிவேனோ
உரகபட மேல்வளர்ந்த பெரியபெரு மாளரங்க
ருலகளவு மான்மகிழ்ந்த மருகோனே
வுபயகுல தீபதுங்க விருதுகவி ராஜசிங்க
முறைபுகலி யூரிலன்று வருவோனே
பரவைமனை மீதிலன்று வொருபொழுது தூதுசென்ற
பரமனரு ளால்வளர்ந்த குமரேசா

பகையசுரர் சேனைகொன்று வமரர்சிறைமீளவென்று
பழநிமலை மீதினின்ற பெருமாளே.

(ப-ரை. உரகபட மேல்வளர்ந்த-சர்ப்பசயனத்தில் கண்வளர்ந்த, பெரியபெருமாள் அரங்கர்-பெரிய பெருமாளான அரங்கரும், உலகளவு மால்மகிழ்ந்த மருகோனே - உலகத்தையளாவிய விஷ்ணுவுமான மால் மகிழ்ச்சியடைந்த மருகனே! உபயகுலதீப-உபயகுல தீபமான, அங்க-அங்கத்தையுடைய, விருதுகவி ராஜசிங்கம்-விருதுபெற்ற கவிராஜசிங்கமாக, உறை-இருக்கின்ற, புகலியூரில் அன்று வருவோனே-புகலியூரில் எழுந்தருளிவந்தவனே, பரவைமனைமீதில் - பரவை நாச்சியாருடைய வீட்டில் அன்று ஒருபொழுது-பூர்வத்தில் ஒருநாள், தூதுசென்ற - தூதாளாகச்சென்ற, பரமன் அருளால் வளர்ந்த-சிவபெருமானுடையதிருவருளால் வளர்ந்த, குமரேசா - குமாரக்கடவுளே, பகையசுரர் சேனை கொன்று பகைவர்களாகிய ராட்சசர்களுடைய சேனைகளைக்கொன்று, அமரர்சிறை மீளவென்று - தேவர்களுடைய சிறையானது மீளும்படி ஜெயித்து, பழனிமலை மீதில் நின்ற பெருமாளே - பழநிமலையில் எழுந்தருளியிருக்கின்ற இளையபெருமாளே கருவிலுருவாகி வந்து-கருப்பத்தில் ரூபமடைந்துவந்து, வயதளவிலேவளர்ந்து - வயது அளவுப்படி வளர்ந்து, கலைகள்பலவே தெரிந்தும் - பலசாஸ்திரங்களை உணர்ந்தும், மதனால்-மன்மதனால், கரியகுழல் மாதர்தங்கள்-கறுத்த கூந்தலையுடைய பெண்களுடைய, அடிசுவடு மார்புதைந்து - அடியின்வடு மார்பில்பட்டு-கவலை பெரிதாகிநொந்து-அதனால் மனக்கவலை அதிகப்பட்டு வருந்தி, மிகவாடி-மிகவுந்தளர்ந்து, அரகரசிவாயவென்று-அரகரசிவாய நமவென்று தினமும்-அநுதினமும், நினையாமல் நின்று-சிந்திக்காமலிருந்தும், அறு சமயநீதி-ஆறுசமய நியாயங்கள், ஒன்றும் அறியாமல் - ஒன்றையும் உணராமல், அசனமிடுவார்கள் தங்கள்-அன்னமிடுபவர்களுடையமனை, வீட்டில், கவலை-கவலையோடு, வாசல்நின்றும் - வாசலிலிருந்தும், அறு

தினமும் நாணம்இன்றி அழிவேனோ - தினந்தோறும் வெட்கமில்லாமல் அழிவேனோ. (எ-று)

உலகத்தில் பிறந்து வளர்ந்தபின் பெண்கள் மாயையில் சிக்கித் திரிகின்றவனை தேவரீர்காத்து ரட்சிக்கவேண்டும் என்பது கருத்து.

16. தனதன தத்ததானன
தனதன தத்ததானன
தனதன தத்ததானன—தனதான.

கதியைவி லக்குமாதர்கள்
புதிய ரத்னபூஷண
கனதன வெற்புமேன்மிகு மயலான

கவலைம னத்தனாகினு
முனதுப்ர சித்தமாகிய
கனதன மொத்தமேனியு முகமாறும்

அதிபல வச்சிரவாகுவு
மயிலுனி வெற்றிவேலையு
மரவுபி டித்தகோகையு முலகேழு

மதிரவ ரற்றுகோழியு
மடியார்வ ழுத்துவாழ்வுறு
மபிநவ பத்மபாதமு மறவேனே

இரவிகு லத்திராசத
மருவியெ திர்த்துவீழ்கடு
ரணமுக சுத்தவீரிய குணமான

விளையவ னுக்குநீண்முடி
யரசது பெற்றுவாழ்வுற
இரதந டத்துராகவன் மருகோனே

பதினொரு ருத்திராதிகள்
திகழ்வி ளக்குமாளிகை
பரிவொடு நிற்குமீசுரர் சுரலோகம்

பரிமள கற்பகாடவி
அரியளிசுற்றுபூவுதிர்
பழநிம லைக்குள்மேவிய பெருமாளே.

(ப-ரை) இரவிகுலத்து - சூரிய வமிசத்திலுதித்த, இராசதமருவி இராசதகுணத்தினால், எதிர்த்து-எதிர்த்து, வீழ்கடுரணமுக சுத்த வீரிய-விழுகின்ற கடுமையான ரணமுகத்தில் மிகுந்த சுத்த வீரியமுள்ள, இளையவனுக்கு-அர்ச்சுனனுக்கு, நீள்முடியரசது பெற்று வாழ்வுற - நீண்ட முடியையுடைய அரசையடைந்துவாழ, இரதநடத்துராகவன்-கிருஷ்ணாவதாரத்தில் தேரைச்செலுத்திய ராகவனாகிய திருமாலுடைய, மருகோனே மருமகனே, பதினொரு ருத்திராதிகள்-பதினொருருத்திரர்கள், திகழ்விளக்கு மாளிகை-விளங்கும்படி தெரிவிக்கும் மாளிகையின்கண், பரிவொடு நிற்குமீசுரர், சுரலோகப்பரிமளகற்பகாடவி, தேவலோகத்தில்வாசனையுடைய கற்பகாடவியில்-அரியளிசுற்று பூவுதிர்-வண்டுகள் சுற்றுதலில் பூ உதிர்கின்ற, பழநிமலைக்குள்மேவியபெருமாளே - பழநிமலையில் எழுந்தருளியிருக்கின்ற சுப்பிரமணியக் கடவுளே! கதியைவிலக்கும் - மோட்சகதியைக்கெடுக்கின்றமாதர்கள்-பெண்களுடைய, புதியரத்தின பூஷண-புதிதாகியரத்தினமிழைத்த நகைகளையணிந்த, கனதன வெற்பு மேல்-கனத்த தனமாகிய மலையின்மேல், மிகும் மயலான கவலை மனத்தனாகினும்-மிகுந்தமையலான கவலையுடைய மனத்தனானாலும், உனதுபிரசித்தமாகிய-உன்னுடைய பகிரங்கமான, கனதனமொத்தமேனியும்-கனத்த பொன்போலும் அழகையும், முகமாறும்-ஆறுதிருமுகங்களையும்,

அதிபல வச்சிரவாகுவும்-மிகுந்தபலத்தையுடைய வச்சிரம்போன்ற புயத்தையும். அயில்நனி வெற்றி வேலையும்-கூரியமுனையையுடைய ஜெயம் பொருந்திய-வேலாயுதத்தையும், அரவுபிடித்த தோகையும்-சர்ப்பத்தைப் பிடித்திருக்கின்றமயிலையும், உலகேழும் அதிர-ஏழுலகங்களும் அதிரும்படி, அரற்று கோழியும்-சத்திக்கின்ற கோழியையும், அடியர்வழுத்து வாழ்வுறு-அடியவர்கள் வாழ்த்துகின்ற வாழ்க்கையையுமுடைய, அபிநவபத்மபாதமும்மறவேன்-அன்றலர்ந்த திருவடித் தாமரைகளையும் மறக்கமாட்டேன்.)எ-று)

இறைவனே! நான் பெண்கள் மாயையிற் சிக்கினவனாகவிருந்தாலும் உன்னுடைய திருவடிகள் முதலியவற்றில் என்றும் பத்தியுடையவனாக விருப்பேன் என்பது கருத்து.

17. தானதத்தனத் தானதத்தனத்
தானதந்தனத்—தனதான.

காரணிந்தவரைப் பாரடைந்துவினைக்
காதனெஞ்சயரத் தடுமாறி
கானரம்புதிரத் தோல்வழும்புறுபொய்க்
காயமொன்றுபொருட் டடியேனுங்
தாரணிங்குகுழற் கூரணிந்தவிழிச்
சாபமொன்றுநுதற் கொடியார்தங்
தாள்பணிந்தவர்பொற் றோள்விரும்பிமிகத்
தான்மெலிந்துவிடத் தகுமோதான்
சூரர்தண்டுபடப் போர்கடந்துதொழத்
தூயமுஞ்சுவறப் பொருவேலா
தாய்மைகொண்டகுறக் கோதைநின்றபுன
சூழ்பெருங்கிரியிற் றிரிவோனே

ஆரணன்கருடத் தாரணன்புகழ்தற்
காலமுண்டவருக் குரியோனே
ஆலையம்பழனச் சோலையின்புடைசுற்
றாவினன் குடியிற் பெருமாளே

(ப-ரை) சூர்துண்டுபட-சூர்கள் நாசமாக, போர்கடந்து-யுத்தஞ் செய்து, தொழ-யாவரும்வணங்க, சோயமுஞ் சுதறப்பொருவேலா-எழு சமுத்திரங்களும் வற்றும்படி போதின வேலாயுதத்தையுடையவனே! தூய்மைகொண்ட - பரிசுத்தமான, குறத்தோகை நின்ற - குறப்பெண்ணான வள்ளிநாய்ச்சியாரிருந்த, புனஞ்சூழ் பெருங்கிரியிற் றிரிவோனே-தினைப்புனஞ்சூழ்ந்த பெரியமலையிற் றிரிபவனே! ஆரணன் - பிரமன், கருடத்தாரணன்-விஷ்ணு, புகழ்தற்கு - (ஆகிய இவர்கள்) புகழ்வதற்கு, ஆலமுண்டவருக்கு உரியோனே - ஆலகாலவிஷத்தை யுண்டவருக்கு உரிமையான புதல்வனே! ஆலையம்பழனச் சோலையின்புடை-ஆலையையுடையவயல்சூழ்ந்த சோலையின்புடை, சுற்று ஆவினன்குடியிற் பெருமாளே-சமீபத்தில் சூழ்ந்த திருவாவினன்குடியில் வாழ்ந்திருக்கிற பெருமாளே! காரணிந்தவரை-மேகந்தவழ்கின்ற மலையையுடைய, பார் அடைந்து-உலகத்தைச் சேர்ந்து, வினைக்காதல் நெஞ்சயர தடுமாறி-இருவினைக் காதலினால் மனந்தடுமாறி, கால்நரம்பு உதிரம் தோல்வழும்பு உறபொய்க் காயம்ஒன்று பொறுத்து-காலின் நரம்புஇரத்தம் தோல், வழும்பாதிகள் பொருந்திய நிலையில்லாத சரீரம் ஒன்றைத்தாங்கி, அடியேனும்-அடியவனானநானும், தார்இணங்கு-மாலைபொருந்தின, குழல்-கூந்தலையும், கூர் அணிந்தவிழி-கூர்த்த கண்களையும், சாபமொன்று நுதல்-வில்லைப்போலும் நெற்றியையுமுடைய, கொடியார்தம் தாள் பணிந்தவர்-கொடிபோல்பவர்களாகிய பெண்களுடைய கால்களில் வணங்கியவர்களுடைய,

பொன்தோள் விரும்பி-பொன்போலும் புயங்களில் ஆசைப்பட்டு, மிகத்
தான் மெலிந்துவிட நமோகம் மெலியத்தகுமோ? (எ-று)

திருவேரகம் சுவாமிமலை.

18. தனதனன தனதனன தனதான தத்ததன
தனதனன தனதனன தனதான தத்ததன
தனதனன தனதனன தனதான தத்ததன—தனதான.

குமரகுருபர முருக குகனெகுறச்சிறுமி
கணவசரவண நிருதர் கலகாரி யெனச்செபியர்
குருவிவாக னமராபுதவு மயிலா வெனக்கினமு முருகாதே

தேனின்மொழிகள் படவியர்கள் விழியா லுருக்குபவர்
தெருவிலனைவர்தமனை மெனவேகடப்பர்கலைக [நுங்
கொடுப்பவர்கருத்துடைமை முனைமேபறிப்பவர்களனைமேவா

தமநுவச முறவசிய முகமேமிருக்கியர்கள்
முலையிலுற நிகல்சரிய நடிவிதிநிற்பவர்கள்
தனமவியர் மனமுறிய நழுவா வழுப்பியர்கள் வலையாலே

சதிசெய்பவ ரவர்மனிடவணைமீதா ருக்கியர்கள்
வசமுழுகி யவாடிமை யெனமாத ரிட்டதொழில்
தனிழமுழு மசடனைபு னடியே வழுத்தவரு டருவாயே

சமரமொடு மசுரர்படை களமீதெதிர்த்தபொழு
தமிருநொடிப்பிலவர்கள்படை கெடவே லெடுத்தவனி
தொனிநுகர் சிரமுருள ரணதாள் படுத்திவிடு செருமீதே

தவனமொடு மலகைநட மிடவீர பத்திரர்க
ளதிரநிண மொடுகுருதி குடிகாளி கொக்கரிசெய் [கோடி
தசையுணவு தனின்மகிழும் விடபேய் நிரைத்திரள்கள் பல

திமிதமிட நரிகொடிகள் கழுகாட ரத்தவெறி
வயிரவர்கள் சுழலவொரு தனியாயு தத்தைவிடு
திமிரதின கரவமரர் பதிவாழ்வு பெற்றுலவு முருகோனே

திருமருவு புயனயனொ டயிராவ தக்குரிசி
லடிபரவு பழநிமலை கதிர்காம முற்றவளர்
சிவசமய அறுமுகவ திருவேர கத்திலுறை பெருமாளே.

(ப-ரை) சமரமொடும் - சண்டையுடன், அசுரர் படைகள் மீது எதிர்த்தபொழுது - அசுரர்களுடைய சேனைகள் யுத்தத்தில் எதிர்த்த காலத்தில், ஒருநொடியில்-ஒருகணப்பொழுதில், அவர்கள் படைகெட-அவர்களுடைய படையானது கெடும்படி, வேல்எடுத்து-வேலாயுதத்தை எடுத்து அவனிதனில்-உலகத்தில், சிருசர் சிரம் உருள-அசுரர்களுடைய தலையுருளும்படி. ரணதூள் படுத்திவிடு - ரணத்தூள்செய்து, செருமிசை-படைக்களத்தில், தவனமொடும் அலகை நடமிட-அலகைகள் ஆசையோடு நடனஞ்செய்ய, வீரபத்திரர்கள் அதிர-வீரபத்திரர்களெல்லாம் அதிரும்படி, நிணமொடு குருதிகுடி-நிணத்துடன் ரத்தத்தையும் குடிக்கின்ற, காளிகொக்கரிசெய்-காளியானவள் கொக்கரிக்கின்ற, தசையுணவுதனில் - மாமிச ஆகாரத்தில், மகிழும்-சந்தோஷிக்கின்ற, பேய்நிரைத்திரள்கள்-பிசாசான வரிசைக்கூட்டங்கள், பல திமிதமிட-பலசேர்ந்து கூத்தாட, நரிகொடிகள் கழுகாட-நரிகளும், காகங்களும், கழுகுகளும் ஆடவும், ரத்தவெறிவயிரவர்கள் சுழல-ரத்தத்தைக் குடித்த வெறியினால் வயிரவர்கள் சுழலவும், ஒரு தனியாயுதத்தை விடுதிமிர-

தினகர-ஒப்பற்ற தனியாயுதத்தை விட்ட இருளைநீக்கும் சூரியனே ! அமரர்பதி-தேவசேனாபதி என்னும், வாழ்வுபெற்று உலவு முருகோனே-வாழ்வைப்பெற்று வசிக்கின்ற முருகக்கடவுளே, திருமருவு புயன் அயனொடு அயிராவதக்குரிசில் அடிபரவும்-விஷ்ணுவும் பிரமனும் தேவேந்திரனும் திருவடிகளைத் துதிக்கும், பழநிமலை கதிர்காமம் உற்றவளர்-பழநிமலை, கதிர்காமம் என்னும் க்ஷேத்திரங்களிலிருந்து வளர்கின்ற சிவசமய அறுமுகவ-சிவசமத்திலுள்ள ஆறுமுகக் கடவுளே, திரு ஏரகத்தில் உறைபெருமாளே-திருவேரகம் என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெருமாளே ! குமரகுரு பரமுருக- குமரனே, குருபரனே, முருகனே குக-குகனே குறச்சிறுமி கணவ- குறப்பெண்ணாகிய வள்ளிநாய்ச்சியாருடைய, கணவனே ! சரவண-சரவணபவனே, நிருதர்கலகா - அசுரர்களின் பகைவனே, பிறைச்சடையர் குருவென நவுரையுதவுமயிலா - சந்திரனைத் தரித்த சடையையுடையவருடைய குருவென்றசொல்லும் மயில்வாகனனே, என-என்று, தினமும் உருகாது அநுதினமும்உருகாது-அநுதினமும் மனமிளகாமல், குயில்மொழி நல் மடவியர்கள்-குயிலைப்போலுஞ் சொல்லையுடைய நல்லபெண்களுடைய விழியால் உருக்கவர் விழியால் மனமிறக்கப்படுபவர், தெருவில்-வீதியில், அனவரதம்-எப்போதும், அனமெனநடப்பர் நகைகொடு-அன்னம்போலும் நடப்பவர்களுடைய தந்தபந்தியைக்கொண்டு, அவர்கள் உடைமைமனமுடனே பறிப்பவர்கள் அனைவோரும்-அவர்களுடைய உடைமையை எண்ணத்துடனே பறிப்பவர்களெல்லாரும், தமதுவசமுற-தம்முடைய வசமாம்படி, வசியமுகமேமினுக்கியர்கள்-வசியஞ்செய்யும் முக மினுக்கியர்கள், முலையில்உறு துகில்சரிய-முலையின்மேலுள்ள வஸ்திரமானதுநழுவ, நடுவீதி நிற்பவர்கள்-நடுத்தெருவில் நிற்பவர்கள், தனமலியர் மனமுறிய-தனவந்தர்களுடைய மனவுறுதியானது கெட, நழுவா உழப்பியர்-இடைவிடாத உழைப்பையுடையவர்கள், கண்வலை

யில்-கண்களின் வலையினால், சதிசெய்பவர்-துன்பம்விளைவிப்பவர்,அகம் மகிழ அணைமீது உருக்கியர்கள்-மனஞ் சந்தோஷத்தையடைய படுக்கை யின்மேல்மனத்தை மெல்ல உருக்குகின்றவர்கள், ஆகிய இத்தகையினர் களுடைய மயலில் அகம்முழுகி-மனம் லயப்பட்டு, அவர் அடிமையென- அவர்களிடைய அடிமையைப்போல, மாதரிட்ட தொழில்தனில் உழ லும்-பெண்களிட்ட வேலைகளைச்செய்து திரிகின்ற, அசடனை உன் அடியேவழுத்த அருள்தருவாய்-கசடனை என்னை உன்னுடைய திரு வடிகளைத் துதி செய்யும்படி திருவருள் செய்வாய். (எ-று)

19. தனனதனத்த தனனதனத்த
தனனதனத்த—தனதான.

மருவேசெறித்த குழலார்வயக்கின்
மதனாகமத்தின் விரகாலே
மயலேயெழுப்பி யிதமாயருத்தி
மலைநேர் முலைக்கு ளுறவாகி
பெருகாதலுற்ற தமியேனைநித்தல்
பிரியாதபட்ச முடனேயென்
பிழையேபொறுத்து னிருதாளிலுற்ற
பெருவாழ்வுபெற்ற வருள்வாயே
குருவாயரற்கு முபதேசம்வைத்த
குகனேகுறத்தி மணவாளா
குளிர்காவிமிகுத்த வளமோதமுற்ற
குடகாவிரிக்கு வடபால்வாழ்
திருமாறனக்கு மருகாவுமைக்கொர்
சிறுவாகரிக்கு மிளையோனே
திருவேரகத்தி லுறைவாயமரர்
சிரமேதணித்த பெருமாளே.

(ப-ரை) வருவாய் அரற்கும் உபதேசம்வைத்த குகனே குறத்தி மணவாளா-பரமசிவனுக்கு ஞானாசிரியனாய் உபதேசஞ்செய்த குகனே, வள்ளிநாய்ச்சியாருடைய தலைவனே ! குளிர்கால் மிகுத்த - குளிர்ந்த காற்று மிகுந்த, வளர்போதமுற்ற-வளர்கின்ற ஞானத்தையடைந்த, குடகாவிரிக்கு வடபால்வாழ் காவேரிநதிக்கு வடக்கே வாழ்கின்ற, திருமால்தனக்கு மருகா-திருமாலுக்கு மருமகனே, உமைக்கு நரு சிறுவா பார்வதீ புத்திரனே, கரிக்கும் இளையோனே- யானைமுகத்தையுடைய விநாயகர்க்குத்தம்பியே, திருவேரகத்திலுறைவா-திருவேரகம் என்னும் பதியில் வாழ்கின்றவனே, அரக்கர் சிரமேதுணித்த பெருமாளே-இராக்கதர்களுடைய தலையை வெட்டின பெருமாளே, மருவேசெறித்த குழலார் மயக்கின் மதனாகமத்தின் விரகால்-வாசனைநிறைந்த கூந்தலையுடைய பெண்களிடத்தில் மன்மதபாண வலிவால், மயலே எழுப்பி யிதமாயருத்தி-மயக்கத்தையெழுப்பி நன்மையாயருத்தி, மலைநேர் முலைக்குள் உறவாகி-மலைக்கு ஒப்பான முலையினிடத்தில் உறவாகி, பெருகாதல் உற்றதமியேனை-மிகவும் ஆசைகொண்ட அடியேனை என்னை, நித்தல் பிரியாதபட்சம்-தினமும் பிரியாதபடி, உடனேயென் பிழைபொறுத்து-உடனே என்னுடைய குற்றத்தைப்பொறுத்து, உன் இருதாளின் உற்றபெருவாழ்வுபற்ற அருள்வாய் - உன்னுடைய இரண்டு திருவடிகளிலுற்றபெரிய வாழ்வையடையத் திருவருள்செய்வாய்

20. தானனதத்தன தத்தனதத்தன
தானனதத்தன தத்தனதத்தன
தானனதத்தன தத்தனதத்தன—தனதான.

கோமளவெற்பினை யொத்ததனத்தியர்
காமனையொப்பவர் சித்தமுருக்கியர்
கோவையிதழ்க்கனி நித்தமுமிற்பவர் மயில்காடை

கோகிலநட்புற வொத்திடுபுட்குர
லாரணிபப்புள்ள லைசக்குரல்கற்றியர்
கோலவிழிக்கடை யிட்டுமருட்டியர் விரகாலே

தாமமலர்ப்பணி மெத்தைபடுப்பவ
ராரையுமெத்திமனைக்குள ழைப்பவர்
சோலைவனக்கிளி யொத்தமொழிச்சியர் நெறிகூடா

தூசுநெகிழ்த்தரை சுற்றியுடுப்பவர்
காசுபறிக்கம திக்குமயக்கியர்
தோதகவித்தைப டித்துநடிப்பவ ருறவாமோ

மாமரமொத்தம லைக்குணெருக்கிய
சூரனைவெட்டிநி ணக்குடலைக்கொடு
வார்புவிமெச்சவ ழித்தவிலட்சண சுரிர்காம

மாமலையிற்பழ நிப்பதியிற்றணி
மாகிரியிற்றணி கைக்கிரியிற்பரி
மாகிரியிற்கிரி சுற்றிவளைத்திடு மலைவாயில்

ஏமவெயிற்பெறு வெற்பினினற்பதி
ஞாலகத்துள பத்தர்கள்சித்தம
தேதுநினைத்தது மெத்தவளித்தரு ளியயோனே

ஏரகவெற்பெனு மற்புதமிக்கசு
வாமிமலைப்பதி மெச்சியசற்சன
ராசதலட்சண வுத்தமபெற்றருள் பெருமாளே.

(ப-ரை) மாமரமொத்து மலைக்குள் நெருக்கிய சூரனைவெட்டி-மாமரத்தைப்போலாய் மலைக்குள் நெருக்கப்பட்ட சூரபன்மனைவெட்டி, நிணக்குடலைக்கொடு-நிணமான குடலைக்கொண்டு, வார்புவிமெச்ச அழி

த்த-நீண்ட உலகத்தார்மெச்ச அழித்துவிட்ட, இலட்சண கதிர்காம மாமலையில்-இலட்சணம்பொருந்திய கதிர்காமம் என்னும் மலையிலும், பழநிப்பதியில் தனிமாகிரியில் தணிகைக்கிரியையில் - பழநிமலையிலும் தனியான பெரியமலையிலும், தணிகைமலையிலும், பரியாகிரியில் கிரி சுற்றிவளைத்திடும் அலைவாயில்-பரிமாகிரியிலும், மலைகள்சுற்றி வளைத்திருக்கின்ற அலைவாயிலும், ஏமவெயில்பெறுவெற்பினில்-பொன்னிறத்தைப்பெறுகின்ற இமயமலையிலும், நற்பதினால் உலகத்துளபத்தர்கள்-நல்ல பதினான்கு லோகங்களிலுமுள்ள பத்தர்களுக்கு ஏது நினைத்ததும் மெத்த அளித்தருள் இளையோனே-நினைத்தபொருளைக் கொடுத்தருளும் சுப்பிரமணியக் கடவுளே, ஏரகவெற்பெனும்-திருவேரகமலையென்று சொல்லப்படும், அற்புதம் மிக்க சுவாமிமலைப்பதி-ஆச்சரியம் மிகுந்த சுவாமிமலைப்பதியை, மெச்சியசற்சன ராசதலட்சண வுத்தமி பெற்றருள் பெருமாளே-மெச்சிய நல்ல ஜனங்களையுடைய ராசதகுண லட்சணத்தையுடைய உத்தமியான பார்வதியானவள் பெற்றருளிய முருகக்கடவுளே ! கோமளவெற்பினை யொத்ததனத்தியர் அழகியமலையையொத்த தனமுடையவர்கள், காமனை யொப்பவர்-மன்மதனை யொத்த ஆடவர்களினுடைய சித்தம் உருக்கியர்-மனத்தைக்கலைத்து விடுகின்றவர்கள், கோவையிதழ்க்கனி நித்தமும் விற்பவர்- இதழாகிய கொவ்வைக் கனியை தினமும் விற்பவர்கள், மயில்காடைகோகிலம் நட்புற வொத்திடு புட்குரல்- மயில், காடை, குயில் இவைகள் சிநேகங்கொள்ள ஒப்பாகின்ற புட்களின் குரலையும், ஆரணியப்புள்வகைக் குரல்கற்றியர்-காட்டுப்புள்ளின்வகை குரலையும் கற்றவரும், கோலவிழிக்கடை யிட்டு மருட்டியர்-அழகிய கடைக்கண்களைக்கொண்டு மருட்டுகின்றவர்களும் விரகால்-விருப்பத்தினால், தூமலர்ப்பனி மெத்தைபடுப்பவர்-வாசனையூட்டிய புஷ்பமெத்தையில் படுப்பவர்கள், ஆரையும்எத்திமனைக்குள் அழைப்பவர்-யாரையும் ஏமாற்றி வீட்டுக்குள் அழைப்பவர்கள், சோலை வனக்கிளி யொத்தமொழிச்சியர் - சோலைசூழ்ந்த வனத்திலுள்ள கிளி

பைப்போன்ற சொல்லையுடையவர்கள், நெறிகூடா-நன்னெறியில்சேராத, காசுநெகிழத்துஅவை சுற்றியுடுப்பவர்-வஸ்திரத்தை தளரவிட்டு அரையில் சுற்றித்தரிப்பவர், காசுபறிக்க மறித்துமுயக்கியர்-பணத்தைப் பிடுங்க விட்டுவிட்டு சிநேகிக்கின்றவர்கள், சோதகவித்தைபடித்துநடிப்பவர்-வஞ்சகவித்தையைக் கற்றுநடிப்பவர்கள் ஆகிய பெண்களின் உறவாமோ-உறவு நல்லுறவு ஆகுமோ? ஆகாது. (எ-று)

குன்றுதோருடல்.

21. தந்தனதானதான தந்தனதானதான
தந்தனதானதான—தனதான

வஞ்சகலோபமூடர் தம்பொருளூர்கடேடி
மஞ்சரிகோவைதூது பலபாவின்

வண்புகழ்வாரிகாரி யென்றிசைவாதுகூறி
வந்தியர்போலவீணி லழியாதே

செஞ்சரணாதகீத கிண்கிணிநீலமாலை
திண்டிறல்வேல்மயூர முகமாறும்

செந்தமிழ்நாளுமோதி யுய்ந்திடஞானமூறு
செங்கனிவாயிலோர்சொ லருள்வாயே

பஞ்சவனீடுகூனு மொன்றிடுதாபமோடு
பைந்தமிழ்வாதுகூறு சமண்மூகர்

பண்பறு பீலியோடு வெங்கழுவேறவோது
பண்டிதஞானநீறு தருவோனே

குஞ்சரசாலைமேவு பைம்புனமீதுலாவு
குன்றவர்சாதிகூடி வெறியாடி
கும்பிடுநாடுவாழ்வு தந்தவரோடுசீறு
குன்றுதொருடன்மேவு பெருமாளே.

(ப-ரை) பஞ்சவன்நீடு கூனும்-பாண்டியனது கூனையும், ஒன்றிடுதாபமோடு-பொருந்திய தாபச்சுரத்தையும், பைந்தமிழ் வாதுகூறும் சமண்மூகபண்புறு பீலியோடு-பசிய தமிழில் தர்க்கஞ்செய்த சமணர்களை அவர்களுடைய மயிற்பீலியுடனே, வெங்கழு வேறவோது பண்டிதஞானநீறு தருவோனே-கொடிய கழுவிலேறச்சொல்லுகின்ற பாண்டித்தியத்தையுடைய ஞானமயமான திருநீற்றை அருள்செய்தவனே, குஞ்சரசாலைமேவு-யானை வாழும் மரச்சாலைகள் பொருந்திய, பைம்புனம் மீது உலாவு-பசிய தினைப்புனத்தில் சஞ்சரிக்கின்ற, குன்றவர்சாதி கூடி வெறியாடி-வேடச்சாதியார்கள் சேர்ந்து வெறியாட்டயர, கும்பிடு நாடு வாழ்வுதந்து - நாட்டிலுள்ளார் கும்பிடத்தக்க வாழ்வைத்தந்து அவரோடு - அவ்வேடர்களுடன், சீறுகுன்றதொருடல்மேவு பெருமாளே-வெற்றிபொருந்திய குன்றதோருடல்செய்யும் (இளைய) பெருமாளே, வஞ்சகலோப மூடர்தம் - வஞ்சகத்தையும் லோபத்தையுமுடைய மூடர்களது, பொருள் ஊர்கள்தேடி-பொருளையும் நகரங்களையுந்தேடி, மஞ்சரி கோவை தூது-மஞ்சரி என்றும், கோவை என்றும், தூதுவென்றும் சொல்லப்படும, பலபாவின்-பலவகைப்பட்ட நூல்களினால், வண்புகழ்வாரிகாரி-வளப்பம்பொருந்திய கீர்த்தியையுடைய வாரியென்றும், காரியென்றும், இசைவாதுகூறி-புகழ்ச்சிபாகவாதுசொல்லி, வந்திபர்போல, பாடகர்களைப்போல, வீணில் அழியாது-வீணாக அழியாமல், செஞ்சரண்நாதகீத கிண்கிணி-செவந்த சரணங்களையும், நாதகீதத்தைக் காட்டுகின்ற கிங்கிணியையும், நீபமாலை திண்திறல்வேல்

மயூரம் முகமாறும்-கடப்பமலர் மாலையையும் திறல்பொருந்திய வேலாயுதத்தையும், மயில்வாகனத்தையும், ஆறு திருமுகங்களையும், செந்தமிழ்-செந்தமிழ்ப்பாக்களால் நாளும்ஓதி உய்ந்திட-அநுதினமும் துதித்துப் பிழைக்க, ஞானம்ஊறு-ஞானமானது கசிகின்ற, செங்கனிவாயில்-செவந்த கனியைப்போலும் வாயிலிருந்து, ஒரு சொல்அருள்வாய்-ஒருமொழியைத்திருவருள் செய்வாய். (எ-று.)

ஊரி, காரியென்போர் கடைவள்ளல்களாவார்கள்.

தென்கடம்பன்துறை.

22. தனனதன தந்தனந் தந்தனந் தந்தனந்
தனனதன தந்தனந் தந்தனந் தந்தனந்
தனனதன தந்தனந் தந்தனந் தந்தனந்—தனதான.

புனரியும் வனங்கனம் புஞ்சுரும் புந்தருங்
கயலின்ஒடு கெண்டையுஞ் சண்டனுங் கஞ்சமும்
புதுநிலவு ருந்தியுந் துஞ்சுகஞ் சும்பொருப் பெறிவேலும்

பொருவெனவி கன்றகன் றங்கயிற் குஞ்சமுன்
றிடைகலசசி வந்தவஞ் சம்பொகிர் திங்கிதம்
புரியிளைஞர் முன்பயின்றம்பொனின் கம்பிதக்குழைமோதி

குணலையொடு மிந்திரியஞ் சஞ்சலங் கண்டிடும்
படியமர்பு ரிந்தருஞ் சங்கடஞ் சந்ததம் [பால்
கொடுமைசெய்து சங்கொடுஞ்சிங்கிதங்குஞ்சடைக் கனிஞர்

குலவுபல செந்தனந் தங்குகக் கின்புறுந்
திரிவிதகர ணங்களுஞ் சந்தமின் செம்புதம்
குறுகும்வகை யந்தியுஞ் சந்தியுந் தொந்தமுற் றமைவேனோ

துணர்விரிக டம்பமென் றொங்கலும் பம்புறும்
புழுகுமச லம்பசுஞ் சந்தனங் குங்குமந் [ளுந்
தொகுகளப முந்துதைந் தென்றுநன் கொன்றுபத் திருதோ
தொலைவில்சண் முகங்களுந் தந்த்ரமந் த்ரங்களும்
பழநிமலையும்பரங் குன்றமுஞ் செந்திலுந் [வாய்
துதிசெயுமெ யன்பர்தஞ் சிந்தைசென் றன்புறப் பதிவாழ்
சணபணபு யங்கமுங் கங்கையுந் திங்களுங்
குரவுமறு குங்குருந் தும்பையுங் கொன்றையுங்
கமழ்சடில சம்புவுங் கும்பிடும் பண்புடைக் குருநாதா
கனகுடகில் நின்றகுன் றந்தருஞ் சங்கரன்
றருமுனிக மண்டலங் கொண்டுமுன் கண்டிடுங்
கதிசெய்நதி வந்துறுந் தென்கடம்பந் துறைப் பெருமாளே.

(ப-ரை) துணர்விரி கடம்பமென் றொங்கலும் - இதழ்விரித்த கடப்பமலர் மாலையும், பம்புறும் புழுகும் - மிகுந்த புனுகும், அசலம் செஞ்சந்தனம் குங்குமம் தொகுகளபமும் - மலைச்சந்தனம், குங்குமம் இவைகள் கலந்த கலவைச் சந்தனத்தையும், துதைந்து - பூசி, என்றும் நன்கொன்றுபத் திருதோளும் - எப்பொழுதும் நன்றாகப் பொருந்திய பன்னிருபுயங்களையும், தொலைவில் சண்முகங்களுந் - அழியாத ஆறு திருமுகங்களையும், தந்த்ர மந்த்ரங்களும் - தந்திரங்களையும் மந்திரங்களையும், பழநிமலையும் பரங்குன்றமும் செந்திலும் - பழநிமலையையும் திருப்பரங் குன்றத்தையும் திருச்செந்திலையும், துதிசெயு மெயன்பர்தஞ் சிந்தைசென்று அன்புறப் பதிவாழ்வாய் துதிக்கின்ற உண்மையன்பர்களுடைய மனத்திற்போய் ஆசையோடு அந்தப்பதிகளில் வாழ்வாய், சணபண புயங்கமும் - கூட்டமான படத்தையுடைய பாம்பினையும், கங்கையுந் திங்களும் குரவும் அறுகும் குருந்தும் தும்பையும்

கொன்றையும் கமழ்சடில-கங்கைநதியையும், சந்திரனையும், குராமலரை யும் அறுகம்புல்லையும், சிறு தும்பைமலரையும், கொன்றைமலரையும் வாசனை வீசும்படி தரித்த சடாபாரத்தையுடைய, சம்புவும் கும்பிடும் பண் டைக் குருநாதா-பரமேசுரனும் வணங்குகின்ற தன்மையையுடைய ஞா னாசிரியனே, கன நடடவில் நின்ற துன்றசருங்சங்கரன் உபர்ந்தமேற்குபக் கத்திருக்கும் அஸ்தகிரியைஒத்தசங்கரனை, குறமுனிகமண்டலங்கொண்டு மூன் கண்டிடும் நதிசெய்நதி - அகத்தியரானவர் கமண்டலத்தைக்கொ ண்டு முன்னேகண்ட கதியை யடைந்த-நதியானது, வந்துறும் தென் கடம்பன் துறைபெருமாளே வந்திருந்தும் தென்கடம்பன் துறையில் எழுந்தருளி யிருக்கும் பெருமாளே, புணரியும்அநங்கன் அம்புசுரும்பும் கருங்கயலினொடு கெண்டையும் சண்டனும் கஞ்சமும் புதுநிலவு ருந்தி யும் துஞ்சுநஞ்சும்-சமுத்திரமும் மன்மதனுடைய பாணமும் வண்டுக ளும் கரியகயலினுடன்கெண்டைமீனும்எமனும் தாமரையும்நிலவையருந் தும் சகோரப்புள்ளும்துஞ்சுகின்றவிஷமும், பொருப்பெறிவேலும்-மலை யில் எறிந்த வேலும், பொருபெனவிகன்றகன்றங்கும் இங்குஞ்சுழன்று,. மோதென்று படைத்து அங்கும் இங்குமாகச் சுழன்று, இடைகடை சிவ ந்துவஞ்சம் பொதிந்து - இடையிலும் கடைசிவந்துவஞ்சகம்நிறைந்து, இங்கிதப்புரி இளைஞர்முன் - இங்கிதத்தைச்செய்கின்ற பாலியர்களுக்கு முன், பயின்று-பழகி, அம்பொனின் கப்பிதக் குழைமோதி அழகிய பொன்னாலானகப்பிதத்தையுடையதுழையைமோதி குண்டலயொடும் சத் தத்துடன் இந்த்ரியம் சஞ்சலம் கண்டும்படி பஞ்சேந்திரியங்களின் வரு த்தத்தைகண்டிடும்படி, அமர்புரிந்து-சண்டைசெய்து, சங்கடஞ் சந்த தம் கொடுமை செய்து-சங்கடமாக எப்பொழுதுங் தீமைகளைவிளைவித்து- சங்கொடுஞ் சிங்கிதங்குகைகடைக்கணினார்பால்-சங்கும் சிங்கியும்படிந்திரு, க்கின்ற கடைக்கண் பார்வையையுடையபெண்களிடத்தில், குலவுபல செந்தனம் தந்துதந்து - விளங்குகின்றபலவகைப்பட்டதிரவியங்களைக் கொடுத்து, இம்புறும - இன்பத்தையடைகின்ற, த்ரிவிதகரணங்களும்

மூன்று கரணங்களும், கந்தமின்செம்பதம்-பரிமளம்பொருந்திய உன்னுடைய செவந்த திருவடிகளில், குறுகும்வகை-சேரும்விதத்தை, அந்தியும் தொந்தமற்று அமைவேனோ-அகோராத்திரம் யாதொரு பற்றுமில்லாமல் பொருந்துவேனோ. (எ-று)

திரிசிராமலை.

23. தனனதானன தானனதானன
தனனதானன தானனதானன
தனனதானன தானனதானன—தந்ததான.

தறையின்மானிட ராசையினான்மட
லெழுதுமாலரும் மாதர்கள்தோதக
சரசமாய்மல ரோதியினாலிரு கொங்கையாலும்

சதிசெய்தாலிடை யாலுடையாலடை
யழகினான்மொழி யால்விழியான்மருள்
சவலைநாயடி யேன்மிகவாடிம யங்கலாமோ

பறவைபோலுமெய்ஞ் ஞானிகண்மோனிக
ளனுகொளுவகை நீபிணிராசிப
பவனபூரக ரேசகமாகிய விந்துநாதம்

பகரொணாதது சேரொணாதது
நினையொணாதது வானகயாபர
பதியதானச மாதிமனோலயம் வந்துதாராய்

சிறைவிடாத நிசாசரர்சேனைகண்
 மடியநீலக லாபமதேறிய
 திறல்விநோதசமேளதயாபர வம்புராசி
திரைகள்போலலை மோதிபசீதள
 குடககாவிரி நீளலைசூடிய
 திரிசிராமலை மேலுறைவீரகு றிஞ்சிவாழும்
மறவர்நாயக வாதிவிநாயக
 விளையநாயக காவிரிநாயக
 வடிவிநாயக வானைதநாயக வெங்கண்மானின்
மகிழுநாயக தேவர்கணாயக
 கவுரிநாயக னார்குருநாயக
 வடிவதாமலை யவைபுமேவிய தம்பிரானே.

(ப-ரை) சிறைவிடாத நிசாசரர் சேனைகள்மடிய நீலகலாபமானது ஏறிய-சிறையினின்றும் விடாத ராட்சசர்களுடைய சேனைகளெல்லாம் மடிய நீலதோகையையுடைய மயில்வாகனத்தின்மேல் ஏறின, திறல்வி நோத சமேள தயாபர-வெற்றியையுடைய விநோதமான கலப்பையு டைய தயாபரமூர்த்தியே, அம்புராசி திரைகள்போல் அலைமோதிய சீதள குடககாவிரிநீள் அலைசூடிய-பாணக்கூட்டங்கள் அலைகள்போல் மோதின குளிர்ந்த மேலைக்காவிரியின் நீண்ட அலைகள்சூடின, திரிசிராமலைமேல் உறைவீர-திரிசிராமலையின் மேலிருக்கின்ற வீரனே, குறிஞ்சிவாழும் மற வர்நாயக-மலைகளில் வாழும் வேடர்களுக்குத் தலைவனே, ஆதிவிநாயக ஆதிவிநாயகனுக்குத் தம்பியே, காவிரிநாயக-காவிரிக்குத்தலைவனே, வடி வில்நாயக ஆனைதன்நாயக-ரூபத்தில் நாயகமான தெய்வயானையின்தலை வனே, எங்கள் மானின் மகிழுநாயக-எங்களுடைய மானுடியவள்ளிநாய ச்சியார் மகிழ்கின்ற தலைவனே, தேவர்கள் நாயக-தேவ சேநாபதியே

கவுரிநாயகனார் குருநாயக-பரமேசுவரிக்குத் தலைவனான பரமேசுரனுக்குஞானாசிரியனே, வடிவதாம் மலையாவையுமேவிய தம்பிரானே-பெரியமலைகளில் எழுந்தருளி யிருக்கின்ற பெருமானே; தரையில் மானிடர் ஆசையினால்-உலகத்தில் மனிதர்களுடைய ஆசையினால், மடலெழுதுயாலருள் மாதர்கள்-மடல் எழுதத்தக்க காமநோயை உண்டாக்குகின்றபெண்கள், தோதகசரசமாய்-வஞ்சகசரசமாய், மலர்குதியினால் இருகொங்கையாலும்-மலர்தரித்த கூந்தலினாலும் இரண்டு தனங்களினாலும், சதிசெய்நூல்உடையால்-துன்பம் விளைவிக்கின்ற நூலுடையினாலும், உடையால்நடைஅழகினால் மொழியால் விழியால்மருள்-வஸ்திரத்தினாலும் நடையின் அழகினாலும் இனிய சொற்களாலும், கண்களாலும் மயக்கத்தையடைகின்ற, சவலைநாயடியேன்மிகவாடி மயங்கலாமோ-சவலை புத்தியையுடைய நாயினுங் கடையவனான அடியேனானவன் மிகவும் வாடிமயங்கலாமோ? பறவையானமெய்ஞ்ஞானிகள் மௌனிகள் இவர்கள் சேராதபடி, நீபனிராசிய பவனபூரக ரேசகமாகிய விந்துநாதம் பகரொணாதது-இனிராசியமான வாயுவை பூரகம் ரேசகம் செய்தலானவிந்துவாலும் நாதத்தாலும் சொல்லவொண்ணாதது, சேரவொணாதது நினையொணாதவான-சேரமுடியாததும் நினைக்கமுடியாததுமான, தயாபர-தயாபரனே, பதியதான சமாதிமனோலயம்வந்துதாராய்-தலைமையான சமாதியில் மனோலயப்படியை வந்துகொடுப்பாய். (எ-று.)

திருப்போரூர்.

24. தனத்தா தானதந்த
தனத்தா தானதந்த
தனத்தா தானதந்த —தனதான.

உருக்கார் வாளிகண்கள்
பொருப்பார் வார்தனங்க
ளுரைத்தேன் வாலசந்த்ர நுதலார

முருச்சேர் நீண்மருங்குல்
பணைத்தோ ளோதிகொண்ட
துவப்பாய் மேல்விழுந்து திரிவோர்கள்

அருக்கா மாதர் தங்கள்
கலைக்கே யோடுமின்ப
வலைக்கே பூணுநெஞ்ச னதிபாவி

யசட்டால் மூடுகின்ற
மசக்கால் மாயுமிந்த
வ்வுந்தா வீனனேற்கென் றருள்வாயே

எருக்கார் தாளிதும்பை
மருச்சேர் போதுகங்கை
வினைச்சூ டாதிநம்பர் புதல்வோனே

இருக்கா லேநினைந்து
துதிப்பார் நாவினெஞ்சி
லிருப்பா யானைதங்கு மணிமார்பா

செருக்கா லேமிகுந்த
கடற்சூர் மாளவென்ற
திறற்சேர் வேல்கைகொண்ட முருகோனே

தினைக்கோர் காவல்கொண்ட
குறத்தேன் பாகுபங்க
திருப்போ ரூரமர்ந்த பெருமாளே.

(ப-ரை) எருக்கார் தாளிதும்பை மருச்சேர் போதுநங்கையினைச் சூடாதி நம்பர் புதல்வோனே-எருக்கு, ஆத்தி, தாளி, தும்பையிவைகளாகிய வாசனை பொருந்திய புஷ்பங்களையும் கங்கா தேவியையும் தரித்த முதல்வரான பரமேசுவரனுடைய புத்திரனே, இருக்காலே நினைந்து துதிப்பார் நாவில் நெஞ்சில் இருப்பா யானைதங்கு மணி மார்பா - இருக்கு வேத வாக்கியத்தைக்கொண்டு துதிக்கின்றவர்களுடையநாவிலும் மனத்திலு மிருப்பாய், தெய்வயானையிருக்கும் அழகிய மார்பையுடையவனே, செருக்காலே மிகுந்தகடற்சூர்மாளவென்றதிறல் சேர் வேல்கைகொண்ட முருகோனே-கர்வத்தில் மிகுந்த கடலிலொளித்தசூரபன்மனை ஜெயித்த வெற்றிபொருந்திய வேலாயுதத்தைக்கொண்ட முருகக்கடவுளே, தினைக்கு ஓர் காவல்கொண்ட குறத்தேன்மாது பங்க-தினைப்புனத்திற்கு ஒரு காவலாகவுள்ள வள்ளிநாய்ச்சியாரையும் பாகத்திலுள்ளவனே, திருப்போரூர் அமர்ந்தபெருமாளே - திருப்போரூரில் எழுந்தருளியிருக்கின்ற பெருமாளே, உருக்கார் வாளிகண்கள் பொருப்பார் வார்தனங்கள் கரிய உருவத்தைபுடைய அம்புபோன்ற கண்கள் மலையைப்போன்ற தனங்கள், உரைத்தேன்-தேனைப்போன்ற சொற்கள், வாலசந்திரநுதல் - மூன்றாம்பிறைச் சந்திரனைப்போன்ற நெற்றி, நூலாம் உருசேர் நீள்மருங்குல் நூலைப்போலும் இடை பணைத்தோள்-மூங்கில்போலுந் தோள்கள், ஓதிகொண்டல்-மேகம்போலும் கூந்தல், உபரிமேல்விழுந்து திரிவோர்கள்-இவைகளைக்கொண்டு ஆசையுடன் மேலே விழுந்து திரிபவர்களாகிய, அருக்காமாதர் தங்கள் தலைக்கே போடும் மின்ப வலைக்கே பூணுநெஞ்சன்-பெண்களுடைய வஸ்திரத்தின் பொருட்டுச்செல்லும் இன்பவலைக்கே பூணும் மனமுடையவனான, அறிவிலிபுர், அசட்டால் மூடுகின்ற மசக்கால் மாயும் இந்த வசத்தால் ஈனமேற்க என்று-அருள்வாய் - அசட்டையினால் மூடிக்கொள்ளுகின்ற மசக்கையினால் மாய்கின்ற இந்த அவத்தையினால் ஈனனுமேன எனக்கு என்றைக்கு திருவருள் செய்வாய். (எ-று)

25. தானதானன தானன
தானதானன தானன
தானதானன தானன—தனதான.

சீருலாவிய வோதிம
மானமாநடை பாமயில்
சேயசாய்க லாமதி முகமானார்
தேனுலாவிய மாமொழி
மேருமாமலை மாமுலை
சேலுலாவிய கூர்விழி குமிழ்நாசி
தாருலாவிய நீள்குழல்
வேயளாவிய தோளியர்
சார்பிலே திரி வேனைநி னருளாலே
சாமவேதியர் வானவ
ரோதிநாண்மலர் தூவிய
தாளில்வீழவி ஞானிக வருள்வாயே
காருலாவிய நீள்புன
வேடர்மால்வரை மீதுறை
காவல்மாதினொ டாவல்செய் தருள்வோனே
காணவாகடு வேதபு
ராணநூ லினிமேதிய
காரணாகரு ணாகர முருகோனே
போருலாவிய சூரனை
வாரிசேரெழ வேல்விடு
பூவைசேவக மாமயின் மிசையோனே

போதன்மாதவன் மாதுமை
பாதியாதிதொழாவரு
போரிமாநகர் மேவிய பெருமாளே.

(ப-ரை) காருலாவிய நீள்புன வேடர்மால்வரை மீதுறை காவல் மாதினோ டாவல்செய் தருள்வோனே-மேகஞ்சூழ்ந்த தினைப்புனத்தில் வேடர்கள்பெரிய மலையின்மேல் வாசஞ்செய்து காவலி லிருந்தபெண்ணினுடன் ஆசைவைத் தருள்பவனே, காணவாகம வேதபுராண நூலினிலோதியகாரணா கருணாகர முருகோனே - காணும்படியான ஆகமம், வேதம், புராணம் என்னும் நூல்களில் ஓதிய காரணனே, கருணாகரக் கடவுளே, முருகக்கடவுளே, போர்உலாவிய சூரனை வாரிசேறெழ வேல்விடு பூவைசேவக மாமயில் மிசையோனே.- யுத்தஞ்செய்கின்ற சூரனை சமுத்திரமானது சேறெழும்படி வேலாயுதத்தை விட்ட வள்ளி நாய்ச்சியாருக்குத் தலைவனான மயில்வாகனத்தில் எழுந்தருளியுள்ளவனே, போதன்மாதவன் மாதுமை பாதியாதி தொழாவரு போரிமா நகர் மேவிய பெருமாளே-பிரமன், விஷ்ணு பரமேஸ்வரன் முதலியோர்கள் தொழும்படிவரும் திருப்போரூரில் எழுந்தருளியிருக்கின்றபெருமாளே, சீர்உலாவிய ஓதிம மானமாநடை மாமயில் சேயசாயல்கலாமதி முகமானார் சிறப்புப் பொருந்திய அன்னநடையையும் மயில்சாயலையும் சந்திரனைப்போன்ற முகத்தையு முடையவர்களும், தேன்உலாவியமாமொழி மேருமா மலைமாமுலை சேலுலாவிய கூர்விழி குமிள்நாசி தரா் உலாவிய நீள் குழல் வேயளாவிய தோளியர்-தேன்போலுஞ் சொற்களையும் மலைபோலும் முலைகளையும் சேல்போலுங் கண்களையும் குமிழம் போன்ற நாசியையும் மாலைவேய்ந்த கூந்தலையும் மூங்கில்போன்றதோளையுமுடையவர்களுமான பெண்களுடைய சார்பிலே திரிவேனைநின் அருளால்-சம்பந்தப்பட்டு திரிபவனான என்னை உன்னுடைய திருவருளினால் சாமவேதியர் வானவர் ஓதிநாள்மலர் தூவிய.தாளில் வீழ

இனிவிக வருள்வாய்-சாமவேத பாராயணரும், தேவர்களும் துதித்து புதியமலர்களைத் தூவின திருவடிகளில் விழும்படி அன்பை எனக்கு திருவருள்செய்வாய் (எ-று)

திருச்செங்கோடு.

26. தந்தாதனந்த தந்தாதனந்த
தந்தாதனந்த—தனதான.

பந்தாடியங்க நொந்தார்பரிந்து
பைந்தார்புனைந்த குழன்மீதே

பண்பார்சுரும்பு பண்பாடுகின்ற
பங்கேருகங்கொண் முகமீதே

மந்தாரமன்றும் சந்தாரமொன்றி
வன்பாதகஞ்செய் தனமீதே

மண்டாசைகொண்டு விண்டாவிநைந்து
மங்காமலுன்ற னடிதாராய்

கந்தாவரன்றன் மைந்தா விளங்கு
கன்றுமுருந்தன் மருகோனே

கண்டோர்புகழ்ந்த நன் கார்மடந்தை
கந்தாவரம்பை மணவாளா

செந்தாரடைந்த கொந்தார்கடம்பு
திண்டோணிரம்ப வணிவோனே

திண்கோடடர்ந்த வெண்கோடுறங்கு
செங்கோடமர்ந்த பெருமாளே

(ப-ரை) கந்தா-அரன்தன் மைந்தா குளங்குகன்தாம் - கந்தனே! சர்வேஸ்வரனுடைய புத்திரனே, இளமையான குகனே, முகுந்தன் மருகோனே-விஷ்ணு மூர்த்தியின் மருமகனே, கண்டோர் புகழ்ந்த-பார்த்தவர்கள் புகழ்ச்சிசெய்த, நன்கு ஆர்மடந்தை கந்தா அரம்பை மணவாளா-நன்மைபொருந்திய பெண்ணான வள்ளிநாய்ச்சியாருடைய ஸ்கந்தனே, தெய்வயானையின் நாயகனே, செந்தார் அடைந்த-செவந்த மாலை சேர்ந்து, ஆர்கடம்பு-கொத்துகள்பொருந்திய கடப்பமலரை, திண்தோள் நிரம்ப அணிவோனே-வலுத்த புஜங்களில் நிறையத்தரிப்பவனே, திண் கோடு பலத்த மலையின் அடர்ந்த உச்சியில், வெண்கோடு உறங்கு-நெருங்கிய வெள்ளிய யானைக்கொம்புகள் தங்கியிருக்கப்பெற்ற, செங்கோடு அமர்ந்தபெருமாளே - திருச்செங்கோட்டில் எழுந்தருளியிருக்கின்ற பெருமாளே, பந்தாடியங்கநொந்தார்-பந்தாட்டமாடி சரீரம் நொந்தவர்கள், பரிந்துபைந்தார் புனைந்த குழல்மீது-விரும்பி பசியமாலையைத் தரித்த கூந்தன்மேலும், பண்பார் சுரும்பு - குணமுள்ள வண்டுகள், பண்பாடுகின்ற-ராகம்பாடுகின்ற, பங்கேருகங்கொள்முகமீது தாமரையை யொப்பான முகத்தின்மேலும், மந்தாரமன்றல் சந்தார மொன்றிவன் பாதகஞ்செய்து-மந்தாரவாசனையும், சந்தனவாசனையும், முத்துமாலையும்பொருந்தி வலிய பாதகத்தைச்செய்து, அணைமீது - படுக்கையின்மேலும், மண்டு ஆசைக்கொண்டுவிண்டாவி நைந்து மங்காமல்-மிகுந்த ஆசையைக்கொண்டு உயிர்விட்டு வருந்தி மாயாமல், உன்றன் அடிதாராய்-உன்னுடைய திருவடிகளைக் கொடுப்பாய்.

பழமுதிர்சோலை.

27. தனதன தானதான தனதன தானதான
தனதன தானதான—தனதான.

இலவிதழ் கோதிநீதி மதலைப் ராரபார
விளநகை யாடவாட மிகவாதுற்-
றெதிர்பொரு கோரபார ம்ருகமத கோலகால
விணைமுலை மார்பிலேற மதராஜன்
கலவியி லோடிநீடு வெகுவித ராகபோக
கரணப்ர தாபலீலை மடமாதர்
கலவியின் மூழ்கியாழு மிழிதொழி லேனுன்மீது
கருதியஞானபோத மடைவேனோ.
கொலைபுரி காளிசூலி வயிரவி நீலிமோடி
குலிசகு டாரியாயி மகமாயி
குமரிவ ராகிமோகி பகவதி யாதிசோதி
குணவதி யாலமுணி யபிராமி
பலிகொள்க பாலியோகி பரமகல் யாணிலோக
பதிவ்ரதை வேதஞானி புதல்வோனே
கடையொடு சூரன்மாள முடுகிய சூரதீர
பழமுதிர் சோலைமேவு பெருமாளே.

(ப-ரை) கொலைபுரி காளிசூலி வயிரவி நீலிமோடி குலிசகுடாரிஆயி மகமாயி-கொலைத்தொழில் செய்கின்ற காளி சூலாயுதத்தையுடையவள், வயிரவி, நீலி, மோடி, குலிசகுடாரி, ஆயி, மகம்மாயி, குமரி வராகிமோகி ாகவதி யாதிசோதி குணவதி ஆலமுணி அபிராமி - குமரி, வராகி, போகி, பகவதி, ஆதி, சோதி, குணவதி, ஆலமுண்டவள், அபிராமி, பலிகொள்கபாலியோகிபரமகல்யாணியோகிகபதிவ்ரதைாவதஞானி-பலித்தொழில்கொண்டகபாலியோகி, பரமகல்யாணி, உலகபதிவிரதை, வேதசம்பந்தமான ஞானி என்னும்பரமேஸ்வரியினுடைய, புதல்வோனே-குமாரனே படையோடுசூரன் மாளமுடுகிய சூரதீர-சேனைகளுடன் சூரனவன்மடியும்படி கோபித்தசூரனே தீரனே! பழமுதிர் சோலைமேவு பெருமாளே-பழமுதிர்சோலையில் எழுந்தருளியிருக்கின்ற பெருமாளே! வீதிமதலையர் - வீதியிலுள்ள சிறுகுழந்தைகள், இலவு இதழ்கோதி - இலவ மலரைப்போலும் இதழ்கள் கோதியும், ஆரபார இளநகையாட வாட-முத்துமாலையின் பாரத்துடன் இளமையான நகைவரிசைகளுமாட வாடவும், மிகவாதுற்று எதிர்பொரு-மிகவும் வாதுசெய்து எதிர்போர் செய்கின்ற, கோரபாரம்குமத-உக்ரம அளவையுடைய கஸ்தூரிபூசிய கோலாகல-கோலாகலத்தையுடைய, இணைமுலை மார்பில் ஏற மதராஜன் இரண்டு முலைகளோ கொடியமார்பின்மன்மதராஜன் ஏறுவதால், கலவியிலோடி-சம்போகத்தில் சென்று, நீடுவெகுவித ராஜபோகம்-மிகுந்த பலவகையான ராஜபோகமுள்ள கரணப்ரதாபலீலை-புத்தியையுடைய ப்ரதாபமான லீலையைச்செய்கின்ற, மடமாதர்-இளம்பெண்களுடைய, கலவியில்மூழ்கி-சம்போகத்தில் முழுகி, ஆழும்இழிதொழிலேன் - அழுந்துகின்ற இழிந்த வேலையையுடையவனான நான், உன்மீதில்-உன்மேல், கருதிய-நினைத்த, ஞானபோதம்அடைவேனோ ஞான உணர்ச்சியைப்பெறுவேனோ? (எ-று.)

சோலைமலை.

23. தானதன தந்ததந்த தானதன தந்ததந்த
தானதனதந்ததந்த—தனதான.

வாரணமு கங்கிழிந்து
வீழவும ரும்பலர்ந்து
மால்வரைய சைந்தனங்கள் முடிசாய
வாளகிரி யண்டரண்ட
கோளமுற நின்றெழுந்து
மாதவம றந்திருந்து நிலைபோ
பூரணகு டங்கடிந்து
சீதகள பம்புனைந்து
பூசலைவி ரும்புகொங்கை மடவார்தம்
போகசய னந்தவிர்ந்து
நாடக பதம்பணிந்து
பூசனைசெய் தொண்டனென்ப தொருநாளே
ஆரணமு ழக்குகின்ற
வாயிரம டந்தவங்க
ளாகுதியி டங்கள்பொங்கு நிறைவீதி
யாயிரமு கங்கமழ்ந்து
நூபுரமி ரங்குகங்கை
யாறதா வந்தலம்பு துறைசேரத்

தோரணம லங்குதுங்க
கோபுரநெ ருங்குகின்ற
சூழ்மணிபொன் மண்டபங்கள் ரவிபோலச்

சோதியின்மி குந்தசெம்பொன்
மாளிகைவி ளங்குகின்ற
சோலைமலை வந்துகந்த பெருமாளே

(ப-ரை.) ஆரணம் முழங்குகின்ற-வேதங்களில் சொல்லப்படுகின்ற ஆயிரமடம் தவங்கள் ஆகுதி யிடங்கள்பொங்கு நிறைவீதி யாயிரமுகம் ஆயிரமடம் தவங்கள், ஆகுதியிடங்கள் விளங்குகின்ற தெருக்கள், ஆயிமுகங்களாலும், கமழ்ந்து-வாசனை வீசி, அபுரம் இரங்கு-சிலங்கை சத்திக்கின்ற, கங்கையார் அமரவந்து அலம்பு துறைசேர - கங்காநதியானது பொருந்தவந்து மோதுகின்ற துறைபானது சேரவும், தோரணம் அலங்குதுங்க கோபுரம்-தோரணமானது அசைகின்ற பரிசுத்தத்தையுடைய கோபுரமானது, நெருங்குகின்ற-அடர்கின்ற, சூழ்மணிபொன் மண்டபங்களானவை, ரவிபோல்-சூரியனைப்போல, சோதியின்மிகுந்த-தேஜஸில் மிகுந்த, செம்பொன்மாளிகை விளங்குகின்ற-செவந்த பொன்னாலான மாளிகைகள் விளங்குகின்ற, சோலைமலை வந்து உகந்த பெருமாளே-சோலை மலையில் வந்து விரும்பின பெருமாளே, வாரணம் முகங்கிழிந்து வீழவும்-சங்குகள் முகமானவை கிழிந்து வீழவும், அரும்பலர்ந்து-மொக்குகள் மலர்ந்து, மால்வரைபசைந்து - பெரியமலையசைந்து, அனங்கன் முடிசாய-மன்மதனுடைய முடிசாயவும் வாளகிரி யண்டரண்ட கோளமுற-வாளகிரியானது அண்டரண்ட கோளத்தையடைய, நின்றெழுந்து, நின்றிருந்து, மாதவம் மறந்திருந்து-மகத்தாகிய தவத்தை மறந்து நிலைபேர-நிலைமாறவும், பூரணகுடம்கடிந்து-பூரண குடத்தைக் கடிந்து, சீதகளபம்புனைந்து-குளிர்ந்தகலவைச்சந்தனம்பூசி, பூசனைசெய்

பூசிக்கின்ற, தொண்டனென்ப தொருநாளே-தொண்டனென்றுசொல் லுவது ஒருநாளே யாம். (எ-று)

சீபுருடமங்கை.

29. தானதனதந்த தானதனதந்த
தானதனதந்த—தனதான.

வேனின்மதனைந்து பாணவிடகொந்து
விதிதொறுநின்று மடவார்பால்
வேளையெனவந்து தாளினில்விழுந்து
வேடைகெடநண்பு பலபேசி
தேனினுமணந்த வாயமுதமுண்டு
சீதளதனங்க ளினின்முழ்கி
தேடியதனங்கள் பாழ்படமுபன்று
சேர்கதியதின்றி யுழல்வேனோ
ஆனிரைதுரந்து மாநிலமளந்தொ
ராலிலையிலன்று துயின்மாய
ஞபர்மனைசென்று பாறயிரளைந்த
வாரணமுகுந்தன் மருகோனே
வானவர்புகழ்ந்து தானவர்பயங்கொள்
மாநெடுவிளங்கு மணிமார்பா
மாமறைமுழங்கு சீபுருடமங்கை
மாநகரமர்ந்த பெருமாளே

(ப-ரை.) ஆன்நிரைதுரந்து-பசுக்கூட்டத்தை மேய்த்து, மாநிலம் அளந்து உலகத்தையளந்து, ஓர் ஆலிலையில் அன்றுதுயில்மாயன்-ஒரு ஆலிலையின்மேல் அன்றுதுயில்கின்ற மாயனாகவன், ஆயர்மனை சென்று-இடையர்வீட்டில்போய், பால்தயிர் அளைந்த பாலையும்தயிரையும் உண்ட ஆரணமுகுந்தன் மருகோனே - வேதத்திற்சொல்லப்பட்ட விஷ்ணுவினுடைய மருமகனே, வானவர்புகழ்ந்து - தேவர்கள் புகழ்ச்சிசெய்து, தானவர்பயங்கொள்-ராட்சசர்கள்பயமடைகின்றயானொடுவிளங்கும்மணி மார்பா வள்ளி நாய்ச்சியாரோடு விளங்கு, முயங்குகின்ற, சீபுருடமங்கை யாநகர் அமர்ந்தபெருமாளே - சீபுருடமங்கைமாநகரில் எழுந்தருளியிருக்கின்ற பெருமாளே, வேனில்மதன் ஐந்து பாணம்விட-மன்மதனானவன் பஞ்சபாணங்களைவிட, நொந்து-வருந்தி, வீதிதோறும் நின்று-தெருக்கள் தோறு மிருந்து. மடவார்பால் - பெண்களிடத்தில், வேளையெனவந்து தாளினில்வந்து - இது சமயமென்று வந்து காலில்விழுந்து, வேடை கெடநண்பு பலபேசி - ஆசைகெட பல இதமானவார்த்தைகளைப்பேசி, தேனினும் மணந்த வாயமுதம் உண்டு - தேனைவிட ருசிக்கின்ற வாய் அமிர்தத்தைப் புசித்து, சீதளதனங்களினில் மூழ்கி குளிர்ந்த ஸ்தனங்களில் முழுகி, தேடியதனங்கள பாழ்படமுயன்று - தேடிச்சம்பாதித்த பொருள்கள்பாழாகச் செய்து, சேர்கதியன்றிஉழல்வேனோ சேரத்தக்க மோட்சகதி கிடைக்காமல் திரிவேனோ? (எ-று)

பழநி.

---

30. தனனதந்தன தந்தனாதன
தனனதந்தன தந்தனாதன
தனனதந்தன தந்தனாதன—தனதான.

கனககும்பமி ரண்டுநேர்மலை
யெனநெருங்குகு ரும்பைமாமணி
கதிர்சிறந்தவ டங்குலாவிய மாந்தருதங்

கடையினின்றுப ரந்துநாடொறு
மிளகிவிஞ்சியெ ழுந்துகோமள
களபகுங்கும கொங்கையானையை பின்பமாகி

அனைவருங்கொளு மென்றுமேல்விலை
யிடுமடந்தையர் தங்கடோதக
மதின்மருண்டுழ லுங்கடைநாயே முந்துபாய

வதிவிதங்கொளு மிப்பசாகர
முருகுமஞ்சுக நெஞ்சையேயொழி
தருபதங்கதி யெம்பிரானரு டந்திடாயோ

தனனதந்தன தந்தனதன
டிகுகுடிங்குகு டிங்குபேரிகை
திகுகுதிங்கிகு திந்ததோவென வொன்றுதாளந்

தமரசஞ்சல சஞ்சலாவென
முழவுடுண்டுடு டுண்டுடூவென
தருணகிங்கிணி கிண்கிணோமு முங்கவோதி

பணிபதங்கய வெண்டிசாமுகக்
கிரியடங்கலு மண்டகோளகை
பதறிநின்றிட வந்தவாடக மென்றுதோகை

பவுரிகொண்டிட மிண்டியேவரு
நிசிசரன்கிளை கொன்றவேல்கொடு
பழநியங்கிரி யின்கண்மேவிய தம்பிரானே.

(ப-ரை.) தனனதந்தன தந்தனதன குடிகுடிங்குகு டிங்குபேரிகை இப்படிப்பட்ட சத்தத்தையுடையபேரிகை, திகுகுதிங்கிகுதிந்ததோவென-இந்த சத்தத்துடன், ஒன்றதாளம்-பொருந்திய தாளமானது, தமரசஞ்சல சஞ்சலாவென-தமரம் சஞ்சல சஞ்சலாவெனவும், முழவுடுண்

டுடு டண்டுடேவென-முழவமானது டண்டுடுடண்டுடேவெனவும், தருணகிணிகிண்கிணாரா-தருணத்தில் கிங்கிணியானது கிண்கிண் என்னுஞ்-சத்தமுமாக, முழங்கஓதி-சத்தித்து, பணிபதங்கய எண்திசாமுகக்கிரி-பணிகின்ற திருவடிகள் அஷ்டகஜங்களையுடைய அஷ்டகிரிகள், அடங்கலும்-முழுமையும், அண்டகோளகை-அண்டவட்டத்திலும், பதறிநின்றிட-சத்தித்துநிற்கவும்,வந்தஆடக மென்று-வந்த பொன்னென்றுசொல்லும், தோகை பவுரிகொண்டிள மயில்வாகனத்தின்மேல் பவுரிகொள்ள, மிண்டியேவரு-அதிகரித்துவருகின்ற, நிசிசரன்கிளை கொன்றவேல்கொடு இராட்சதனுன சூரபத்மனுடைய சுற்றங்களைக்கொன்ற வேலாயுதத்தைக்கொண்டு, பழநியங்கிரியின்கண்மேவிய தம்பிரானே - திருப்பழநிமலையின்கண், எழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே, கனகும்பம் இரண்டும் நேர்மலையெனநெருங்கு பொற்குடம் இரண்டும் மலையென்று நெருங்குகின்ற, குரும்பைமாமுணி கதிர்சிறந்து-குரும்பையில் மகத்தாகிய மணிமாலையின் கதிரானதுமேம்பட்டு, வடங்குலாவி யமர்ந்த-மாலை படர்ந்துபொருந்தும் சடையினின்று பரந்து-மாந்தளிரானது கடைசியிலிருந்து பரந்து, நாள்தோறும் இளகி - அநுதினமும் இளகி விஞ்சியெழுந்த-மேம்பட்டெழுந்த, கோமள களபகுங்கும கொங்கையானையை-கோமளமான கலவை, குங்குமம் இவைகளைப்பூசிய கொங்கையாகிய யானையை, இன்பமாகி அனைவரும் கொளுமென்று-இன்பமாய் யாவரும்கொள்ளுங்களென்று,மேல்விலையிடுமடந்தையர்தங்கள்மேல்விலையையிடுகின்ற பெண்களுடைய, தோதக மதிமருண்டு - வஞ்சகத்தால், அறிவுகலங்கி, துவண்டு - துவளுதலையடைந்து, என் ஆசையும் உந்துபாய - என்னுடைய ஆசையும் முந்த, வதியிதக்கொளும் - பலவகை கொள்ளுதில் முழுகுகின்ற, வஞ்சக நெஞ்சை - கபடத்தையுடைய மனசை,எழுதரு பதங்கதி-ஒழிகின்ற திருவடிக்கதியை, எம்பிரான் அருள் தந்திடாயோ-எம்பெருமானுன சிவசுப்பிரமணியக்கடவுளே, நீ திருவருள் செய்யாயோ! (எ-று)

திருவேங்கடம்.

31. தனதாந்தன தானன தானன
தனதாந்தன தானன தானன
தனதாந்தன தானன தானன—தனதான.

வரிசேர்ந் திடுசேல்கயல் போலிணை
விருள்போன் றிடுவேலையு நீலமும்
வடுவாங் கிடுவேல்விழி மாதர்கள் வலையாலே

வளர்கோங் கிளமாமுகை யாகிய
தனவாஞ் சையிலேமுக மாயையில்
வளர்மாந் தளிர்போல்நிற மாகிய மடிவாலே

இருள்போன் றிடுகார்குழ லீழ்வி
னிழைசேர்ந் திடுபாயலின் மீதுற
வினிதாங் கனிவாயமு தூறல்கள் பருகாமூ

னெமதாங் கனமாமலை போலவி
னெவர்வேண் டிவராகில மேயினி
யிவைவேண் டிடமேயிரு தாளினை யருள்வாயே

கரிவாம் பரிதேர்திரள் சேனையு
முடனாக் கரிபோதனை யாகிய
ரவர்மாண் டிடவேயொரு பாரத மதிலேடி

கனபாண் டவர்தேர்தனி லேயெழு
பரிதூண் டியசாரதி யாகிய
கதிரோங் கியநேமி பெருமாரி உருகாமன்

திரைநீண்டிரை வாரியும் வாலிய
நெடுவான்பயில் மாமர மேழொடு
தசமாஞ்சிர ராவண னார்முடி பொடியாக

சிலைவாங்கிய நாரண னார்மரு
மகனாங்குக னேபொழில் சூழ்தரு
திருவேங்கட மாமலை மேவிய பெருமாளே.

(ப-ரை) கரிவாப்பரி திரள்சேனையும் - யானை, தாவுகின்ற குதிரை முதலிய திரண்டசேனைகளும், உடனும் துரியோதனனாதியர் அவர் மாண்டிட - கூடவிருக்கின்ற துரியோதனனாதிகள் சாவ, ஒரு பாரதத்தில் வகை-ஒரு பாரதயுத்தத்தில் செல்ல, கனபாண்டவர் தேர்தனில் - கனம் பொருந்திய பாண்டவர்களுடைய தேரில், எழு கட்டின, பரிதூண்டிய- குதிரைகளை நடத்தின, சாரதியாகிய - தேர்ப்பாகனான, கதிர் ஓங்கிய நேமியனும் அரிரகுராமன்-கிரணங்களையுடைய சக்ராயுதனான அரியும் ரகுராமனும், திரைநீண்டு இரைவாரியும் வாலியும் - அலைகள்கிளம்பி சத்திக்கின்ற சமுத்திரங்களும் வாலியென்பவனும், நெடுவான்பயில் - நீண்ட ஆகாயம்வரைக்கும் அளாவிய, மாமரம் ஏழொடு-ஏழு மராமரங்களும், தசமாஞ்சிரராவணனார்முடி பொடியாக - பத்துத்தலைகளையுடைய ராவணனுடைய சிரசம்பொடியாம்படி, சிலைவாங்கிய-வில்விட்ட, நாரணனார் மருமகனாங்குகனே-நாராயணனுமான விஷ்ணுமூர்த்தியின் மருமகனான குகனே, பொழில்சூழ்தரு - சோலைசூழ்ந்த, திருவேங்கட மாமலை மேவிய பெருமாளே-திருவேங்கடமலையில் எழுந்தருளியிருக்கின்ற பெருமாளே, வரிசேர்ந்திடு - ரேகைபொருந்திய, சேலோகணையோ வெனும - சேல்கெண்டையோ பாணமோ என்று சொல்லும், இருள்போன்றிடு வேலையும் நீலமும் வடுவாங்கிடு-இருளையொத்த சமுத்திரத்தையும் நீல நிறத்தையும் எய்த்தக்க, வேல்விழிமாதர்கள் வலையால்-வேலைப்போலும்

கண்களையுடைய பெண்களது வலையிலுறும், வளர்கோங்கு இளமா முகையாகியதனை - வளர்கின்ற கோங்கமலரின் சிறுமொக்கைப்போன்ற ஸ்தனத்தின் மேல்வைத்த, வாஞ்சையில்-விருப்பத்திலும், முகமாயையில்-முகத்திலுடைய மாயையாலும், வளர்மாந் தளிர்போல் நிறமாகிய வடிவால்-வளர்கின்ற மாந்தளிரைப்போல் நிறத்தையுடைய ரூபத்திலும், இருள்போன்றிடு - இருண்ட, கார்குழல் நீழலின்-கறுத்த கூந்தலின் நிழலிலும், இழைசேர்ந்திடு பாயலின்மீதற-இழையானது சேர்கின்ற படுக்கையின்மேல் பொருந்த, இனிதாங் கனிவாய்-இனிமையான கொவ்வைக்கனிபோன்ற வாயிலுண்டாகின்ற அமுது ஊறல்கள் பருகாமுன்-அமுதம்போலும் சுரக்கின்ற கள்ளைக்குடிக்காத முன்னமே, எமதாம்-எமமுடையதான, தனமானவை-பொருள்கள், போனபின்செலவாய்விட்ட பிறகு, எவர்வேண்டுவர் ஆகிலம்-உலகத்தில் யார் விரும்புவார்கள், (ஆசையால்) இனி அவமே நீங்கிட - இனி இத்துன்பங்கள் ஒழிய, இருதாளிணை யருள்வாய்-இரண்டு திருவடிகளைக் கொடுப்பாய் (எ-று)

திருவானைக்கா.

32\. தானனதத்தன தத்தனதத்தன
தானனதத்தன தத்தனதத்தன
தானனதத்தன தத்தனதத்தன—தனதான.

ஆலம்வைத்தவிழிச்சிகள்சித்தசு
ஆகமக்கலை கற்றசுமர்த்திக
ளார்மனத்தையு மெத்திவளைப்பவர் தெருவூடே

யாரவட்டமு லைச்சுவிலைப்பண
மாயிரக்கல மொட்டியளக்கினு
மாசையாய்பொரு ளொக்கநடிப்பவ ருடன்மாலாய்

மேவியேபுழு கெப்புமவக்கொரு
வாபெறிக்கரு லைப்பொருபிக்கமு
மேவிவாளுக்கு மிட்டலிசிப்படி பெருமாறும்

வேர்வைநாற்றமி பிட்டடைத்தனை
பாபமேப்பு மூச்சமலர்க்குகை
வீசிசட்டுபி ருக்குமெனச்சுதி வருள்தாராய்

[illegible]
[illegible] ரடல்
[illegible] மடியாத

பேரரக்கர் [illegible]
[illegible] பிட்டடல்
[illegible] குடனொடே

[illegible]
வேலெடுத்தச மர்த்தையுமாரப்பவர்
டாவருத் [illegible] யருள்வோனே

[illegible]
[illegible]
[illegible] பெருமாளே.

([illegible]) [illegible] சோலையையுடைய, பயில் தூர்த்தினில் [illegible] ஆபரணித்து, முட்டு வளைத்து-சூழ்ந்து வளைத்து, [illegible] உடலும் பீறுகின்ற, இலக்கமுய்யத்

தகளத்தில்படி - கணக்கிடுதற் கருமையானபுத்தகத்தில் இறக்கின்
ற, பாதகத்தைச்செய்த, பேர்அரக்கர் எதிர்த்தவர்-எதிர்த்தபெரியஇராட்
சதர்கள், எத்தனைபேரை-அநேகருடைய, உக்ரகளம் பலியிட்டுஉடல்-
உடலை உக்கிரமான போர்க்களத்தில் பலியிட்டு, பேய்கைகொட்டி நடி
த்து-பேய்கள் கைகொட்டி நடனஞ்செய்து, மணிகழுது உடனுட-
அழகிய கழுதுப்பட்சிகள் கூத்தாட, வலம்வைத்த புயத்தில் அணைத்து
ஒருவேல் எடுத்த-வாசனைபொருந்திய புயத்தில்சேர்த்து ஒருவேலாயு
தத்தைஎடுத்த, சமர்த்தைஉரைப்பவர்-சாமர்த்தியத்தைச் -சொல்லுபவர்,
யாவருக்கும் - எவருக்கும், மனத்தினில் நினைப்பவை யருள்வோனே-
மனத்தின்கண் நினைக்கின்றவைகளை அருளிச்செய்பவனே, எழிசைத்
தமிழில்-எழுவகையான இசைத்தமிழில், பயனுற்ற-அவாவுள்ள, வெண்
ணாவல்உற்று அடியிற்பயில் உத்தமன்-வெண்ணாவல் மரத்தின்கீழ் எழுந்
தருளியிருக்கின்ற உத்தமனும், ஈசன்முக்கண் உருத்ரன் - ஈசனும்,
மூன்று கண்களையுடைய ருத்திரனுமான பரமேசுரன், அளித்தருள்
பெருமாளே-பெற்றருளிய முருகக்கடவுளே, ஆலம்வைத்த விழிச்சிகள்
விஷம்பொருந்திய கண்களையுடையவர்கள், சித்தசன் ஆகமக்கலைகற்ற
சமர்த்திபர்கள்-மன்மதனூலைக்கற்றசாமர்த்தியமுடையவர்கள், ஆர்மனத்
தையும் எத்திவளைப்பவர்-யாவருடைய மனங்களையும் மயக்கி வளைத்துக்
கொள்பவர்கள், தெருவூடு-தெருவின்கண், ஆரவட்டமுலைக்கு - முத்து
மாலையைத்தரித்த வட்டமான முலையின்பொருட்டு, விலைப்பணம் ஆயி
ரங்கலம் ஒட்டியளக்கினும் - விலையாக ஆயிரங்கலப்பணம் அளந்தாலும்,
ஆசையைப்பொருள்ஒக்க நடிப்பவருடன்-பெற்றுக்கொண்ட பொருளு
க்கு ஒப்பாக ஆசைகாட்டி நடிப்பவர்களாகிய பெண்களுடன், மாலாய்-
மயக்கத்தையடைந்து, மேலிளைப்பு முசிப்பு மயத்தையுமாய்-மேலிளைப்பு
முசிப்பும் அவஸ்தையுமாய், எடுத்த குலைப்பொடு பித்தமும் மேல்கொள-
எடுத்த குலைப்புடன் பித்தமானதும் அதிகரிக்க, தலையிட்ட விதிப்படி
பெறுமாறும்-தலையில் எழுதியவிதிப்படி யாகுமென்று சொல்லும் வித

மும், வேள்கணைக்குஇரையிட்டு-மன்மதனுடைய பாணத்துக்கு இரையாகவிட்டு, உடல்எத்தனை பாடுபட்ட புழுக்கம் - எவ்வளவு பாட்டையடைந்த சரீரத்தினது வருந்துதலையுடைய, மலக்குகைவீடு கட்டியிருக்கும் எனக்குநின் அருள்தாராய்-மூக்ம்மலம் என்னும் குகையாகியவீட்டைக் கட்டியிருக்கின்ற எனக்கு உன்னுடைய திருவருளைக் கொடுப்பாய் (எ-று.)

—⋙✻⋘—

திருக்கற்குடி

33. தனத்தத் தனத்தத் தனத்தத் தனத்தத்
தனத்தத் தனத்தத்—தனதான.

குடத்தைத் தகர்த்துக் களிற்றைத் துரத்திக்
குவட்டைச் செறுத்துக் — ககசாலக்
குலத்தைக் குமைத்துப் பகட்டிச் செருக்கிக்
குருத்தைத் துவக்குற் — றவர்சோரப்
புடைத்துப் பணைத்துப் பெருக்கக் கதித்துப்
புறப்பட் டகச்சுத் — தனமாதர்
புணர்ச்சிச் சமுத்ர திளைப்பற் றிருக்கப்
புரித்துப் பதத்தைத் — தருவாயே
கடத்துப் புனத்துக் குறத்திக் கு மெத்தக்
கருத்திச் சைபுற்றுப் — பரிவாகக்
கனக்கப் பியப்பட் டகப்பட் டுமைக்கட்
கடைப்பட் டுநிற்கைக் — குரியோனே

கடத்தற் பவித்துச் சுவர்க்கத் தலத்தைச்
சமைப்பித் தகொற்றத் தனிவேலா
தமிழ்க்குக் கவிக்குப் புகழ்ச்செய்ப் பதிக்குத்
தருக்கற் குடிக்குட் பெருமாளே

(ப-ரை) கடத்துப்புனத்து - காடுகளையுடைய தினைப்புனத்தில், குறத்திக்குமெத்த கருத்து இச்சையுற்று-வள்ளிநாய்ச்சியாருக்கு மிகவும் மனத்தில் ஆசைகொண்டு, பரிவாக-சந்தோஷத்துடன், கனக்கப் பிரியப்பட் டகப்பட்டு-மிகுதியும் பிரியப்பட்டுச்சிக்கி, மைக்கட் கடைப் பட்டு நிற்கைக்குரியோனே-கண்கடையில் நிற்பதற்கு உரியவனே, கடத் துற்பவித்து - சரவணப்பொய்கையிற் பிறந்து, சுவர்க்கத் தலத்தைச் சமைப்பித்த தனிவேலா-தேவலோகத்தைப் பரிபாலித்த ஒப்பற்ற வேலா யுதத்தையுடைய வேலனே! தமிழ்க்குக் கவிக்குப் புகழ்செய்ப்பதிக்கு தரு-தமிழ்க்கும் கவிக்கும் புகழ்ச்சியைக் கொடுக்கின்ற, கற்குடிக்குட் பெருமாளே-திருக்கற்குடிக்குள்எழுந்தருளியிருக்கும்இளையபெருமாளே! குடத்தை தகர்த்து களிற்றைத் துரத்தி குவட்டைச் செறுத்துக் கக சாலகுலத்தை குமைத்து பகட்டி செருக்கி குருத்தத் துவர்த்துற்றவர் சோர-குடத்தையும் களிற்றையும் மலையையும், ககசால குலத்தையும வெருட்டி செருக்கு ஞானமா திக்கத்திலுற்றவர்கள் சோர்வடைய புடைத்து பிணைத்து பெருக்கத்தித்து புறப்பட்டகக் சுத்தனமாதர்-பர ந்து பெருத்துவிம்மிப்புறப்பட்டவாரிறுக்கிய தனங்களையுடைய பெண் களது, புணர்ச்சி சமுத்திரத்து இளைப்பற்றிருக்க புரித்துப் பதத்தை தருவாய்-போகமென்னும் சமுத்திரத்திலிருந்து நீங்கி இளைப்பாற திரு வருள்செய்வாய். (எ-று.)

முருகக்கடவுள் யரவணப்பொய்கையி லுண்டாயின்
'ஈங்ஙனநமதி கண்ணிலெய்திய குமரன்கங்கை
தாங்கினள் கொண்டுசென்று சரவணத்துய்த்தலாலே

காங்கெயனெனும் பேர்பெற்றான் காமர்பூஞ் சரவணத்தின்
பாங்கரின் வளர்தலாலே சரவண பவனென்றானன்.

தாயென வாறல்போர்த்து தனிமுலை யருத்தலாலே
ஏயதோர் கார்த்திகேய னெனுந்திரு நாமம்பெற்றான்
சேயவன் வடிவமாறுந் திரட்டிநீ யொன்றாய்ச்செய்தாய்
ஆயதால் கந்தனென்னு மருந்திரு நாமம்பெற்றான்''

34. தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன—தனதான.

அளக பாரம லைந்துச ரிந்திட
வதன மேர்வுது லங்கிற லஞ்சமழ்
வதிக மோகம்வி ளைந்து கலந்துறை குயில்காடை

யளிபு றாமயி லென்றுசொ லுங்குரல்
மிடற தாதுதி பங்கவி தஞ்செயு
மகளிர் தோதக வன்பினி னின்றுள மறுகாதே

உளம்வி டாதுபு கழ்ந்து பணிந்திட
வறிவி லாதம னங்கொடு நின்றனி
யுலையு றாமனு வங்கெனை நண்பொடு சிவயோகத்

துருகு ஞானப ரம்பர மந்திர
மனுவொ டாதப தந்தரு சிந்துர
வுபய சீதள பங்கய நின்கழ லருள்வாயே

இளகி டாவளை சந்தன குங்கும
களப பூரண கொங்கைந லம்புனை
யிரதி வேள்பணி தந்தையுவந்தரு ளிளையோனே

யினிய தாயெதி ரிந்திர ரண்டரு
மரக ராசிவ சங்கர சங்கர
வெனமி காதரு நஞ்சினை யுண்டவ ரருள்பாலா

வளர்நி சாசரர் தங்கள்சி ரம்பொடி
படவி ரோதமி டுங்குல சம்ப்ரம
மகர வாரிக டைந்தநெ டும்புயல் மருகோனே

மதுர வாசக மிஞ்சிய கிஞ்சுக
விதழி மாதுமை மைந்தவி ரும்பொழில்
மயிலை மீதினில் வந்துறை யிந்திர பெருமாளே.

(ப-ரை) இளகிடாவகை - கரைந்துபோகாதபடி, சந்தன குங்கும களப பூரண கொங்கைநலப்புனை - சந்தனம் குங்குமம் கலவைச் சாந்து இவைகள் பூசிய பூரண மருவமமைந்த ஸ்தனங்களுடைய பயனையடைந்த, இரதிவேள்பணி - ரதியின் மன்மதனனவன் வணங்கின தந்தை உகந்தருள் இளையோனே - தந்தையானவன் சந்தோஷித்தருளிய இளைய குமரனே, இனியதாய்எதிர் இந்திரரண்டரும் - இனிமையுடன் இந்திராதியரும் தேவர்களும், அரகராசிவ சங்கர சங்கரவென - அரகரா சிவ சங்கரா சங்கராவென்று சொல்ல, மிக்கவருநஞ்சினை யுண்டவர் அருள் பாலா - மிகுந்துவந்த விஷத்தையுண்ட பரமேஸ்வரரானவர், பெற்றகுமரனே! வளர்நிசாசரர் - தங்கள்சிரம்பொடி பட - வளர்கின்ற ராட்சதர்களுடைய சிரசுகள்பொடியாம்படி, விரோதமிடும் குலசம்ப்ரம - விரோதங்கொண்ட போர்க்களத்தையுடையவனே, மகரவாரி கடைந்த நெடும்புயல் மருகோனே - மகரம்பொருந்திய திருப்பாற்கடலைக் கடைந்த திருமாலுக்கு மருகோனே, மதுரவாசக மிஞ்சிய கிஞ்சுகவிதழிமாது - இனிமையான வாசகத்தையுடைய கிளியைப்போலும் செவந்த இதழ்களையுடைய பெண்ணன, உமைமைந்த - உமாதேவிக்குப் புதல்வனே, இரும்

பொழில்-மிக்க சோலைசூழ்ந்த, மயிலைமீதினில் வந்து உறையிந்திரர் பெருமாளே-மயிலையில் வந்துவசிக்கின்ற இந்திரர்களுடைய இளையபெருமாளே, அளகபாரம் அலைந்துசரிந்திட-கூந்தலானது சேர்செட்டு சரியவும், வதனவேர்வுதுலங்கி-முகத்தில் வியர்வைவெளிப்பட்டு, நலங்கமழ்-நன்மை மணக்கின்ற, அதிகமோகம் விளைந்து மிகுந்த மோகத்தையடைந்து, கலந்து உலற-கூடிவசிக்கின்ற குயில்காடை யளிபுறாமயில்-குயில், காடை, வண்டு, புறா மயில் இவைகளின், என்று சொலுங்குரல்-குரலென்று சொல்லும், மிடறதாதுதி - தொண்டையாகத் துதிக்கின்ற, பங்க இதஞ்செவி-பங்கத்தையுடைய இதங் கொடுக்கப்படுகின்ற செவியையுடைய; மகளிர்தோதக வன்பினில் நின்றுஉளம் மறுகாது-பெண்களுடைய வஞ்சகம்பொருந்திய அன்பினிலிருந்து மனம்வருந்தாமலும், உளம்விடாது புகழ்ந்து பணிந்திட-மனம்விடாதபடி புகழ்ந்து வணங்கவும், அறிவிலாத மனங்கொடு - அறிவில்லாத மனத்தைக்கொண்டு, நின்று-இருந்து, இனி உலையுறுமல்-இனி அலையாதபடி, உவந்து எனை நன்பொடு சந்தோஷித்து என்னை சிநேகத்துடன், சிவயோகத்து உருகும்-சிவயோகத்தினால் இளகுகின்ற; ஞானபரம்பர மந்திரம்-பரம்பரையான ஞானமந்திரமானது, அணுகொணாத பதந்தரும்-சேராத திருவடியைக்கொடுக்கின்ற, சிந்துரம்-செவந்த, உபய சீதள பங்கயம் நின்கழல் அருள்வாயே-குளிர்ந்த இரண்டு தாமரை மலர்போலும் திருவடிகளை அருள்செய்வாய.

திருவருணை.

35. தனனதனனத் தனனதனனத்
தனனதனனத்—தனதான.

அருமாமதனைப் பொருவாள்கயல்குத்
தயிலார்நயனக் கொடியார்த

மழகார்தனநற் புழுகார்சயிலத்
தனையாவலிகெட் டடல்தாழ

இருமாநடைவிக் குரைபோயுணர்வற்
றிளையாவுளமுட் குபிர்சோர

எரிவாய்நரகிற் புகுதாசபடிக்
கிருபாதமெனக் கருள்வாயே

ஒருமால்வரைபட் டிருகூறிடவுற்
றொருவேறனைவிட் டெறிவோனே

உறமான்மறவக் குறமாமகளுக்
குருகாவிருபொற் புயவீரா

திருமால்கமலப் பிரமாவிழியிற்
றெறியாவரனுக் கரியோனே

செழுநீர்வயல்சுற் றருணபுரியிற்
றிருவீதியினிற் பெருமாளே.

(ப-ரை) திருமால்வரை-அழகியபெரியமலையானது, இருகூறு பட்டிட வுற்று - இரண்டு பிளவு பட்டுவிட, ஒருவேல்தனை விட்டெறிவோனே-ஒப்பற்ற வேலாயுதத்தைப் பிரயோகஞ் செய்தவனே, உறமான் மறவக் குறமாமகளுக்கு குருகாவிருபொற்புயவீரா-பொருந்தமான் பெற்ற பெண்ணாகவும் குறவர் குலக்கொடியாகவுமான வள்ளிநாய்ச்சியாருக்கிளகிய இரண்டு புஜங்களையுடைய வீரனே, திருமால் கமலப் பிரமாவிழியிற் றெறியாவரனுக்கு அரியோனே - விஷ்ணு பிரமர்களால் காணப்படாத சிவபெருமானுக்கு மிகவும் அருமையானவனே, செழுநீர்வயல்சுற்று-நீர்வளம் பொருந்திய வயல்கள்சூழ்ந்திருக்கின்ற, அருண

புரியில் திருவீதியினில் பெருமாளே - திருவண்ணாமலையில் திருவீதி யழகாகப் பவனிவரும் பெருமாளே, அருமாமதனைப் பொருவாள்-அருமையாகிய மன்மதனை மோதுகின்றவாளையும், கயல்குத் தயிலார் நயனம் சேல்கெண்டையையும், வேலையும்போலுற்ற நீண்ட கண்களையுடைய கொடியார்தம்-பெண்களுடைய; அழகார்தனம்-அழகுபொருந்திய தனங்களான, நல்புழுகார் சயிலத்து-நல்ல புழுகுநிறைந்த மலையில், அணையா-சேர்ந்து, (அதினால்) வலிகெட்டு உடல்தாழ-பலமானதுகெட்டு சரீரமானது வளையவும், இருமாநடைபுக்கு-இருமிநடையில்புகுந்து, உரைபோய்-சொல்தடுமாறி, உணர்வு அற்று-நல்லுணர்ச்சிகெட்டு, இளையா வுள முட்குடனம் இளைத்து வெட்கி உயிர்சோர-உயிரானது சோர்வடைந்து, எரிவாய்நரகில்-எரிகின்ற வாயையுடைய நரகத்தினிடத்தில், புகுதாதபடிக்கு-நுழையாதபடி, இருபாதம் எனக்கு அருள்வாய்-இரண்டு திருவடிகளை எனக்குத் திருவருள் செய்வாய். (எ-று)

பொது.

26 தனனதான தானன தனனதான தானன
தனனதான தானன—தனதான.

அதலசேட னாராட வகிலமேரு மீதாட
வபினகாளி தானாட வவளோடன்
றதிரவீசி வாதாடும் விடையிலேறு வாராட
வருகுபூத வேதாள மவையாட
மதுரவாணி தானாட மலரில்வேத னாராட
மருவுவானு ளோராட மதியாட

வனசமாமி தாளுட னெடியமாம னாரட
மயிலுமாட நீயாடி வரவேணும்

கதைவிடாத தோள்வீம னெதிரியான போர்மீளி
கருதொணாத மாசேனை பொடியாகக்

கதறுகாலி போய்மீள விசயனேறு தேர்மீது
கதிர்கொள்வீறு கோடூதி யலைமோது

முததிமீதி லேசாயு முலகமூடு சீர்பாத
முவணவூர்தி மாமாயன் மருகோனே

புதயதாம மார்பாட ப்ரபுடதேவ மாராஜ
னுளமுமாட வாழ்தேவர் பெருமாளே.

(ப-ரை) கதைவிடாத தோள்-கதாயுதத்தை விட்டுவிடாத தோளை யுடைய, வீமன் எதிரியான போர்மீளி-வீமனுக்கு விரோதியான யுத்த வல்லவனானவன், கருதொணாத மாசேனை பொடியாக-நினைக்கொணாத பெரிய சேனையானது பொடியாகும்படி, கதறு காலிபோய்மீள-கதறுகின்ற காலியானதுபோய்மீள, விசயன் ஏறு தேர்மீது-அர்ச்சுனன் ஏறுகின்ற தேரின்மேல், கதிர்கொள்வீறு கோடூதி-கிரணங்களைக் கொண்டிருக்கின்ற வெற்றிபொருந்திய சங்கையூதி அலைமோதும் உததி மீதிலேசாயும்-அலைகள் வீசுகின்ற சமுத்திரத்தின் மேல் சாய்ந்த, உலகமூடு சீர்பாத-உலகங்களை மூடிருக்கும் சிறந்த பாதங்களையுடைய உவணவூர்தி மாமாயன் மருகோனே-கருடவாகனனான விஷ்ணுமூர்த்தியின் மருகனே, உதயதாம மார்பாட-புதியமலர் மாலையானது மார்பில் ஆடவும் ப்ரபுடதேவமாராஜனுளமுமாட வாழ்தேவர் பெருமாளே-பிரபுடதேவ ராஜன் உள்ளம் ஆடவும் வாழ்கின்ற தேவர்பெருமானே, அரவச்சடனார் ஆட-ஆதிசேடன் ஆடவும், அம்பலமேநர்தாட-[illegible]

பேரு ஆடவும், அபினகாளி தானாட-அபின்னு சத்தியானகாளி ஆட-வும், அவளோடு அன்று அதிரவீசி வாதாடும் விடையிலேறுவார் ஆட-அவருடனே அக்காலத்தில அதிரும்படி வீசி வாதாடின ரிஷபவாகனுருடையான பரமேஸ்வரர் ஆடவும், மதுரவாணி தானாட-சரஸ்வதியாடவும், மலரில்வேதனார் ஆட-பிரமதேவன் ஆடவும், மருவிவானுளோர் ஆட-தேவர்கள் ஆடவும், மதியாட-சந்திரன் ஆடவும், வனசமாமிதான் ஆட-லட்சுமி ஆடவும், நெடியமாமனாராட-திருமாலானமாமனார் ஆடவும், மயிலுமாட-மயிலுமாடவும், நீயும் வரவேணும்-நீயும் ஆடிக்கொண்டு வரவேண்டும். (எ-று)

யாழ்ப்பாணம்.

37. *தாத்தா தானந் தத்தன தனதன*
தாத்தா தானந் தத்தன தனதன
தாத்தா தானந் தத்தன தனதன—தனதான.

பூத்தார் சூடிங் கொத்தலர் குழலியர்
பார்த்தால் வேலுங் கட்கமு மபுன்விடு
போர்க்கார் நீடுங் சட்சர மொடுநமன் விடுதூதும்

போற்றார் நாளுங் கைப்பொரு ளுடையவர்
மேற்றா ளார்தம் பற்றிடு ப்ரமைபது
பூட்டா மாயங் கற்றவை விழியின ரமுதூறல்

வாய்த்தார் பேதஞ் செப்புபொய் விரகியர்
நோற்றே நூலின் சிற்றிடை யிடைபட
வாட்டாய் வீசுங் கர்ப்புர மிர்கமத மகிலாரு.

மாப்பூ ணாரங் கச்சணி முலையினர்
வேட்பூ ணாசங் கெட்டன னெனதுமெய்ப்
வாக்கான் ஞானம் பெற்றினி வழிபட வருளாயே

ஆத்தாள் மால்தங் கைச்சி கனிகையுமை
கூத்தா டானந் தச்சிவை திரிபுரை
யாட்பேய்ப் பூதஞ் சுற்றிய பயிரவி திரிலோக

மாக்கா யாவும் பற்றிய பரிபுரை
நோக்கா டோதுஞ் செற்றனள் புருவிலை
யாட்டா னீசன் பக்கம துறைபவள் பெருதேசியே

வத்தா னாளுந் தர்ப்பண செபமொடு
நீற்றூர் ஞானம் பற்றிய குருபர
பார்ப்பா ராயுஞ் சொற்பதி முருகரு

பேற்போர் தாம்வந் திச்சையின் மகிழ்வொடு
வாய்ப்பாய் வீசும் பொற்பரை நெடுமதில்
யாழ்ப்பாணாயன் பட்டினமருவிய பெருமாளே.

(ப-ரை) ஆத்தாள்-தாயானவள், மால்தங்கைச்சி-விஷ்ணுவின் தங்கையும், கனிகை-கன்னிகையும், உமா-உமாதேவியும், கூத்தாடு-திருநடனஞ்செய்கின்ற, ஆனந்தச்சிவை-ஆநந்தமுள்ள சிவசொரூபமுள்ளவளும், திரிபுரையாள்-திரிபுரையும், பேய்பூதம் சுற்றிய பயிரவி-பேய்கள், பூதங்கள் ஆகிய இவைகள் சுற்றுகின்ற பயிரவியும், திரிலோகம் ஆக்கா - மூன்றுலோகங்களையும் படைத்து, யாவும் பற்றியபரிபுரை-அவைகளையெல்லாம் பிடித்துக் கலந்திருக்கின்ற பரிபுரையும், நோக்காடு ஒதுஞ்செற்றனள் - சர்வநோக்காட்டையெல்லாம் ஒழித்தவளும்,.

திருவிளையாட்டாள் - திருவிளையாட்டையுடையவளும், ஈசன் பக்கமு றைபவள்-பரமேசுவரனுடைய இடதுபக்கத்தில் வசிப்பவர்களுமான பரமேசுவரியானவள், பெற்றசேயே-பெற்றெடுத்த புத்திரனே, நாளும் ஏத்தா-தினமுந்துதிசெய்து தர்ப்பணஞ் செபமொடு நீற்றர் ஞானம் பற்றிய-தர்ப்பணமும், செபமும் நீற்றினையுடையவருடைய ஞானமும் பொருந்தின, குருபர-குருவே, பார்ப்பார் ஆயுஞ்சொல் தமிழ் அருள் தரு முருகோனே-பிராமணர்களால் ஆராயப்படும் வேதவாக்கியத் தமிழை அருளிச்செய்த முருகக்கடவுளே, ஏற்போர் தாம்வந்து-இரப்பவர்கள்வந்து இச்சையின் - ஆசையினால், மகிழ்வொடு - மகிழ்ச்சியுடன், வாய்ப்பாய் வீசு-பொருந்துதலாய் நீண்ட மதில் சூழ்ந்த, யாழ்ப்பாணயன் பட்டின மருவிய பெருமாளே-யாழ்ப்பாணமென்னும் பட்டினத்தில் எழுந்தருளியிருக்கின்ற இளையபெருமாளே, பூத்தார்சூடும் கோதகலர் குழலியர் - புஷ்பகூந்தலையுடைய பெண்கள், பார்த்தால் வேலுங்கட்கமும் மதன் விடுபோக்கார் நீண்ட சரமொக்க-பார்த்தால் வேலையும் கட்கத்தையும் மதன் விடுகின்ற போக்கினையுடைய நீண்ட சரத்தையும் ஒத்த கண்களுடன், ஏவலிடுதூதும் - ஏவலால் செலுத்தப்படுகின்ற தூதர், போற்றார் நாளும் கைப்பொருள் உடையவர்-போற்றாதார்களுடைய கைப்பொருளை என்றும் உடையவர்கள், மேற்றோர்தம் பற்றிடு பிரமையது-மேற்றோருடைய பிடிக்கின்ற பிரமையுடன், பூட்டா மாயக்கற்றமை விழியினர்-பூட்டப்படாத மாய்கையைக் கற்ற மை தீட்டிய கண்களையுடையவர், அமுதூறல் வாய்த்தார்பேசுஞ் செப்பு பொய்விழைவியர் - இதழ் அமுதின் ஊறலையுடையவர் வித்தியாசமான வார்த்தைகளைச்சொல்லுகின்ற பொய் விருப்பமுள்ளவர்கள், தோற்றேறாவின் சிற்றிடையிடைய-நூலைப்போலும் நுண்ணிய இடையானது மத்தியிலிருக்க, வாடாய் வீசுங் கர்ப்பூரம் மிர்கமதம் அகில் ஆரும்-வாட்டமாக வீசுகின்ற பச்சை கர்ப்பூரம் கஸ்தூரி, அகில் இவைகள் பொருந்

தின, மாபூணாரம்-பெரியநகைகளும்,கச்சணி-முலை வீசும் கர்ப்பூரம்-மிர்க மதம் அகில் ஆரும்-வாட்டமாக வீசுகின்ற பச்சைக்கர்ப்பூரம் கஸ்தூரி, அகில் இவைகள்பொருந்தின, மாபூணாரம்-பெரியநகைகளையணிந்த, கச்சணிமுலையினர்-கச்சையிறுக்கின முலையையுடைய பெண்கள், வேள் பூண் ஆகம் கெட்டனன்-மன்மதனுடைய சேர்க்கையையுண்டய சரீரத் தால் கெட்டேன் (ஆகையால் அப்படிப்பட்டவன்) உனது மெய்வாக் கால் ஞானம்பெற்று இனிவழிபட அருளாயோ-உன்னுடைய உண்மை வாக்கினால் ஞானத்தைபடைந்து உன்னைவழிபடுகின்றவிதத்தை அருள் செய்யமாட்டாயோ? (எ-று)

பொது.

38\. தனனதன தன்னதன தானான தானதன
தனனதன தனனதன தானான தானதன
தனனதன தனனதன தானான தானதன—தனதான.

உறவின்முறைச் சுதரிபழ வூராறு மாசையறு
பறைநிமிலை முழவினிசை யாகாச மீதுமுற
வலகுலவ பலாரிசி வாய்மீதி லேசொரிய மந்தநாளி
லுனதுமுக கருணைமல ரோராறு மாமிருகை
திரள்புயமு மெழில்பணிகொள் வார்காது நீள்விழிய
முபயமத மிசைகுலவு சீரேறு நூபுரமு மந்தமார்பு
மறையறையு மமரர்சொரு பூமாரி யேசொரியு
மதுவொழுகு தாளமணி மீதேமு நூலுமொரு
மயிலின்மிசை யழகுபொலி தாளாயுன்னடியர் வந்துகூடி
மறலிபண்ட யமபுரமு மீதோடவேபொருது
விருதுசல முறைமுறைபி லேயூதி வாதுசெய்து
மதலைபொரு முதலியடி நாயேனை யாளவிநீ வந்திடாயோ

பிறையெயிறு முரணசுரர் போராது பாரில்விழ
வதிரவெழு புவியுலக மீதேழு மோலமிடு
பிடிகளிறு வரிநிறைகள் பாழாக வேந்திசையி னின்றநாகம்

பெரியநெடு மலையிடிய மாவாரி தூளியெழ
பெரியதொரு வயிறுடைய மாகாளி கூளியொடு
பிணநிணமு முணவுசெய்து பேயோடுமாடல்செய வென்றதீரா

குறமறவர் கொடியடிகள் கூசாது போய்வருடு
காபுலி கிளிகடிய வாராத சாதன்மிகு
குளிர்கணியி னிளமரம தேபாநி நீடியுயர் குன்றுலாவி

கொடியதொரு முயலகனின் மீதாடு வாநுடைய
வொருபுறம துறவளரு மாதாபெ ருவருள்செய்
குமரகுரு பரவமரர் வானாடர் பேணவருள் தம்பிரானே.

(ப-ரை) பிறையெயிறு முரண் அசுரர் போராதுபாரில்விழ-மூன்றாம் பிறையைப்போன்ற பற்களையுடைய பலம்பொருந்திய இராட்சதர்கள் இடம்விட்டுப் பெயராமல் பூமியில்விழவும், அதிர எழுபுவியுலகம் மீதேழு ஓலமிடு-அதிரும்படி எழுகின்ற புவியுலக முதலிய எழும் சத்திக்கின்ற, பிடிகளிறுவரிநிறைகள் பாழாக-பெண்யானை ஆண்யானை: புலிகள் முதலியவைகள் பாழாகவும், திசையில் நின்றநாகம்-அஷ்டதிக்குகளிலுமுள்ள நாகங்களும், பெரியமலையிடிய-பெரிய மலைகளும் இடியவும், மாவாரிதூளியெழ-சமுத்திரங்கள் துகள்படவும், பெரியது ஒரு வயிறு உடைய-பெரிய வயிற்றையுடைய. மாகாளி கூளியொடு பிண நிணமும் உணவுசெய்து பேயோடும் ஆடல்செய வென்றதீரா-மகத்தாகிய காளியும் கூளியும் பிணங்களுடைய நிணங்களை உணவாகக் கொண்டு பேயோடாடவென்ற தீரமுடையவனே, குறமறவர் கொடியடிகள் - வள்ளிநாய்ச்சியாருடைய திருவடிகளை, கூசாதபோய்வருடு-

கூசாமல்சென்று பிடித்த, காடி புலி கிளி கடியவாராத-காடி புலி, கிளி இவைகளை யோட்டாத, காதல்மிகு-ஆசைமிகுந்த, குளிர்கனியின் இளமரமதாயாகி நீடியுயர் குன்றலாவி-குளிர்ந்த பழத்தையுடைய வேங் கைமரமாய் நீண்டுவளர்ந்த மலைகளில் வசித்து, கொடியதொரு முயலக னின்மீது ஆடுவாருடைய-தீயவனுன முயலகன் என்பவனுடைய முது கின்மேல் ஒருகாலூன்றி திருநடனஞ் செய்பவரான பரமேஸ்வரனு டைய, ஒருபுறமாது உறவளரும் - இடதுபாகத்திலிருக்கின்ற, மாதா பெறு அருள்செய்-தாயானவள் பெற்றளித்த, குமாகுருபர-குமாரனே, பானுக்கு குருவே, அமரர்வானுடர்பேண-தேவர்களாகிய தேவலோக வாசிகள்பணிய, அருள் தம்பிரானே-அருள்செய்கின்ற முருகக்கடவுளே. உறவின்முறை கதறியழ-சுற்றத்தார்கள் கதறியழவும் ஊராரும் ஆசை யறும்-நாட்டார்களும் ஆசையைவிட்டு விடுகின்ற, பறைதிமிலை முழ வின்இசை-பறை, திமிலை, மேளவாத்தியம் இவைகளின் சத்தமானது, ஆகாசமீதும் உற-ஆகாசம்வரைக்கும் பொருந்தவும், உலகில் உளபலர் உலகத்திலுள்ள அநேகர், அரிசிவாய் மீதிலேசொரியும்-வாய்க்கு அரிசி யிடுகின்ற, அந்தநாளில்-கடைசிநாளில், உனதுமுக கருணைமலர் ஓரா றும்-உன்னுடைய கிருபைபொருந்திய திருமுகம் ஆறும், ஆறிருகை- பன்னிரண்டுகைகளும், திரள் புயமும்-திரண்டபுஜங்களும், எழில்பணி கொள்வார்காதும்- அழகிய ஆபரணங்களைத்தரித்த நீண்ட காதுகளும், நீள்விழியும்-நீண்டகண்களும், உபயபத மிசைகுலவு-இரண்டு திருவடி களிலிருக்கின்ற, சீரேறு நூபுரமும் - சிறப்புப்பொருந்தின நூபுரமென் னும் சதங்கையும், அந்த மார்பும்-அழகுள்ள மார்பும், மறையுமறையும் அமரர்தரு-வேதங்கள் சொல்லுகின்ற தேவர்கள் கொடுக்கின்ற, பூமா ரியே சொரியும்- புஷ்பமாரியைப் பொழிகின்ற, மதுவொழுகு-மகரந் தம் ஒழுகுகின்ற, தரளமணிமீது-முத்துமாலையின்மேல், முந்நூலும், முப்புரிநூலும்கொண்டு, மயிலின்மிகையழகுபொலிதாளா-மயில்வாகனத் தின்மேல் அழகாக விளங்குகின்ற திருவடிகளை யுடையவனே! உன்னு

வடியர் வந்துகூடி-உன்னுடைய நால்வகைச் சத்திநி பாதத்தையடைந்து அடியார்களுடன் வந்துகூடி, மறலிபடை யமபுரமு மீதோட-எமனானவன் பாக்கும் உலகமானது மேலேபோக, டொருது-மோதி, விருதுடல-அநேக வெற்றிகளை, முறைமுறையில் ஊதி-முறைமுறையாக ஊதி; வாதுசெய்து-வழக்கிட்டு, மதலையொடு குதலை-மதலையும் குதலையுமுடைய, அடியார்களை எவ்ஙனவந்திடாயோ - நாயினும் கடைப்பட்ட அடியவனுன என்னை யாண்டருள இவ்விடம் எழுந்தருளி வர மாட்டாயோ? (எ-று.)

திருப்பழநி மலை.

39. தனதத் தனதத் தனதத் தனதத்
தனதத் தனதத் தனதத் தனதத்
தனதத் தனதத் தனதத் தனதத்—தனதான.

கடலைச் சிறைவைத் துமலர்ப் பொருவிற்
ப்ரமரத் தையுடற் பொறியிட் டுமடுக்
கமலத் தைமலர்த் திவிடத் தைபிரப் பவனூனைக்

கருதிச் சருவிக் கயலைக் கயமுட்
படவித் துழையைக் கவனத் தடைவிக்
கணையைக் கடைவித் துவடுத் தனையுப் பினின்மேவி

அடலைச் செயல்சத் தியைக் கினியிற்
புகுவித் தயம்பப் ப்ரபுலவத் தநகைவித்
தரிகட் கமெடுத் துவிதிர்த் சராதுயதிசைத்த

மலறப் பணிரத் நமணிக்குழையைக்
சிலுகிட் டுமையிட் டொளிர்விட் டுமருட்
டிறமுற் றமர்பொறிச் சியர்கட் கடையிற் படுவேனோ

சடிலத் தவனிட் டவிசிட் டகுலத்
தொருசெட் டியிடத் தினுதித் தருள்வித்
தகருத் ரஜனப் பெயர்செப் பியிடப் பரிவாலே

சனகற் குககஸ்த் யபுலஸ்த் யசனற்
குமரர்க் குமநுக் ரகமெய்ப் பலகைச்
சதுபத் துநவப் புலவர்க் குநிவர்த் தியின்ஞான

படலத் துறிலக் கணலக் கியசொற்
றமிழிற் ப்ரியமுந் திலகப் பொருளைப்
பழுதற் றுணர்வித் தருள்வித் தகசற் குருநாதா

பவளக் கொடிசுற் றியபொற் கமுகிற்
றலையிற் குலைமுத் துதிர்செய்க் கழனிப்
பழநிப் பதிவெற் பினிலிற் குடிபற் பெருமாளே.

(ப-ரை; சடிலத்தவன் இட்ட சடையையுடையவன் வைத்த, விசிட்டகுலத்து-உயர்ந்தகுல முடையனாகிய, ஒரு செட்டியிடத்தின் உதித்து, ஒரு செட்டியினிடத்தில் பிறந்து, அருள்வித்தக-அருள் செய்கின்ற உயர்ந்தவனே, ருத்ரஜனப்பெயர் செப்பியிட-ருத்திர வம்சப் பெயரைச்சொல்ல, பரிவால்-விருப்பத்தினால், சனகற்கும் அகஸ்திய புலஸ்திய சனற்குமாரற்கும்-சனகன், அகஸ்தியன், புலஸ்தியன், சனற்குமரன் இவர்களுக்கு, அநுக்கிரக-அநுக்கிரகஞ்செய்தவனே, மெய்ப்பலகை-உண்மையான சங்கப்பலகையில், சதுபத்து நவபுலவர்க்கு-நாற்பத்தொன்பது புலவர்களுக்கு, நிவர்த்தியின்-பிராயச்சித்தத்தோடு, ஞான

படலத்து உற - ஞானதிகாரத்திற்பொருந்தின, இலக்கண இலக்கிய சொல் - இலக்கண இலக்கியங்களையுடைய, தமிழிற் பிரியமுற்ற-தமிழிற் பிரியம்வைத்து, இலக-விளங்க, பொருளை - பொருள்களை, பழுத்தற உணர்வித்து-குற்றமில்லாமல் போதித்து, அருள்வித்தக-அருள் செய்த மேலானவனே, சற்குருநாதா-உயர்ந்த குருநாதனே, பவளக் கொடிசுற்றிய போற்கமுகின் தலையில்-பவழக்கொடி சுற்றியிருக்கின்ற அழகிய பாக்குமரத்தினுச்சியில், குலைமுத்து உதிர்செய்கழனி-திரண்ட முத்துக்கள் சிந்துகின்ற நிலஞ்சூழ்ந்த கழனிகளையுடைய, பழநிப்பதி வெற்பினில் நிற்கும்-பழநிமலையில் எழுந்தருளியிருக்கின்ற. இயல்பெருமாளே-சுபாவ குணத்தையுடைய பெருமாளே, கடலை சிறைவைத்து-சமுத்திரத்தைச் சிறைசெய்தும், மலர்பொழிலில் ப்ரமரத்தை உடல் பொறியிட்டு-பத்பதங்களையுடைய சோலைகளிலிருக்கும் வண்டுகளை உடலிற்பொறி படுத்தியும், மடுகமலத்தை மலர்த்தி-மடுவிலுள்ள தாமரையை மலர்வித்தும், விடத்தை இரப்பவன் வடிவாககருதி - விஷத்தை பிக்ஷையெடுப்பவனுடைய ஆகாரமாகநினைத்து, சருவி பொருதும், கயலைகயமுட்படுவித்து கெண்டைமீனை குளத்துக்குட் படுத்தியும், உழையை-மானை, கவனத்து அடைசி - காட்டில்சேர்த்தும். கணையைகடைவித்து-அம்பைக்கடையச்செய்தும், வடுத்தனை உப்பினில்மேவி-மாம்பிஞ்சை உப்பிலிட்டும், அடலைச்செயல் சத்தியை-பலத்தைச்செய்கின்ற வேலை, அக்கினியில் புகுவித்து-நெருப்பிற்செலுத்தியும், யமப்பிரபுவை-எமனை, துகைவித்து-வருத்தப்படுத்தியும், இரிகட்கம் எடுத்து விதிர்த்து-விரிந்த கட்கத்தை எடுத்து வீசியும், மதித்த சகோரம் அலற-நினைத்த சகோரப் பட்சியானது அலற, பணிரத்ன மணிக்குழையை சிலுகிட்டு-ரத்னமிழைத்த ஆபரணங்களைத்தரித்த காதைச் சண்டையிட்டு, மையிட்டு-மைதீட்டி, ஒளிர்விட்டு-விளக்கங்காட்டுகின்ற, மருள்திறம்உற்ற-மயக்குந் திறம்பொருந்தின, பொதிச்சியர்-தேமல்படர்ந்த சரீரத்தை

யுடைய பெண்களது, கண்கடையில் படுவேனோ - கடைக்கண்களில் பட்டு மடிவேனோ? (எ-று.)

40. தத்தத்தத் தத்தத்தத்தன
தத்தத்தத் தத்தத்தத்தன
தத்தத்தத் தத்தத்தத்தன—தனதான.

முத்துக்குச் சிட்டுக்குப்பிழு
டித்துச்சுக் கைப்பின்சுற்றியு
முற்பக்கத் திற்பொற்புற்றிட நுதன்மீதே

முக்யப்பச் சைப்பொட்டிட்டணி
ரத்நச்சுட் டிப்பொற்பட்டிவை
முச்சட்டைச் சித்ரக்கட்டழ கெழிலாடத்

தித்திக்கச் சொற்சொற்றுப்பிதழ்
நச்சுக்கட் கற்புச்சொக்கியர்
செப்புக்கொக் கக்கச்சுப்பெறு தனமேரு

திட்டத்தைப் பற்றிப்பற்பல
லச்சைக்குட் பட்டுத்தொட்டுயிர்-
சிக்கிச்சொக் கிக்கெட்டிப்படி யுழல்வேனோ

மெத்தத்துக் கத்தைத்தித்தியி
னிச்சித்தத் திற்பத்தத்தொடு
மெச்சிச்சொர்க் கத்திற்சிற்பர மருள்வாயே

வித்தைக்குக் கர்த்துத்தற்பர
முக்கட்சித் தற்குப்புத்திர
விச்சித்ரச் செச்சைக்கத்திகை புனைவோனே

நித்யக்கற் பத்திற்சித்தர்க
ளெட்டுத்திக் குக்குட்பட்டவர்
நிட்டைக்கற் பத்துப்பத்தர்க ளமரோரும்

நெட்டுக்குப் புட்பத்தைக்கொடு
முற்றத்துற் றர்ச்சிக்கப்பழ
நிக்குப்பட் டத்துக்குத்துரை பெருமாளே.

(ப-ரை) வித்தைக்குகர்த்து-படிப்பிற்குத் தலைவனே, தற்பர ஞான பரனே, முக்கட்சித்தற்கு புத்திர-திரிநேத்திர தாரியான பரமேஸ்வரனுக்கு திருக்குமாரனே, விசித்திர செச்சைக்சத்திகை புனைவோனே-விசித்திரமான வெட்சிமலர் மாலையை தரிப்பவனே, நித்திய கற்பத்தின்-நித்தியகற்ப சாதனர்களான, சித்தர்கள்-சித்தர்களும், எட்டுத்திக்கு உட், பட்டவர்-அஷ்ட திசைகளுக்கும் உள்ளிருப்பவர்களும், நிட்டைக்கற்பத்துப் பத்தர்கள்-நிஷ்டாகற்பத்தையடைய பக்தர்களும், அமரோரும்-தேவர்களும், நெடு-மிகுந்த, கு புட்பத்தை கொடு-நிலப்புஷ்பங்களால், முற்றத்துஉற்று-உப்பரிகையில்வந்து, அர்ச்சிக்க-அர்ச்சனைசெய்யும்படி, பழநிக்கு பட்டத்துக்கு-பழநிமலைசென்று முருகுப் பட்டம்பெறுதற்குக் சமைந்த, துரை-பிரபுவான, பெருமாளே-இளையபெருமாளே, முத்துகுச்சு இட்டு-முத்துக் குச்சுகளையணிந்து, குப்பிமுடித்து-குப்பி என்னும் தலை யாபரணத்தை முடித்து, சுக்கையின் சுற்றியும்-மாலையை பின்னேசுற்றியும், முற்பக்கத்தில்-முன்பக்கத்தில், பொற்பு உற்றிட-அழகைக்காட்ட, நுதன்மீது-நெற்றியில், முந்யபச்சைப் பொட்டு இட்டு-முக்கியமான பச்சைப்பொட்டையணிந்து, அணிரத்தின சுட்டி-அழகிய ரத்தினச்சுட்டிகளும், பொற்பட்டு - பொன்வேலைசெய்த பட்டும் இவை-ஆகிய இவைகள், முச்சட்டை - முச்சட்டையாக, சித்திரக்கட்டழகு-விசித்திரமான மிகுந்த அழகான து, எழில்ஆட-எழிலைக்காட்டி

யாடவும், தித்திக்கசொல் சொல்-இனிக்கச்சொல்லுகின்ற சொல்லும் துப்பு இதழ்-பவழம்போலும் இதழும், நச்சுகண்-விஷம்போலும் கண்ணும், கச்பு-கற்றலையுள்ள, சொக்கியர்-மயக்கம் விளைவிப்பவரான பெண்களுடைய, செப்புக்கு ஒக்க-செப்புக்கு ஒப்பாக, கச்சுபெறு-வாரிறுக்கிய, தனமேரு திட்டத்தைபற்றி-ஸ்தனங்களான மேருவென்னும் ஒரு அளவைப்பிடித்து, பற்பல லக்சைக்கு உட்பட்டு-அநேகசங்கடங்களுக்குட்பட்டு, தொட்டு-தொடர்ந்து, உயிர்சிக்கி சொக்கி-உயிரானது அகப்பட்டுசொக்கி, கெட்டு இப்படி உழல்வேனோ-இவ்விதம் கெட்டுத்திரிவேனோ, மெத்த துக்கத்தை-மிகுந்த துக்கத்தை, இத்தி-சதிசெய்து, இனி-இனிமேல், சித்தத்தில்-மனத்தில், பதத்தொடு-விருப்பத்துடன், மெச்சி-சந்தோஷித்து, சொர்க்கத்தில் - சொர்க்கலோகத்தில், சிற்பரம் அருள்வாய்-ஞானவுயர்ச்சியைத் திருவருள் செய்வாய். (எ-று.)

41. *தனதன தனதன தனதன தனதன*
தனதன தனதன—தனதான.

கடலைபொ ரியவரை பலகனி கழைநுகர்
கடினகு டவுதர விபரீத

கரடத டமுமத நளினசி றுநயன
கருணிமு சுவாது துணைவோனே

வடவரை யின்முகடு வதிரவொ ருகொடியில்
வலம்வரு மரகத மயில்வீரா

மகபதி தருசுதை குறமினொ டிருவரு
மருவுச ரசவிட மணவாளா

அடலசு ரர்கள்குல முழுதும டியவுய
ரமரர்சி றையைவிட வெழின்மீறு

அருணகி ரணவொளி யொளிருமயிலைவிடு
அரகர சரவண பவலோலா
படலவு டுபதியை யிதழியணிசடில
பசுபதி வரநதி யழகான
பழநிம லையருள்செய் மழலைமொ ழிமதலை
பழநிம லையில்வரு பெருமாளே.

(ப-ரை.) கடலை பொரி அவரை பலகனி கழைநுகர் - கடலை, பொரி, அவரை, பலவகைக்கனிகள், மூங்கில் இவைகளைத் தின்னுகின்ற, கடினகுடவுதர - கடினமான குடத்தைப்போலும் வயிற்றையுடைய, விபரீதகரடதட-விபரீதமான கரடத்தில் தடமான, மும்மதம்-மூன்று மதங்களையும், நளின சிறுநயன-தாமரைபோலும் சிறிய நயனங்களையுமுடைய, கருணிமுகவரது துணைவோனே - யானைமுகத்தையுடைய விநாயகருக்குச் சகோதரனே, வடவரையின் முகடு அதிர-கயிலாயமலையின் உச்சியானது அதிர, ஒரு கொடியில் வலம்வரு-க்ஷண நேரத்தில் வலமாகவந்த, மரகத மயில்வீரா-பச்சைமயிலில் ஆரோகணித்தவனே, மகபதிதரு-தேவேந்திரன் கொடுத்த, சுதை-தெய்வயானையும், குறமினொடு இருவரும்-வள்ளிநாய்ச்சியாருமான இரண்டுபேரும், மருவு சரசவித மணவாளா-சேர்கின்ற சரசவிளையாட்டையுடைய நாயகனே, அடல் அசுரர்கள் குலம் முழுதும்மடிய-பலம்பொருந்திய ராட்சதக்கூட்டங்கள் முழுமையும் மடியவும், உயர் அமரர் சிறைபவிட-உயர்ந்த தேவர்களுடைய சிறையானது மீளவும், எழில்மீறும்-மிகுந்த அழகையுடைய, அருணகிரண ஒளியொளிரும்-சூரியகிரண ஒளியானது விளங்கும், அயிலைவிடும்-வேலாயுதத்தைப் பிரயோகித்த, அரகர சரவணபவலோலா-அரகரா! சரவணபவா! லோலா! படலவுடுபதியை-கூட்டமான நட்சத்திரங்களுக்குத் தலைவனான சந்திரனையும், இதழி-கொன்றைப் பூமாலையையும், அணி-தரிக்கின்ற, சடில-சடாபாரத்தையுடைய,

பசுபதி வரநதி - பரமேஸ்வரனுடைய வரநதியும், அழகான - அழகையுடைய, பழநிமலையருள்செய் - பழமையான நிமலையுமான பரமேஸ்வரி அருளிச்செய்த, மழலைமொழி மதலை - குதலைச்சொற்களைப் பேசுகின்ற குழந்தையான, பழநிமலையில்வருபெருமானே - திருப்பழநிமலையில் எழுந்தருளியிருக்கின்ற இளையபெருமானே. (எ-று)

42. தனதத் தனதன தனதன தந்தத்
தனதத் தனதன தனதன தந்தத்
தனதத் தனதன தனதன தந்தத்—தனதான.

புடவிக் கணிதுகி லெனவள ரந்தக்
கடலெட் டையுமற குடிமுனி பின்சட்
புனிதச் சததள நிலைகொள் சயம்புச் சதுர்வேதன்

புரமட் டெரிபெழ விழிகன லிந்திக்
கடினத் தொடுசில சிறுநகை கொண்டற்
புதகர்த் தரகர பரசிவ னிந்தத் தனிமூவ

ரிடசித் தமுநிறை தெளிவுற வம்பொற்
செவியுட் பிரணவ ரகசியமன்பற்
றிடவிற் பனமொழிவுற் யுரைசெய் குழந்தைக் குருநாதா

வெதிருற் றசுரர்கள் படைகொடு சண்டைக்
கிடம்வைத் திடவவா குலமுழு தும்பட்
டிடவுக் கிரமொடு வெகுளிகள் பொங்கக் கிரியாவும்

பொடிபட் டுதிரவும் விரிவுற மண்டச்
சுவர்விட் டதிரவு முகடுகி ழிந்தப்
புறமப் பரவெளி கிடுகிடெ னுஞ்சத் தமுமாக

பொருதிக் கையிதுரா வயினிண ழுண்கக்
குருதிப் புனலெழு கடலினு மிஞ்சப்
புரவிக் கனமயி னடமிடும் விந்தைக் குமரேசா

படியிற் பெருமைக டகவுயர் செம்பொற்
கனியைத் தனிவலம் வரவர னந்தப்
பலனைக் கரிமுகன் வசமரு ளும்பொற் பதினாலே

பரன்வெட் கிடவுள மிகவுட்கெள் குண்டக்
கனியைத் தரவிலை யெனவரு செந்திப்
பழநிச் சிவகிரி தனிலுறை கந்தப் பெருமாளே.

(ப-ரை) புடவிக்கு அணி துகில் என்வளர்-பூமிக்கு அழகிய வஸ்திர மென்னவளர்கின்ற, அந்தக் கடல் எட்டையும்-சத்த கடல்களுடன் பெரும்புறக்கடலுஞ்சேர்ந்த எட்டையும், அறகுடி முனியின்கண்-முழுமையுங்குடித்த அகஸ்திய முனிவரிடத்தில், புனிதம் - பரிசுத்தமான, சததளம் நிலைகொள் சயம்பு - தாமரையில்வாழும் நிலையைக்கொண்ட விஷ்ணுவும், சதுர்வேதன் - பிரமதேவனும், புரமட்டெரியெழ விழி கனல் சிந்தி-திரிபுரங்களும் எரிந்துவிடும்படி கண்பொறியைச்சிந்தி, கடினத்தொடு-கஷ்டத்துடன், சில சிறுநகைகொண்டு-சில புன்னகையைக்காட்டின, அற்புத கர்த்தரசா பரசிவன்-ஆச்சரியமான கர்த்தத்துவமுடைய அரகர பரமசிவனும், (ஆன) இந்த தனிமூவரிட-இந்த ஒப்பற்ற மூன்றுபேர்களுடைய, சித்தமும் நிறைதெளிவு உறவும்-மனங்களும் மிகவும் தெளிவடையவும், பொன்செவியுள் பிரணவரகசியம்-அழகிய காதினிடத்தில் பிரணவத்தின் ரகசியத்தை, அன்புற்றிட-ஆசையுண்டாக, உற்பனமொழி-உண்மை வசனத்தை, உரைசெய்குரிந்தை குருநாதா-சொல்லின சிறு பிராயமுள்ள குருநாதனே! எதிர் உற்று அசுரர்கள் படைகொடு சண்டைக்கு இடம்வைத்திட-இராட்சதர்

கள் எதிர்த்து ஆயுதங்களைக்கொண்டு சண்டைக் கிடம்பண்ண, அவர் குலம் முழுதும்பட்டிட-அவர்ளுடைய குலங்கள் முழுமையுமழிய, உக்கிரமொடு வெகுளிகளபொங்க-வேகத்தோடு கோபமானது அதிகரிக்க, கிரியாவும்-மலைகளெல்லாம், பொடிபட்டு உதிரவும்-பொடியாய் உதிரவும், விரிவுறும் அண்டச்சுவர்விட்டு அதிரவும், முகடுகிழிந்து அப்புறம் அப்பரவெளி-உச்சியானது கிழிந்து அப்புறம் அந்தப் பரவெளியானது, கிடுகிடெனுஞ் சத்தமுமாக-கிடுகிடுஎன்கிற சத்தமுண்டாகவும்,பொருதி-போர்செய்து மோதி, கையில்உள அயில்-கையிலிருக்கின்ற வேலாயுதமானது, நிணம் உண்க-நிணந்தின்னவும், குருதிபுனல்-ரத்தமானது, எழுகடலினும் மிஞ்ச-எழு சமுத்திரங்களைப் பார்க்கிலும் அதிகரிக்கவும், புரவிகனமயில்-குதிரையான பெரிய மயில்வாகனத்தின்மேல்; நடமிடும் விந்தை குமரேசா - நடனஞ்செய்கின்ற ஆச்சரியமான குமரேசனே! படியில் பெருமைகள்தர-உலகத்தில் பெருமைகள் தரும்படி, உயர் செம்பொன் கிரியை-உயர்ந்தபொன்னாலான கயிலாயமலையை, தனிவலம் வர-சிறந்த பிரதட்சணஞ் செய்ய, அரன் அந்த பலனை-பரமேஸ்வரனானவன் அந்தப் பழத்தை, கரிமுகன்வசம் அருளும்-விநாயகனிடம் கொடுக்கும், பொற்பதினால் - அழகினால், பரன்வெட்கிட-பரமேஸ்வரனானவன் வெட்கமடையும்படி, உளம் மிகவும் வெண்டு அக்கனியை தர விலைன-அந்தப் பழத்தைக் கொடுக்கவில்லையே யென்று மனம் மிகவுங் கோபங்கொண்டு, வருசெந்திபழநி சிவகிரிதனிலுறை கந்தப் பெருமாளே- அக்கயிலாயமலையிலிருந்து வந்து செந்திற்பதி, பழநிமலை, சிவகிரி என்பவைகளில் எழுந்தருளியிருக்கின்ற கந்தசுவாமியான இளையபெருமாளே. (எ-று)

---

43. தனதன தந்தத் தனத்த தானன
தனதன தந்தத் தனத்த தானன
தனதன தந்தத் தனத்த தானன—தனதான.

மலரளி கொண்டைச் செருக்கி லேயவள்
சொலுமொழி யின்பச் செருக்கி லேகொடு
மையுமடர் நெஞ்சத் திருக்கி லேமுக மதியாலே

மருவுநி தம்பத் தடத்தி லேநிறை
பரிமள கொங்கைக் குடத்தி லேமிக
வலியவும் வந்தொத் திடத்தி லேவிழி வலையாலே

நிலவெறி யங்கக் குலுக்கி லேயெழில்
வளைபுனை செங்கைக் கிலுக்கி லேகன
நிதிபறி யந்தப் பிலுக்கி லேசெயு மொயிலாலே

நிதமிய லுந்தர்க் குணத்தி லேபர
வசமுட னன்புற் றிணக்கி லேயொரு
நிமிஷமுணங்கக் கணத்தி லேவெகு மதிகேடாய்

அலையநி னைந்தற் பனத்தி லேயது
தினமிகு மென்சொற் பனத்தி லேவர
வறிவும ழிந்தற் பனத்தி லேநித முலைவேனோ

வசடனை வஞ்சச் சமர்த்த னாகிய
கசடனை யுன்சிற் கடைக்க ணாடியு
மலர்கொடு நின்பொற் பதத்தை யேதொழ வருமாறாய்

பலமல பைம்பொற் பதக்க மாரமு
மடிமைசொ லுஞ்சொற் றமிழ்ப்ப னீரொடு
பரிமள மிஞ்சக் கடப்ப மாலையு மணிவோனே

பதியினின் மங்கைக் கதித்த மாமலை
யொடுசில குன்றிற் றரித்து வாழ்வுயர்
பழநியி லன்புற் றிருக்கும் வானவர் பெருமாளே.

(பு-ரை) பலபல-அநேகவிதமான-பைம்பொன் பதக்கம்-பசியபொன்னாற்செய்யப்பட்ட பதக்கத்தையும், ஆரமும்-முத்துமாலையையும், அடிமைசொலும் சொல்தமிழ் பனிரொடு-அடிபவனான நான் சொல்லும் தமிழாகிய பன்னிருடன், பரிமளம்மிஞ்ச-வாசனை மிக, கடப்பமாலையும் அணிவோனே - கடப்பமலர் மாலையையுந் தரிப்பவனே! பதியினில்-உலகத்தில், மங்கைக்கதித்த மாமலையொடு-வள்ளிமலையுடன், சிலகுன்றில் தரித்து-வேறு சில சிறுமலைகளிலும் இருந்து, வாழ்வுயர்-வாழ்ந்து உயர்கின்ற, பழநியில் - பழநிமலையில், அன்புற்று இருக்கும் வானவர் பெருமாளே-ஆவல்கொண்டு எழுந்தருளியிருக்கும் தேவர்களுக்குத் தலைவனே! மலரளிகொண்டைச் சொருக்கில் - வண்டுகள் மொய்க்கின்ற புஷ்பமணிந்திருக்கின்ற கொண்டைச் செருக்கிலும், அவள் சொல்லும் மொழியின்பச்செருக்கில் - அவள்சொல்லுகின்ற சொல்லின் இன்பச் செருக்கிலும், கொடுமையும் அடர் நெஞ்சத்திருக்கில்-தீமைகள் நெருங்கியிருக்கின்ற மனமேறுபாட்டிலும், முகமதியால்-சந்திரன்போன்ற முகத்திலும், மருவுநிதம் பத்தடத்திலே - பொருந்தின நிதம்பத்தாலும் நிறை பரிமள கொங்கைக்குடத்தில் - நிறைந்த வாசனையுடைய குடம் போலும் ஸ்தனங்களாலும், மிக வலியருந்வந்து ஒத்திடத்தில் - மிகவும் பலயாகவந்து-பொருந்துகின்ற படுக்கையிலும், விழிவலையால்-கண்களாகிய வலையிலும் நிலவுஎறி அங்கக்குலுக்கில் - சந்திரிகைவீசுகின்ற அங்கத்தின் குலுக்கிலும், எழில் வளைபுனைசெங்கைக் கிலுக்கில்-அழகிய வளையல்தரித்திருக்கின்ற செவுந்தகையின் சப்தத்தாலும், கனநிதி பறியந்தப்பிலுக்கில - மிகுந்த திரவியங்களை அபகரித்துக்கொள்ளுகின்ற சாயலிலும். செயும் நயிலால் - செய்கின்ற ஒய்யாரநடையிலும்,

நிதம் இயலும் துர்க்குணத்தில்-தினமும் நடைபெறும் தீக்குணத்தினுலும், பரவசமுடன்-ஆநந்தத்துடன், அன்புற்ற இணக்கில்-ஆசைக்கொண்டுசேர்வதாலும், ஒருநிமிஷம் இணங்கி-ஒருநிமிஷஞ் சேர்ந்து, கணத்தில் வெகு மதிகேடாய்-க்ஷணநேரத்தில் மிகவும் புத்திகேட்டையடைந்து, அலையநினைந்து - அலைந்துவிடும்படி எண்ணி உற்பனத்தில் அநுதினம் மிகும்-உண்மையாக பிரதிதினமும் மிகுந்துவருகின்ற, என்சொப்பனத்தில் - என்னுடையகனவில், வர-வர, அறிவும் அழிந்து - புத்திகெட்டு, அற்பனத்தில் நிதம் உலைவேனை - நீசத்தன்மையில் தினமும் திரிவேனை, (அப்படிப்பட்ட) அசடனை-கீழ்மகனும், வஞ்சச்சமர்த்தனகிய-வஞ்சகஞ்செய்வதில் சாமர்த்தியமுள்ளவனுமான, கசடனை-குற்றம் பொருந்தினவனை, உன்-உன்னுடைய, சிற்கடைக்கண் நாடிரிம்-ஞானம் பொருந்திய கடைக்கண்களால் பார்த்து, மலர்கொடு-புஷ்பங்களைக்கொண்டு, நின்பொற்பதத்தைதயதொழ அருள்தாராய்-உன்னுடையபொன்போலும் திருவடிகளை வணங்கும்படி திருவருள்செய்யவேண்டும்.(எ-று)

திருச்செந்தில்

44\. தந்தந்தந் தந்தன தானன
தந்தந்தந் தந்தன தானன
தந்தந்தந் தந்தன தானன—தனதான.

வஞ்சகங்கொண் டுந்திட ராவண
னும்பந்தன் திண்பரி தேர்கரி
மஞ்சின்பண் புஞ்சரி யாமென வருசேனை

வந்தம்பும் பொங்கிய தாகவெ
திர்ந்துந்தன் சம்பிர தாயமும்
வம்புந்தும் பும்பல பேசியு மெதிரேகே

மிஞ்சென்றுஞ் சண்டைசெய் போதகு
மங்குந்துஞ் சங்கனல் போலவெ-
குண்டுக்குன் றுக்கலைவாரியு மதில்வீசி

மிண்டுந்துங் கங்களி னுலைத
கர்ந்தங்கங் கங்கா மார்பொடு
மின் சந்துஞ் சிந்திடி சாசரர் வகைசேர

வஞ்சகண்டன் றென்றிசை நாடிவி
மூந்தங்குஞ் சென்றெம தூதர்க
ளுந்துந்துந் தென்றிட வேதசை நினைமூனை

யுண்டிங்கண் டுஞ்சில கூளிகள்
டிண்டிண் டென் றுக்குதி போடவு
யர்ந்தம்புங் கொண்டுவெல் மாதமன் மருகோனே

அஞ்சந்தஞ் சஞ்சிறி யேன்மதி
கொஞ்சக்கொஞ் சந்துரை யேயருள்
தந்தென்றின் பந்தரு வீடது தருவாயே

சங்கங்கஞ் சங்கயல் சூழ்தட
மெங்கெங்கும் பொங்கம காபுனி
தந்தங்குஞ் செந்திபில் வாழ்வுயர் பெருமாளே

(ப-ரை) வஞ்சம்கொண்டும் - கபடத்தைக்கொண்டும், திடராவண னும்-பலமுள்ள ராவணனும், பந்தென - திரட்சியென்று சொல்லும் திண்பரிகேதர்கரி - பலம்பெற்றிருக்கின்ற குதிரைகள், தேர்கள், யானை கள், மந்தின்பண்புஞ் சரிபாம் எனவெதும்சினை - மேக கர்ச்சனைக்கு ஒப்பாமென்று சொல்லத்தகும் மிகுந்த சேனைகள் ஆகிய இவைகள்,

வந்துவந்து, அம்பும்பொங்கியதாக எதிர்ந்தும்-கடலும் பொங்கினது போல எதிர்த்தும், தன் சம்பிரதாயமும்-தன்னுடைய சாமர்த்தியத்தை யும், வம்பும் தும்பும் பல்பேசியும்-பலவகை வம்புதும்புகளையும் பேசியும், எதிரே கைமிஞ்சு என்றும்-எதிர் விரோதக்கைகாட்டென்றும், சண்டை செய்போது-யுத்தஞ்செய்த காலத்தில், குரங்கும்-குரங்குச்சேனைகளும், துஞ்சும் கனல்போல வெகுண்டும்-நீறுபூத்த நெருப்பைப்போல் கொதித் தும், குன்றும் கல்லைவாரியும்-சிறுமலைகளையும் பெருமலைகளையும் வாரி யும், அதில்வீசி-அந்த யுத்தகளத்தில் எறிந்து, மிண்டுந்துங்கங்களினால்-மிகுந்த ஜெயமடைந்ததினால், தகர்ந்து அங்கங்கங்கு அரமார்பொடு-முறிந்து அங்கங்களில் பகுந்து உதைக்கும் மார்புடன், மின்சந்தம் சிந்தி-விளக்கமமைந்த சந்தனத்தையும் சிந்தி, நிசாசரர் வகைசேர-இராக் கதர்களுடைய வமிசங்கள்சேர்ந்து, அஞ்சமண்டன் தென்திசைநாடி-அழ கிய எமனிருக்கும்தென்திசைக்குப்போய், விழுந்து விழுந்து, அங்கும்-அவ்விடத்திலும், எமதூதர்கள் சென்று உந்து உந்து உக்து என்றிட எமபடர்களும்போய் தாக்கு தாக்கு தாக்கு என்றுசொல்ல, தசைநிணம் மூளை-சதை-நிணம், மூளை இவைகளை, சில கூளிகள் உண்டும் கண்டும் சிலகூளிகள் உண்டும் சில கூளிகள்கண்டும், டிண்டிண்டு என்றும் குதி போடவும் - சில கூளிகள் டிண்டிண்டு என்று தாண்டவமாடவும் உயர்ந்து - மேம்பட்டு, அம்புங்கொண்டு வெல்மாதவன் மருகோனே-பாணத்தைக்கொண்டு வென்ற விஷ்ணுமூர்த்தியின் மருமகனே, சங்கம் கஞ்சம் கயல்சூழ்தடம் எங்கெங்கும்-சங்குகள், தாமரைகள், கெண்டை மீன்கள் என்னும் இவைகள் நிறைந்திருக்கின்ற தடாகங்கள் எவ்விடங் களிலும், பொங்க - விளங்க, மகாபுனிதம் தங்கும்-மிகவும் பரிசுத்தம் பொருந்தின, செந்தியில் வாழ்வுஉடைய பெருமாளே - திருச்செந்திற் பதியில் வாழ்க்கையில் உயர்ந்த இளையபெருமாளே, தஞ்சம் தஞ்சம்-அடைக்கலம் அடைக்கலம்,(ஆகையால்)சிறியேன்மதி-சிறியவனுடைய புத்தியில், துரையே-தளேவனே, கொஞ்சம் கொஞ்சம் அருள்தந்து-

கொஞ்சங் கொஞ்சமாகத் திருவருளைக்கொடுத்து, என்றும் இன்பந் தரும் வீடுதருவாய்-எப்பொழுதும் சுகத்தைக் கொடுக்கின்ற மோட்சத்தைத் திருவருள் செய்வாய். (எ-று.)

பொது.

45. தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன—தனதான.

நெடிய வடகுவ டிடியவு மெழுகிரி
நெறநெ றெனநெரி யவுமுது பணபதி
நிபிட முடிகிழி யவுநில மதிரவும் விளையாடும்

நிகரில் கலபியு மரவுமிழ் துவசமும்
நினது கருணையு மறைதரு பெருமையும்
நிறமு மிளமையும் வளமையு மிருசர ணமுமீபே

முடியு மபிநய வனசரர் கொடியிடை
தளர வளர்வன மிர்கமத பரிமள
குமுள புளகித தனகிரி தழுவிய திரடோளும்

மொகமொ கெனமது கரமுரல் குரவணி
முருக னறுமுக னெனவரு வனபெயர்
முழுது மியல்கொடு பழுதற மொழிவது மொருநாளே

கொடிய படுகொலை நிசிசர ருரமொடு
குமுத மெனவிசை யுடனிசை பெறமிகு
குருதி நதிவிழ சதியொடு குதிகொள விதியோடக்

குமுற கடற்குடல் கிழிபட வடமர
மொளமொ ளெனவடி யொடலறி விழவுயிர்
குருகு பெரியவெள் வரைதொளை படவிடு சுடர்வேலா

ழுடையில் முனைமணி குளிசமு மிலகிட
கவள தவளசி சடகட கனகட
விபு மிரணிய தரணிபு முடையதொர் தனியானைக்

கிறைவ குருபர சரவண வெகுமுக
சுகுண புனிதைபும் வனிதைய ரறுவரு
மெமது மகனென வுமைதரு மிமையவர் பெருமாளே

(ப-ரை) நெடிய-நீண்ட, வடகுவடு இடியவும் - மேருமலையானது இடியவும், எழுகிரி நெறநெறெனன நெரியவும்-வளர்கின்றமலைகள் நெறு நெறென நெரியவும், முதுபணபதி-முதுமையான ஆதிசேஷனுடைய நிபிடமுடி-நெருக்கமான படமுடிகள், கிழியவும் - கிழிந்துவிடவும், நிலம் அதிரவும் விளையாடும்-பூமியானது அதிரவும் விளையாடுகின்ற, நிகரில் கலபியும்-ஒப்பில் மயிலும், அரவு உமிழ் துவசமும்-சர்ப்பத்தைச் சிந்துகின்ற கொடிகளும் நினது கருணையும்-உன்னுடைய கிருபையும், அறைதரு பெருமையும்-சொல்லுகின்ற பெருமையும், நிறமும் - வர்ணமும், இளமையும் இளப்பிராயமும், வளமையும்-வளப்பமும், இருசரணமும்-இரண்டு திருவடிகளும், நீபமுடியும் கடப்பமலர்மாலையை முடித்த முடியும், அபிநய-உடச்சிரிக்கின்ற, வனசரர் கொடியிடை-வேடப்பெண்ணான வள்ளிநாச்சியாருடைய இடையானது, தளர-தளர்ச்சியடையும்படி, வளர்-பெருக்கின்ற, வனம் - காட்டிலுள்ள, மிர்கமத பரிமள முகுள பனித - கஸ்தூரியின் மணம் வீசப்பூசிக்கின்ற, கரகிரி தழுவிய திரள்கொங்கைகளும்-ஸ்தனங்களாகிய மலைகளைத் தழுவின திரண்டபுஜங்களும் போக போகென மதகரம் முரல் - பொகபொக வென்று சத்தத்

துடன் வண்டுகள் மொய்க்கின்ற-குரவணிமுருகன்-குராமலர்மாலையை யணிந்த இளம்பிராய முள்ளவனும், அறுமுகன்-ஆறுமுகமுள்ளவனும், எனவரு-என்றுவருகின்ற, வனம்-அலகுபொருந்திய, பெயர்முழுதும் திருநாமங்களையெல்லாம், இயல்கொடு - இலட்சணங்களுடன், டமுதற மொழிவதும் ஒருநாளே - குற்றமறச்சொல்லுவதும் ஒருநாளேயாம் கொடியபடுகொலை நிசிசரர் உரமொடு-கொடுமையையுடைய படுகொலையைச் செய்கின்ற இராட்சதர்களுடைய பலமும், குமுதமென விசையுடன் இசைபெற-குமுதம் என்னும் சத்தமுண்டாக, மிகுகுருதி நதி விதசதியொடு குதிகொள்-மிகுந்த இரத்த ஆறுனது பலவித சத்தத்துடனும் இருக்க, விதியோட-சரீரம்விட்டு ஓடவும், குமிறுகடல் குடல்கிழிபட - சத்திக்கின்ற கடலினுடைய குடலானது கிழியவும், அடிமரம் டொளமொளென அடியொ டலறிவிழ-கொன்றமரமானது மொளமொளென அடியொ டலறிவிழ - கொன்றமரமானது மொளமொள என்கிற சத்தத்துடன் அடியோடு பெருப்பயத்துடன் விழவும், உயிர் குருகு பெரிய வெவ்வரைதொளைபடவும் - குறைந்த ஆயுளையுடையா பெரிய கொடியமலையானது தொளைபட்டுருவவும், விடுசுடர்வேலா விடப்பட்ட கிரணங்களையுடைய வேலாயுதத்தை யுடையவனே, இடையில்லுயாமல் மிகக்கூர்மையுடைய, குலிசமும் இலகிட வஜ்ஜிராயுதமும் விளங்க, கவளம்-கவளங்கொள்ளுகின்ற தவளம்-வெண்மையான, விகடம்-உன்மத்தங்கொண்ட, தடம்-விசாலமான, கனகடம்-மிகுந்த மதசலத்தைப்பொழிகின்ற, இபமும் யானையையும், இரணிய தரணியுமுடையதோர்-பொன்னுலகத்தையு முடையஒப்பற்ற தனியானைக்கிறைவ-தெய்வயானைக்குத் தலைவனே, குருபர பரனுக்கு ஆசாரியனே, சரவண - சரவணபவனே வெகுமுக ககன புனிதையும்-பல துறைகளையுடைய ஆகாய கங்கையும் வனிதையர் அறுவரும்-அறுமீன் வடிவினையுடைய கார்த்திகைப் பெண்கள் அறுவரும், எமது மகவென-எம்முடைய பிள்ளையென்று சொல்லும்

ப்டி, உமைதரும்-உமாதேவியானவள் பெற்றருளிய, இமையவர் பெருமாளே-தேவர்களுக்குத் தலைவனான இளைய பெருமாளே. (எ-று.)

திருத்தணிகை.

16. தன்ன தந்த தத்த தனன தந்த தத்த
தன்ன தந்த தத்த—தனதான.

எனைய டைந்த குட்ட வினைமி குந்த பித்த
மெனமு ழங்கு வெப்பு வலிபேசா
திகலி நின்ற லைக்கு முயல கன்கு லைப்பொ
டிரும லின்றி ரைக்கு மிவைமேவா
மனைகள் பெண்டிர் மக்கள் தமைம றந்து சுற்ற
மதிம யங்கி விட்டு மடியாதே
மருவி வந்தெ னக்கு மரக தஞ்சி றக்கு
மயிலில் வந்து முத்தி தரவேணும்
நினைவ ணங்கு பத்த ரனைவ ருந்த ழைக்க
நினைவில் வந்து தித்த கதிர்வேலா
நிலைபெ றுந்தி ருத்த ணியில்வி ளங்கு சித்தர்
நெடிய குன்றி னிற்கு முருகோனே
இலைவ னங்க ளுற்ற புனவி ளங்கு றத்தி
செயல றிந்த ணைத்த மணிமார்பா
இசைமு கன்றி கைக்க வசுர ரன்ற டைத்த
சிறைதி றந்து விட்ட பெருமாளே

(ப-ரை) நினைவணங்கு பத்தர் அனைவருந்தழைக்க - உன்னை வணங்குகின்ற எல்லா அன்பர்களுந் தழைக்கும்படி நினைவில்வந்து உதித்த கதிர்வேலா-அவர்களுடைய கருத்தில்வந்து தோன்றின கிரணங்களையுடைய வேலாயுதனே, நிலைபெறுந் திருத்தணியில் - அழியாதிருக்கும் திருத்தணிகைமலையில், விளங்கு-விளங்குகின்ற, சித்தர்-சித்துபுருஷர்கள் வாழ்கின்ற, நெடிய குன்றில்நிற்கும் முருகோனே-நெடிய சிறுகுன்றில் எழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே, தினைவணங்கல் உற்ற-தினைப்பயிரானது கதிரப்பொறையினால் தலைவளைந்த புனம்-தினைப்புனத்தில், இளங்குறத்தி செயல் அறிந்து-இளமையான குறப்பெண்ணான வள்ளிநாய்ச்சியாருடைய செய்கையையுணர்ந்து, அணைத்த மணிமார்பா - அணைத்த அழகிய மார்பையுடையவனே, திசைமுதன் திகைக்க-பிரமதேவனானவன் மயங்கும்படி, அசுரர் அன்று அடைத்த பூர்வத்தில் இராக்கதர்கள் அடைத்த, சிறைதிறந்துவிட்ட பெருமானே-சிறைச்சாலையைத்திறந்து தேவர்களை விடுதலைசெய்தபெருமானே, எனையடைந்த-எனக்குவந்திருக்கின்ற, குட்டவினைமிகுந்தபித்தம்எரிவழங்கு வெப்பு வலிபேசாது இகலிநின்று அலைக்கும் முயலகன் குலைப்பொடு இருமல்நின்று இரைக்கும் இவை-குட்டம், பித்தம், எரிச்சலைக்கொடுக்கின்ற வெப்பவினை, வலி, பேசவொட்டாமலிருக்கின்ற முயலகநோய்-குலைப்பிருமல் இரைப்பு இவைகள், மேவா-இனிவராமலும், மனைகள், பெண்டீர்மக்கள் தமைமறந்து சுற்றிமதிமயங்கிவிட்டு மடியாது-வீடுகள், மனைவிகள், பிள்ளைகள் ஆகிய இவைகளைமறந்து சுற்ற மதிமயங்கிச் சாயாமலும், மருவிவந்து எனக்கு-எனக்குக் காட்சிகொடுத்து மரகதஞ் சிறக்கும் மயிலில்வந்து முத்திதரவேணும் மரகதத்தைவிடச் சிறந்திருக்கும் மயில்வாகனத்தின்மேல் ஆரோகணித்துவந்து எனக்கு மோட்சங் கொடுத்தருளவேண்டும், (எ-று.)

திருச்செந்தில்.

47. தந்தன தந்தனத் தந்தன தந்தனத்
தந்தன தந்தனத்—தனதான.

பங்கமே யும்பிறம் பந்தகா ரந்தனிற்
பந்தபா சந்தனிற் றடுமாறிப்
பஞ்சபாண ம்படப் புண்படா வஞ்சகப்
பண்பிலா டம்பரப் பொதுமாதர்
தங்களா லிங்கனக் கொங்கையா கம்படச்
சங்கைமால் கொண்டிளைத் தயராதே
தண்டைசூழ் கிங்கிணிப் புண்டரீ கந்தனைத்
தந்துநீ யன்புவைத் தருள்வாயே
அங்கைவேல் கொண்டரக் கன்ப்ரதா பங்கெடுத்
தண்டவே தண்டமுட் படவேதா
னஞ்சவே திண்டிறற் கொண்டலா கண்டலற்
கண்டலோ கங்கொடுத் தருள்வோனே
திங்களார் கொன்றைமத் தந்துழாய் துன்றுபொற்
செஞ்சடா சங்கரற் குறுதோகை
சிந்தையே தென்றிசைத் தென்றல்வீ சும்பொழிற்
செந்தில்வாழ் செந்தமிழ்ப் பெருமாளே.

(ப-ரை) அங்கைவேல்கொண்டு அகங்கையின் கண் வேலாயுதத்தைக்கொண்டு, அரக்கன் ப்ரதாபங்கெடுத்து-சூரபத்மனுடைய வெற்றியையழித்து, அண்டவேதண்ட முட்படவே-அண்டமளாவிய மலைய

னது உள்ளாக, அஞ்சவே திண்திறல்கொண்டல்-யாவரும் பயப்பட திண்ணிய பலம்பொருந்திய மேகங்களுக்குத் தலைவனான, ஆகண்டலற்கு-இந்திரனுக்கு, அண்டலோகங்கொடுத்து அருள்வோனே-தேவலோகத்தைக் கொடுத்தருளினவனே, திங்கள் ஆர் கொன்றை மத்தம் துழாய்-சந்திரன், ஆத்தி, கொன்றைமலர், ஊமத்தை, துழாய்இவைகள், துன்று நெருங்கின. செஞ்சடாசங்கரற்கு - செவந்தசடா பாரத்தையுடைய பரமேசுரனுக்கு, உறுதோகை-பொருந்தின தோகையான பரமேசுரியின், சிந்தையே-சிந்தையிலிருப்பவனே, தென்திசை தென்றல்வீசும் தென்திசையிலிருந்து தென்றற்காற்றானது வீசுகின்ற, பொழில்-சோலை சூழ்ந்த, செந்தில்வாழ் - திருச்செந்திற்பதியில் வாழ்கின்ற, செந்தமிழ் பெருமாளே-செந்தமிழுக்குரிய இளையபெருமாளே, பங்கம் மேவும்-குழப்பம்பொருந்தின பிறப்பு அந்தகாரந்தனில்-பிறவி என்னும் இருட்டிலும் பந்தபாசந்தனில்-பந்தப்படுகின்ற பாசத்திலும், தடுமாறி-அகப்பட்டு நிலைகெட்டு, பஞ்சபாணம் படபுண்பா-மன்மதனுடைய ஐந்து புஷ்பபாணங்கள்பட நைந்து, வஞ்சகம்-கபடத்தையுடைய பண்பில்-குணத்தினாலும் ஆடம்பரம் பொதுமாதர் தங்கள்-ஆடம்பரஞ்செய்கின்ற பொதுப்பெண்களுடைய, ஆலிங்கனம் கொங்கை - ஆலிங்கனஞ்செய்கின்ற ஸ்தனங்கள், ஆகம்பட - சரீரத்தில்பட சங்கையால் கொண்டு - மிக்க மயக்கத்தைக் கொண்டு, இளைத்து அயராது-இளைப்புற்று அயராமல், தண்டைசூழ்கிங்கிணி - தண்டைசூழ்ந்திருக்கின்ற கிங்கிணி தரித்த, புண்டரீகந்தனை தந்து-புண்டரீகம்போலும் திருவடிகளைக்கொடுத்து நீ அன்புவைத்து-நீபிரியம்வைத்து, அருள்வாய்-திருவருள்செய்வாய். (எ-று)

திருப்பழநிமலை.

48. தனனதாத் தத்ததந்த தனனதாத் தத்ததந்த
தனனதாத் தத்ததந்த—தனதான

அறிவிலாப் பித்தருன்ற
னடிதொழாக் கெட்டவஞ்ச
ரசடர்பேய்க் கத்தர்நன்றி யறியாத

வவலர்மேற் சொற்கள்கொண்டு
கவிசளாக் கிப்புகழ்ந்து
வவரைவாழ்த் தித்திரிந்து பொருள்தேடிச்

சிறிதுகூட்டிக்கொணர்ந்து
தெருவுலா வித்திருந்து
தெரிவைமார்க்குச்சொரிந்து வவமேயான்

றிரியுமார்க் கத்துசிந்தை
யதனைமாற் றிச்சிறந்த
தெளிவுமோட் சத்தையென்று பெறுவேனோ

உரையுமாற் றற்றசெம்பொ
னிடமும்வேற் றுப்பிரிந்து
வருளின்மேற் கச்சிவந்த உமையாடன்

னிருளைநீக்கித்தவஞ்செய்
தருளைக்நோக் கிக்குழைந்த
விறைவர்கேட் கத்ததஞ்சொ லுடையோனே

குறவர்கூட் டத்திலன்று
கிழவனுய்ப் புக்குநின்று
குருவிபோட் டித்திரிந்த குறமானைக்

குணமதாக் கிச்சிறந்த
வழகுகாட் டிப்புணர்ந்த
குமரகோட் டத்தமர்ந்த பெருமாளே.

(ப-ரை-) இறையும் - நிலைக்கின்ற, மாற்றுஉள்ள - மாற்றுள்ள செம்பொன் இடமும்-ஆடகப் பொன்மேனியரான பரமேசுரனுடைய இடதுபாகத்தையும், வேறுபிரிந்து-வேறாகப்பிரிந்து, அருளின்மேல், திருவருளினால், கச்சிவந்த உமையாள்தன் - காஞ்சிபுரத்தில்வந்த உமாதேவியினுடைய, இருளைநீக்கி-மாயையையொழித்து, தவஞ்செய்து-தவத்தை செய்து, அருளைநோக்கி குழைந்த - திருவருளைப்பார்த்துச் சரீரம்குழைந்த இறைவர்கேட்க-பரமேசுரனானவன் கேட்பதற்கு, தரும்சொல்உடையோனே-தருந்த உபதேசமொழியையுடையவனே, குறவர்கூட்டத்தில் வேடர்களுடைய கூட்டத்திலே, அன்று-பூர்வத்தில், கிழவனாய் புக்கு நின்று-கிழவனாகக்கூடியிருந்து, குருவியோட்டி திரிந்த குறமானை-குருவிகளைத்துரத்திக்கொண்டு திரிந்திருந்த வள்ளிநாய்ச்சியாரை, குணமதாக்கி-கைவசப்படுத்தி, சிறந்த அழகுகாட்டி புணர்ந்த-மிகுந்த அழகை வெளிப்படுத்திக் கலந்த, குமரகோட்டத்துஅமர்ந்த பெருமாளே குமரகோட்டத்தில் எழுந்தருளியிருக்கின்ற இளையபெருமாளே, அறிவிலா பித்தர்-அறிவில்லாதபித்தர்களும், உன்றன்அடிதொழாத கெட்டவஞ்சர்-உன்னுடைய திருவடிகளைவணங்காத கொடியவஞ்சர்களும், பேய்க்கத்தர்-பேயர்களும், நன்றியறியாத அவலர் செயநன்றியை மறக்கும் வீணர்களும் ஆகிய, மேல்-இவர்கள்மேல், சொற்கள்கொண்டு - நால்வகைச் சொற்களையுங்கொண்டு, கவிகளாக்கிப் புகழ்ந்து-கவியாலேசெய்து புகழ்ந்து, வாழ்த்தித்திரிந்து பொருள்தேடி-அவர்களை ஆசீர்வதித்துத்திரிந்து செல்வப்பொருளைத்தேடி, சிறிது கூட்டி கொணர்ந்து-கொஞ்சஞ் சேர்த்துக்கொண்டு வந்து, தெருவுலாத்தி திரிந்து - வீதிகளில் உலாவி திரிந்து தெரிவைமார்க்கு சொரிந்து - அப்பொருள்களைப் பெண்களுக்குத்

கொடுத்து அவமே-வீணாக, யான் திரியும்மார்க்கத்து-நான் திரிகின்றவழி யிலிருந்தும், சிந்தைபதனைமாற்றி - மனத்தைதிருப்பி, சிந்தை தெளிவு மோட்சத்தை என்று பெறுவேனோ - உயர்ந்த ஞானமோட்சத்தைஎப் பொழுது அடைவேனோ? (எ-று)

சோலைமலை.

49. தனனதந்த தத்தான தனனதந்த தத்தான
தனனதந்த தத்தான—தனதான.

களவுகொண்டு ளைக்காசி னளவறிந்து கர்ப்பூர
களபதுங்க வித்தார முலைமீதே
கலவியின்பம் விற்பார்க ளுலையவங்க ணைப்பாடுங்
கவிதெரிந்து கற்பார்கள் சிலர்தாமின்
றுளநெகிழ்ந்த வத்தான வுரைபரிந்து சத்தான
வுணர்புணர்ந்து ரித்தான மணநாறு
முபயபங்க யத்தாளி லபயமென்று னைப்பாடு
முறைதெரிந்து கற்றோதி விழிவாடேமோ
அளவில்வன்க விச்சேனை பரவநின்ற சுக்ரீவ
வரசுடன்க டற்றாவி யெழுவேபோ
யடலிலங்கை சுட்டாட நிசிசரன்ற சுக்ரீவ
னற்பெவாரம்பு தொட்டார்த மருகோனே
வளருமந்த ரச்சோலை மலைபுகந்த முற்பாலை
வனவர்கொம்பி னைத்தேடி யொருவேட

வடிவுகொண்டு பித்தாகி யுருகிவெந்த ழற்கானி
மறவர்குன்றி னிற்போன பெருமாளே.

(ப-ரை.) அளவுஇல்-கணக்கில்லாத, வன்கவிசேனை-வலிய குரங்குச்சேனைகள், பரவநின்ற-சூழவிருந்த, சுக்ரீவ அரசுடன் - சுக்ரீவனென்னும் அரசனுடன், கடல தூளியெழ - சமுத்திரமானது தூளிபட, போய் - போய், அடல் இலங்கை சுட்டு ஆட-பலத்த இலங்கையை எரித்து ஆட, நிசிசரன் தசக்ரீவன் அற ஒரு அம்புதொட்டார் தம்மருகோனே-இராக்கதனான பத்துத் தலைகளையுடைய ராவணன்மடிய ஒருபாணப்பிரயோகஞ்செய்த விஷ்ணுமூர்த்தியின் மருமகனே, வளரும்-வளர்கின்ற மந்தரஞ்சோலைமலை-மந்தரமாலை, சோலைமலை இவைகளை, உகந்த-விரும்பின, முற்பாலை - முன்னேபாலை நிலத்தில், வனவர்கொடிபினைதேடி-வேடர்கள் பெண்ணாகிய வள்ளிநாய்ச்சியாரைத்தேடி, ஒரு வேடவடிவுகொண்டு-ஒப்பற்றவேடனைப் போல் ரூபங்கொண்டு, பித்தாகியுருகி-பித்தாகியுருகி-பித்தங்கொண்டு இளகி, வெந்தழல்கானில்-வெவ்விய தழலைக்காட்டும காட்டில் மறவர் குன்றினில் போன பெருமாளே - வேடர்கள் மலையில்போன இளையபெருமாளே, களவுகொண்டு களவுநூலையறிந்து கை காசின் அளவுஅறிந்து-கையிலிருக்கும் பணத்தினுடைய அளவை யுணர்ந்து, கர்ப்பூரகளபம் - பச்சைக்கர்ப்பூரங்கலந்த கலவைச்சந்தனம் பூசின, துங்கம்-உயர்ந்த, வித்தாரமுலைமீது-வித்தாரமான முலையின்மேல் கலவியின்பம் விற்பார்கள் - சம்போகத்தின் சுகத்தைவிற்பவர்களான பெண்களுடைய, அவயவங்களைப் பாடும்-அங்கங்களைக்குறித்துப் பாடுகின்ற, கவிதெரிந்து-செய்யுட்களை உணர்ந்து, கற்பார்கள் சிலர்தாம்-கற்பவர்களாகிய சிலபேர், இன்று - இப்பொழுது, உளமெகிழ்ந்த - மனமிளகின, வித்தான-வல்லவரான, உரைபிறழ்ந்து - சொல்தடுமாறி, சித்தான-ஞானமயமான, உனை உணர்ந்து-உன்னையறிந்து, உச்சாரமுமாறும் பொருந்தின வாசனைவீச, உபயபங்கயத்தாளில்-இரண்டு திருவடித்தாம

ரைகளில், அபயமென்று - அடைக்கலமென்றுசொல்லி, உனைப்பாடும் முறைதெரிந்து கற்று - உன்னைப்பாடுகின்ற முறைமையையுணர்ந்து அதைக்கற்று-ஓதில் இழிவாமோ-பாடினால் இழிவாகுமோ? ஆகாது.

பொது.

50. தத்த தனனதன தான தானதன
தத்த தனனதன தான தானதன
தத்த தனனதன தான தானதன—தனதான.

எத்தி யிருகுழையை மோதி மீளமதி
முட்டி யிடறிபமு தூறுபோ லமுதி
லெட்டி மகரமென வூனே வேன்முனையை எதிர்சீறி

எத்தி சையிலும்வரு காம ராசன்மிக
வொத்தி யசுரர்களை யாள வீசிபட
லெற்று மினைமரு ருயிர் கோலு நீலவிழி மடமாதர்

வித்தை தனிலுருகி யாசை யாகியவர்
கைக்குண் மருவுபொருந்க ளாகிவாமலர்
லெத்தை தனிலுருகி மோக மாகிவிழ வதன்மேலே

வெச்ச மிலைகடவு மேகு மேகுமினி
மற்ற வினையவழுயு மாத ரேயெனமுன்
விட்ட படிநகட நேச வாசைகெட வருள்வாயே

ஒத்தி விரிகமழ வானை தாவுபுன
லத்தி நகரமா சாளு வாளிருளை
யொக்கு நினைவுமுனி லாமல் பாருபல நிலைகூர

வுற்ற தருமனடல் வீமன் வேல்விசயன்
வெற்றி நகுலசக தேவர் தேர்தனிலு
மொத்து முடுகிவிடு பாகன் வாளமரி லசுரேசன்,

பத்து முடிகடுக தாக வாகுவிரு
பத்துமொருகணையில் வீழ நேரவுணர்
பட்டு மடியவமர் மோது காளமுகில் மருகோனே.

பச்சை மயிலில்வரு வீர வேன்முருக
துட்டாநிருதர்குல சாலவானவர்கள்
பத்தி யுடனடியில் வீழ வாழ்வுதவு பெருமாளே..

(ப-ரை) ஒத்தி-பொருத்தி விரி-தழைக்கின்ற, கமுகு-பாக்கு மரத்தில், வாளைதாவுபுனல் அத்திகரம் அரசாளுவான்-வாளைமீன்கள் மோதுகின்ற நீர்வளம்பொருந்திய அத்திகரத்தில் அரசாள்பவனுடைய, இருளை ஒக்கு நினைவுமுன் நில்லாமல்-அந்தகாரத்தை யொப்பான நினைவுமுன்வராமல், பாருபல நிலைகூர - பலவகைப்பட, உற்ற-வந்த, தருமன் அடல் வீமன் வேல்விசயன் வெற்றி நகுல சகாதேவர்-தருமராசன் பலமுள்ளவீமன், வில்லையுடைய அர்ச்சுனன்,ஜெயங்கொள்ளும்நகுலன், சகாதேவன் இவர்களுடைய, தேர்தனிலும் ஒத்துமுடுகிவிடுபாகன்-தேர்களில்வந்து முடுகி கடாவிய பாகனும், வாள் அமரில்-பெரிய சண்டையில், அசுரேசன்பத்துமுடிகடுகதாக - ராவணனுடையபத்துத் தலைகளும் கடுகாவுள்ளனவாகவும், வாகு இருபதும் ஒருகணையில்வீழ - புஜங்கள் இருபதும் ஒரேபாணத்தினுல் விழவும், நேரவுணர்பட்டுமடிய - நேர்ந்த இராக்கதர்கள் இறந்து படவும், அமர்மோது காளமுகில் மருகோனே சண்டைசெய்த முகில் வண்ணனுன விஷ்ணுவின் மருமகனே, பச்சை மயிலில் வருவீர - பச்சைநிறமுள்ளமயில்வாகனத்தில் ஆரோகணித்து

வருகின்றவீரனே, வேல்முருக-வேலாயுதத்தையுடைய முருகனே, துட்டநிருதர் குலகால-துட்டத்தனமுள்ள ராட்சதர்களுடைய குலத்திற்கு எமனே, வானவர்கள் பத்தியுடன் அடியில்வீழ வாழ்வுதவு பெருமாளே- தேவர்கள் அன்புடன் திருவடியில் பணிய அவர்களுக்கு வாழ்க்கையைக் கொடுக்கின்ற இளையபெருமாளே, எத்தியிரு குழைபைமோதி-தாண்டி யிரண்டுகுழைகளேயிம்மோதி, மதிமுட்டி யிடறிய முதூறுபோல மதியைமுட்டியிடறி அமிர்த ஊற்றைம்போல, முகில்வட்டி-மேகங்களை எட்டி, மகரமென் வாளை வேல்முனையை எதிர் சீறி-மகரமென்கிற வாளையானது வேலின்முனையை எதிரே சீறி, எத்திசையினும் வருகாமராசன்-எந்தத்திசையிலும் வருகின்ற மன்மதனுடையன், மிகவொத்தியசுரர்களை வீசி, அடல் எற்று இளைஞர்உயிர் சோரியிலும் - பலம்பொருந்தியசிறுவர்களுடைய உயிரைக்கொள்ளும், நீலவிழி மடமாதர்-கரியகண்களேயுடைய பெண்களது, வித்தைதனில் உருகி - மாலில் மனமுருகி, ஆசையாகி அவர்மேல் ஆசையாய், அவர்கைக்குள் மருவும்பொருளாகவாகி - அவர்களுடையகையிலிருக்கும் பொருளாகி, மலமெத்தை தனில் உருகி-புஷ்பசயத்தில்உருகி, மோகமாகி-மோகப்பட்டு, விழ-விழ, அதன்மேல்-பிறகு, எச்சமில்லை-சக்தியில்லை, ஆகையால்நடவும் ஏதும் ஏகும்--நடந்துபோங்கள், இனி மற்றயவனை யழைப்பும் மாதரோபென - பெண்களே இனி வேறொருவனை யழைப்புங்களென்று, முன்விட்டபடிறிகள் - தம்நேசவாசைகெட முன்னாளனுப்பின வஞ்சகிகளுடைய நேசமான அன்பு கெடும்படி, அருள்வாய்-திருவருள் செய்வாய். (எ-று.)

பொது

51. *தனத்தனன தனத்தனன*
தனத்தனன தனத்தனன
தனத்தனன தனத்தனன—தனதான.

குறிப்பறிய குழக்குமதி
நுதற்புருவ விலக்குமிரு
குழைக்குவடு விழிக்குமெழு குழலாலும்
கொடிப்பவள விதழ்க்குமிரு
சுடர்த்தரள நகைக்குமமு
தினுக்குமிசை யுறக்குழவு குறியாலும்
அறப்பெரிய தனத்துமன
நடைக்குமணி யிடைக்குமல
ரடிக்குமிள நகைக்குமுள மயராதே
அகத்தியனொ டுரைத்தபொரு
ளளித்தருளி யரிப்பிரம
ரளப்பரிய பதக்கமல மருள்வயே
கறுத்தடரு மரககரணி
கருக்குலைய நெருக்கிபொரு
கனத்திலவர் நிணக்குடர்கள் கழிவேலா
கறுத்தருளி யலக்கணுறு
சுரர்க்கவர்கள் பதிக்குரிமை
யளித்திடரை யறுத்தருளு மயில்வீர

செறுத்துவரு கரித்திரள்கள்
திடுக்கிடமன் மருப்பையரி
சினத்தினொடு பறித்தமர்செய் [illegible] பெருகானிற்

செலக்கருதி யறக்கொடிய
சிலைக்குறவர் கொடித்தனது
சிறுத்தனமு முறத்தழுவு [illegible] பெருமாளே.

(ப-ரை.) கறுத்து அடரும் அரக்கர் அணிகருதுலைபநெருர் [illegible] ாபித்து நெருங்கின இராக்கதர்களுடைய வரிசையான கருவா[illegible]ம் படிமோதி ஒருகணத்தில் அவர்கள் சிரைக் குடர்கள் - ஒருக[illegible] திற்குவ அவர்களுடைய சி[illegible]ம் பொருந்தின குடர்களை, க[illegible]ால் சுறுத்தருளி-இரணம்பொருந்திய வேலாயுதத்தினால் பிடுங்கி, அல சண் உறு சுரர்க்கு-வருந்துகின்ற தேவர்களுக்கு, அவர்கள் பதிக்கு உரிமையளித்து-அவர்களு[illegible] தேசங்களுக்குச் செல்லும் கடமையைக்கொடுத்து, இடரையறுத்த நளம் மயில்வீர-துன்பத்தைபொழித்தருளிய மயில்வாகனத்தையுடைய வீரனே! செறுத்து வருகரித்திரள்கள் திடுக்கிட-கோபித்து வருகின்றயானைக் கூட்டங்கள் திடுக்கிடும்படி, மன்மருப்பை அரிசினத்தினொடுபறித்து அமர்செய் பெருகானில் - நிலைத்தகொம்புகளை சிங்கமானது கோபத்துடன் பறித்துச்சண்டைசெய்கின்ற பெரிய காட்டில், செலக்கருதிபறக்கொடியசிலைக்குறவர்கொடி-போவதற்கு நினைத்துகொடுமையானவில்லையுடைய குறவர்களதுகொடியானவள்ளி நாச்சியார், தனது சிறுத்தனமும் உறத்தழுவு பெருமாளே - தன்னுடைய இளமுலைபொருந்தத்தழுவுகின்ற பெருமாளே! குறுப்பறிய குழற்கும் நுதல்புருவவில்லுக்கும் இருகுழைக்கும் வடுவிழிக்கும் எழகுழலாலும்-கூந்தல், சந்திரன் போன்றநெற்றி, வில்போன்றபுருவம், இரண்டுகுழைகள், மாம்பிஞ்சுபோன்ற கண்கள் எழுந்தகுழல்கள் ஆகிய இவைகள

லும், கொடிபவள இதழ்க்கும் இருசுடர்தரள நகைக்கும் அமுதினுக்கும் மிகவுறத்தழுவு குறியாலும்-கொடிப்பவளம்போன்ற இதழ் இரண்டுசுடரைப்போன்றதும் முத்துப்போன்றதுமான பற்கள், அமிர்தம் தழுவின குறி என்னும் இவைகளாலும், அறப்பெரியதனத்தும் அன்னநடைக்கும் மின்னின் இடைக்கும் மலரடிக்கும் இளநகைக்கும்-மிகவும் பெரிய ஸ்தனங்கள், அன்னம்போன்ற நடை, மின்னலைப் போன்ற இடை, தாமரைபோன்ற திருவடி இளமையானசிரிப்பு என்னும் இவைகளாலும் அயராது-வருந்தாமல், அகத்தியனொடு உரைத்தபொருள் அளிதருளி-அகத்தியமுனிவருக்கு உபதேசஞ்செய்தபொருளை எனக்குத்திருவாய் மலர்ந்தருளிச்செய்து, அரிபிரமர்களால் உணரப்படாததிருவடிகளை அடியேனுக்குத்திருவருள் செய்வாய். (எ-று.)

வேளூர்

52. தனந்த தத்தன தானன தானன
தனந்த தத்தன தானன தானன
தனந்த தத்தன தானன தானன—தந்தான.

நிறைந்த துப்பிதழ் தேனூறல் நேரென
மறந்த ரித்தக ளாலால நேரென
நெடுஞ்சுரி க்குழல் சீமுத நேரென விஞ்சிமேலே
நெருங்கு பொற்றன மாமேரு நேரென
மருங்கு னிட்சள வாகாச நேரென
நிதம்ப நற்பணி தானது மேயென வெந்தநாளும்
குறைந்த புத்தியில் வாதாடி யாதர
வழிந்து மெத்தைமின் மேல்வீழ மால்கொடு
குமண்டை யிட்டடை சோர்வேளை யாகமு லைந்துசிவன்

குழைக்கி ளைப்புற மாமயை வாழ்வருள்
மிடந்தை யர்க்கொரு கோமள மாகிய
கொடுங்க யத்திடை மூழ்காம லேபத மென்றுசேர்வன்
மறைந்த சுக்ரிபர் போராட வெயொளி
யிருந்து நற்றய வாய்மீள வேயவன்
மனங்க ளித்திட மாமேரு நேரொறு நெஞ்சவாலி
மதஞ்செ குத்திட வீருண தோர்கணை
வளைந்த விற்சர மீதேவ வானரம்
வளைந்து சுற்றிறு மேயோடி யாடிவ ணங்கிமேவ
அறந்த ழைந்தந மாதொடு மாகடல்
வரம்ப யடைத்ததின் மேலேறி ராவண
னாவன் குலைக்கெதிர் போரொரு நாரணன் மைத்துனன
வணங்கக் கைத்தொழ வேளைக லாமயில்
விளங்க தொப்பதி வேலாயு தாவழ
கவிநத பொற்பெரு வேளூரின் மேவிய தம்பிரானே.

(ப-உ.) மறைந்த சுக்ரிபர் போராடவே ஒளியிருந்து நற்றயவாய் மீள-மறைந்த சுக்ரீவனுக்காக போராடவும் அவன் தயவைக்கொண்டு மீளவும். அவன் மனங்களித்திட மாமேரு நேரொறும் நெஞ்சவாலிமதஞ் செகுத்திட-அவனுடைய மனஞ் சந்தோஷிக்கவும் மகத்தான மேருமலையைப் போலும் நெஞ்சுவலிமையைப் பெற்ற வாலியின் கர்வமானது நீங்க, வீருணதோர் கணைவளைந்த விற்சரமீதேவ- வெற்றிபெற்றதொருபாணத்தை வளைந்தவில்லில் பிரயோகித்தவர், வானரம் வளைந்து சற்றிறுமே யோடி யாடிவணங்கிமேவ-குரங்குகள் எல்லாம் நாலாபக்கமுஞ் சுற்றிச் சுற்றிப் பார்த்துத்திரும்பியாடவும், அறந்தழைத்து யாதொரு மாகடல்வரம்படை

த்ததின்மேலேறி ராவணன் அரன்குலைத்து எதிர்போரொடு நாரணன் மைந்தனான அநங்கன்மைத்துனவேளே - தர்மஞ்செழித்த அனுமானுடன்கூடி சமுத்திரத்தை யடைந்து அதின்வழியாகச்சென்றுராவணனுடைய கோட்டையையழித்து எதிர்த்துச்சண்டைசெய்த விஷ்ணுவின் புத்திரனான மன்மதனுடைய மைத்துனவேளே! கலாமயில்விளங்கு செப்பதிவேலாயுதா-பீலியையுடைய மயில்வாகனத்தில் விளங்குகின்ற திருச்செந்திற் பதியிலுள்ள வேலாயுதனே! அழகணிந்த பொற்பெருவேளூரில்மேவிய தம்பிரானே-அழகைப்பெற்ற பொன்போலும் புள்ளிருக்கும் வேளூரில் எழுந்தருளியிருக்கின்ற தம்பிரானே! நிறைந்ததுப்பிதழ்தேனூறல் நேரென-மறந்தரித்த கனாலால நேரென - நிறைந்தபவளம் போலும் இதழ் தேனூறலுக் கொப்பெனவும், வஞ்சகம்பொருந்தின கண் ஆலகாலவிஷத்தை யொப்பாகவும், நெடுஞ்சுரிக்குழல் சீமூதநேரென-நீண்டசுரிந்தகூந்தல்சீமூதம் போலவும், விஞ்சிமேலே நெருங்கு பொன்றனம் மாமேருநேரென - விம்மிமேலே கிளம்பி நெருங்கின்றன பொன்போலு ஸ்தனங்கள் மகத்தாகிய மேருமலைக்கு ஒப்பாகவும், மருங்குல்சிட்டுள வாகாசநேரென - மருங்குலானது பரிசுத்த ஆகாசத்தைப் போலவும், நிதம்பம் நற்பணிதானுநேயென - நிதம்பமானது பாம்பின் படத்திற்கொப்பாகு என்றும், எந்நாளும் குறைந்த புத்தியில்வாதாடி-எக்காலமும் புத்தியீனத்தினால் வாதுசெய்து, ஏதாவழிந்து- ஆசைகெட்டு, மெத்தையின்மேல் வீழ மெத்தையின்மேல்விழ, மால் கொடுகுமண்டையிட்டுடைசோர்வேளை - மயக்கமடைந்து குமண்டையிட்டுவஸ்திரம் சோருகின்றவேளையில், ஆகா உலைந்து சீவன் குறைந்து இளைப்புற-சரீரம்கெட்டு சீவன் குறைந்து இளைப்பாக, மாமாய்வாழ்வருள் மடந்தையர்க்கு ஒரு மூகாளமாகிய- பெரிமாய்கையைக்கொடுக்கின்றபெண்களுக்கு ஒருகோமளமான, கொங்கசத்திடை மூழ்காமலேபதம் என்றுசேர்வன் கொடியகபத்தினிடத்தில் மூழ்காமலே உன்னுடைய திருவடிகளை என்றைக்கு அடைவேன். (எ-று.)

திருவருணை.

53. தான தத்த தந்த தானதத்த தந்த
தான தத்த தந்த—தனதான.

தோத கப்பெ ரும்ப யோத ரத்தி யங்கு
தோகை யர்க்கு நெஞ்ச மழியாதே

சூலெவப்ப டர்ந்த வாத பித்த மென்று
சூழ்பி ணிக்கு ணங்க ளணுகாது

யாத கச்ச மன்றன் மேதி யிற்பு குந்து
பாசம் விட்டெ றிந்து பிடியாதே

பாவ லர்க்கி ரங்கி நாவி னுக்கி சைந்த
பாடன் மிக்க செஞ்சொ லரவேனும்

வேத மிக்க விந்து நாத மெய்க்க டம்ப
வீர பத்ர கந்த முருகோனே

மேரு வைப்பி ளந்து சூர னைக்க டிந்து
வலை யிற்று ளைந்த கதிர்வேலா

கோதை சொற்கு றிஞ்சி மாது கச்ச ணிந்த
கோம ளக்கு ரும்பை புணர்வோனே

கோல முற்று யர்ந்த சோண வெற்பி லங்கு
கோபு ரத்த மர்ந்த பெருமாளே

(ப-ரை) வேதமிக்க விந்துநாத மெய்க்கடம்ப வீரபத்ர கந்த முருகோனே-வேதங்களிற் சொல்லப்பட்ட மிகுந்தவிந்து நாதங்களையும் உண்மையான கடப்பமலர் மாலையையும் உடையவனே! வீரபத்திரனே! ஸ்கந்தனே! முருகோனே, மேருவைப்பிளந்து சூரனைக்கடிந்து வேலையிற்றுளைந்த கதிர்வேலா-மேருமலையைப்பிளந்துசூரனைக்கடிந்த சமுத்திரத்தில் படிந்த கிரணங்களையுடைய வேலாயுதனே! கோதைசொற் குறிஞ்சிமா

தகச்சணிந்த கோமளக் குரும்பை புணர்வோனே - கோதையும்பொன் போலும் குறிஞ்சிநிலத்துமாதும், வாரிறுக்கிய கோமளமுமான வள்ளிநா ய்ச்சியாரைப் புணர்பவனே ! கோலமுற்றுயர்ந்த சோணவெற்பிலங்கு கோபுரத்தமர்ந்த பெருமாளே - அழகைப்பெற்று உயர்ந்த- சோணசலத் தில் விளங்குகின்ற கோபுரத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற பெருமா ளே! தோதகப்பெரும் பயோதரத்து இயங்கு தோகையாக்கு நெஞ்சம் அழியாது-வஞ்சகத்தையுடையபெரியகூந்தலையுள்ள பெண்களுக்கு மன மழியாமலும், நீலவெப்படர்ந்த வாதபித்தமென்று சூழ்பிணிக்குணங் கள் அணுகாது-சூலையும் உஷ்ணசம்பந்தமானவாதம்பித்தம், என்றுசொ ல்லப்படுகின்ற பிணிகள் சேராமலும், பாதகச்சமன்தன் மேதியில் புகு ந்து பாசம்விட்டெறிந்து பிடியாது - பாதகத்தையுடைய எமனவன் எருமைக்கடாவின் மேலேறி என்னிடம் வந்துபாசக்கயிற்றைவீசி பிடிக் காமலும், பாவலர்க்கு இரங்கிநாவினுக்கு இசைந்த பாடல் மிக்கசெஞ் சொல்தரவேணும்-வித்வான்களுக்கு மனமிரங்கி வாக்குக்குப் பொருத்த மானபாடல்களைப் பாடும்நற்சொற்களை அடியேனுக்கு அருளிச்செய்ய வேண்டும். (எ-று.)

சோலைமலை.

54. தானதனத் தானதனத் தானதனத்
தானதானத் தானதனத் —தனதான

சேலைபடர்த் தாலமிகுத்
தேகலையச் சிறிவிதத்
தூறுகிவப் பேறுவிழிக் கடையாலே
தேனிரதத் தேமுழுகிப்
பாகுநிகர்க் காரமுதக்
தேறலெனக் கூறுமொழிச் செயலாலே

ஆலிலையைப் போலும்வயிற்
றலளகத் தாலதரத்
தாரிரதத் தாலுமலைப் பிடுவோர்மே

லாசையினைத் தூரவிடத்
தேபுகலிட் டேக்ருபைநற்
றுளிணையைச் சேரவெனக் கருள்வாயே

காலனைமெய்ப் பாதமெடுத்
தேயுதையிட் டேமதனைக்
காயவெறித் தேவிதியிற் றலையூடே

காசினியிற் காணவிரப்
போன்மதியைச் சூடியெருத்
தேறிவிரித் தூறுதிரைக் கடன்மீதில்

ஆலமிடற் றானகரித்
தோலையுடுத் தீமதித்
தாடியிடத் தேயுமைவைத் துடன்மேவும்

ஆழியினைச் சூரனைவெற்
பேழுமில்தொட் டாவிதுளித்
தாதிதிருச் சோலைமலைப் பெருமாளே

(ப-ரை.) காலனைமெய்ப்பாத மெடுத்தேயுதையிட்டு - எமனை காலா லுதைத்து, மதனைக்காய் எரித்து - மன்மதனை எரித்து, விதியின்தலையூ டேகாசியினியில் காண-பிரமதேவனுடைய தலையைமிதித்து, மதியைச் சூடி - மூன்றாம் பிறையைச் சூடி, எருத்தேறி - ரிஷபவாகன த்தின் மேல் ஆரோகணித்து, விரித்தூறுதிரை கடல் - விரித்தூ றுகின்ற அலைகளையுடைய சமுத்திரத்தில் உண்டான, ஆல

மிடற்றனை - ஆலகால விஷத்தைத்தரித்த கண்டத்தையுடையவனும், கரித்தோலையுடுத்து ஈமம் மிதித்தாடி யிடத்தேயுமைவைத்தான் வாழவே - யானைத்தோலைப்போர்த்து சுடுகாட்டில் மிதித்துநடித்து இடது பாகத்தில் உமாதேவியைவைத்த பரமேஸ்வரனுடைய திருவாழ்வே! ஆழியினை சூரனை வெற்பெழு அயில்தொடடு ஆவிதுணித்து ஆதி திருச்சோலைமலைபெருமாளே - சமுத்திரத்தையும் சூரனையும், சத்தமலைகளையும் வேலாயுதத்தால் கொன்று ஆதியான திருச்சோலைமலையில் எழுந்தருளியிருக்கின்ற பெருமாளே! சோலைபடர்த்து ஆலம்மிகுத்து கணையைச்சிறி விதத்துற சிவப்பேறு விழிக்கடையில் - சேற்கெண்டையையிடர்த்து விஷம் அதிகரித்து பாணத்தைச் சீறி விதமான சிவப்படைந்த கடைவிழியாலும், தேன் இரதத்தே முழுகிபாகுசிகர் காரமுதத்தேறலெனக்கூறு மொழிச்செயலால் - தேனுனரசத்தில் முழுகி சர்க்கரைப் பாகையொத்தபெரிய அமிர்தத் தெளிவைப்போல் சொல்லும் சொல்லின் செய்கையாலும், ஆலிலையைப்போலும் வயிற்றால் அளகத்தால் அதரத்தால் இரதத்தாலும் மலைப்பிடுவோர்மேல் - ஆலிலைபோலிருக்கின்ற, வயிற்றினாலும் அளகபாரத்தினாலும், இதழினாலும் அதன் ரசத்தாலும் மலைப்பிடுவோர்மேல் வைத்திருக்கின்ற, ஆசையினைத்தூரவிடத்தே புகவிட்டேகிருபை நற்றாளிணையைச் சேர எனக்கருள்வாய் - ஆசையைத்தூரமாகப் போகவிட்டு கிருபையுள்ள உயர்ந்த இரண்டு திருவடிகளைச்சேர எனக்குத் திருவருள் செய்வாய். (எ-று)

பொது.

55. தனதனனா தத்ததந்த தனதனனா தத்ததந்த
தனதனனா தத்ததந்த—தனதான.

பழுதறவேக திக்கடந்து
பகர்வனதீ ரந்துறந்து
பலபலயோ கத்திருந்து மதராசன்

பரிமளபா ணத்தயர்ந்து
  பனிமடலூர் தற்கிசைந்து
  பரிதவியா மெத்தநொந்து மயல்கூர

அழுதழுதா சைப்படுங்க
  ணபிநவமா தர்க்கிரங்கி
  யவர்பிரமா ணத்துநெஞ்ச மறைபோய்நின்

றழிவதுநான் முற்பயந்த
  விதிவசமோ மற்றைபுன்ற
  னருள்வசமோ விப்ரமங்கெ ரிகிலேனே

உழுதருவே தத்துமன்றி
  முழுதினுமாய் நிற்குமெந்தை
  யெனவொருஞா னக்குகந்த ருள்மேவு

மிருவுருவா கித்துலங்கி
  யொருதனது ணிற்பிறந்து
  விரணியன்மார் பைப்பிளந்த தனியாண்மை

பொழுதிசையா விக்ரமன்றன்
  மருகபுரா ரிக்குமைந்த
  புளகபட ரக்குரும்பை யுடன்மேவும்

புயகிரிவா மச்சிலம்பின்
  வன்சரமா னுக்குகந்து
  புனகிசையோ டிப்புகுந்த பெருமாளே.

(ப-ரை) எழுதருவேதத்தும் அன்றி-எழுதுதற்கு அருமையான சதுர்வேதங்களிலுமல்லாமல், முழுதினுமாய்நிற்கு-எல்லாவிடங்களிலு

மிருந்த, எந்தையென-எந்தந்தையென்ன, ஒருஞானக்குருந்தர் உள்ளம் மேவும் - ஒருஞானக்குழந்தையின் மனத்தில் சென்ற, இருவுருவாகி துலங்கி-பேருருவாய் விளங்கி, ஒரு கனதூணிற் பிறந்து-ஒரு பெரிய தூணினிடம் பிறந்து, இரணியன் மார்பை-இரணியாக்கனுடைய மார்பைப்பிளந்த, தனி ஆண்மை பொழுதிசையா-ஒப்பற்ற வெற்றியையுடைய காலத்தில் கலவாத, விக்கிரமன்தன் மருக-திரிவிக்கிரமனுடைய மருகனே! புகாரிக தலைந்த-திரிபுரதகனனுக்குத் திருக்குமரனே! புளக படீர குரும்பையுடன் மேவும்- பூரிப்பையடைந்த பச்சைக்கர்ப்பூரக் கலவையைப்பூசிய ஸ்தனபாரங்களுடன் சம்பந்தப்பட்ட. புயகிரிவாமம்-இடதுபுஜத்தின்கண் வீற்றிருக்கின்ற, சிலம்பின் வனசரமானுக்கு உகந்து-மலையிலுள்ள வேடப்பெண்ணான வள்ளிநாய்ச்சியாருக்கு விரும்பி, புனமிசையோடிப்புகுந்த பெருமாளே! தினைப்புனத்தின் கண் சென்ற பெருமாளே, பழுதற ஓதி கடந்து-குற்றமறச்ச (சகல சாஸ்திரங்களையும்) கற்று ஒழிந்து, பகர்வன தீரத்துறந்து-அவைகளில் சொல்லப்படுபவைகளையெல்லாம் துறந்து, பலபல யோகத்திருந்து, அநேகவகைப்பட்ட யோகங்களிலிருந்தும், மதராஜன்-மன்மதனானவனுடைய பரிமளபாணத்தயர்ந்து-பரிமளம் பொருந்திய புஷ்ப பாணத்தால் மனமயர்ந்து, பனைமடல் ஊர்தற்கு இசைந்து (தலைவனால்) பனைமடலை ஊர்வதற்குசம்மதித்து, பரிதவியாமெத்தநொந்து-பரிதவியாமல் மனம்வருந்தி, மயல்கூர-காமம் அதிகரிக்க, அழுது அழுது-மிகவும் அழுது, ஆசைப்படும்-விரும்புகின்ற, கண் அபிநவமாதர்க்கு இரங்கி - கண்களால் அபிநயஞ்செய்துகொண்டு வருகின்ற பெண்களுக்கிரங்கி, அவர் பிரகாணத்து-அவர்களுடைய சொற்படியே, நெஞ்சம்மறைபோய் நின்று-மனம் ஒளிந்து நின்று, அழிவறு நான்-அழிவற்ற அடியவனானநான், முற்பயந்த விதிவசமோ-முன்பெற்ற விதியின்வசமோ? மற்றை உன்றன் அருள் வசமோ? தவிர உம்முடைய அருள்வசமோ? விப்ரமம் தெரிகிலேன்-எனக்குண்டான மயக்கம் அதைநான் அறிகிலேன். (எ-று)

பெரும்பற்றப்புலியூர்

56. தனந்தத் தத்தன தானன தானன
தனந்தத் தத்தன தானன தானன
தனந்தத் தத்தன தானன தானன—தனதான.

விடுங்கைக் கொத்தக டாவுடை யானிடை
யடங்கிக் கச்சிறை யானவ னேமுகம்
விழுங்கப் பட்டற வேயுடல் போய்கரு கிடமேலே
விளம்பத் தக்கன ஞானமு மானமும்
விரும்பத் தக்கன போகமு மோகமும்
விடுஞ்சுத் தச்சவ மாவெளி யாயுயிர் விசொளில்
இடுங்கட் டைக்கிரை யாவடியே னுட
லிருந்திட் டுத்தபு ராணவர் கோவென
விடுங்கட் டிச்சுடு காடுபு காமுன மனதாலே
யிருந்திட் டுப்பெற வேமதி யாயினு
மிறந்திட் டுப்பெற வேகதி யாயினு
மிரண்டிற் றக்கதொ ராகிய மாணமை யிசைவாயே
கொடுங்கைப் பட்டம ராமர மேழுட
னடுங்கச் சுக்ரிப னோடம ராடிய
குரங்கைச் செற்றம கோததி யூடெழ வருகேயன்
குலுங்கப் பட்டநி சாசரர் கோவென
விலங்கைக் குட்டழ லோனெழ நீட்டி
குழண்டைக் குத்திர ராவண னார்முடி யடியூடே

பிடுங்கித் தொட்டச ராசர நாரணர்
ப்ரயங்கிட் டக்கன் மாமரு காவபன்
ப்ரபஞ்சத் துக்கொரு பாவல னெனன விருதூதும்

ப்ரசண்டச் சொற்சிவ வேதசி காமணி
ப்ரபஞ்சத் துக்கு ளவானச தாசிவம்
பெரும்பற் றப்புலி யூர்தனின் மேவிய பெருமாளே.

(ப-ரை) கொடுங்கை பட்டமராமரம் எழுடன் நடுங்க- மிக்க கிளை களையுடைய பெரியமாமரங்களேழும் அதிர, சுக்ரீபனோடு அமர் மூடிய குரங்கைச்செற்று - சுக்ரீபனுடன் யுத்தஞ்செய்த வாலியைக்கொன்று, மகோததி தூளெழ வருநேயன்-சமுத்திரமானது தூள்பறக்கும்படி வந்தவனே, குலுக்கப்பட்ட நிசாசரர்-மனச்சந்தோஷத்தை யடைந்திருந்த ராக்கதர்கள், கோவென-கோவென்றலற, இலங்கைக்குள்-இலங்கைப் பட்டணத்திற்குள், தழலோன் எழ,அக்கினிமூள, நீட்டி குழுண்டைக் குத்திர ராவணனார் முடி-நீண்ட அடியினால் குமுள் நடை நடக்கின்ற குத்திரத்தையுடைய ராவணனது திருமுடியை, அடியூடே பிடுங்கி தொட்ட சராசரநாரணர்-அடியோடு பிடுங்கிப்பாணப் பிரயோகஞ்செய்த நாராயணனுடைய, பிரியங்கிட்டகனமருகா-ஆசைகாட்டக் கனத்த மருமகனே! அயன் பிரபஞ்சத்துக்கு ஒரு பாவலன் நான் என-பிர்மதேவனால் சிருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்சத்துக்கு ஒப்பற்ற பாவலன் நானே என்று, விருதவூதும்- வெற்றி ஊதுகின்ற, பிரசண்டசொல்-கம்பீரமான சொல்லையுடைய, சிவவேதசிகாமணி-ருத்திரவேதத்திற் சொல்லப்பட்ட உயர்ந்த மணியே, பிரபஞ்சத்துக்கு உளவான சதாசிவம்-உலகத்திற்கு உளவான சதாசிவமுள்ள, பெரும்பற்றப் புலியூர்தனின்மேவிய பெருமாளே-பெரும்பற்றப் புலியூரில் எழுந்தருளியிருக்கின்ற இளைய பெருமாளே! விடுங்கைக்கொத்த- கடாவுடையானிடை - விடுகின்ற கை

க்கு ஒப்பான எருமைக்கடாவையுடையவனிடத்தில், அடங்கி-அடங்கி, கச்சு இறையானவன்-பிணிக்கப்பட்டு அவ்வரையனால், முகம் விழுங்கப் பட்டு அறவேயுடல்போய் - முழுமையும் உடல்போய், கருகிட்-கருச், மேலே-பிறகு, விளம்பத்தக்கன-சொல்லத்தக்கனவான, ஞானமும் மானமும்-ஞானத்தையும், மானத்தையும், விரும்பத்தக்கன-ஆசைகொள்ளக் கூடியவைகளான, போகமும் மோகமும்-போகத்தையும், மோகத்தையும், விடும்-விட்டு விடுகின்ற சுத்தச்சவமா-சுத்தசவமான, வெளியாய்-ஆகாயமாய், உயிர் விடுந்நாளில்-உயிரை விட்டுவிடுகின்ற கடைசியான நாளில், இடுக்கட்டைக்கு இரையா-இடப்படுகின்ற கட்டைமுட்டைகளுக்கு இரையாக, அடியேன் உடல் இருந்திட்ட [illegible] வேறான என்னுடைய சரீரமிருந்து, தமர்ஆனோர்-சுற்றத்தார்கள், கோவெனா-கோவென்று கூவ, இடங்கட்டி-இடத்தில் சூழ்ந்து கட்டிக்கொண்டு, சுடுகாடு புகாமுனம்-சுடுகாட்டைச் சேராமுன்னர், [illegible] காடு இருந்துவிட்டுப்பெற விதியாயினும்-கையிலிருந்த தர்மஞ்செய்து நல்ல வழியைப் பெறுதற்குரிய விதியையாகிலும், இறந்து இட்டுப் பெறவிதியாயினும்-இறந்தொழிந்து பெறுவதற்குரிய விதியையாகிலும், இரண்டில் தக்கதோர் லாபம் ஆனவை இசைவாய் இவ்விரண்டில் லாபமுள்ளதை அருள்வாய் (எ-று)

பொது.

57. தனந்த தானன தானன தந்தன
தனந்த தானன தானன தந்தன
தனந்த தானன தானன தந்தன—தனதான

கறுத்த நீர்விடு கூர்வேலெ னுங்கடை
சிவத்து நீடிய வாய்மீள வண்குழை
கடக்க வோடிய வாலால நஞ்சென வஞ்சநீடு

கயற்க ணார்கனி வாயூற லுண்டவர்
கழுத்து மாசமு மோகிக பங்கொடு
கலக்க மார்பொடு பாடீர குங்கும குன்றமுழ்கி

உறுத்த மார்புமுத் தார்கா வடங்களு
மறுத்து நேரிய கூர்வாணை கம்பட
வுடுத்த வாடையும் வேறுபுமன் றுக மூன் றுவீழ

முறுக்கு நாபியில் மூழ்காப ருங்குடை
செருக்கு மாதர்தம் வாரார் தனங்களை [ன்
யொழித்த தோர்கரை காணுத நின்க்ருபை யென்றுசேர்வே

நிறத்த நூபுர பாதார விந்தமு
முடித்த மாலையும் வாரார்த னங்களு
நிறத்தி லேசடு வேலான கண்களும் வண்டுபாடி

நெறித்த வோதியு நாயேன்ம னம்பரி
தவிக்க மால்வர லாமோக லந்திட
நினைக்க லாகென வேல்வேடர் கொம்புட னன்புகூர்வாய்

மறுத்து வாரிதி கோகோவெ னும்படி
வெறுத்தி ராவணன் வாளுளை யம்பினில்
வதைத்த மாமனு மேவார்பு ரங்களு மண்டமேவ

வளர்த்த தாதையு மாறுன குன்றமு
மளைத்து லோகமும் வேதாகமங்களு
மதித்த சேவக வானுளு மும்பர்கள் தம்பிரானே.

(ப-ரை) நிறத்த நூபுரபாதாரவிந்தமும் - நல்லநிறத்தைப் பெற்ற நூபுரத்தையணிந்த பாததாமரையும், முடித்தமாலையும் - முடிக்கப்பட்ட பூமாலையும் வாரார்தனங்களும்-கச்சிறுக்கின தனபாரங்களும் நிறத்திலே படு-நல்லரூபத்தில் அடைகின்ற, வேலான கண்களும் - வேலாயுதம் போன்றகண்களும், வண்டுபாடி நெறிக்க ஓதியும்-வண்டுக்கள் பாடி நெருங்கின கூந்தலும், நாயேன்மனம்-நாயைப்போன்ற என்னுடைய மனமானது, பரிதவிக்க-பரிதவிக்கும்படி, மால்தரலாமோ-மயக்கத்தைக் கொடுக்கலாமோ? கலந்திட நினைக்கலாமெனா-கலக்க நினைக்கலாகக்கடவதென்று, வேல்வேடர் கொம்புடன் அன்புகூர்வாய்-வேலாயுதத்தையுடைய வேடர்கள்பெண்ணான வள்ளிநாய்ச்சியாருடன் அன்புகொண்டவனே! மறத்து-மறுத்து, வாரிதிகோகோவெனும்படி சமுத்திரமானது கோகோவென்று அலறும்படி, வெறுத்து வெறுத்து, இராவணன் வாணாளையம்பினில் வதைத்த-இராவணனுடைய ஆயுளைபாணத்தினால் கொன்ற, ராமனும்-விஷ்ணு மூர்த்தியும், மேவார் புரங்களும்-பகைவர்களுடைய திரிபுரங்களும், அண்டப்பேவ-அண்டங்களும் பொருந்த, வளைத்த-வளைத்த [illegible]தையும்-தகப்பனும், மாறுனகுன்றமும் அனைத்து லோகமும் [illegible] மலைகளும், எல்லாலோகமும், வேதங்களும், [illegible], [illegible] பத்தசேவகனே! வானோரும் உம்பர்கள் தம்பிரானே-தெய்வலோகத்தை யாண்டருள்கின்ற தேவர்களுக்குத்தலைவனே! [illegible] கறுத்த சலத்தைச் [illegible] வேலாயுதம் [illegible] கடையானது, சிவந்து-சிவந்து, [illegible] யானது [illegible], வணதுழைகடக்க-வளப்பம் பொருந்திய [illegible], [illegible]-பரந்த, ஆலாலம் நஞ்சென-ஆலகால [illegible]. வஞ்ச[illegible]-மிகுந்தவஞ்சகத்தையுடைய, கயற்கணார் - கயல் [illegible] கண்களையுடையபெண்களது, கனிவாயூறல் உண்டு-[illegible] வாயின் ஊறலையுண்டு, அவர் கழுத்தும் ஆகமும்-அவர்களுடைய, கழுத்தும் மார்பும், ஒக்கபங்கொடு-சம்பந்

தப் பட்டதுடன், கலக்கமார்பொடு-மார்புடன் கலக்கவும், பாகீர குங் குமகுன்றம்மூழ்கி-பச்சைக்கர்ப்பூரம் குங்குமப்பூக்கலந்த மலையில்முழுகி, உறுத்தினமார்பும்- முத்தார்தாவடங்களும்-முத்தாரங்களும், அறுத்துநேரிட-அறுத்துநேர்ந்த, கூர்வாள்நகப்பட-கூர்த்த வாளாயுதம்போன்ற நகம்பட, உடுத்தவாடையும் - தரித்தவஸ்திரமும், வேறாய் உழன்று-வேறாக வுழன்று, கழன்றுவீழும்-கழன்றுவீழுகின்ற, முருக்குநாபியில்-சுழற்றலுள்ள நாபியில், மூழ்காமருங்குடை-மூழ்காத மருங்குலின், செருக்கும்-கர்வமும், மாதர்தம்வாரார் தனங்களை-பெண்களுடைய கச்சிறுக்கிய தனங்களை, ஒழித்தது ஒருகரைகாணாத-ஒழித்த தான ஒப்பற்ற அளவிடப்படாத, நின்கிருபை என்றுசேர்வேன்-உன்னுடைய கிருபையை என்றைக்கு அடைவேன்? (எ-று.)

58\. தனதத்தன தத்தனதத்தன
தனதத்தன தத்தனதத்தன
தனதத்தன தத்தனதத்தன—தனதான.

புருவத்தைநெ றித்துவிழிக்கயல்
பயில்விட்டுவெ ருட்டிமதித்திரு
புதுவட்டைமி னுக்கியளிக்குல மிசைபாடும்

புயல்சுற்றவி ரிந்துநறைத்தொரி
வளையிட்டக ரத்தையசைத்தகில்
புனைமெத்தைநி டுத்தபளிக்கறை தனிலேறி

சரசக்கலவி லைத்துமுலைக்கிரி
புளகிக்கவ ணைத்துநகக்குறி
தனைவைத்துமு கத்தைமுகக்குட நிறைபற்றிமெலித்

தணிவித்திர கத்தநகரக்குமி
முழுதத்தைய ளித்துபிருக்கியல்
தருமித்தைக் கற்றியுனைத்தொழ முயல்வேனோ

பாதத்தைய டக்கிநடிப்பவர்
த்ரிபுரத்தையெ ரிக்கநகைப்பவர்
பரவைக்குள் விடத்தைமிடற்றிடு பலநீடு

கரகப்பரை யுற்றமிசைப்பகி
ரதியுற்றசி ரத்தைநிரத்துய
ரரவத்தையொ ருப்பவிருப்பவ ருமையாளர்

சுரர்சுத்தர்ம னத்துறைவித்தகர்
பணிபத்தர்ப தத்தையருப்பவர்
சுடலைப்பொடி யைப்பரிசிப்பவர் விடையேறுந்

துணையொத்தப தத்தவரொற்றிடு
மதனைக்கடி முத்தர்கருத்தமர்
துலைவுற்றக்கரு டைக்குளுநித்தருள் பெருமாளே.

(ப-ரை) பாதத்தை அடக்கி-அறுபத்து நான்காவது கலையாகிய பாத சாஸ்திரத்தின் விதியை தனக்குமேற்படா வண்ணம் அடக்கி, நடிப்பவர்-திருநடனஞ்செய்பவரும், திரிபுரத்தை எரிக்க-முப்புரங்களையும் தகிக்க, நகைப்பவர்-சிரிப்பவரும், பரவைக்குள் விடத்தை-சமுத்திரத்திலுண்டான விஷத்தை, மிடற்றிடு-கண்டத்தில்வைத்த, பலி நீடு-மிருந்த பிக்ஷையெடுத்தலையுடைய, கரகப்பரையுற்று-கையில் பலி பாத்திரமேந்தி, மிசைப்பகிரதியுற்ற-கங்காதேவிபொருந்தின, சிரத்தை-சிரசையும், நிரத்துயராவத்தை-அழகில் உயர்ந்த சர்ப்பத்தையும், ஒருப்ப-சம்மதிக்க, இருப்பவர்-இருப்பவரும், உமையாளர்-உமாதேவியை இடது

பாகத்தில் உடையவரும், சுரர் சுத்தமனத்துறைவித்தார்-தேவர்களும் பரிசுத்த கனமுடையவர்களும் ஆனவர்கள் மனத்தில் வசிக்கின்ற நிமலரும், பணிபத்தர் பவத்தையறுப்பவர்-வணங்குகின்ற அடியார்களுடைய ஜென்மத்தை ஒழிப்பவரும், சுடலைப்பொடியை பரிசிப்பவர்-திருநீற்றை தரிப்பவரும், விடையேறும் துணையொத்த பதத்தவர்-ரிஷபவாகனத்திலேறுகின்ற தமக்குத் தாமே ஒத்த பாதங்களையுடையவரும், உற்றிடு மதனைக்கடிமுத்தர்கருத்து அமர்-தன்னை எதிர்த்த மன்மதனைக்கோபித்தமௌனஞானிகளுடை உள்ளத்தில் எழுந்தருளியிருக்கிற, துலைவற்றகிருபைக்குள் உதித்து அருள்பெருமாளே-ஒழியாத அருளுக்குள் தோன்றுகின்ற இளையபெருமாளான முருகக்கடவுளே! புருவத்தைநெறித்து-புருவத்தை மேலேற்றி, விழிக்கயல் பயில்இட்டு-சேல்கண்டைபோலும் கண்ணைப்பழக்கி, வெருட்டி-மயக்கி, மதித்துஇருபுதுவட்டமினுக்கி-நினைத்து இரண்டு புதியதனங்களைமினுக்கி, அளிக்குலம்இசைபாடுபுபல்சற்றுவிரித்து-வண்டுக்கூட்டங்கள் ரீங்காரதொனியைச்செய்கின்ற கூந்தலை கொஞ்சம் விரித்து, நிரைத்து ஒளிவளையிட்ட சரத்தை அசைத்து - வரிசைப்படுத்தி ஒளிர்கின்ற, வளையலைத்தரித்த கைகளை அசைத்து, அகில்புனைமெத்தைபடுத்த பளிக்கறைதனிலேறி-அகிற்புகையூட்டிய மெத்தைபோடப்பட்ட படுக்கை அறையிற்சென்று, சரசத்தைவிளைத்து, விளையாட்டைச்செய்து, முலைகிரி புளகிக்க அணைத்து - மலைபோன்ற தனங்கள் விம்மும்படி அணைத்து, நகக்குறிதனை வைத்து - நகக்குறிகாட்டி, முகத்தை முகத்துடன் ஒன்றிமேவி - முகத்துடன் முகத்தைசேர்த்து, தணிவித்து-குறைத்து, இரதத்து அதரத்து உமிழ் அமுசத்தை அளித்து - ரசம் பொருந்திய உதட்டிலிருந்து சிந்துகின்ற அமுர்தத்தைக்கொடுத்து, உயிருக்கு இயல் தருபித்தை அகற்றி - ஆன்மாவினிடத்தில் பொருந்திய மோகத்தை உனைத்தொழ முயல்வேனோ - உன்னை வணங்க முயற்சி செய்வேனோ? (எ-று)

---

59. தனனதனதன தனனதனதனதன
தானதானன—தனதான.

குவளைபொருதிரு குழைமுடுகிய
கோலநீலவிழி மடவார்தங்

கொடியம்ருகமத புளகதனகிரி
கூடிநாடொறு மயலாகி

துவளவுருகிய சரசவிதமதில்
சோரவாரிதி யலையூடே

சுழலுமெனதுயி ரழியுமுனமுயர்
தோகைமீதினில் வரவேணும்

கவளகரதல கடகவிகடக
போலபூதர முகமான

கடவுள்கணபதி பிறகுவருமொரு
காரணாகதிர் வடிவேலா

பவளமரகத கனகவயிரக
பாடகோபுரம் ரவிதேரும்

பரியுமிடறிய பழநிமலைவரு
பாவலோர்புகழ் பெருமாளே.

(ப-ரை) கவளகரதல கடகவிகடகபோல பூதர முகமான-கவளங் கொள்ளும் கரத்தையும், கடமணிந்தவிகட கபோலத்தையும், முன்ன பரினே முகத்தையுமுடைய, கணபதி பிறகுவரும்-கடவுளான கணபதிக் குப் பிறகு வருகின்ற, காரணு-ஒப்பற்ற காரண கர்த்தனே! கதிர் வடிவேலா-கிரணங்களையுடைய வேலாயுதனே! பவளமரகதகனக வயி

ரகபாட-பளளம், மரகதம், கனகம், வயிரம் இவைகளாலானகபாடத் தையுடைய, கோபுரம்-கோபுரமானது, ரவிதேரும் பரியும் இடறிய-சூரியனுடைய ரதமும், குதிரையும் இடருப்படி யிருக்கின்ற, பழநி மலைவரு-பழநிமலையில் எழுந்தருளியிருக்கின்ற பாவலோர் புகழ் பெருமாளே-பாவலர்களால் புகழ்ப்படுகின்ற இளையபெருமாளே! குவளை பொரு குழை தனை - நீலோற் பல மலரானது மோதுகின்ற அழகிய குழையை, முடுகிய-கோபித்த, கோலவேல்விழி மடவார்தம்-அழகிய வேல்போன்ற கண்களையுடைய பெண்களது, கொடிய-கடுமையான, மிர்கமதம்-கஸ்தூரி பூசின, புளகம்-பூரித்த, தனகிரி கூடிடாதோறும்-தனமலையில் சேர்ந்து தினந்தோறும், மயலாகி - மையலையடைந்து, துவளவுருகிய சரசவிதமதில்-துவளும்படி யுருகின பலவித விளையாட்டில், சோர-சோர்வடைய, வாரிதியலையூடு-சமுத்திரஅலையில், சுழலும் எனது உயிர்-சுழல்கின்ற என்னுடைய உயிரானது, அழியு முனம் உயர் தோகைமீது வரல்வேணும்-அழியாதமுன் உயர்ந்த மயில்வாகனத் தின்மேல் ஆரோகணித்து வரவேண்டும், (எ-று).

சிதம்பரம்.

60. தனதந்த தத்ததந்த தனதந்த தத்ததந்த
தனதந்த தத்ததந்த—தனதான.

மதவெங்க ரிக்கிரண்டு
வளுகொம்பெ னத்திரண்டு
வளருந்த னத்தணிந்த மணிபடம்

வளர்செங்க திர்க்குவிந்து
வொளிகண்டெ னத்துலங்கி
நாருந்தி தைத்திரங்க வருமானர்

இதமிஞ்சி தப்பியங்கொ
ணசைகொஞ்சு நற்குணங்க
ளிணையின்றெ னக்கலந்து விளையாடி

யிடசங்கை யற்றணர்ந்து
வலம்வந்து னைப்புகழ்ந்து
தொழுமின்ற பொற்பதங்க டரவேணும்

நதியுந்தி ருக்கரந்தை
மதியுஞ்ச டைக்கணிந்த
நடநம்ப ருற்றிருந்த கயிலாய

நவகங்கை யைப்பிடுங்கு
மசுரன்சி ரத்தொடங்கை
நவதுங்க வெற்றிமுந்து திரடோளுந்

சிதையும்ப டிக்கொரம்பு
தனைமுன்றொ டுத்தகொண்டல்
வளர்செங்க ணச்சுதன்றன் மருகோனே

தினமுங்க ருத்துணர்ந்து
சுரர்நின்று னைப்பணிந்த
திவரும்ப லத்தமர்ந்த பெருமாளே

(ப-ரை) நதியும் திருக்கரந்தை மதியுட் சடைக்கு அணிந்த-கங்கை, சிவகரந்தை, சந்திரன் இவைகளைச் சடாபாரத்தின் கண்தரித்த, நடநம்பர் உற்றிருந்த- நடனஞ்செய்கின்ற பரமேசுரன் வீற்றிருந்த, கயிலை நவ கங்கையை பிடுங்கும்-கயிலாயமென்னும் மலையைப்பிடுங்குகின்ற, அசுரன் சிரத்தொடு-ராக்கதனுன இராவணனுடைய தலையுடன், அங்கை நவதுங்கவெற்றிமுந்து-அழகிடையும் புதியவெற்றிமுந்துகின்ற, திரள்

தோளும்-திரண்ட புஜங்களும், சிதையும்படிக்கு ஒரு அம்பு தலைமுன் தொடுத்த கொண்டல்-கெடும்படி ஒரு பாணத்தைத் தொடுத்த கொண்டலும், வளர்செங்கண் அச்சுதன் றன் மருகோனே-வளர்கின்ற செவந்த, கண்களையுடைய அச்சுதனென்னும் விஷ்ணுமூர்த்தியின் மருமகனே! தினமுங்கருத்து உணர்ந்து - நாள்தோறும் கருத்தை புணர்ந்து, சுபர் நின்று உனைப்பணிந்த-தேவர்களிருந்து உன்னை வணங்கின, திரு அம்பலத்தமர்ந்த பெருமாளே - சிற்றம்பலத்தின் கண் எழுந்தருளியிருந்த இளையபெருமாளே! மதவெங்கரிக்கு இரண்டு வலுசொம்பெனத்-திரண்டு-மதம்பிடித்த வெவ்விய யானைக்கு இரண்டு பலத்த கொம்பைப் போல் திரண்டு, வளரும் தனத்து அணிந்த மணியாரம்-வளர்கின்ற ஸ்தனங்களில் தரித்த முத்து மாலையின், வளர் செங்கதிர்க்கு விந்து ஒளிகண்டெனத் துலங்கி-வளர்கின்ற செவந்த கிரணங்கள் குவிந்து ஒளியைக்கண்டாற்போல் விளங்கி, நரரும் திகைத்து இரங்க வரும் மாதர்-நரர்களும் திகைத்து மனமிரங்கவருகின்ற பெண்களோடு, இதம் இங்கிதப் பிரியங்கொள்-நன்மையான பிரியங்கொண்ட, நகைகொஞ்ச-சிரிப்பால கொஞ்சுகின்ற, நற்குணங்கள் இணையின்றென கலங்கி விளையாடிய-உயர்ந்த குணங்கள் அளவில்லையென்று மனங்கலங்கி விளையாடியிருக்கின்ற, இடசங்கையற்று உணர்ந்து - ஆசங்கையை யொழித்து உணர்ந்து, வலம்வந்து-பிரதட்சணம் வந்து, உனைப்புகழ்ந்து தொழ-உன்னைப்புகழ்ந்து வணங்க, இன்று-இன்றைக்கு, பொற்பதங்கள் தரவேணும்-பொன்போலுந் திருவடிகளை அருளிச் செய்யவேண்டும்.

---

61. தானன தந்தனந் தானன தந்தனந்
தானன தந்தனந்—தனதான.

காதல்மேர் கந்தருங் கேர்தைமார் கொங்கைசிங்
காரந் தஞ்செழுங் கனிவாய்கண்

காளகூ டங்கொடுங் காலரூ பம்பொருங்
காமபா ணஞ்சுரும் பினவாழும்

ஓதிகார் செஞ்சொன்மென் பாகுதே னென்றயர்ந்
தோநமோ கந்தவென் றுரையாதே

ஊசலா டும்புலன் றுரியே சென்றுநின்
றோயுமா றொன்றையுங் கருதாதே

தாதகீ சண்பகம் பூகமார் சந்தமத்
தாரவா சந்திசந் தன்நீடுஞ்

சாம்வே தண்டவெங் கோபகோ தண்டசந்
தானமா தெங்கள்பைம் புனமேவும்

தீநிலா வஞ்சியின் பாதமே கொண்டிடுஞ்
சேகரா தென்குடந் தையின்வாழ்வே

தேவிபா கம்பொருந் தாதிநா தன்றொழுந்
தேசிகா வும்பர்தம் பெருமாளே.

(ப-ரை) காதல் மோகந்தரும் கோதையர் கொங்கை-ஆசை விளைவிக்கின்ற மோகத்தைக்கொடுக்கின்ற புஷ்பமாலையை தரித்த பெண்களுடைய கொங்கையும், சிங்காரநாதம் செழுங்கனியாய்-சிங்காரநாதமும், செழுமைபான கொவ்வைக்கனிபோலும்வாயும், கண்காளகூடம்-விஷம்போலும் கண்ணும், கொடுங்காலரூபம பொருங்கல்பாணம் - கொடியகாலரூபமும், மோதுகின்ற காம பாணமும், சுரும்பினம்வாழும்-வண்டுகள் வாழ்கின்ற, ஓதிகார் - கூந்தல்மேகமும், செஞ்சொல்மென் பாகுதேன்-செம்மையான சொல்லானது மிருதுவாகிய பாகும் தேனும்ஆகும், என்று அயர்ந்தோம்-என்றசொல்ல இளைததோம், நமோகந்த என்று உரையாது-கந்த ! நம என்று சொல்லாமலும், ஊசலாடும் புலன்

தாரியே சென்று - உசலாடுகின்ற ஐம்புலன் வழியேபோய், நின்று ஒப்பற ஒன்றையுங் கருதாது-இருந்து ஓய்ந்தவிடம்படி யாதொன்றையும் நினையாமலும் தாதகிசண்பகம் பூகம் ஆர், சந்தம் மந்தாரம் வாசந்தி சந்தனநீபம்-இவ்வகையான வாசனைகள் மிகுந்த, சாமவேதனிட வெங்கோப கோதண்ட - சாமவேதஞ் சொல்லுகின்ற மலையை வெவ்விய கோபமுள்ள கோதண்டமாகவுள்ள; சந்தானமாது எங்கள் மைம்புனம் மேவும் தீதிலாவஞ்சியின் பழைமையான-பெண்ணான எங்கள் தினைப் புனங்காக்கும் வள்ளி நாய்ச்சியின்; பாதமேகொண்டிடும்சேகர-பாதங்களைக் கொண்ட திருமுடியையுடையவனே! தென்குடந்தையின் வாழ்வே-தென்குடந்தையில் எழுந்தருளியிருக்கின்றவனே! தேவிபாகம்பொருந்து-பரமேசுவரியை இடதுபாகத்திலுள்ள, ஆதிநாதன்கொழுந்தேசிகா-முதற் கடவுள் வணங்குகின்ற ஞானாசிரியனே! உம்பர்தம்பெருமாளே-தேவர்களுக்குத் தலைவனே! (எ-று)

வள்ளியின் பாதத்தை வணங்கினதை;

திணியான மனோசிலைமீதுன தாள்
அணியாரவிந்த மரும்புமதோ
பணியாவென வள்ளிபதம் பணியுந்
தணியா வதிமோக தயாபரனே.

என்று கந்தானுபூதியில் சொல்லியிருப்பதினு லுணரக்கடவர்

---

62. தானதாத்த தனதன தானதாத்த தனதன
தானதாத்த தனதன—தனதான,

ஆலமேற்ற விழியினர் காலேட்டி யழுதழு
தாகமாய்த்து முறைமுறை பறைமோத

வாடல்பார்க்க நிலைபெழு பாடைகூட்டி விரைபம
யானமேற்றி யுறவின ரயலேக

காலமாச்சு வறிகென வோலைகாட்டி யமபடர்
காவலாக்கி யுயிரது ரெடுபோக.

காமபாக்கை பொடிபடு நாளில்வாய்த்த கழலிணை
காதலாற்க ருதுமுணர் தருவாயே

வேலகீர்த்தி விதரண சீலபார்த்தி பகனக
வியாழகோத்ர மருவிய முருகோனே

வேதநாட்டில் விளைவுள வேனல்காத்த சிறுமியை
வேடனாட்டில் வழிபடு மிளையோனே

ஞாலமேத்த வழிபடு மாறுபேர்க்கு மகவென
நாணல்பூத்த படுகையில் வருவோனே

நாதபோற்றி யெனமுது தாதைகேட்ப வனுபவ
ஞானவார்த்தை யருளிய பெருமாளே.

(ப-ரை) வேல-வேலாயுதனே! கீர்த்த விதரண-கீர்த்தியையுடைய விதரணனே! சீலபார்த்திப-சீலனே! பார்த்திபனே! கனக வியாழகோத்திர மருவிய முருகோனே-உயர்ந்த குருகுலந்தழுவிய முருகக்கடவுளே! வேதநாட்டில் - பிரமனால் சிருஷ்டிக்கப்பட்ட உலகத்தில், விளைவுள ஏனல் காத்த சிறுமியை-விளைந்த தினைப்புனத்தை காவல்செய்த வள்ளி நாய்ச்சியாரை, வேடன் நாட்டில்வழிபடும் இளையோனே-வேடராஜ்ஜியத்தில் வழிபட்ட இளையகுமாரனே! ஞாலம் ஏத்தவழிபடும்-உலகத்தார்கள் துதிசெய்ய வந்தனை செய்கின்ற, ஆறுபேர்க்கும் மகவு என-கார்த்திகைப்பெண்கள் அறுவருக்கும் பிள்ளையாக, நாணல் பூத்த படுகையில் வருவோனே-சரவணப்பொய்கையில் வந்தவனே! நாதபோற்றி

என-தலைவனே, நமஸ்காரம் என்று, முதுதாதைகேட்க-பெரிய தந்தையார்கேட்க, அநுபவ ஞானவார்த்தை யருளியபெருமாளே-அநுபவ ஞானவார்த்தை யருளியபெருமாளே-அநுபவ ஞானமுள்ள ஒருசொல்லைத் திருவாய் மலர்ந்தருளிப் பெருமாளே! ஆலம் ஏற்றவிழியினர்-ஆலகால விஷத்தைப்போன்ற கண்களையுடைய பெண்கள், காலைநீட்டி-கால்களைநீட்டி, அழுதழுது - அழுது. ஆகம்மாய்த்து முறைமுறை பறைமோத-மார்டைக்கெடுத்து வரிசையாக வாத்தியம் வாசிக்க, ஆடல்பார்க்க-ஆடுதலைப்பார்க்க, நிலையெழு-நிலையெழுந்து, பாடைகூட்டி-பாடையில்சேர்த்து, விரைய-சீக்கிரமாக, மயானமேற்றி-சுடுகாட்டிற் கனுப்பி, உறவினர் அயலாக-சுற்றத்தார்களெல்லாம் விலக, காலமாச்சுவருகென ஓலைகாட்டி-காலஞ் சமீபித்துவிட்ட வருக என்று எம னோலையைக் காட்டி, யமபடர்-எமதூதர்கள், காவலாகி-சிறைப்படுத்து, உயிரதுகொடுபோக-உயிரைக் கொண்டுபோய்விட, காமயாக்கை பொடிபடுநாளில்-சரீரம் துகள்பட்டுவிடுகின்ற நாளில், வாய்த்தகழலிணை காதலால் கருதும் உணர்தருவாய்-பொருந்திய வீரகண்டாமணியைத் தரித்த திருவடிகளை விருப்பத்துடன் நினைக்கின்ற உணர்ச்சியைத் திருவருள்செய்வாய் (எ-று.)

சோணாசலம்.

63. தனதன தானதன தனதன தானதன
தனதன தானதன—தனதான.

விடமத வேள்வாளிபின் விசைபெறு கோலாகல
விழிகொடு போவாவென வுரையாடும்

விரகுட னூறுபிர மனமுடை மாபாவிகள்
மிர்கமத கோலாகல முலைதோய

வடைபவு மாசாபர வசமுறு கோமாளியை
யவனியு மாகாசமும் வசைகூறு

மசடனை குசாரனை யவலனை பாபசனை
யடியவ ரோடாள்வது மொருநாளே

வடகுல கோபாலர்த மொருபதி னாறுயிரம்
வனிதையர் தோடோய்தரு மபிராம.

மரகத நாராயணன் மருமக சோணாசல
வதிபச தாகாலமு மிளையோனே

யுடுபதி சாயாபதி சுரர்பதி வாழ்வேபெற
வுயர்மயின் மேலேறியே யரிதாக

உயரிய மாநாகமும் நிருதனு நீறுப்விழ
வொருதனி வேலேவிய பெருமாளே.

(ப-ரை.) வடகுல கோபாலர்தம் ஒரு பதினாறுயிரம் வனிதையர்-யாதவர்குலத்துதித்த பதினாறுயிரம் கோபிகா ஸ்தீரீகளுடைய! தோள்தோய்தரும்-தோளில்சேர்ந்த, அபிராமமரகதநாராயணன்மருமக-அழகியபலட்சுமியின் மருமகனே! சோணாசலவதிப - திருவண்ணாமலைக்குத் தலைவனே! சதாகாலமும் இளையோனே - எப்போதும் குமரனே! உடுபதி சாயாபதி சுரர்பதி-சந்திரன். சூரியன் இந்திரன் இவர்கள், வாழ்வேபெற உயிர்மலையில்மேலேறி - சுகவாழ்வையடைய உயிருள்ள மயில்வாகனத்தின்மேல் ஆரோகணித்து, அரிதாகவுயரிய-அருமைசாக வுயர்த்தப்பட்ட மாநாகமும் நிருதனும்-கிரவுஞ்சனும், சூரனும், நீறுய்விழ - செடுதியையடைந்துவிழ. ஒருதனிவேல் ஏவிய பெருமாளே - ஒப்பற்ற வேலாயுதத்தைத் தரித்த இளையபெருமாளே! விடும் மதவேள்வாளியின் - விடுகின்ற மதங்கொண்ட மன்மதனுடையபாணத்தின், விசைபெறு-வேகத்தையடைந்த கோலாகலவிழிகொடு - டம்பமானகண்களைக்கொண்டு, போவாவென வுனாடியாம் - போங்கள், வாருங்கள் என்று வார்த்தை

யாடுகின்ற, விரகுடன்-ஆசையோடு, நூறாயிரப்பனமுடையபாவிகள் அநேக எண்ணங்களுடைய பாவிகள், மர்கப தகேளாலாகலுடைமேசாய அடையவும்-கஸ்தூரி வாசிக்கின்ற அழகிய மூலையில் படியச்சேரவும், ஆசாபரவசம் உறகோமாளியை - ஆசையாகிய பரவசத்தை யடைந்த கோமாளக் காரனும், அவனியும்ஆகாசமும் வசைகூறும் - மண்ணுலகம் விண்ணுலகமும் நிந்தனைசொல்லுகின்ற, அசடன் அசுசானை-அமல னையாபாசனை-அசடன்,ஆசாரமற்றவனும், பிரயோசனமற்றவனும் ஆபாசனுமான என்னை, அடியவரோடாள்வதும் ஒருநாளே-அடியார்களுடன் கூட்டி ஆண்டருள் செய்வதும் ஒருநாளேயாம் (எ-று.)

---

64. தனனத்தன தானன தனனத்தன தானன
தனனத்தன தானன—தனதான.

இடருக்கிட ராகிய கொடுமைக்கணை மேல்வரு
 மிறுதிச்சிறு கால்வரு மதனாலே

மியலைத்தரு கானக முயலைத்தரு மேனிபி
 லெரியத்தரு மாமதி நிலவாலே

தொடரக்கொடு வாகைபி லடையக்கமா மேலலை
 தொலையத்தனி வீசிய சடாலே

துணையற்றளி பூமல ரணையிற்றனி யேபுயிர்
 துவளத்தகு மோதுயர் தொலையாதே

வடபொற்குல மேருவின் முடிதெப்பொர தாரின
 மடிபப்பட— பேவிப வடிவேலா

மறவக்குல மாதொரு குறமெய்த்திரு மாமகள்
மகிழ்ப்புன மேவிய மயில்வீரா
அடர்பட்டுறு கேதகி மடலிற்றழை சேர்வய
லருணைத்திரு வீதியி லுறைவோனே
யவனித்திரு மாலொடு சிவனுக்குமை யாவிழி
யமரர்க்கர சாகிய பெருமாளே

(ப-ரை.) வடபொற்குலமேருவின் முடுகிட்பொருசூரனை - வட திசையிலுள்ள பொன்னாலான பழையமேருமலையைப்போல் முடுகிச்ச ண்டைசெய்த சூரனை, மடியப் படைவிடிய வடிவேலா-சாவும்படி ஆயு தப் பிரயோகஞ்செய்த வடிவேலவனே! மறவக்குலமாம்-வேடகுலமான, ஒரு குறமெய் திருமாமகள் மகிழப்புனம்மேவிய மயில்வீரா-ஒருகுற சரீ ரத்தைப்பெற்ற வள்ளிநாய்ச்சியார் சந்தோஷிக்க தினைப்புனஞ்சென்ற மயில்வாகன வீரனே! அடர்பட்டுறு-நெருங்கியிருக்கின்ற, கேதகிமடலிற் றழைசேர்வயல்-தாழைமடல்நெருங்கின வயல் சூழ்ந்த, அருணைத் திரு வீதியில் உறைவோனே-திருவண்ணாமலையின் தெருவில் வாசஞ்செய்ப வனே! அவனித்திருமாலோடு சிவனுக்குஇமையாவிழியமரர்க் கரசாகிய பெருமாளே- உலகத்தில் விஷ்ணு, சிவன், இந்திரன் இவர்களுக்குத் தலைவனான இளையபெருமாளே! இடருக்கு இடராகிய-துன்பத்துக்குத் துன்பமான, கொடுமைச்சினைமேல்வரும்-கொடுமை விளைவிக்கும் கனை களும் அத்துடன்வருகின்ற, இறுதிச்சிறுகால்வரும்மதனால் - கடைசி தென்றல்காற்றில்வருகின்ற மன்மதனாலும், இயலைத்தருகானகமுயலைத் கருமேனியில், இலட்சணத்தையும்காட்டுமுயலையும் கொடுக்கின்ற திரு மேனியில், எரியத்தரும் மமதி நிலவால்-எரியும்படிசெல்கின்ற சந்திர னாலும், மதாடரகொடுவாகையிலடைய கரைமேல் - தொடரும்படி கொடுக்கின்ற வெற்றியில்சேரக்கரைமேல், அலைதொலையத் தனிவீசிய கடலால்-அலையைத் தொலையும்படி தனியே வீசினகடலாலும், துணைய

ற்று-சகாயமில்லாமல், அளி-வண்டுகள், பூமலர்கள் அணையில் -புஷ்பிசயனத்தில்தனியேஉயர்துவளத்தகுமோதுயர் தொலையாதே-தனியாக உயிகானது துன்பம்நீங்காமல் தடுமாறத்தகுமா (எ-று)

சுவாமிமலை.

65 தானதன்தன தானதனதன தானதனதன—தனதான

பாதிமதிநதி போது மணிசடை
நாதனருளிய குமரேசா
பாகுகனிமொழி மாதுகுறமகள்
பாதம்வருடிய மணவாளா
காதுமொருவிழி காகமுறவருள்
மாயனதிரு மருகோனே
காலனெனையணு காமலுனதிரு
காலில்வழிபட அருள்வாயே
ஆதியயனொடு தேவர்சுரருல
காளும்வகைதரு சிறைமீளா
தாடுமயிலினி லேறியமரர்கள்
சூழவலம்வரு மிளையோனே
சூதமிகவளர் சோலைமருவுசு
வாமிமலைதனி லுறைவோனே
சூரனுடலற வாரிசுவறிட
வேலைவிடவல பெருமாளே

(ப-ரை.) ஆதிஅடியனொடு-முதன்மையான பிரமதேவனும், தேவர் தேவர்களும், சிறைமீளா சுரர் உலகு ஆளும்வகை தரு - சிறைமீண்டு

தேவலோகத்தையாளும் படிதந்த, நடிப்பயிலினில்ஏறி திருக்கூத்தாடும் மயில்வாகனமேறி, அமரர்கள்சூழ-தேவர்கள்சூழ்ந்திட, வலம்வரும் இளையோனே - பிரதட்சிணம்செய்த குமாரனே ! சூதம்சுவளர் சோலைமருவு - வளர்ந்த மாஞ்சோலைசேர்ந்த, சுவாமிமலைதனில் உறைவோனே-திருச்சுவாமி மலையில் எழுந்தருளியிருக்கின்றவனே ! சூரன் உடல் அறவாரி -சுவறிட வேலைவிடவல பெருமாளே-சூரபத்மனுடைய சரீரம்பிளவுபடவும் சமுத்திரம் வறளவும் வேலாயுதத்தைப் பிரயோகஞ்செய்தருளிய பெருமாளே! பாதிமதி நதிபோதுமணிசடை நாதன் அருளியகுமரேசா-மூன்றாம்பிறைச்சந்திரனையும் கங்காதேவியையும்மலர்மாலையையும் சடாபாரத்தின்கண் தரித்தபரமேசுரன் அருளியகுமரக்கடவுளே! பாகுகனிமொழி மாதுகுறமகள் பாதம்வருடியமணவாளா - சர்க்கரைப்பாகுபோலும் கனிபோதும்சொல்லையுடைய பெண்ணானவள்ளிநாய்ச்சியாருடையதிருவடிகளைப் பிடித்ததலைவனே ! காதும் ஒருவிழி காகம்உறஅருள்மாயனது திருமருகோனே-மோதுகின்ற ஒரு கண்ணானது காகம்உற அருள்விஷ்ணுவின் மருமகனே ! காலன் எனையணுகாமல் உனது இருகாலில் வழிபட அருள்வாய்-யமனானவன் என்னைச்சேராமல்உன்னுடைய இரண்டு திருவடிகளிலும் வழிபட அருள்செய்வாய்- (எ-று.)

திருத்தணிகை.

66\. தனதந் தனதத் தனதந் தனதத்
தனதந் தனதத்—தனதான.

குயிலொன் றுமொழிக் குயினின் றலையக்
சொலையின் பலபர்க் — கணைபாலே

குளிருந் தவளக் குலசந் த்ரவொளிக்
கொடிகொங் கையின்முத் — தனலாலே

புயல்வந் தெறியக் கடனின் றலறப்
பொருமங் கையருக் — கலரலே

புயமொன் றமிகத் தொளாவின் றதனிற்
  புயம்வைத் தணையத் — திடையாதோ
சயிலங் குலையத் தடமுங் கசுரச்
  சமனின் றலையப் — பொரும்வீரா
தருமங் கைவனக் குறமங் கையர்மெய்த்
  தனமொன் றுமணித் — திருமார்பா
பயிலுங் ககனப் பிறைதண் பொழிலிற்
  பணியுந் தணிகைப் — பதிவாழ்வே
பரமன் பணியப் பொருளன் றருளப்
  பகர்செங் கழனிப் — பெருமாளே.

(ப-ரை) சயிலம் குலைய-கிரவுஞ்சகிரிகெடவும், தடம்வந்த அசுரசமன் நின்று அலைய-வலுத்த ராக்கத எமனானவன் இருந்து அலையவும், பொரும்வீரா-யுத்தம்செய்தவீரனே! வனம்தரும் குறமங்கையர் மெய்த் தனம் ஒன்றும்-வனவேடப்பெண்கள்பெற்ற வள்ளி நாய்ச்சியாருடைய சரீரத்திலிருக்கின்ற ஸ்தனங்கள்படிகின்ற, மணி திருமார்பா - அழகிய திருமார்பை யுடையவனே! பயிலுங்ககனப்பிறை - பழகுகின்ற ஆகாசத்திலுள்ள சந்திரனானவன், தண்பொழில் பணியும் தணிகைப் பதி வாழ்வே-குளிர்ந்த சோலையின்கண் வணங்குகின்ற திருத்தணிகை யென்னும் பதியில் எழுந்தருளி யிருக்கின்றவனே! பரமன் பணிய-ஈசுரன் வணங்க, பொருள் அன்று அருளப்பகர்-உண்மைப்பொருளை அக்காலத்தில் அருளிச்செய்த, செங்கழனி பெருமாளே-செங்கழனி பெருமாளே! குயில் ஒன்று மொழி குயில் நின்று அலைய-குயிலானது இருந்து அலையும்படி குயிலைப்போலும் சொல்லினாலும், கொலைசெயின்ப மலர்க்கணையால்-கொலைசெய்கின்ற இன்பத்தையுடைய புஷ்பபாணத்தினாலும்; குளி

ரும்-குளிர்கின்ற, தவளம்-வெள்ளிய, குலசந்த்ர ஒளிகொடி-பழமையான சந்திரனுடைய ஒளி வீசுகின்ற கொடிபோலும் பெண்களுடைய கொங்கையின் முத்தினுடைய அனலாலும், புயல்வந்து எறிய-மேகம்வந்து எறிய, கடல்நின்று அற்ற-கட்டலான்று இருந்து அலற, பொருமங்கையருக்கு-மோதுகின்ற பெண்களின், அலரால்-மலரினால், புயம்ஒன்ற-புயம் பொருந்த, மிக தளர்கின்ற-மிகவும் தளர்கின்ற, தனி புயம் வந்தனையக் கிடையாதோ-ஒப்பற்ற புயத்தில் வந்துசேரக் கிடையாதோ (எ-று)

பொது.

67. தந்ததானன தந்ததானன
தந்ததானன—தனதான.

கண்டு போல்மொழி வண்டு சேர்குழல்
கண்டு சேர்மதி ... முகம்வேல்விழி கொள்

கண்டு பின்னை யின்கண்டு யோசனை
இலான்று ... ருகிகாடு

மண்டி மாமிசானில் வண்ட தாமனை
வந்து ... மடவார் நம்

வஞ்சபாதகில் இருந்து போய்மடி
நெஞ்சமையமடி ... தொழியாதோ

கொண்டல் ... குழல் செண்டைட போல்விழி
கொண்டு கோகில மொருகூறுங்

கொங்கை யால்குற மங்கை வாழ்தரு
குன்றின் மால்கொடு குளிராகம்

விஞ்சு மாமன மண்டு சூர்க்கடல்
  வெம்ப மேதினி தனின்மீளா
வெற்றி யாவையு மின்றி வேலையும்
  வென்று மேவிய பெருமாளே

(ப-ரை) கொண்டலார்குழல்-மேகம்போலுங்கூந்தலும், கெண்டை- போல் விழி-சேல்கெண்டைபோலும் கண்களும், கொண்டிலகிய இவை களைக்கொண்டு, கோகிலம் மொழிகூறும்-அழகிய வார்த்தை யாடுகின்ற, கொங்கையாள் குறமங்கைவாழ்தரு - கொங்கையுடையவளான குறப் பெண்ணாகிய வள்ளிநாய்ச்சியார் வாழ்கின்ற, குன்றில் மால்கொண்டு குளிர் ஆகம்விண்டு-மலையில்மயக்கங்கொண்டு குளிர்ந்த சரீரத்தை விட்டு, மா மனம்மண்டு-பெரியமனமானது விஞ்சின, சூர்கடல்வெம்ப-சூரபத்மன் துக்கிக்கவும், மேதினிதனில்-உலகத்தில், மீளாவெற்றி யாவையும்- நீங்காத எல்லா வெற்றிகளையும், இன்றி-இல்லாமல், வேலையும் வென்ற மேவிய பெருமாளே-மன்மதனையும் வென்று பொருந்திய இளைய குமா ரனே! கண்டுபோல் மொழி-கற்கண்டுபோன்ற சொல்லையும், வண்டு சேர்குழல்-வண்டுசேர்ந்த கூந்தலையும், கண்கள்சேல்-சேல்கெண்டை போன்ற கண்களையும், மதிமுகம் - சந்திரனைப்போன்ற முகத்தையும், வேய்தோள்-மூங்கிலைப்போன்ற புஜங்களையும், கண்டு-பார்த்து, பாவனை கொண்ட தோள்களில்-பாவித்த தோள்களில், ஒன்று காதலில்-பொருந் தின ஆசையினால், இருகோடுமண்டி-இரண்டு மலைச்சிகரங்கள் மிகுந்து மார்பினில் விண்டதாம் என-மார்பில் வெளிப்பட்டதாமென்றுசொல்ல, உந்து கூர் முலை மடவார்தம்-கூர்த்த முலையையுடைய பெண் களது, வஞ்சமாம்மதில் கொஞ்சம்போய்-வஞ்சகமாகிய மதில் சூழ்ந்தயார் பில் சென்று, மடிகின்ற மாயமது ஒழிவேனோ-இறக்கின்ற மாய்கை யிலிருந்தும் ஒழிவேனோ? (எ-று.)

குருகிரி.

68. தனதன தத்தத் தத்தன தத்தத்
தனதன தத்தத் தத்தன தத்தத்
தனதன தத்தத் தத்தன தத்தத்—தனதான.

தலைமயிர் கொக்குக் கொக்கந ரைத்துக்
கலகலெ னப்பற் கட்டது விட்டுத்
தளர்நடை பட்டுத் தத்தடி யிட்டுத் தடுமாறி

தடிகொடு தத்திக் கக்கல்பெ ருத்திட்
டசனமும் விக்கிச் சத்திய டுத்துச்
சளியுமி குத்துப் பித்தமு முற்றிப் பலகாலுஞ்

சிலதயி லத்திட் டொக்கவெ ரிக்கத்
திரிபலை சுக்குத் திப்பிலி யிட்டுத்
தெளியவ டித்துத் துற்றிட லுற்றிட் டுயிர்போமுன்

சிலபுகழ் கற்றுச் சொற்கள் பயிற்றித்
திருவடி யைப்பற் றித்தொழு துற்றுச்
செனனம றுக்கைக் குப்பர முத்திக் கருள்வாயே

கலைவி சித்துப் பற்கறை யிட்டுப்
புரவிசெ லுத்திக் கற்கொடு வெற்பைப்
பகடுந டத்தித் திட்டென வெட்டிப் பொருசூரன்

கனபடை கெட்டுத் தட்டற விட்டுக்
குமரசடன் குக்குக் குக்கட வெற்றிக்
களிமயி லைச்சித் ரத்தின டத்திப் பொருகோவே

குலிசன்ம கட்குப் பொற்புய முற்றுக்
குறவர்ம கட்குச் சித்தமு முற்றுக்
குளிர்புன லுற்றுத் தத்துபு னத்திற் திரிவோனே

கொடியபொ ருப்பைக் குத்திமு றித்துச்
சமரம்வி ளைத்துத் தற்பர முற்றுக்
குருகிரி யிற்சித் தத்தொ டிருக்கும் பெருமாளே

(ப-ரை) கலினவிசித்து-சேணத்தைத்தரித்து, பற்கறையிட்டு-பல்லுக்குக்கறை சாத்தி, புரவிசெலுத்தி-குதிரைநடத்தி, கல்கொடு வெற்பைபசடு நடத்தி - கல்லாகிய கொடிய மலைபைப்போலும் யானையை நடத்தி, திட்டெனவெட்டி பொருசூரன்-திடீரென்று வெட்டி மோதுகின்ற சூரபத்மனுடைய, கனபடைகெட்டு தட்டறவிட்டு-விசேஷத்த சேனையானது கெட்டுத்தடுமாறவும், குரைகடல் குக்கு குக்கிட-சத்திக்கின்ற சமுத்திரமானது குக்கு குக்கென்று சத்திக்கவும். வெற்றிகளிமயிலை ஜெயம்பெற்ற சந்தோஷத்தையுடைய மயிலை, சித்திரத்தில் நடத்திப் பொருகோவே-நொடிக்குள் நடத்திப்போர் செய்ததலைவனே! குலிசன்மகட்கு பொன்புயமுற்று-இந்திரனுடைய மகளான தெய்வயானைக்கு அழகிய புயத்தைக்கொடுத்து, குறவர்மகட்கு சித்தமுமுற்று-வள்ளி நாய்ச்சியாருக்கு மனதைக்கொடுத்து, குளிர்புனல் உற்றுதத்துபுனத்தில் திரிவோனே-குளிர்ந்த சலம்பொருந்தி தத்துகின்ற தினைப்புனத்தின் கண் திரிபவனே! கொடிய பொருப்பைக் குத்தி முறித்து-கொடிதாகிய கிரவுஞ்சகிரியை முறித்து, சமரம் விளைத்து-போர்செய்து தற்பரம் உற்று-ஞானபலத்தையடைந்து, குருகிரியில்சித்தத்தொடிருக்கும் பெருமாளே - குருமலையில் மனவொருமைப் பாட்டோடிருக்கின்ற இனிய பெருமாளே! தலைமயிர் கொக்குக்கு ஒக்க நரைத்து-தலைமயிரானது கொக்கைப்போல் வெளுத்து, கலகலென பல்கட்டது விட்டு-பல்லின் பந்தமானது கலகலவென்று விட்டு, தளர் நடைபட்டு தத்தடியிட்டு-

தளர்ந்த நடைவந்து தவறி, தடுமாறி, தடிகொடுத்து-தடிபிடித்துத் தத்தளித்து, கக்கல் பெருத்திட்டு அசனமும் - சாப்பாட்டைக் கக்கி, விக்கி சத்தியெடுத்து-விக்கலும் வாந்தியுமுண்டாய், சளியம் மிகுத்து பித்தமு முற்றி-சளி அதிகரித்து பித்தம் முதிர்ந்து, பலகாலும்-எந்நாளும், சில தயிலத்து இட்டு ஒக்க எரிக்க திரிபலைசுக்கு திப்பிலியிட்டு தெளிய வடித்து துற்றுடலுற்று-கடுக்காய்-நெல்லிக்காய் தான்றிக்காய், சுக்கு திப்பிலி இவைகளைசேர்த்து எரித்த தயிலத்தை வடித்துச் சாப்பிட்டு, உயிர்போம்முன் உயிர்விடுவதற்கு முன்னே, சில புகழ்கற்று-உன்னுடைய சில புகழ்ச்சிகளைக் கற்றுக்கொண்டு, சொற்கள் பயிற்றி-சொற்களில் பழகி, திருவடியைப்பற்றி தொழுதற்று-திருவடிகளைப் பிடித்து வணங்கி, ஜெனனம் அறுக்கைக்குப் பரமுத்திக்கு அருள்வாய் பிறவியை அறுக்க உயர்ந்த மோட்சத்தை திருவருள்செய்வாய். (எ-று)

---

69. தனனதன தனனதன தனனதன தனனதன
தனனதன தனனதன—தனதான.

அளகநிரை குலைபவிழி குவியவளை கலகலென
வமுதமொழி பதறியழ — வணியார

மழைகொழுகு புளகமுலை குழைபவிடை துவளமிக
வமுதகிலை யருள்பரவ — வதிமோகம்

உளமுருக வருகலவி தருமகளிர் கலவிதனி
லுழலுமது தவமெனி — யொழியாதோ

உலகடைய மயிலின்மிசை நொடியளவும் வருமளவி
லுனதுமது மலரடியை — யருள்வாயே

வளையுமலை கடல்சுவற விடுபகழி வரதனருள்
மருகிமெனு பொருதருள, — ம[illegible]ம

வரியரவின் மிசைத்துயிலும் வரதசய மகள்கொடுமை
மறுகியமர் முடுகிவிடு ... திருகேதசன்
தளமுறிய வரைதகர அசுரருடல் தலைசிதற
தகனமெழ முடுகிவிடு ... வடிவேலா
தரளமணி வடமிலகு குறவர்திரு மகள்கணவ
சகலகலை யெழுதவல ... பெருமாளே.

(ப-ரை) வளையும் அலைகடல் சுவற்றிடுங் கழிவரதன் - சங்குகள் அலைகின்ற கடலானது சுவறும்படி பாணப்பிரயோகஞ்செய்த வரதனும், அருள்மருதினொடு பொருதருளும்-அருளையுடைய மருதமரத்தினுடன் போர்செய்த, அபிராமம்-அழகிய, வரியரவின் மிசைதுயிலும் வரத-ரேகைபொருந்தின சர்ப்ப சயனங்கொண்ட வரதனும், சயமகள் கொடுமை மறுகியமர் முடுகிவிடு-துர்க்கையுடன் கொடுமையுடன் சண்டைசெய்த, திருகேதசன் தளம்முறிய-ராக்கதனுடைய தண்டு துளவாடமுங்கள் முறிந்துபடவும், வரைதகர-கிரௌஞ்சமலை இடறுபடவும், அசுரர் உடல் தலைசிதற-இராக்கதர்களுடைய சரீரமும் தலையுஞ் சிதறவும், தகனம் எழமுடுகிவிடு வடிவேலா-நீறும்படி பேரதிவேகமாய் விட்டு வடித்த வேலாயுதத்தை யுடையவனே! குறவர் திருமகள் கணவ- வள்ளிநாய்ச்சியாரின் நாயகனே! சகலகலை எழுதவல் பெருமாளே-சர்வ சாஸ்திரங்களையும் எழுத வல்லமையுள்ள பெருமாளே! அளகநிலை குலைய-கூந்தல் வரிசைகெடவும், விழிகுழிய-கண்கள் குவியவும், வளைகலகலென-வளையல்கள் கலகலவென்று சத்திக்கவும், அமுதம் மொழிபதறியெழ-சொல் பதறவும், அணியாரம் அழகு ஒழுகு புளக முலைதுவளய-அழகியமுத்து மாலையினால் அழகுண்டாகின்ற பூரித்த முலையானது குழையவும், இடைதுவள-இடுப்பு அசையவும், மிகு அமுத நிலையருள்பரவ-மிகுந்த விந்து நிலையானது எங்கும் பரவவும், அதிமோகம் உளம்உருக-அதிக ஆசையால் மனமுருகவும், வருகலவிதரும் மகளிர் கலவிதனில் உழ்லு

மது கவமெதி ஒழியாதோ-வருகின்ற புணர்ச்சியைக் கொடுக்கின்ற பெண்களுடைய கலவியில் அடிப்படுவதது ஆனபுத்தி ஒழியாவோ?ஒழியாது ஆகையால்) உலகு அடைய மயிலின்மிசை நொடியளவும் வரும்-மயில்வாகனத்தின்மேல் ஆரோகணித்து சர்வலோகங்களை ஒரு நொடியள்வில் பிரதட்சிணஞ்செய்த. அளவில் உனது மது மலரடியை யருள்வாய் - அளவு சொல்லப்படாத உன்னுடைய மகரந்தம் பொருந்தின மலர்போலுந் திருவடிகளை யருளிச்செய்வாய் (எ-று).

திருவாரூர்.

70. தனன தனன தனன தனன
தனன தனன தனன தனன
தனன தனன தனன தனன—தனதான.

காமு முளரியின் மலர்முக மதிகுழல்
கனம தெனுமொரு கனிசுதி ரிளநகை
கலக மிடுவிழி கடலொரு விடமென மனதூடே

கருதி யனநடை கொடியிடை யியல்பயில்
கமழு மகிலுட னிளகிய மிருகமத
களப புளகித கிரியினு மயல்கொடு திரிவேனை

இரவு பகலற பவமற வினையற
வியலு மயல்தர விழியினில் விழிவர
விசைய முழுகிய வொருகள பதமுற மடலூடே

யெழுதவரியவள் குறமக ளிருதன
கிரியில் விழுதின மிளையவ னெனுமுரை
யினிமை பெறவது மிருபத மடைவது மொருநாளே

சுரபி மகவினை பெழுபொருள் வினவிட
மனுவி னெறிமணி யசைவுற விசைமிகு
துயரில் செவியினி லடிபட வினவுபி னதிதீது

துணிவி லிதுபிழை பெரிதென வருமனு
வுருகி யரகர சிவசிவ வெனுமகோர்
சுரபி யலம்வர விழுபுனல் பெருகிட நடுவாகப்

பரவி யதனது துயர்கொடு நடவிய
பழுதின் மதலையை யுடலிரு பிளவொடு
படிய விரதமு னடவிட மொழிபவ னருளாரூர்

பதியி லறுமுக சிவசுத கணபதி
குமர குருபர நிருபதி சரவண
பரவை முறையிட மயில்கொடு நடவிய பெருமாளே.

(பு-ரை.) சுரபிமகவினை பெழுபொருள்வினவிட எறிமணி யசைவுற-பசுவானது கன்றின் விபசனத்தால் சந்நிதிகேட்கும்படி எறிந்தமணியானது யசைய, மனுவின் துயரில் செவியினில் அடிபட-மனுநீதிச்சோழனுடைய துன்பங் கேளாத காதில்கேட்க, வினவுபின் - கேட்டபின், அதிதீதுதுணிவில் இது பிழைபெரியது எனவரும் மனுஉருகி - துணிவுற்ற இந்தக் காரியமானது மிகவும் தீயது, இக் குற்றம் பெரிது என்று ஆண்டுவந்த அரசன் மனமுருகி, அரகர சிவசிவஎனும் அதுஒரு சுரபி அலம்வரவிழி புனல்பெருகிட-பசுவானது துன்பம் மிககண்களினின்றும்நீர் சிந்த அரகர சிவசிவ என்று துன்பப்பட நடுவாக பரவி யதனது துயர்கொடு-அதற்கு நடுவே வழிபட்ட தன்னுடைய துயரத்தால், நடவிய பழுதில் மதலையை உடல் இருபிளவொடுபடிய இரதம் முன் நடவுடமொழிபவன்-நடத்தின குற்றமற்ற தன்னுடைய குமாரனுடைய

உடல் இரண்டுபிளவுபட தேர் நடத்தும்படிசொன்ன அரசனுடைய ஆளுகையிலுள்ள, ஆரூர்பதியில் - திருவாரூர் என்னும்திருநகரத்தில் எழுந்தருளியிருக்கின்ற, அறுமுக சிவசுத கணபதி குமரகுரு பரிருபதி சரவண-ஆறுமுகனே ! சிவகுமரனே ! கணபதி ! குமர ! குருபரனே ! நிருபதி ! சரவணபவனே ! பறவைமுறையிட - கடலானது ஆரவாரிக்க, மயில்கொடு நடவிய பெருமாளே - மயிலைக்கொண்டு நடத்தின சிவ சுப்பிரமணியக்கடவுளே ! சரமும் முளரியின் மலர்முகமதி - வண்டுகள் மொய்க்கின்ற தாமரைமலரைப்போலு முகமாகிய சந்திரன், குழல்சுகமும் அது என்னும்-மேகப்போன்ற கறுத்தகூந்தல், மொழிக்கனி-பழப்போலும் சொல், கதிர் இளநகை-சூரியக்கிரணம்போலும், தந்தப்பந்தி கலசமிடு விழிகடலென விடமென-கலசத்தைவிளவிக்கின்ற கண்ணானது சமுத்திரம்போலவும் விஷம்போலவும், கருதி - நினைத்து. அன நடை கொடிஇடை இயல்மயில்-அன்னம்போலும் நடை, கொடிபோலும் இடை, மயில்போலுஞ் சாயல் கமழும்அகிலுடன் இளகியமிர்கமதி களப புளகிதகிரியினும் மயல்கொடுதிரிவேனை-வாசனைவீசுகின்ற அகிலும், தளர்ந்த கஸ்தூரிகலந்த பூசித்த மூலையிலும் மயக்கக்கொண்டு திரிகின்ற என்னை, இரவுபகல் அற-இரவும்பகலும் ஒழியவும், பவம் அறவினையற- ஜென்மம் இருவினைகளையும்ஒழியவும், இயலும் மயல்தர விழியினில் விழிவர-பொருந்தின மயக்கத்தைக்கொடுக்கவும் கண்ணில் கண்வரவும், இசைய மூழ்கிய வொருகளபதமுற-பொருந்தமூழ்கின ஒப்பற்ற களபதமுடைய, மடலூடே எழுதவரியவள்-மடலில் எழுத அருமையானவள், குறமகள் வள்ளிநாய்ச்சியார் என்பவளது, இருதனகிரியில்விழு - இரண்டு ஸ்தனங்களாகிய மலையில்படிந்த, தினம் இளையவனெனுமுரை- எந்நாளும் குமரனென்று சொல்லும் சொல்லால், இனிமை பெறுவதும் இருபதம் அடைவதும் ஒருநாளே-இன்பத்தை யடைவதும் இரண்டு திருவடிகளை யடைவதும் ஒரு நாளே யாம். (ஏ-று)

பழநிமலை.

71. தனத்தனனத் தனத்தனனத்
தனத்தனனத் தனத்தனனத்
தனத்தனனத் தனத்தனனத்—தனதான

குறித்தமணிப் பணித்துகிலுந்
திருத்தியுடுத் திருட்குழலைக்
குலைத்துமுடித் திலைச்சுருளைப் பிளவோடே

குதட்டியிதழ்க் கடித்துதவிக்
கயற்கடையிட் டழைத்துமருட்
கொடுத்துணர்வைக் கெடுத்துநகக் குறிமேலே

பொறித்ததனத் தணைத்துமனச்
சருக்கினரைப் பொருட்கவரப்
புணர்ச்சிதனைப் பிணிப்படுவித் திடுமாதர்

புலத்தலையிற் செலுத்துமனப்
ப்ரமத்தையறப் ப்ரத்தறமுறப்
பிரித்தருளிற் திருக்கழலைத் தருவாயே

பறித்ததலைத் திருட்டமணக்
குருக் களசட் டுருக்களுடைப்
புழுக்கழுவக் கழுக்கள்புகத் திருநீறு

பரப்புமனத் திருப்பதிகக்
கனற்புனலிற் கனத்தசொலைப்
படத்தெழுதித் திரட்டுபுகழ்க் கவிராஜ

செறித்திருள்சிக் கதிற்றுயிலுற்
றுகப்பனெனத் தகப்பனெனச்
சிறக்கவுரைத் தருட்கருணைப் பெருவாழ்வே

திசைக்கருணைப் பதிக்குளெனைத்
தடுத்தடிமைப் படுத்தியருட்
டிருப்பழநிப் பதிக்குமரப் பெருமாளே.

(ப-ரை.) பறித்த தலை மொட்டைத்தலையுடைய, திருட்டு அமண க்குருக்கள்-கள்ளத்தன்மையையுடைய குருக்களுடைய, உருக்களிடை-சரீரத்தினுள், புழுக்கள் உக்கழுக்கள்புக-புழுக்கள் சிந்தவும் அவைகளைத் தின்ன கழுகுகள்வரவும், திருநீறுபரப்பும் - வெண்திருநீற்றை விரிக்கின்ற, மனம்-நெஞ்சத்தையுடைய, திருப்பதிகம்-திருப்பதிகத்தில், கனத்தசொல்லை - உயர்ந்த பதிகத்தை, படத்தெழுதிகனம்புனலில் திரட்டுபுகழ் கவிராசே-வட்டில் எழுதி செருப்பிலும் ஆற்றிலுமிட்டுச் சேர்த்தழகையுடைய கவிராசனே! செறித்து இருள்சிக்கதில்துயிலுற்று உகப்பன்என-நிறைத்து இருட்பிரிவில்தூங்கி சந்தோஷிப்பேனென்று சிறக்கவுரைத்தருட் கருணைப்பெருவாழ்வே - மெய்ப்படசொல்லி யருளினகருணைவாழ்வே, திசைக்கு அருணைப்பதிக்குள் எனைத்தடுத்து-நாற்றிசையில்சிறந்த அருணாசலத்தில் என்னைத்தடுத்து, அடிமைப்படுத்தி-அடியவனாக்கி! அருள்திருப்பழனிப் பதிக்குமரப்பெருமாளே - அருளையுடைய திருப்பழநியம்பதியில் எழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே! குறித்தமணிப்பணித்துகிலைதிருத்தி உடுத்து-சொல்லப்பட்ட அழகிய ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் தரித்து, இருட்குழலைக்குலைத்து- அந்தகாரம்போன்ற கூந்தலைச்சரித்து, முடித்து-முடித்து, இலைச்சுருளை பிணவோடுகுதட்டி-வெற்றிலைப்பாக்கைத்தின்று, இதழ் கடித்து உதவி-அதரபானத்தைக்கொடுத்து கயல்கடையிட்டு அழைத்து - கயல்மீனைப்போலும் கடைக்கண்காட்டி யழைத்து மருள்கொடுத்து-மடக்கத்தை உண்டா

க்கி, உணர்வைக்கொடுத்து-புத்தியைய நாசமாக்கி, நகக்கிரிமேலேபொறித்தனத்து அணைத்து- நகக்குறியைக்காட்டுகின்ற ஸ்தனங்களில் அணைத்து, மனஞ்செருக்கினர் கைப்பொருள் கவர-மனவிருமாப்படைந்தவர்களுடைய திரவியங்களை அபகரிக்க, புணர்ச்சிதனை பிணிப்படுவித்திடு மாதர்-புணர்ச்சியில் சேர்ப்பித்தபெண்களுடைய, புலத்தலையிற்செலுத்தும்-இடத்தில் செலுத்துகின்ற, மனப்பிரமத்தை-மனமயக்கத்தை, பிரசித்தமுற-நான் கீர்த்தியடைய, அறபிரித்தருளி-முழுமையும் நீக்கி திருக்கழலைதருவாய்-திருவடிகளைக்கொடுப்பாய் (எ-று.)

திருப்பிரமபுரம்.

72\. தனதனதந்தன தந்தனதந்தன
தனதனதந்தன தந்தனதந்தன
தனதனதந்தன தந்தனதந்தன—தனதான.

தருவினெகிழ்ந்தும ருண்டுவெருண்டுறு
சமயமுமென்றலை யென்றுவரும்படி.
தலைவருநின்றுக லங்கிவிரும்பிய தமிழ்கூறுஞ்

சலிகையுநன்றியும் வென்றியுமங்குள
பெருமைகளுங்கன முந்துணமும்பயில்
சரவணமும்பொறை யும்புகழுந்திகழ் தனிவேலும்

விருதுதுலங்குசி கண்டியுமண்டரு
முருகிவணங்கவ ரும்பதமும்பல
விதரணமுந்திற முந்தரமுந்தினை புனமாலும்

ம்ருகமதகுங்கும கொங்கைபுகொங்கடி
வருடிமணந்துபு ணர்ந்துதவும்பல
விசயமுமன்பி லொழிந்துமொழிந்திபல் புகல்வேனோ

கருதியிலங்கைய ழிந்துவிழும்படி
அவுணரடங்கம றிந்துவிழும்படி
கதிரவனிந்துவி ளங்கிவரும்படி விடுமாயன்

கடகரியஞ்சிந டுங்கமுறிந்திட
மடுவில்வந்துத வும்புயமந்திரன்
கருணைமுகுந்தன ரங்கன்வருஞ்சக டறமோதி

மருதுகுலுங்கம லங்கமுனிந்திடு
வரவனலங்கல் புனைந்தருளுங்குழல்
வடிவனெடுங்கடல் மங்கவொரம்பு தொடுமீளி

மருகபுனந்தர னுங்கவனொன்றிய
பிரமபுரந்தனி லுங்குகனென்பவர்
மனமதிலும்பரி வொன்றியமர்ந்தருள் பெருமாளே.

(ப-ரை.) கருதியிலங்கை அழிந்துவிழும்படி-நினைத்து இலங்கைப் பட்டணமானது அழியுமாறும், அவுணர் அடங்கமறிந்துவிழும்படி-இராக்கதர்கள் ஒருங்கே முறிந்துவிழுமாறும், கதிரவன் இந்து விளங்கிவரும் படி-சூரியனும் சந்திரனும் விளங்கிக்கொண்டுவருமாறும், விடுமாயன்-பாணப்பிரயோகஞ்செய்த மாயனும், கடகரி அஞ்சி நடுங்க முறிந்திட-மதங்கொண்ட யானை பயந்து நடுங்கி முறிய, மடுவினில்வந்து உதவும் புயமந்திரன் - மடுவில் வந்து காத்த மந்தரமலை போலும் புயத்தையுடையவனும், கருணை முகுந்தன் - கிருபையையுடைய முகுந்தனும், அரங்கன் - திருவரங்கனும், வருஞ்சகடு அறமோதி - வந்தசகடம் முழுமையும்மோதி, மருது குலுங்க மலங்க முனிந்திடு - மருது குலுங்கும்படியும் ஆடும்படியும் கோபங்கொண்ட, வரவன் - வரதன், அலங்கல் புனைந்தருளும் குழல்வடிவன்-மாலையை தரிக்கின்ற பாஞ்சசன்னியத்தானும், நெடுங்கடல் மங்க ஒரு அம்புதொடும் மீளி-பெரிய கடல் வற்ற ஒரு பாணம் விட்ட வெற்றியா

யுடையவனுமான விஷ்ணுமூர்த்தியின், மருக-மருமகனே! புரந்தரனும் தவமொன்றி, பிரமபுரந்தனிலும்-இந்திரன்பொருந்தின தவஞ்செய்தசீகாழியிலும் குகன் என்பவர் மனந்தனிலும்-குகனே என்று துதிசெய்பவருடைய நெஞ்சத்திலும், பரிவு ஒன்றி அமர்ந்தருள் பெருமாளே-ஆசை பொருந்தி எழுந்தருளி யிருக்கின்றமுருகக்கடவுளே; தருவின் நெகிழ்ந்து-தருவைவிட நெகிழ்ச்சியை யடைந்து, மருண்டு-மருட்சியை யடைந்து, வெருண்டுறு சமயமும்-வெருட்சியடைந்த சமயத்திலும், மென்துகிலென்று உருப்படி - மிருதுவான துலாஎன்று வருமாறு, தலைவரும் - தலைவரும், நின்றுகலங்கி-கலக்கங்கொண்டு, விரும்பிய தமிழ்கூறும் - விரும்பின தமிழானது சொல்லுகின்ற, சவிகையும்-பெருமையும், நன்றியும் வென்றியும் - நன்மையும் வெற்றியும், அங்குள்ளபெருமைகளும்-அவ்விடத்திலுள்ளபெருமைகளும், கனமும் குணமும்பயில் கார்முகில் குணமும்பழகுகின்ற, சரவணமும்-சரவணமும், பொறையும்புகழும் திகழ் தனிவேலும்-பொறுமையும் கீர்த்தியும் விளங்குகின்ற ஒப்பற்ற வேலாயுதமும், விருதுதுலங்கு சிகண்டியும்-விருதுகள் துலங்குகின்ற மயூரகண்டியும், அண்டரும் உருகிவணங்கி-தேர்களும் மனமுருகிப்பணிந்து, வரும்-வருகின்ற, பதமும்-திருவடிகளும், பல்தாரணமும்-பலவகைப்பட்ட விவேகமும், நிறமும்தர்மமும் - நிறமையும நன்மையும, திகழப்புனமாதும் - வள்ளிநாய்ச்சியாரும், மிர்கமதகுங்குமகொங்கையும்-கஸ்தூரி குங்குமம்பூசியதனங்களும், தொந்தஅடிவருடி-தொந்தமாதம்பிடித்து, புணர்ந்து-புணர்ந்துவாசித்துக் கலந்து, உதவும்-உதவுகின்ற, பலவிசயமும்-பலவெற்றியும, அன்பில்ஒழிந்து இயல் புகல்வேனோ-ஆசையில்லாமலொழிந்து சொல்லி உன்னுடைய லட்சணத்தை போற்றுவேனோ.

---

73. தனதனதனதன தந்ததானன
தனதனதனதன தந்ததானன
தனதனதனதன தந்ததானன—தந்ததான.

கனைகடல்வயிறு குழம்பிவாய்விட
வடகனககிரி கம்பமாய்நட
கணபணவிகடித வெங்கராளபு — யங்கராசன்

கயிறெனவமரா னந்தகோடியு
முறைமுறையடுத்துக் கடைந்தகாலொரு
கதறியுலகைவி ழுங்குமேகமொ — ழுங்குபோல

வினைமதகரிகளு மெண்டிசாமுக
கிரிகளும்வெருவிட வண்டகோளகை
வெடிபடவெவ்வரையும் விஞ்சிமேலிடு — நஞ்சுபோல

விடுகுழலியனலு மளந்தகாமுக
குயிர்பலிகவர்வறு பஞ்சபாதக
வழிவலைமகளிரொ டன்புகூர்வதொ — ழிந்திடாதோ

முனைபெறவலயம ணிந்தமோகர
நிசிசரர்கடகமு றிந்துதூளெழ
முகிலினம்வெருவவி ருண்டதாரக — னஞ்சமீன

முழுகியதிமிரத ரங்கசாகர
முறையிடவிமையவர் தங்களூர்புக
முதுகிரியுருவமு னிந்தசேவக — செம்பொன்

அலையகனகவிப வங்கொள்கோபுர
வருணையிலுறையும ருந்துணைமுலை
பயிலவனிதைத ருங்குமாரவி — லங்குமார்ப

வடவியில் வடிவு கரந்துபோய் ஒரு
குறமகள் பிறகு திரிந்த காமுக
வரிகர பிரமபுரந்தராதிபர் தம்பிரானே.

(ப-ரை.) முனைபெறவலயம் அணிந்த யோகாசிசிகரர்-முனை பெற்றவலக்கட்கம் அணிந்த உக்கிரத்தையுடைய இராக்கதர்களுடைய, கட்கம் முறிந்து தூள்எழ-கட்கங்கெட்டு தூளாகவும், முகில் இனம் வெருவ-மேகக்கூட்டங்கள் பயப்படவும், இருண்ட தாரகன் அஞ்ச-கறுத்த சரீரத்தையுடைய தாரகாசுரன் வெருவவும், மீனம் முழுகிய திமிங்கசாகரம் முறையிட-மீன்கள் முழுகின இருட்டையும் அலைகளையுமுடைய சமுத்திரம் கொதிக்கவும், இமையவர் தங்கள் ஊர்புக-தேவர்கள் தங்களுடைய தேவலோகத்தையடையவும், முதுகிரியுருவ-கிரௌஞ்சமலை தொளைப்பட்டு உடுருவவும், முனிந்தசேவக-கோபங்கொண்டு சண்டைசெய்த சேவகனே! செம்பொன்பேரு அனைய-சிவந்த பொன்மயமான பேருமலையையொத்த, கனகவிபவங்கொள் கோபுர-கனக லட்சணத்தைக்கொண்டிருக்கின்ற கோபுரமுள்ள, அருணையில் உறையும் மருந்து திருவண்ணாமலையில் வாசஞ்செய்கின்ற மலைமருந்தான, உணாமுலை அபிநவ வனிதைதரும் குமரா! உண்ணாமுலையென்னும் புதுமையுள்ள உமாதேவிபெற்ற குமாரா! இலங்குபார்வை-விளங்குகின்ற பார்வையுடையவனே! அடவியில் வடிவுகரந்துபோய்-காட்டில் சரீரத்தை மாற்றிச் சென்று, ஒரு குறமகள் பிறகு திரிந்தகாமுக-ஒப்பற்ற வள்ளிநாய்ச்சியாருக்குப் பிறகே திரிந்தமோக முள்ளவனே! அரிகர பிரமபுரந்தராதிபர் தம்பிரானே-விஷ்ணு, பிரம, இந்திராதிகளுடைய தலைவர்களுக்குத் தலைவனே! கனைகடல்வயிறு குழம்பி அலற-ஒலிக்கின்ற சமுத்திரமானது வயிறுகுழம்பி அலறவும், படமேருவை [illegible]-பெருமலையை மத்தாக நட, [illegible] புயங்கராசன் கயிறென-பருத்த படத்தையும் [illegible] வாசு

கியைக் கயிறுக்கிக்கொண்டு, அமரர் அனந்த கோடியும் முறைமுறை அமுதுகடைந்தாள் - அனேககோடி தேவர்கள் வரிசை வரிசையாக அமிர்தங்கடைந்தாளில். ஒருகதறி இவ்வுலகை விழுங்கும்மேக வொழுங்குபோல-ஒருவகையாகக் கர்ச்சித்து இந்தஉலகத்தை விழுங்குகின்ற மேக வரிசையைப்போல, விளைமதகரிகளும் - வேலையிலுள்ள மதங்கொண்ட திக்கஜங்களும், எண்திசாமுககிரிகளும்-அஷ்டகுல வெற்புகளும், வெருவி - பயடப்பட, அண்டகோளகை வெடிபட-ஆசாயவுருண்டை வெடிக்கவும், எவரையும் விஞ்சிமேலிடு நஞ்சுபோல-யாவரையும் அதிகரித்து மேற்படுகின்ற ஆலகாலவிஷத்தைப்போல, இடுகுழையளாவுமந்த விழிவிலைகாமுகர்-காதுவரைக்கும் நீண்ட கண்களாகிய வலைகளையுடைய காமிகளான, உயிர்பலிகவர்வுறு பஞ்சபாதகம்-உயிர்ப்பலியைக் கொள்ளுகின்ற பஞ்சபாதகத்தையுடைய, மகளிரொடு அன்புகூர்வது ஒழிந்திடாதோ-பெண்களுடன் ஆசைகொள்வது நீங்காதோ,

திருக்குமரேசம்

74. தைபதனதானத் — தனதான.

துள்ளுமதவேள்கைக் கணையாலே
தொல்லைநெடுநீலக் கடலாலே

மெள்ளவருசோலைக் குயிலாலே
மெய்யுருகுவேனைத் தழுவாயோ

தெள்ளுதமிழ்பாடத் தெளிவோனே
செய்யகுமரேசத் திறலோனே

வள்ளல்தொழுஞானக் கழலோனே
வள்ளிமணவாளப் பெருமானே

(ப-ரை) தெள்ளுதமிழ் பாடத் தெளிவோனே - தெளிந்த தமிழ் பாடல்களைப் பாடத்தெளிந்தவனே! செய்யகுமரேச திறலோனே-வள ப்பமுஉள திருக்குமரேயத்திலுள்ள வல்லவனே! வள்ளல்தொழு ஞான கழலோனே சிவபெருமான் துதிக்கின்ற ஞானபத முள்ளவனே! வள்ளிமணவாளப்பெருமாளே-வள்ளிநாச்சியாருக்கு நாயகனான இளைய குமரனே! துள்ளும்மதவேள்கைக்கணையாலே-துள்ளுகின்ற மன்மதனு டைய கையம்பினால், தொல்லைநெடு நீலகடலால்-பழமையான நீண்ட நீலக்கடலாலும், நிறவண்ணம்பேர்மெள்ளவருசோலைக்குயிலால்-மிருது வாகவருகின்றசோலையிலுள்ள குயிலோசையின் மாதினாலும், மெய்யுருகும்-சரீரம் இளகுகின்ற, எனைத்தழுவாயோ-என்னைத்தழுவுவாய்.

தலைவி படும்பாட்டைத் தலைவருக்கு அறிவித்ததென்றுணர்க.

திம்பாபுரம்.

75. தந்ததனதான தந்ததனதான
தந்ததனதான தனதான.

அஞ்சிவிதபூத முங்கரணநாலு
மந்திபகலாயது மறியாத
வந்தநடுவாதி யொன்றுமிலதான
வந்தவொருவீடு பெறுமாறு
மஞ்சுதவழ்சார லஞ்சயிலவேடர்
மங்கைதனைநாடி வனமீது
வந்தசரணார விந்தமதுபாட
வண்டமிழ்விநோத மருள்வாயே
குஞ்சரகலாப வஞ்சிபபிராமி
குங்குமபடீர வதிரேக

கும்பதடமீது சென்றணையுமாறு
குன்றுதடமாற இகல்கோப
வெஞ்சமரசூர னெஞ்சுபகைதீர
வென்றிவடிவேலை விடுவோனே
விம்பமதில்சூழு நிம்பபுரவாண
விண்டலமகீபர் பெருமாளே.

(ப-ரை) குஞ்சரகலாபவஞ்சிஅபிராமி-பெண்யானைபோலும், மயில் போலுமுள்ள வஞ்சியும், அபிராமியுமானவளுடைய, குங்குமபடீர அதிரேககும்பதடமீது-குங்குமச்சலவையின் வரிகள் பொருந்தின கும்பதடத்தின்மேல், சென்று அணையும் ஆறு - போய்ச் சேர்வதுபோற், குன்று தடமாற கிரௌஞ்சகிரியானது மயங்கவும், இகல்கோபம்-மிக்க கோபத்தைபுடைய, வெஞ்சமரசூரன் நெஞ்சு பகைதீர-கொடிய சண்டைசெய்தலையுடைய சூரபத்மாவின் மனப்பகை ஒழியவும், வென்றி வடிவேலை விடுவோனே-வெற்றிபெற்ற வேலாயுதத்தைப் பிரயோகஞ் செய்தவனே! விம்பமதில்சூழும் - விம்பம்போலும் மதில்களால் சூழப் பட்ட, நிம்பபுரவாண-நிம்பபுரத்தின்கண் வாழ்பவனே! விண்தலமகீபர் பெருமாளே - தேவர்களுக்குத்தலைவனே! அஞ்சுவிதபூதமும் கரணம் நாலும் பஞ்சபூதங்களும நான்கு அந்தக்கரணங்களும், அந்திபகல்-இர வும்பகலும், யாதும் அறியாத - எல்லாவற்றையும் உணராத, அதுசய்கடு ஆகிஒன்றும் இலது ஆன- ஆதிமத்யாந்தமென்பது இல்லாத வஸ்து வான, அச்சொரு வீடுபெறுமாறு-அந்தஒப்பற்றதனியான மோட்சவீட் டை யடையுமபொருட்டு, மஞ்சுதவழ்சாரல் அஞ்சயிலவேடர் மங்கை தனைநாடி-மேகங்கள் தவழ்கின்ற சாரல்களையுடைய அழகியமலைவேடர் பெண்ணாகிய வள்ளிநாச்சியாரை விரும்பி, வனமீதுவந்த-தினைப் புனத்திற் சேர்ந்த, சரணாரவிந்தம் அதுபாட - பாததாமரைகளைப் பாடவ

தற்கு, வண்டமிழ் விநோதம் அருள்வாய்-வளப்பம்பொருந்திய தமிழின் விநோதத்தை எனக்குத் திருவருள்செய்யவேண்டும். (எ-று)

---

76. தனனதனத்தத் தனந்தனந்தன
தனனதனத்தத் தனந்தனந்தன
தனனதனத்தத் தனந்தனந்தன — தனதான.

முகமுமதினுக்கிடப் பெருங்கருங்குழல்
முகிலையிகழ்ந்துச் செருந்திசண்பக
முடியைநிறைத்துப புறம்புவந்தடி — முன்பினுக

முலைபசைந்துந் திரிந்துமுன்றரி
கலைநெகிழ்ந்துப் புனைந்துவஞ்சக
முறுவல்விளைத்துத் துவளிந்துக்கமொடு — முன்றிலூடே

மகளிர்விருப்பிற் சிறந்தபந்தியின
மதனனுநிற்கக் கொழுந்துவெவ்வளவிடாது
வடவைவெயிற்கத் திரண்டபெண்டிலை — வண்டுபாட

மலபரித்துங் கரந்ததென்றலு
நிலைகுலையக்கொட்டிடப்புண்செய்ய
மயிலபனிக்குக் குழைந்துகிர்சுகம — லங்கலாமோ

பகலவன்மட்கப் புகுந்துசந்தர
ககனமுரட்டைப் பிளந்துமந்தர
பருவரையொக்கச் சுழன்றுமின்புர — தங்குபோக

பணமணிபட்சத் துறங்கமுன்றனி
முடிகிடத்தக் கழிந்துவிந்தெழு
பரவையாற்றப் ப்ரபஞ்சநின்றுப சந்துபாடக்

குகனெனமுக்கட் சயம்புவும்ப்ரிய
மிகவசுரர்க்குக் குரம்பைவந்திட
விகலமர்குத்திப் பொருங்கொடும்படை வென்றவேளே

குழையணியொப்பற் றிருந்தசங்கரி
கவுரியெடுத்துப் பரிந்துகொங்கையி
லமுதையளிக்கத் தெளிந்துகொண்டருள் தம்பிரானே

(ப-ரை) பகலவன்மட்கபுகுந்து-சூரியனுடைய ஒளிமழுங்கச்செ ன்று, கந்தரம்ககனம் முகட்டைப்பிளந்து-மேகமுள்ள ஆகாயஉச்சியைப் பிளந்து, மந்தரபருவரை ஒக்கசுழன்று-மந்திரமென்னும் பெரிய மலையை யொப்பாகச் சுழன்று, பின்பு பறந்துபோக-பின்னேபறந்துபோகவும், பணமணி பட்சத்து உறங்க-ஆதிசேஷன் ஆசையுடன்உறங்கவும், முன் தனி முடிக்கிடத்த கழிந்து-முன்னே தனிமையாக உக்கிரத்தய்யும் படிபோய், இந்துஎழுபரவை அரற்ற-சந்திரன் வெளிப்படுகின்ற சமுத் திரம் சர்ச்சிக்க, பிரபஞ்சம் நின்று பயந்துபாட-உலகத்தார்களெல்லாம் பயந்துபாட, குகன்என முக்கட்சயம்புவும் பிரியமிக-சுப்பிரமணியனெ ன்று பரமசிவனும் சந்தோஷிக்க, அசுரர்க்கு குரம்பைவந்திட-ராக்கதர் களுக்குக் குரம்பைவர, இகல் அமர் குத்திபொரும் கொடும்படைவென் றவேளே-சண்டைசெய்துகொடியசேனைகளைவென்றமுருகனே! குழை யணிஒப்பற்று இருந்த சங்கரி கவுரிஎடுத்து-ஒப்பற்ற குண்டலமுள்ள சங்கரியும், கௌரியுமான பரமேஸ்வரியானவள் எடுத்து, பரிந்து-ஆசை கொண்டு, கொங்கையின் அமுதை அளிக்க-ஸ்தனங்களிலிருந்தும்வந்த பாலைக்கொடுக்க, தெளிந்துகொண்டருள் தம்பிரானே - தெளிவோடு

உண்டதலைவனே! முகமும்பிணக்கி-முகத்தைமினுக்கியும்,பெருங்கருங் குழல் முகிலை அவிழ்த்து-பெரிய கறுத்த மேகம்போன்ற கூந்தலை அவிழ்த்தும், செருந்திசண்பகமுடியை நிறைத்துசெருந்திசண்பகம்என்னும் மலர்களை முடிநிறையச் சூடிக்கொண்டு, புறம்புவந்து-பிறகேவந்து, அடிபின் ஆக-முன்னும்பின்னுமாய் அடிபோட்டு. முலையை அசைத்து திரிந்து முலையை அசைத்து உலாவி, முன் துகிலை நெகிழ்த்து-முன்னே அணிந்துகொண்டிருக்கின்ற சேலையைவழுவவிட்டு, புனைந்து-தரித்து, வஞ்சக முறுவல் விளைத்து-கபட சிரிப்பைச்சிரித்து, துணிந்து-துணிந்து, தம்தெருமுன்றில் ஊடு-தம்முடைய தெரு வாசற்படியின் முற்றத்தில், மகளிர் விருப்பின் சிறந்த பந்தியின்-பெண்களுடைய ஆசையின் மேம்பட்ட வரிசையின்கண், மதனனும் நிற்க-மன்மதனும் காத்துக்கொண்டிருக்க, கொழுந்து வெண்பிறை - கொழுந்து விட்டுக் கிளம்பும் வெள்ளிய சந்திரனானவன், வடவையெரிக்க-வடவாமுகாக்கினியைப்போல் எரிக்க, திரண்டு மன்மதனை வண்டுபாட,வண்டுகள்சேர்ந்து ராகம்பாட, மலயநிலத்துகரந்த தென்றலும்-மலயாசலத்தில்ஒளிந்திருந்த தென்றற்காற்றும், நிலைகுலையத்தொட்டு உடம்பு புண்செய - என்னுடைய உன்னம நிலையைக் குலையும்படிசெய்து உடம்பைப் புண்ணாக்கி மயலை அளிக்க-மயக்கத்தைக்கொடுக்க, சிந்தை குழைந்துமயங்கலாமோ-மனமானது தடுமாறி மயங்கத்தகுமோ ? (எ-று)

திருவருணை.

77. தனதனத் தானனத் தனதனத் தானனத்
தனதனத் தானனத்—தனதான.

கயல்விழித் தேனெனை செயலழித் தாபெனக்
கனவிகெட் டேனெனப் பெருமாது

கருறுடுந் ராவெனப் புகல்வரப் பாவெனக்
கதறிடப் பாடையிற் றலைமீதே
பயில்குலத் தோரமுப் பழைப்பட் டாரமுப்
பறைகள்கொட் டாடவச் சமனரும்
பரிபகைப் பாசம்விட் டெரியுமப் போதெனைப்
பரிகரித் தாடையைத் தாவேணும்
அயிலிடைச் சேவல்கைப் பரிதரத் தோகையுற்
றருணையிற் கோபுரத் துறைவோனே
யமரரத் தாசிறு குமரிநட் பாகனத்
தரியசொற் பாவலர்க் கெளியோனே
புயலிளைப் பாறுபொற் சயிலமெய்ச் சாரலிற்
புனமறப் பாவையைப் புணர்வோனே
பொடிபடப் பூதரத் தொடுகடற் சூரனைப்
பொருமுழுச் சேவகப் பெருமாளே

(ப-ரை.) அயல் இடை சேவல்கைபரிதா-சமீபத்தில் சேவல் கொடி கையிலாடவும், தோகையுற்று அருணையில் கோபுரத்து உறைவோனே-மயில் வாகனத்தின்மேல் ஆரோகணித்து திருவண்ணாமலையின்கோபுரத்தில் வாசஞ் செய்பவனே, அமரர் அத்தா-தேவர்களுக்குத் தலைவனே, சிறுகுமரி நட்பா-தெய்வயானைக்கு இஷ்டனே! கனத்து அரியசொல் பாவலர்க்கு எளியோனே-கனத்து அருமையான சொல்லையுடைய வித்வசிரோன்மணிகளுக்கு எளியவனே! புயல் இளைப் பாறு பொன்சயிலமெய்ச்சாரலில்-மேகங்கள் இளைப்பாறுகின்ற பொன் மலையின் சாரலின்கண், புனமறப்பாவையைப் புணர்வோனே - தினைப் புனத்தில் அழகான வள்ளி நாய்ச்சியாரைச் சேர்பவனே, பொடி

பட பூகாத்தொடுடல் ஞானவொரும்-பூதலமே பொடிபட்டென்ன சேஷசமுத்திரமுடைய ஞானவனை வெல்லும்முழுசேவகம்பெருவாளே-முழுசேவகத்தையுடைய இளையபெருமாளே; கயல்விழித்தேனை - சேல் கெண்டை போலுந்தேனுன என்னுடைய மனைவியானவள் என்னை, செயல் ஒழித்தாயென்-செய்கையை ஒழித்துவிட்டாயேயெனவும், கண வகெட்டேன் என-நாயகனான் கெட்டுவிட்டேன்எனவும், பெரும்மாது-தாயானவள், கருதுபுத்திராவென - நினைக்கின்றபுத்திரனே எனவும், புதல்வர் அப்பாஎன-பிள்ளைகள் அப்பாவெனவும், கதறிட-அழ, பாடையில்தலைமீதே, பாடையிலேற்றி தலையின்மேல் தூக்கிக்கொண்டு, பயில் குலத்தார்அழ-பழகின உறவினர் அழவும், பழையநட்பார்அழ - பழயசி னேகர்கள்அழவும், பறைகள்கொட்டிவர- வாத்தியங்களை வாசித்துக்கொண்டுவரவும், சமனும் - எமனும், பரியகைபாசம்விட்டு எறியும் அப்போது-பெருத்த பாசக்கயிற்றைவீசியெறிகிற அந்தகாலத்தில், என்னைப் பரிகரித்தாள் தயைபரவேணும்-என்னுடைய குற்றங்களை யெல்லாம்பரிகாரஞ்செய்து ஆண்டருள்கின்றதயவைத் திருவருள்செப்ப வேண்டும்.

---

78. தானதன தானத்த தானதன தானத்த
தானதன தானத்த—தனதான.

ஆலுமயில் போலொத்த தோகையர்க ளோடொத்த
வாடவர மேலிட்ட முலைமீதே
யானைநுதி மேலிட்டு விழிகளின் மேகித்து
மாமைநடை யாரிக்கு மொழிபார்பால்
மாலொடயர் போகத்தி லேயுருகி மோகித்தும்
வாடுமெனை நீசித்த மகிழ்வாகி

மாகமுக டாவுக்ர வேகமயி லேயுற்று
வாழ்வுபெற வேமுத்தி — தருவாயே
நாலுமுக வேதற்கு மாலிலையின் மாயற்கு
நாடவரி யார்பெற்ற — வொருபாலா
நாகமுடி மீதுற்ற ஞாலமதிலே பத்தர்
ஞானமுனி வோர்கட்கு — மிறையோனே
வேலைவிழி வேடச்சி யோடமரர் மாதொக்க
வீறருளை மால்வெற்பி — லுறைவோனே
வீரமுடனேயுற்ற சூர்கிளை வீழ்விக்க
வேலைமிக வேவிட்ட — பெருமாளே.

(ப-ரை.) நாலுமுகவேதற்கும் ஆலிலையில் மாயற்கும் நாட அரியார் பெற்ற ஒருபாலா- நான்குமுகங்களையுடையபிரமனுக்கும் ஆலிலையில்பள்ளிகொண்ட விஷ்ணுவுக்கும் நாடுவதற்கு அருமையான வரான பரமசிவன்பெற்றருளிய புத்திரனே! நாகமுடிமீதுஉற்ற ஞாலமதில்-ஆதிசேஷனால் தாங்கப்பட்ட உலகத்தில், பத்தர் ஞானமுனிவோர்கட்கும் இறையோனே! பத்தர்கள், ஞானிகள், முனிவர்கள் ஆகிய இவர்களுக்குத்தலைவனே! வேலைவிழி வேடச்சியோடு அமரமாது ஒக்க-சமுத்திரம் போலுங்கண்ணை யுடையவள்ளி நாய்ச்சியாருடன்தெய்வயானையும் சமேதராய்வீறு அருளையால் வெற்பில்உறைவோனே-கீர்த்திபெற்ற பெரிய திருவண்ணாமலையில் வாசஞ்செய்பவனே! வீரமுடனேயுற்ற-பராக்கிரமத்துடன்வந்த, சூர்கிளைவீழ்விக்க - அசுரர்குலத்தை மடிவிக்க, வேலைமிகவே விட்ட பெருமாளே வேலாயுதத்தை பிரயோகஞ்செய்த இளைய பெருமாளே! ஆலும்மயில் ஒத்த கோதையர்கள் - ஆடுகின்ற மயில்போன்ற பெண்கள், சேர்த்த ஆர்ப்போல் பேவிட்ட முலைமீது-மிகவும் முத்

தாரம் போட்ட முலையின்மேல், ஆன துகில்இட்டு வீதிதனில் நிற்கும்- பொருந்தினவஸ்திரந்தரித்து தெருவில் நிற்கின்ற, அமைநடையார் இக்குமொழியார் பால் - ஆமைபோல் நடப்பவரும் கரும்புபோல் சொல்லுயுடைய வருமான அவர்களிடத்தில், மாலொடு அயர்போசத்திலேகுலாவி-அசுரர் குலத்தை மடிவிக்க, சித்தம்வாடும் என்னை - திமைமும்மை வாட்டங் கொள்ளுகின்ற என்னை, நீ சித்தம்மகிழ்வாகி-நீ மனம்மகிழ்ந்து, மாகமுகடா உக்கிரவேகமதில்உற்று-ஆகாயத்தின் உச்சியில் வேகமாய்ச் செல்கின்ற மயில்வாகனத்தின்மேல் ஆரோகணித்து, வாழ்வுபெற முத்திதருவாய்-நான் சுகவாழ்க்கையையடைய மோட்சத்தைக்கொடுப்பாய்.

---

76. தானதனதானத் தானதனதானத்
தானதனதானத்—தந்ததானு.

ஆலவிழிநீலத் தாலதராபானத்
தாலளகபாரக் கொண்டலாலே

யாரநகையால்விற் போலுநுதலால்விந்
தாரநடையால்வந் கொங்கையாலே

சாலமயலாகிக் காலநிரிசூலத்
தாலிறுகுபாசத் தும்பினாலே

தாழ்விலுயிர்பாழ்பட் டுழ்வினைவிடாமற்
சாருமுனிவோவற் கொண்டிடாதோ

சோலைநருகாவிற் கோலமாமனைத்
தோலியுமவாசக் கொண்டவாழ்வே

சோதிமுருகா நித்தா பழயஞாலச்
சோணகிரி வீதிக் கந்தவேளே
பாலககலாபக் கோமளமயூரப்
பாகவுமைபாகத் தன்குமாரா
பாதமலர்மீதிற் போதமலர் தூவிப்
பாடுமவர்தோழத் தம்பிரானே.

(ப-ரை.) சோலைதருகானில் கோலமறமானை தோளில் உறவாக கொண்டவாழ்வே-சோலையைப்பெற்ற காட்டில் தன்னுடைய கோலத்தைவிட்டு வள்ளியைத் தோளில் தூக்கிக்கொண்டவனே! சோதிமுருகா-தேஜோமயமானமுருகனே! நித்தா-அழியாதவனே! பழயஞாலச் சோணகிரிவீதி கந்தவேளே - பழைய வுலகத்தில் (சுவர்ணமயமாக விளங்கு) திருவருணைவாழ் கந்தப்பனே! பாலககலாப கோமள மயூர-இளமையான தோகையையுடைய பச்சைநிறமுள்ள மயில்வாகனத்திலாரோகணிப்பவனே! உமைபாகத்தன்குமாரா - உமாதேவியை இடதுபாகத்திலுள்ள பரமேசுரனுடையதிருக்குமரனே! பாதமலர்மீதில் போதமலர்தூவி பாடுமவர்தோழத்தம்பிரானே - திருவடிகளில்ஞானமலரையிட்டுவணங்குகின்றவர்களுக்கு தலைவனே! ஆலவிழி நீலத்தால் - ஆலகாலவிஷத்தைப்போல நீலநிறத்தையுடைய கண்களினாலும் அதரபானத்தால்-இதழ் அமுதத்தாலும், அளகபாரகொண்டலால்-மேகம்போன்ற, கூந்தலாலும், ஆரநகையால்-முத்தாரம்போன்ற நகையாலும், வில்போலும் நுதலால்-வில்லைப்போன்ற நெற்றியினாலும் வித்தார நடையால் - டம்பமான நடையினாலும், வல்கொங்கையால்-சொக்கட்டான் காய்போன்ற ஸ்தனங்களாலும், சாலமயல் ஆகி-மிகவும் மயங்கி, காலதிரிசூலத்தால் ஒருகுபாசதரன் (?) கூற்றுவனுடைய திரிமுக சூலத்தாலும்! நெருங்குகின்ற பாசக்கயிற்றாலும், சாகுமுனின்வலக்கொண்டிடாயோநான் செத்துப்போகுமுன்னே அடிமைக்கொள்ளமாட்டாயோ. (எ-று)

பொது.

80. தானந்தனதன தானந்தனதன
தானந்தனதன—தனதான.

தீயும்பவனமு நீருங்கரணியும்
வானுஞ்செறிதரு பசுபாசத்
தேங்கனிநிலை யேயென்றிருவினை
நீருந்திறவினை யறியாதே
ஓயும்படியறு நூறும்பதுமுதல்
நாலும்பதுமிரு பதினாறும்
ஓடுஞ்சிறுவுயிர் மீளும்படிநல
யோகம்புரிவது மிலையாதோ
வேயுங்கணியும்வி ளாவும்படிபுனை
மேவுஞ்சிறுமிதன் மணவாளா
மீனம்படுகட லேமுந்தழலெழ
வேதங்கதறிட வொருநாளும்
வாயுங்குலகிரி மாவுந்தொளைபட
மாகந்தமதில் மறையூரன்
யார்புந்துணைபுரு தோளுந்துணிபட
வாள்கொண்டமர்செய்த பெருமாளே.

(ப-ரை.) வேயுங்கணியும் விளாவும்படி புனைமேவுஞ் சிறுமிதன் மணவாளா-மூங்கிலும் வேங்கையும் விளாவும்படிகின்ற தினைப்புனத்தி

விருந்த ! வள்ளிநாச்சியாரின் நாயகா ! மீனம்படுகடல்வழுந்தழல் எழ வேதம் ஒரு நாலும் கதறிட - மீன்களிருக்கின்ற சத்தசாகரங்கள் அக்கினிமயமாகவும் நான்கு வேதங்களும் வாய்விட்டுக் கதறவும்; குலகிரிமாவும் தொளைபட-கிரௌஞ்சகிரியாம் மாமரம்தொளைபடவும், மாகந்தர மதில்மறைசூரன் மார்பும் துணையுறுதோளும் துணிபட-ஆகாயத்தில்மறைந்த சூரபத்மனுடைய மார்பும் இரண்டு தோள்களும்துண்டாக வாள்கொண்டு அமர்செயும்பெருமாளே - வாளாயுதத்தால்யுத்தஞ்செய்த இளையபெருமாளே, தீயும்பவனமும் நீருந்தரணியும்வானும் செறிதரு-பஞ்சபூதங்களிலும் நிறைந்திருக்கின்ற, பசுபாச தேகந்தனை நிலையெனன்று-பசுபாசங்களாலுண்டான சரீரத்தை நிலையுள்ளதென் றெண்ணி, இருவினை தீருந் திறவினை யறியாது-இருவினை நீங்கும் தன்மையையுணராமல, ஒயும்படி அறுநூறும்பதுமுதல் ஞூறும்பதினிருபதினூறும் - இவ்வெண்களுடனே, ஓடும் சிறுஉயிர் மீளும்படி - செல்லுகின்ற அற்பஉயிரானது திரும்பிவரும்படியாக, நல்ல யோகம்புரிவது கிடையாதோ-உயர்ந்த யோகஞ்செய்யும் உபதேசம் அடியேனுக்கு கிடையாதோ ?

---

81. தனனதாத்தன தனனதாத்தன
தன்னதாத்தன—தந்ததான.

பொதுவதாய்த்தனி முதலதாய்ப்பர
விரவதாய்ப்புகல் கின்றவேதம்

பொருளதாய்ப்பொருள் முடிவதாய்ப்பெரு
வெளியதாய்ப்புதை வின்றிஞான

சுநியதாய்க்கரு தரியதாய்ப்பரு
கமுதமாய்ப்புல னைந்துமாயக்

காணமாய்த்தெனை மரணமாற்றிய
கருணைவ ர்த்தையை ·யென் றுசேர்வேன்

உத்திதீப்பட்ட நிருதரார்ப்பெழ
வுலகுபோற்றிட வெங்கலாப:

வொருபராக்ரம் துரகமோட்டிய
வுரகர்போற்றிடு நண்பவானோர்

முதல்வபார்ப்பதி புதல்வகார்த்திகை
முலைகள் தேக்கிட வுண்டவாழ்வே

முளரிபாற்கடல் சயிலமேற்பயில்
முதியமூர்த்திகள் தம்பிரானே

(ப-ரை) உததிதீப்படநிருதர் ஆர்ப்புஎழ உலகுபோற்றிட-சமுத்தி ரமானது நெருப்புபாகவும், இராக்கதர்கள் ஆரவாரஞ்செய்யவும், உலகத் தார்களெல்லாம் துதிசெய்யவும், வெம்கலாபம் ஒரு பராக்கிரம துரகம் ஒட்டிய உரகர்போற்றிய நண்ப-கொடியதோகையையும் ஒப்பற்ற வெற் றியையுமுடைய மயிற்பரியை ஒட்டின நாகர்கள் துதிசெய்ய நண்பனே! வானோர்முதல்வ-தேவர்களுக்குத் தலைவனே ! பார்ப்பதிபுதல்வ-உமாம கேசுவரின் புத்திரனே ! கார்த்திகைமுலைகள்தேக்கிட வுண்டவாழ்வே- கிர்த்திகைப்பெண்ணின் ஸ்தனங்களிலுவுந்துவந்த பாலைத் தெவிட்டும் படி குடித்த சுக வாழ்க்கையே, முளரிபாற்கடல் சயிலம்மேல்பயில்முதி யமூர்த்திகள் தம்பிரானே-தாமரையிலும், திருப்பாற்கடலிலும், கயிலாயம லையிலும் வாழ்கின்ற பழையமூர்த்திகளாகிய பிரம, விஷ்ணு, ருத்திராதி யர்களுக்குத் தலைவனே ! பொதுவதாய் தனிமுதலாய்-பொதுவாகவும், ஒப்பற்றமுதலாகவும், பகல் இரவதாய்-பகலாகவும் இரவாகவும், புகல்கி

ன்ற வேதப்பொருளதாய்-சொல்லப்படுகின்ற வேதத்தின் உட்பொருளாயும், பொருள்முடிவதாய்-அந்தப் பொருளுக்கு முடிவாகவும், பெருவெளியதாய்-பெரிய ஆகாயமாகவும், புகைவின்றி-மறைப்பில்லாமல், ஞானகதியதாய்-ஞானமோட்சமுடையதாயும், கருதரியதாய்-நினைப்பதற்கருமையானபொருளாகியும், பருக அமுதமாய்-குடிக்கின்ற அமிர்தமாயும், புலனைந்துமாய-ஐம்புலன்களுமொழிய, கரணமொய்த்து-அந்தக்கரணங்களை ஒழித்து, [ளை மரணம்மாற்றிய-என்னுடைய மரணவேதனையை நீக்கின, கருணைவார்த்தையை-கிருபாவசனத்தை, என்றுசேர்வன் - எந்நாளில் பெறுவேன். (எ-று.)

---

82. தனத்தத் தந்தனத் தனத்தத் தந்தனத்
தனத்தத் தந்தனந்—தனதான.

தடக்கைப் பங்கயங் கொடைக்குக் கொண்டறன்
டமிழ்க்குத் தஞ்சமென் றுலகோரைக்

தவித்துச் சென்றிரந் துளத்திற் புண்படுந்
தளர்ச்சிப் பம்பரந் தனையூசற்

கடத்தைத் துன்பமண் சடத்தைத் துஞ்சிடுங்
கலத்தைப் பஞ்சஇந் த்ரியவாழ்வைக்

கழித்திட் டென்றனைத் திருத்தித் தண்டையங்
கழற்குத் தொண்டுகொண் டருள்வாயே

படைக்கப் பங்கயன் துடைக்கச் சங்கரன்
புரக்கக் கஞ்சமன் பணியாகப்

பணித்துத் தம்பயந் தணித்துச் சந்தனப்
பரத்தைக் கொண்டிடுந் தனிவேலா

குடக்குத் தென்பரம் பொருப்பிற் றங்குநற்
குலத்திற் கங்கைதன் சிறியோனே

குறப்பொற் கொம்பைமுன் புனத்திற் செங்கரங்
குவித்துக் கும்பிடும் பெருமாளே.

(ப-ரை) படைக்கபங்கயன் றுடைக்கசங்கரன் புரக்க சஞ்சமன் பணியாகப் பணித்து-சிருஷ்டிக்க பிரமதேவனையும், சங்காரஞ்செய்ய ருத்திரனையும்- காக்க விஷ்ணுமூர்த்தியையும் உண்டாக்கி அவர்களுக்கு அவ்வத்தொழில்களை ஏற்படுத்தி, தம் பயந்தணித்து-தம்முடைய பயத்தை தணிவித்து. சந்தனப் பரத்தைக்கொண்டிடும் தனிவேலா-எப்போதும் உயர்வைக் கொண்டிருக்கின்ற ஒப்பற்ற வேலாயுதக்கடவுளே! குடக்குத் தென்பரம் பொருப்பில் தங்கும் நற்குலத்தில் கங்கை தன் சிறியோனே-மேற்கு தென்பரங்கிரியில் எழுந்தருளியிருக்கின்ற நம்முடைய குலத்தில் கங்கையின் மகனே! குறப்பொற்கொம்பை முன் புனத்தில் செங்கரங்குவித்துக் கும்பிடும் பெருமாளே-பூர்வத்தில் தினைப்புனத்தில் குறப்பெண்ணைக் கைகுவித்துக் கும்பிட்ட இளையபெருமாளே! தடக்கை பங்கயங் கொடைக்கு கொண்டல் தண்டமிழ்க்கு - விசாலமான தாமரைபோலும் கைகொண்ட கொடையாளன் [illegible] தன்னியத் [illegible] மிசை, பாடிதஞ்சமென்று உலகோரைதவித்துச்சென்று இரந்து உள்ளத்தில் புண்பட்டுத்தளர்ந்து-உலகத்தாரிடத்தில் மனந்தளர்ந்து என்றும் அடைக்கலமென்று சொல்லி இரந்து மனப்புண்ணுறவு [illegible] தளர்ந்து, [illegible]

நிடந்திருத்தி தண்டையங் கழற்கு தொண்டுகொண்டு அருள்வாய்.
செல்லுமிடத்தை சீர்திருத்தி தண்டையணிந்த உம்முடைய அழகிய திருவடிகளுக்கு அடிமையாக்கொண்டு திருவருள்செய்வாய். (எ-று)

திருவருணை.

83. தனனதன தானதத்த தனனதன தானதத்த
தனனதன தானதத்த—தனதான.

முழுகிவட வாமுகத்தி லெழுகனலி லேபிறக்கு
முழுமதிநி லாவினிற்கு மிசையாலும்
மொழியுமட மாதருக்கு மினியதனி வேயிசைக்கு
முதியமத ராசனுக்கு மழியாதே
புழுகுதிகழ் நீபமத்தி லழகியகு ராநிரைத்த
புதுமையினி லாரிபட்டி புயமீதே
புணரும்வகை தானினைத்த துணரும்வகை நீலசித்ர
பொருமயிலி லேறிநித்தம் வரவேணும்
உழுமகர வாரிசுற்று பொழிலருணை மாநகர்க்கு
ளெழுதரிய கோபுரத்தி லுறைவோனே
யிடைதுவள வேடுவச்சி பவளவித ழூறல்துய்ப்ப
இளமுலையி டாதசித்ர மணிமார்ப
செழுமதிய நாகமொய்த்த வொழுகுபுனல் வேணிவைத்த
சிவனைமுத லோதுவித்த குருநாதா
திசைமுகன்மு ராரிபெற்ற மிபமல தேவருற்ற
சிறையடைய மீளவிட்ட பெருமாளே.

(ப-ரை) எழுமகரவாரி சுற்றுபொழில் அருணைமா நகர்க்குள்-குதித்தெழுகின்ற மகரமீன்களுள்ள சமுத்திரம் சூழ்ந்த சோலைசேர் திருவண்ணாமலைப்பதியின் கண், எழுதரிய கோபுரத்தில் உறைவோனே-எழுதற்கு அருமையான கோபுரத்தில் வாழ்கின்றவனே! இடைதுவள வேடுவச்சி பவள இதழே துடிப்ப - வேடுவச்சியான வள்ளிநாச்சியாருடைய இடையானது துவளவும், பவளபோலும் இதழானது துடிக்கவும், இளமுலைவிடாத அழகிய மார்பையுடையவனே! செழுமதியம் நாகம் மொய்த்த வொழுகுபுனல் வேணிவைத்த சிவனை முதல் ஓதுவித்த குருநாதா-செழுமையான சந்திரன், நாகம், கங்கை இவைகளைச் சடாபாரத்தின்கண் வைத்த சிவனுக்கு பிரணவம் ஓதுவித்த ஞானாசிரியனே! திசைமுகன் முராரிமற்றும் அரிய பல தேவர் உற்ற சிறையடைய மீளவிட்டபெருமாளே-பிரமன், விஷ்ணு, இன்னும் பலதேவர்கள் அடைந்திருந்த சிறை முழுமையும் நீக்கிவிட்ட இளையபெருமானே! முழுகி வடவாமுகத்தில் எழுகனலில் பிறக்கும் முழுமதி-வடவாமுகத்தின் கண் முழுகி எழுந்த அந்த நெருப்பிலே பிறக்கின்ற பூரண சந்திரனானவன், நிலாவிரிக்கும் வகையிலும் - உலாவிவருகின்ற வகையினாலும், மொழியும் மடமாதருக்கும் இனிய தனிவேயிசைக்கும் முதிய மதராசனுக்கும் அழியாது செலுத்துகின்ற இளமையான பெண்களுக்கும் இனிமையான ஒப்பற்ற புள்ளாங்குழலின் நாதத்துக்கும், புதிய மன்மதனுக்கும் அழியாமல், புழுகுதிகழ் - புனுகு கமழ்கின்ற, நீபமதில் அழகிய குராவிரைத்த புதுமலரில் - நீபமீதும்-கடம்பமலரினில் அழகிய குராமலர்மாலை இவைகளைத் தரிசிப்பதில், புதுமையினையுடைய பன்னிரண்டு புயங்களின் மேல், புணரும் வலைதனை நினைத்து உணரும்வகை-சேர்கின்ற விதமாகவும் தான் நினைத்ததை உணரும் வகையாகவும், நிலசித்திர பொருமயிலில் ஏறி நித்தம் வரவேண்டும்-நீலசித்திரத்தையுடைய சித்திரமான போர்செய்கின்ற மயில் வாகனத்தின்மேல் எழுந்தருளி வரவேண்டும். (எ-று.)

விராலிமலை.

84. தானத் தனதான தானதத் தனதான
 தானதத் தனதான—தனதான.

நேர்புயற் குழன்மாதர் பேரினிற் கிருபையாகி
 நேசமுற் றடியேனு — நெறிகெடாய்

நீசரிற் பொருட்டேடி யோடியெய்த் துளம்வாடி
 நீதியிற் சிவவாழ்வை — நினைபாதே

பாதகத் தொழிற்கார ரைம்பலைத் தொகுகோடி
 பாடுற் றிடமேவிச் — திறமேவா

பூதியப் புடைவாழ்க தேவர்கட் குபகார
 பார்வைச் சற்றருள்மேவ — பணியாயோ

ஆருயிற் றாபில்வேதா னுமர்மலர்ப் பிரமாவு
 மாகமப் பொருளோர்ந் — தறிவோரு

மாதவத் தவரோடு ஞானமுற் றியல்வோரு
 மாயிரத் திருநூறு — மறையோரும்

வாழுமெய்த் தவர்சூழ் விராலியெனும் பதிமேவு
 வாகுவத் திரமோடை — மயிலேறி

மீதுவனைப் பொருதசூ ரகொற்றமுப் பெருங்கோல
 மாண்மகட் குற்றன்ன — பெருமாளே.

(ப—ரை) [illegible] தமிழ்கொண்டும் மாட்டார் பிழைபாடும் [illegible] பொருளோராக அபாயோம் திருப்புகழ்பாடியில் அன்பருடைய வீட்டில் [illegible] செய்யும் பிரபட [illegible]

மங்களின் பொருள்களைஉள்ளபடியாய்ப்பவரும் ஆகியஎல்லோரும், ஆனை மத்தகவோனும் ஞானமுற்றியல்வோரும்-வெள்ளையானையின் மத்தகத்தில் ஏறுகின்ற இந்திரனும், ஞானவான்களும், ஆயிரத்திருநூறு மறையோரும்-ஆயிரத்திருநூற பிராமணர்களும். வாழும்மெய்த்தவர் சூழ்விராலி வெற்பினில்மேவு-வாழ்கின்ற உண்மையான தவசிரேஷ்டர்கள் சூழ்ந்திருக்கின்ற விராலிமலையின்கண் வாழ்கின்ற. வாகுசித்திரதோகைமயில்எறி-வெற்றிபெற்ற சித்திரமான கலாபத்தையுடைய மயில் வாகனத்தின்மேல் ஆரோகணித்து, யாறெனை பொருசூரன் நீறெழ பொரும் வேல-அடி அடி என்றுமோதி சண்டைசெய்த சூரபத்மன் நீறுபட்டழியச் சண்டைசெய்த வேலாயுதமுடையவனே! மான்மகட்கு உள்ளுன் பெருமானே-மான்பெற்ற பெண்ணான வள்ளி நாச்சியாருள்ளத்திற் பிரியாத இளைய பெருமாளே! நீள் புயற்குழல்மாதர்மேல் கிருபையாகி-நீண்ட கருமேகம்போல் கூந்தலையுடைய பெண்கள்மேல் கிருபைகொண்டு, நேசமுற்ற அடியேனும் நெறிகேடாய்-அவர்கள்மேல் ஆசைவைத்து அடியனை நாளும் நன்னெறிகெட்டு, நேமியில் பொருள்தேடி ஓடி எய்த்து உளம்வாடி-உலகத்தின்கண் பொருளைத்தேடி ஓடி இளைத்து மனம் வாட்டமடைந்து, நீதியில் சிவவாழ்வை நினையாது-நியாயமாக மங்களகரமான வாழ்க்கையை நினைக்காமல், பாழினுக்கு இறைபாமல்-பாழுக்கு இறைக்காமல். நாமம்வைத்து ஒருகோடி பாடல் உற்றிடவே செய்திடு-உனதுபுகழைக்கூறி ஒருகோடி பாடலையடையும்படிசெய்யுஞ் மோசபாவி-மோசத்தையுடைய பாவியானநான், வாழ்க-வாழ தேவர்கட்கு உபகாரனபார்வை சற்றருள்வேறு பணியாய்-தேவர்களுக்கு உண்டான கிருபைப்பார்வையைகொஞ்சம் எனக்கு கிருபைசெய்யவேண்டும், வேறொன்றும் பணிக்கவேண்டாம். (எ-று)

திருவேரகம்.

85. *தனனதன தானதத்த தனனதன தானதத்த*
தனனதன தானதத்த—தனதான.

சரணகம லாலயத்தை யரைநிமிஷ நேரமட்டில்
தவமுறைதி யானம்வைக்க வறியாத
சடகசட மூடமட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யான்மயக்க முறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ந மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்ப மணிவோனே
தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வே
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
வரியதமிழ் தானளித்த மயில்வீரா
வதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
வழகுதிரு வேரகத்தின் முருகோனே.

(ப-ரை) கயிலை மலைநாதர்பெற்ற குமரோனே - கயிலாசமலையின் கண் எழுந்தருளியிருக்கின்ற பரமேஸ்வரர் பெற்றகுமரக்கடவுளே ! கட கபுயம்மீ திரத்ந மணியணி பொன்மாலை செச்சைகமழும்மணமார்கடப்

பும்அணிவோனே - கடகமணிர்தபுயத்தின்மேல்ரத்னுபரணம், பொன் மாலை, செச்சைமாலை, கடம்ப மலர்மாலை இவைகள் மணம் வீசும்படி தரிப்பவனே ! தருணமிது அய்யா - ஐபாஇதுவேசமயம், மிகுந்தகனம் அது உறநீள்சவுக்கியம் சகலசெல்வமுமாக மிக்கபெறுவாழ்வு-மிகுந்தகனமுள்ள நீண்ட சௌக்கியம், சகலசெல்வம், யோகமிகுந்தபெருவாழ்வு, தகைமைசிவஞானமுத்தி பரகதியும்-பெருந்தன்மை, சிவஞானம்,மோட்சம், உயர்கதி இவைகளையெல்லாம், நெய்த்தவடி வேலா நீகொடுத்து உதவிபுரியவேணும்-நெய்பூசியவடிவேலாயுதத்தை யுடையவனே! நீதிருவருள்செய்து சகாயம்செய்யவேண்டும், அருணதள பாதபத்மமது நிதமும் துதிக்க - சூரியனொளிபோன்ற திருவடித் தாமரைகளை அனுதினமும் துதிசெய்ய ! அரியதமிழ்தான் அளித்த மயில்வீர - அருமையான தமிழைக்கொடுத்த மயில்வாகனத்தையுடைய வீரனே ! அதிசயம்அனேகம்உற்றபழநிமாமலைமீதுஉதித்த அழகுதிருவேரகத்தின் முருகோனே-அனேக அதிசயங்களையுடைய பழநிமலைமேல்பிறந்த திருவேரகத்தில் எழுந்தருளியிருக்கின்றமுருகக்கடவுளே! சரணகமலாலயத்தை அரைநிமிஷம் வரைக்கும் தவமுறையாக தியானத்தில் வைக்க உணராத, சடகசடமூடமட்டி-சடத்துவமுள்ள வஞ்சகமும் மூடமுள்ள மட்டியும். பலவினையிலே சனித்ததமியன் - பாவமென்னும் தீவினையினால் ஜெனித்த அடியேனும், நான்மயக்கம் உறுவேனே - மாய்கையை யடைவேனோ, இப்படி யிருப்பதால் இவ்வேளைகருணைபுரியாதிருப்பது என்ன குறை செப்பு - இந்தச்சமயத்தில் நீகிருபைசெய்யாமலிருப்பது என்னகுறையோ? அதைதேவரீரே சொல்லவேண்டும். (எ-று)

கதிர்காமம்.

86. *தனத்தா தனத்தா தனத்தா தனத்தா தனத்தா தனத்தா—தனதான.*

சரத்தே யுதிக்கா யுரைத்தே குரைத்தே
சமர்த்தா யெதிர்த்தே வருசூரைச்
சரிப்போ னமட்டே விடுத்தா யடுத்தாய்
தகர்த்தா யுடற்று மிருகூறாய்ச்
சிரத்தோ டரத்தோ டறுத்தே குவித்தாய்
செகுத்தாய் புலத்தார் விருதாகச்
சிறைச்சேவல் பெற்று யலக்கான் மிதித்தாய்
திருக்கா மறைத்தா ளருள்வாயே
புரத்தார் வரத்தார் சரச்சே கரத்தார்
பொரத்தானெதிர்த்தே வருபோது
பொறுத்தார் பரித்தார் சிரித்தா ரெரித்தார்
பொரித்தார் நுதற்பார் வையிலேபின்
கரித்தோ லுரித்தார் விரித்தார் தரித்தார்
கருத்தார் மருத்தூர் மதனரைக்
கரிக்கோல மிட்டார் கணிக்கா னமுத்தே
தெதிர்க்கா மமுற்றார் முருகோனே.

(ப-ரை) புரத்தார்வரத்தார் சரச்சேகரத்தார் பொரத்தான் எதிர்த்து வரும்போது - திரிபுரத்தாரும் வரத்தாரும் பொரதான் எதிர்த்துவரும் போது, பொருத்தார் பரித்தார் சிரித்தார் எரித்தார் பொரித்தார் நுதற்

பார்வையில் - நெற்றிக்கண் பார்வையினாலும் சிரிப்பினாலும் எரித்தவரும், கரித்தோல் உரித்தார் விரித்தார் தரித்தார்-யானைத்தோலை உரித்துத் தரித்தவரும், கருத்தார் மருத்தூர் மதனாரை-உட்கருத்துள்ள மருத்தூர்கின்ற மதனாரை! கரிக்கோலமிட்டார்-கரிக்கோல மிட்டவருமாகிய சிவபிரானது கணுக்கான முத்தே-திருக்கண்களுக்கு அமைந்த முத்துப் போல்பவனே! கதிர்க்காமமுற்றூர் முருகோனே - கதிர்காமத்திலிருக்கின்ற முருகக்கடவுளே! சரத்தே உதித்தாய் உதிரத்தே குதித்தே சமர்த்தாயெதிர்த்தே வருசூரை-சரத்திலுதித்துக் குதித்து சமர்த்துடனே எதிர்த்து வந்தசூரனை, சரிம்போனபட்டே விடுத்தாய் அடித்தாய் வகர்த்தாய் உடல்தான் இருகூறாய் - இரண்டு பிளவாக தகர்த்தாய்! சிரத்தோடு உரத்தோடு அறுத்து குவித்தாய் செறுத்தாய் - தலையுடன் மார்பையறுத்துக் குவியலாக்கினாய்! பெலத்தார் விடுத்தார்-பலத்துடன் பொருந்தின் விருதாக! சிறைச்சேவல் பெற்றாய் - சிறகினையுடைய சேவலைப்பெற்றாய் அலத்தால் மிதித்தாய்-பலத்தினால் மிதித்தாய், திருத்தாமரைத்தாள் அருள்வாய்-விகசிததாமரைபோலுந் திருவடிகளை யருளிச்செய்வாய். (எ-று.)

திருப்புலியூர்

87. தனன தனதன தனன தனதன
தனன தனதன தனன தனதன
தத்தத் தத்தன தத்தத் தத்தன
தத்தத் தத்தன தத்தத் தத்தன—தனதான.

மருவு கடன்முகி லனைய குழன்மதி
வதன நுதல்சிலை மனமுழய நெடும்விழி
மச்சப் பொற்கணை முக்குப் பொற்குமி
ழொப்பக் கத்தரி யொத்திட் டச்செவி

குமத முலரித முழுத மொழிநிறை
தரள மெனுநகை யிடறு கழுகென
வைத்துப் பொற்புப் பச்சைத் தட்டைபெர்
டொப்பிட் டெக்கம லக்கைப் பொற்றுக
ரிணைய விரலொடு கிளிகள் முகநக
மெனவு மிகலிய குவடு மிணைபுரு
செப்புத் தக்கம ருப்புச் சக்கரம்
வைத்தப் பொற்குட மொத்திட் டுத்திகழ்
முலைமேவும்,
வடமு நிரைநிரை தாள் பவளமொ
டசைய ப்ழுமர விலைவ யிறுமபி
ரம்பத் திக்கிலே பொற்புத் தொப்புளு
மப்புக் குட்சுழி யொத்துப் பொற்கொடி
துடிமி னனைவிடு மிடையு மினமென
வரிய கடிதட வமுது கமழ்ச்
மட்டுப் பொற்கம லத்திற் சக்கிரி
தத்திப் பைக்கொரு முத்துப் பட்டுடை
யழகு தொடையிணை கதலி பரமென
பொழியு முழவொடு கமட நிகர்குதி
வட்டப் புத்தக மொத்துப் பொற்சர
ணத்திற் பிற்புற மெத்தத் தத்தைகள்
மயில்போல,

தெருவில் முலேவிலேயுலைசெய் தவரவர்
மயல்கொ டணேவர மருள்செய் தொழில்கொடு

நெட்டிப் பொற்பல சொக்கிட்டுப்பொருள்
பற்றிக் கட்டில ணைக்கொப் பிப்புணர்

திலக மழிபட விழிகள்சுழலிட
மலர்க ளிணைகுழ லிடைகள் துவள்பட

இத்தித் துய்த்திதழ் வைத்துக் கைக்கொடு
கட்டிக் குத்துமு லைக்குட் டைப்பட

திரையி லமுதென கழைபி ரசமென
மலவில் சுளையென வுருக பிணிபல

சிக்குப் பட்டுடல் கெட்டுச் சித்தமும்
வெட்கித் துக்கமு மொத்துக் கொக்கென

நரைமேவி,

செவியா டொளிர்விழி மறைய மலசல
மொழிகள் பலநரை குழற தடிகொடு

நெத்திப் பித்தமு முற்றித் தற்செயு
லற்றுச் சிச்சியெ னத்துக் கப்பட

சிலர்கள் முதுவுடல் வினவு பொழுதினி
லுவரி நிறமுடை நமனு முயிர்கொள

செப்பத் துப்பிணை மொய்த்துப் பெய
ரிட்டுப் பொற்பறை கொட்டச் செப்பிடு

செனன மிறுமென வழுது முகமிசை
யலறி மனையவ ரெடென சுடலையில்

சிற்றித் திக்கிரை பிட்டிட் டிப்படி
நித்தத் துக்கமெ டுத்திட் டெச்சட

முழல்வனேனோ,

குருவி லுருவென வருள்செய் துறையினில்
குதிரை கொளவரு நிறைத வசிதலை

கொற்றப் பொற்பதம் வைத்திட் டற்புத
தெற்றிப் பொற்பொரு விட்டுக் கைக்கொளு

முதல்வ னிளகலை மதியு மடைசடை
யருணை வரசல மழுவு முழையணி

கொட்டத் துப்புரர் கெட்டுப் பொட்டெழ
விட்டத் திக்கனை நக்கற் கற்புத

குமர னெனவிரு தொலியு முரசொடு
வளையு மெழுகட லதிர்வின் முழவொடு

துட்டக் தக்கரை வெட்டித் தட்கட்
லொப்பத் திக்துமெ டுத்துத் தக்கிட

வமர்மேவி,

குருகு சொடிசிலை குடைகள் பிடைபட
மலைகள் பொடிபட வுரக ளுதிரிட

கொத்துச் சக்கிரி பற்றிப் பொற்கிரி
யெட்டித் திக்குமெ டு க்கிட் டெக்குரள்

குமர குருபர குமர குருபர
குமர குருபர வெனவெவா தமரர்கள்

தொட்டுப் புட்பமி றைத்துப் பொற்சர
ணத்திற் கைச்சிரம் வைத்துப் புட்குரல்

குலவ நரிசிறை கழுகு கொடிபல
கருட னடமிட குருதி பருகிட

கொத்தப் பத்திர மிட்டுப் பொற்கழ
னத்தைச் சித்தமு ரக்ஷித் துக்கொளு

மயில்வீரா,

சிரமொ டிரணிய னுடல்கி ழியவொரு
பொழுதுகிர்கொடு வரிய நடமிடு

சிப்பத் திப்பதம் வைத்துச் சக்கர
வர்த்திக் குச்சிறை யிட்டுச் சுக்கிர

னரியு விழிகெட வொருப துமுடியு
மழிய நெடியவர் திருவு மழகியர்

சேற்றுத் திக்கில ரக்கற் குச்சின
முற்றுப் பொற்றசர் தற்றுப் புத்திர

செயமுறு மணவலி சிகரக கொடுவர
பிருது துடைவரி சிரமொர் பதும்விழ

சிக்கெட் டடக்கக னத்தூர்க் குத்தொடு
பச்சைப் பொற்புய லுக்குச் சித்திர

மருகோனே.

திலக மதிமுக வழுதி மாகத
வடிவி பரிபுர நடனி மலர்ப்பத

சித்தற் குக்குறி வைத்திட் டுத்தன
மூத்துப் பொற்கிரி யொத்துச் சித்திர

சிவகொள் திருசர் சுவதி வெகுவித
சொரூபி முதலிய கிழவி யியல்கொடு

கொட்டிக் கிச்சுக முத்துத் தத்துவ
சித்திற் சிற்பதம் வைத்துக் கற்புறு

திரையி லமுதென மொழிசெய் கவுரிபி
னரிய மகனென புகழ்பு விதகரில்

செட்டிப் பொற்றன முற்றப் பொற்குற
தத்தைக் குப்புள சித்தட் டெட்டிபுல

பெருமாளே.

(ப-ரை) குருவின்உருவென்-குருவினுருவென்றசொல்ல, அருள் செய்-அருள்செய்கின்ற, துறையினில்-துறையிலுதிக்கொள்வரும்-குதிரைகொள்ளும்படிவரும், நிறை தவசி - நிறைந்த தவசியின், தலை கொற்றப்பொற்பதம்வைத்திட்டு-தலையில் வெற்றிபொருந்தின பொன்போலும் திருவடிகளைவைத்து, அற்புவெற்றி-அற்புதமான வெற்றியையுடைய, பொற்பு ஒருவிட்டு-பொற்பைநீக்கி, கைக்கொண்ட முதல்வன் இளகலைமதியும் - இளமையான கலையையுடைய சந்திரனும், அடை சடை-அடைத்தசடையும், அருணவரசலமழிவும்-அருணவர. சலமழிவு, உழையணிகொட்டத்துப்புரர் - மானையுமணிந்த கொட்டத்துபுரர், கெட்டுப்பொட்டெழவிட்ட-கெட்டுப்பொட்டெழும்படிவிட்ட, திக்காக்கர்கு-திக்குகளில் சேர்ந்திருக்கின்ற மேஸ்வரனுக்கு, அற்புத குமரன்

எ.ன-ஆச்சரியமுள்ள-புத்திரன்: என்று, விருது நவியும் முரசொடு-வெற்றிச்சொல்லைச்-சொல்லுகின்ற முரசுவாத்தியத்துடன், வளையும் எழுகடல் அதிர்வின் முழவொடு - விளைந்த சத்தசாகரங்களின் சத்தமாகிய வாத்தியத்துடனும், துட்டக் கிக்கரைவெட்டி-துஷ்டதனமுள்ள ராட்சதர்களை வெட்டி, தண் கடல்ஒப்ப- தண்ணிய சமுத்திரமானது சப்திக்க, திக்கும் எடுத்து தத்திட-அஷ்டதிசைகளும் ஆர்ப்பரித்துத்ததும்பி, அமரமேவி-சண்டைசெய்து, குருகு கொடிசில குடைகள் மிடைப்பட-சேவற்கொடி குடைகள் ஆகிய இவைகள் நெருங்க, மலைகள் பொடிபட-மலைகளெல்லாம் பொடியவும், உடுகள் உதிரிட-நட்சத்திரங்களெல்லாம் சிந்தவும், கொத்துச்சக்கிரி புற்றிபொன்சரி பெட்டுதிக்கும் எடுத்திட்டுக் குரல்-அடுக்காகிய தேவலோகந் தொட்டு அழகிய அஷ்ட கஜங்களும் அஷ்ட திசைகளிலும் கர்ச்சிக்க, குமர குருபர குமர குருபர குமர குருபர எனஓத அமரர்கள் - தேவர்களெல்லாம் குமர! குருபர!! குமர! குருபர!! என்று சொல்லி, புட்பம் இறைத்துக் கொட்ட-புஷ்பங்களை இறைக்கவும், பொன்சரணத்தில் அழகிய திருவடிகளில், புட்குரல் கைச்சிரம்வைத்து குலவ-புள் கூட்டங்கள் கையைத் தலைமேல்வைத்துக் குலாவவும், நரிசிறை கழுகுகொடி பல கருடன் நடமிட குருதிபருகிட-கொழுத்த-நரிகள் இறகுகளையுடைய கழுகுகள், காக்கைகள், பலவகைப்பட்ட கருடர்கள் ஆகிய இவைகள் கொத்திரத்தத்தைக்குடித்துநடிக்க, பத்திரமிட்டு-பாணப்பிரயோகஞ்செய்து, பொற்கன்றதை சித்தம் இரட்சித்துக்கொளும் மயில்வீர - தேவலோகத்தின்மேல் அன்புவைத்து ரட்சித்துக்கொண்ட மயில்வாகனமேறின வீரனே! சிரமொடு இரணியன் உடல் கீறிய-ஒரு செருவின் உகிர்கொள் நகங்களைக்கொண்டு நருக்கவரில் இரணியனுடைய சிரசு; சரீரம் இவைகள் கீறிய, அரியநடமிடு-அருமையான தாண்டவஞ்செய்த, சிற்பரத்திப்பதிவைத்து-ஞானபக்தியுள்ள திருவடிகளைக்காத்து, சக்கரவர்த்திக்குச் சிறையிட்டு-சக்கரவர்த்தியைச் சிறைசெய்து, சுக்கிரன் அழிய விழிகெட ஒருபதுமுடியும் அழிய-சுக்கிரன் அழியவும், அவனுடைய கண்கள் கெடவும் பத்து முடி

யும் தத்தையும், நெடியவர் திருவும் அழகியர்-விஷ்ணுவாகிய இராமனும் சீதையும் அழகினையுடைய, தெற்குத் திக்கில்-தென்திசையில், அரக்கற்கு ச்சினமுற்ற-இராட்சதன்மேல்கோபங்கொண்டு, வான் தசரதற்கு அழகிய தசரதமகாராஜனுக்கு, புத்திர புத்திரனென, செயமுடியவலவிசிலைகைகொடு-வெற்றியையும் மனவலிமையும் கையில் வில்லையுங் கொண்டு, கரம் இருபது உடைகிரிசரபோர்பதுவ்விழ இருபது கைகளையுடைய இராவணனென்னும் மலையின் பத்துத்தலைகளும் அறுபட்டுவிழ, திக்கு எட்டைக் ககனத்தர்க்கு கொடு-அவ்வெட்டு திக்குகளையும் ஆகாயவாசிகளான தேவர்களுக்குக் கொடுக்கின்ற, பச்சைப் பொற்புயனுக்கு சித்திர மருகோனே! பசுமையான அழகிய மேகநிறமுள்ள விஷ்ணுமூர்த்திக்கு விளைந்தமருமகனே! திலகமதிமுகவழகி - திலதமிட்ட சந்திரன்போலும் முக அழகையுடையவளும், மரகதவடிவி-மரகதம்போலும் ரூபமுள்ளவளும், பரபுர நடனி-பரிபுரமென்னும் ஆபரணத்தையணிந்துகொண்டு நடனஞ்செய்பவளும், மலர்பதம்-தாமரைமலர்போலும் திருவடிகளையுள்ளவளும், சித்தற்கு குறிவைத்திட்டு - சித்தனுக்குக் குறியைவைத்து - தனமுத்து பொன்கிரியொத்து-முத்துமாலையையணிந்த ஸ்தனங்கள் பொன்மலையையொப்பாய், சித்திர செவ்வொண்-அழகிய மங்களங்கொண்ட, திருசரசுவதி வெகுவித சொருபிமுதலிய கிழவி - லட்சுமி, சரஸ்வதி; பலவித சொருபமுள்ளவள் முதலிய உரிமையுடையவர்கள், இயல்கொடு-லட்சணத்தைக்கொண்டு, கெட்டிக் கிஞ்சமுற்று-கெட்டியான கிஞ்சுகத்தையடைந்து, தத்துவசித்தில் உண்மையான ஞானத்தில், சிற்பதச்செல்வத்து-ஞானபதத்தைவைத்து-கற்புற - கற்பின் தன்மையையடைந்த, திரையில் அமுது என-சமுத்திரத்தில் அமிர்தம்போன்ற; [illegible] போகின்ற, கவுரியின் அரிய மகன் எனை-பார்வதியின் மகன் உக, புகழ்ப்பு [illegible]-புகழப்படுகின்ற புலி[illegible]ல்- செட்டிபெண் தன[illegible] - செட்டியின் பெண்ணைத் தயவடைந்து, [illegible] - [illegible] [illegible] [illegible] - [illegible]

யடைந்து மனமொத்த இளைய பெருமாளே! மருவுகடல்முகில்-பொருந்திய கடலி லுண்டாகும் மேகம்போன்ற கூந்தலையும், மதிவதனம் - சந்திரன்போன்ற முகத்தையும், நுதல்சிலை-வில்லைப்போன்ற நெற்றியையும், மழைபது எனும்விழி - மழையைப்போன்ற கண்களையும், மச்சம் பொன்கலை முகிழ் பொற்குமிழ் ஒப்பக் கத்தரியொத்திட்டசெவி-மகரகுண்டல மணிந்த கத்தரியையொத்த செவியையும், குமுதமலர்இதழ்-குமுத மலரைப்போலு இதழையும், அமுதம் மொழி-அமிர்தம்போலும் சொல்லையும், நிரைதாளம் எனும் நகை - வரிசையாகிய முத்துக்கள் போன்ற தந்தபங்கியையும், மிடறுகமுகென - பாக்குமரம்போன்றகமுத்தையும், வைத்து-வைத்து, பொற்புய பச்சைத்தட்டையொடு ஒப்பிட்டு பொன்போலும் பச்சைத்தட்டையொடு ஒத்து, கமலக்கை பொற்றுகிர் அனையவிரலொடு-தாமரைக்கைகளிலுள்ள அழகிய பவளம்போலும் விரலையும். கிளிதன் முகம் நகம் எனவும்- கிளிகளுடைய முகம் நகம், எனவும், இகலிய குவடும் இணையுறு செப்புத்தக்க மருப்புசக்கரம்வைத்த பொற்குடம் ஒத்திட்டு-கோபித்த மலையும், இரண்டானசெம்பையும், தகுந்த கொம்பையும், சக்கரத்தையும், பொற்குடத்தையும் ஒத்து, திகழ் முலை மேவும்-விளங்குகின்ற ஸ்தனங்களின்மேல் பொருந்துகின்ற, வடமும் நிரைநிரை தரளபவளமொடு அசைய-வரிசையான முத்து மாலை பவளமாலை இவைகள் அசையவும், பழுமர இலை வயிறு - பழுமரத்திலுள்ள இலைபோலும் வயிறும்; மயிர் அற்புத்தின் இணை - மயிர் அற்புதத்திணையும், பொற்பு தொப்புளும் அப்புசுழிபொருத-அழகிய சலசுழிபோலும் தொப்புளும், பொற்கொடி துடியின் அளவிடும் இடையும் பொன் கொடியையும், உடுக்கையையும், மின்னலையும் ஒத்த இடுப்பையும், இனது என அரியகடியதடம்-இன்னதென்று அறிந்து அருமையான கடிதடத்தையும், அமுதுக்கைரசம்மட்டு பொற்கமலத்திற் சக்கரி-அமிர்தம் கருப்புரசம், மகரந்தம் பொருந்திய காமலயசக்கரம்,

துத்திப் பைக்கு ஒரு முத்துபட்டுடை - பொறிய மைந்தபைக்கு முத்து போட்டருஒபட்டுவஸ்திரம், அழகுதொடையிணை கதலி-அழகிய வாழை போன்ற இரண்டு தொடைகளையும், பரடென மொழியும் உதடொடு-பரடு என்று சொல்லப்படும் உதடினையும், கடிதடம் நிகர்குதி - ஆமைபோன்ற குதிக்காலையும், வட்டப் புத்தகமோதிய-வட்டமான புத்தகத்தை ஒத்தும், பொன்சரணத்தில்- பொன்போலும் கால்களின், பின்புறமெத்துதத்தைகள்-பின்பக்கத்தில் மெத்துகின்றகிளிகள், மயில்போலதெருவில் முலைவிலை யுரைசெய்து - மயிலைப்போல் தெருவில் முலைக்குவிலைகூறி, அவர்- அவரவர்கள், மயல்கொடு அணைவரம் அருள்செய்தொழில்கொடு மயக்கங்கொண்டு அணைகின்ற அருளிச்செய்கின்றவேலையைக்கொண்டு, தெட்டி பொற்பலசொக்கிட்டு - பலவகையான சொக்குத்துளிட்டு, பொருள்பற்றி-பொருளைமுன்னேபிடுங்கிக்கொண்டு கட்டில்அணைக்குஒப்பி-கட்டில் சயனத்திற்கு ஒப்பி,புணர்-புணர்கின்ற, திலகம் அழிபட-பொட்டுஅழியவும், விழிகள் சுழலிட-கண்கள் சுழலவும்,மலர்கள் இணை குழல் இடைகொள்-மலர்கள் தரித்தகூந்தலையிடையில்கொண்ட, துகில்பட-வஸ்திரம் நழுவவும், நித்துத்துப்பிதழ்வைத்து கைக்கொடு-தித்திப்பான பவளவிதழ்வைத்து கையைக்கொண்டு, கட்டி-க்கட்டி, குத்துமுலைக்குள்கைப்பட, அமிர்தம்போலும், கழைஇரசம்என-கரும்பரசம்போலவும், பலவில்சுளையென - பலாவின் சுளையெனவும், உருக, மன்மிள்க்பிணிபல சிக்குப்பட்டு-பலவகையான நோயால்வருந்தி, உடல்கெட்டு, சரீரம்கெட்டு, சித்தமும் வெட்கி-மனம் வெட்கமடைந்து, துக்கமும்ஒத்து-துக்கமுண்டாய், கொக்குஎன நரைமேவி-கொக்கின்நிறத்தைப்போல்நரைத்து, செவிபொடுஒளிர்விழிமறைய-காதுகேளாமலும், கண்தெரியாமலும், மலசலம்-மலசலங்கள்தடைபடவும், மொழிகள்பலவுமைக்குழற-பலவகையானசொற்கள்குழறவும், தடிகொடுதெத்தி-தடியைக்கொண்டு தெத்தித்தெத்தி நடந்து, பித்தமும் முற்றி-பித்தமுதிர்ச்சியையடைந்து, தற்செயல் அற்ற-சுயசெய்கைக ளொழிந்து, சிச்சி நயனத்து

க்கப்பட-சிச்சியென்று துக்கிக்க, சிலர்கள் முதுவுடல் வினவு பொழுதினில்-சிலபேர் பழையசரீரத்தை கேட்கும்போது, உவரிநிறமுடை நமனும் உயிர்கொள-கருத்தநிறமுள்ள எமனும் உயிரைக் கொள்ள, செப்பு அற்று-சொல்லிறந்து, பிணம் ஒப்பித்துப் பெயரிட்டு - பிணம்என்னும் பெயர்வைத்து, பொன்பறைகொட்ட செப்பிடு - அழகிய பறையடிக்கச் சொல்லும், செனனம் இதுவென அழுது-சென்மத்தின் லட்சணம்இதுவேயென்று அழுது, முகம்மிசையலறி - முகத்தோடு முகம்வைத்து அலறி, அனையவர் எடுஎன- அவர்கள் எடுங்களென்றுசொல்ல, சுடலையில்-சுடுகாட்டில், சிற்றித்தீக்கிரையிட்டிட்டு. சிறுதீயை மூட்டி, இப்படி-இவ்விதமாக, நித்தம்-அனுதினமும் துக்கம் எடுத்திட்டு - துக்கத்தையடைந்து, சடம் உழல்வேனோ-சரீரத்தால் திரிவேனோ ? (எ-று.)

பொது.

88, *தத்தன தானன தத்தன தானன*
தத்தன தானன—தனதான.

சுட்டது போலாசை விட்டுல காசார
துக்கமி லாஞான சுகமேவி

சொற்கரணாதீத நற்குண மூடாடு
சுத்தநி ராதார வெளிகாண,

மொட்டலர் வாரீச சக்ரச டாதார
மூட்டவும்தேறு மதிமீகாஸ்

முப்பது மாறாறு முப்பதும் வேறான
முத்திபலா யாமோன பரமடைவேனோ

எட்டவொ ணுவேத னத்தணி கோகோவெ
னப்பொரு மான்மேவு வரைசாய

வெற்றிய வேழாழி வற்றிட மாறுத
வெத்தனை யோகோடி யசுரேசர்

பட்டொரு சூர்மாள விக்ரம வேலவே
பத்திரு தோள்வீர தினைகாவல்

பத்தினி தோடோயு முத்தம மாறுத
பத்திசெய் வாசனுடர் பெருமாளே

(ப-ரை) எட்டவொணுவேதன் சத்தணிகோ கோவென-எட்டுதற்குக்கூடாத பிரமதேவனும், சங்கையேந்திய விஷ்ணுவும் கோவென்று அலற, பெருமான் மேவுவரைசாய-பெருமான் எழுந்தருளியிருக்கின்ற மலைசாயவும், எற்றிய-மோதின, எழாழியற்றி - சத்தசாகரங்களும் வற்றவும், மாறுத எத்தனையோ கோடி அசுரேசர்பட்டு ஒருசூர்மாள- ஒழியாதபலகோடியசுரர்களும் ஒரு சூரபத்மனும் இறந்துபட, விக்கிரமவேலவ பத்திருதோள்வீர-போர்செய்தலையுடையவேலாயுதத்தைப்பிரயோகித்தபன்னிரண்டு புஜங்களையுடைய வேலனே! தினை காவல் பத்தினிதோள் தோயும்உத்தம-தினைப்புனத்தில் காவல்செய்திருந்த வள்ளிநாய்ச்சியாருடைய புஜங்களை யணைக்கும் உத்தமனே! மாறுதபத்திசெய்வாருடர் பெருமாளே-ஒழியாமல் அன்பைச்செலுத்துகின்றதேவர்களுக்கு தலைவனே! சுட்டதுபோலாசைவிட்டு-சுட்டுசுட்டது கைவிட்டது போல் ஆசையை ஒழித்து, உலகுஆசா துக்கமிலாஞானசுகம் பேவும் - லோகாசார துக்கமில்லாத ஞானசௌக்கியத்தை யடைந்து, சொல்காணுநீத சற்குணப்படாடு-சொல்லுகின்றகாரணங்களுக்கு அதீதப்பட்ட ஞானகுணம் பரவுகின்ற,சுத்தநிராதாரவொளிகாண-சுத்தமான ஆதாரமற்ற வொளியைக் காணற்பொருட்டும், பெட்டு அலர்வாரீச சங்

கமலசடாதி - முட்டருவ மீதேறும்மதி மீதாய்-மொக்குகள் மலர்கின்ற தாமரை, சக்கரம், சடாதாரம் முட்ட ;மேலேறுகின்ற சந்திரமண்டலத்தின் மேலாக, நூற்பதும் ஆ றுமுப்பதும் வேறானமுத்திரையாம்மோனம் அடைவேனோ-முப்பத்தாற தத்துவங்களுக்கும் வேறானமுத்திரையாகிய மௌனத்தை யடைவேனோ! (எ-று)

திருக்குறட்டி.

89. தானதன தத்ததான தானதன தத்ததான
தானதன தத்ததான—தனதான.

நீரிழிவுகுட்டமீளை வாதமொடு பித்தமூல
நீர்க்குளிர்வெ துப்புவேறு முளநோய்கள்

நேருறுபு லாற்கள்கூடு நான்முகனெ டுத்தவீடு
நீடியவி ரத்தமூளை தசைதோல்சீ

பாரியந வத்துவார நாறுமும லத்திலாறு
பாய்பிணிபி யற்றுபாவை நரிநாய்பேய்

பாருறுக ழுக்கள்கூகை நாயிவைபு சிப்பதான
பாழுடலெ டுத்துவீணி லுழல்வேனோ

நாரணிப ரத்திநாரி யாறுசம யத்திபூத
நாயகரி டத்திகாமி மகமாயி

நாடாக டத்திசோல நீலவரு ணத்திவேத
நாயகியு மைச்சிநீலி திரிசூலி

வாரணிமு லைச்சிஞான பூரணிக லைச்சிநாக
வாணுதல ளித்தவீர மயிலோனே
மாடமதில் முத்துமேடை கோபுரம ணத்தசோலை
வாகுளகு றட்டிமேவு பெருமாளே

(ப-ரை) நாரணி அறத்திநாரி ஆறுசமயத்தி பூதநாயகர் இடத்தி காமி மகமாயி-நாராயணியும் தருமியும் நாரியும், ஆறுசமயத்திலுள்ளவளும், பரமேஸ்வரனுக்கு இடதுபாகத்திலிருப்பவளும், மகமாயியும், நாடகநடத்தி கோலநீலவருணத்தி வேதநாயகி இமைச்சிநீலி திரிசூலி-நாடகஞ் செய்பவளும். அழகிய நீலரூபமுள்ளவளும், வார் அணிமுலைச்சி ஞானபூரணி கலைச்சி நாகவாள்நுதல் அளித்த-கச்சிறுக்கின முலையையுடையவளும், பூரணஞான முடையவளும், கலைகளில் சொல்லப்படுபவளும், உயர்ந்த ஒளிபொருந்திட நெற்றியை யுடையவளுமான ஸ்ரீபரமேஸ்வரி யானவள் பெற்ற ! வீரமயிலோனே - வெற்றி பொருந்தின மயில்வாகனத்தை யுடையவனே ! மாடமதில் முத்து மேடை-மாடங்கள் மதில்கள் சூழ்ந்த முத்து மேடைகள், கோபுரம் மணத்தசோலை - கோபுரங்கள் மணமுள்ள சோலைகள் ஆகிய இவைகளுள்ள, வாகுள - அழகுள்ள ! குறட்டிமேவு பெருமாளே-திருக்குறட்டியில் எழுந்தருளியிருக்கின்ற இளையபெருமாளே, நீரிழிவு குட்டம் ஈளை வாதமொடு பித்தம் மூலம் நீள் குளிர் வெதுப்புவேறுள்ள நோய்கள்-நீரிழவு, குஷ்டம், ஈளைவாதம், பித்தம், மூலம, நீண்டகுளிர்சுரம், இன்னும் பலவிதரோகங்கள், நேருறு புழுக்கள்கூடும் பொருந்தினபுழுக்கள் நிறைந்தகூடும், நான்முகன் எடுத்தவீடு-பிரமன்செய்தவீடும், நீடியரத்தம் ஈளைதசை தோல்சீ- அதிகமானரத்தம், ஈளை, தசை, சீழ் இவைகள், பாரியநவதுவாரம்-கலந்தநவத்துவாரங்களும், நாறும் மும்மலத்தில்-நாறுகின்ற மும்மலத்திலும், ஆறுபாய்பிணியிடற்று பாவை-ஆற்றைப்போல்பாவுகின்ற நோய்களைச் செய்கின்ற பாவையும், நரிநாய்பேய்பருந்தொடு கழுக்கள் கூடைதாமிவை-

நரி, நாய், பேய், பருந்து கழுக்கள். கூகை இவைகள், புசிப்பதான - தின்னுவதான ! பாழுடல் எடுத்துவீணில் உழல்வேனோ-பாழ்படும் சரீரத்தைஎடுத்து வீணாகத் திரிவேனோ? (எ-று).

பொது.

90. தனதன தரனத்தானன தனதன தானத்தானன
தனதன தானத்தானன—தனதான.

முருகமயூரசேவக
குறமகளாவற்பூதர
முகுளபடீரக்கோமள கிலேபீதே

முழுகிய காந்தற்காமுக
பசுபதி பாசத்தூய்வினை
முதியபுராரிக்கோதிய குருவேயென்

றுகியுமாடிப்பாடியு
மிருகழனாடிச்சூடியு
முனிவினொராடிக்கூடியும் வழிபாடுற்

றுலகிலொராசைப்பாடற
நிலைபெறு ஞாலத்தாலினி
யுனதடியாரைச்சேர்வது மொருநாளே

மருகனெனுமற்சூழ்கொலை
கருதியமாமடிபாதகன்
வரவிடு மாயப்பேய்முலை பருகாமுன்

வருகரி யானைக்கோடவை
திருகிவி ளாவிற்காய்கனி
மதுகையில் வீழச்சாடிய விதமார்புட்

பொருதிருள் சோரப்பாரிய
மருதிடை போயப்போதொரு
சகடுதை யாமற்போர்செய்து விளையாடி

பொதுவியர் சேரிக்கேவளர்
புயல்மரு காவச்ராயுத
புரவதி பாபுத்தேளிர்கள் பெருமாளே.

(ப-ரை) மருகன் எனுமல் சூழ் கொலை கருதியமாமப்பாதகன்வரவிடும்-மருகன்என்று எண்ணுமல் கொலைசெய்தற் பொருட்டு எண்ணிய மாமனனகாதகன் செலுத்தின, மாயம் பேய்முலைபருகாமுன் - மாயமாகிய பேயின் முலைப்பாலைக் குடிக்காத முன்னரே, வர விடுயானைக் கோடு அவை திருகி-வந்தயானையின் இணைக்கொம்புகளைத் திருகிவிளாவிற் காய்கனி மதுகையில் வீழசாடிய - விளாங்கனியை மதுகையில் விழும்படி மோதின! விதமார்புள் பொருதிருள் சோர - விதமான மார்பில் மோதி இருளானது சோர்வடைய, பாரிய மருதிடைபோய் - பருத்தமருதில்போய், அப்போதுஒருசகடு உதையாமல் போர்செய்து - அப்போதொரு சகடுதைத்து மல்லயத்தம் செய்து, விளையாடி - திருவிளையாடலைச்செய்து! பொதுவியர் சேரிக்கே வளர்புயல்-ஆயர்பாடியில் எழுந்தருளும் புயலான விஷ்ணுமூர்த்தியின், மருகா - மருமகனே! வச்சிராயுதபுரவதிபா - தேவேந்திரனுக்குத் தலைவனே! புத்தேளிர்கள் பெருமாளே - தேவர்களுக்குஅரசனே! முருகமயூரசேவக - முருகனே! மயில்வாகனனே! சேவகனே! குறமகள் - வள்ளிநாய்ச்சியாருடைய, ஆவல்பூதர முதுளபடீரகோமள முலைமீது - ஆசைகொடுக்கும்

சிறு குன்றுபோன்ற கலவைக்சாந்தணிந்த அழகிய முலையின்மேல் முழுகிய காதல்காமுக-மூழ்கின ஆசையையுடைய காமுகனே, பசுபதிபாசம் தூய்வினைமுநிய புராரிக்கோதிய குருவே - பதிபசுபாசங்களில் உண்மையை புராதனமாயுள்ள பரமேஸ்வரனுக்கு உபதேசஞ்செய்தகுருவே, என்று உருகியும் ஆடியும்பாடியும், இருதுழல் நாடி சூடியும்-இரண்டு திருவடிகளை யடைந்தும் அவைகளைச் சிரமேல்தரித்தும். உணர்வினோர் ஆடிகூடியும்-நல்லுணர்ச்சியையுடையவர் ஆடியும் கூடியும், வழிபாடு உற்று-வழிபட்டு, உலகில் ஓர் ஆசைப்பாடு அற-உலகத்தில் ஆசையொழிய, நிலைபெறு ஞானத்தால்-நிலைத்த ஞானத்தினால், இனிஉனது அடியாரை சேர்வதும் ஒருநாளையாம். (எ-று)

திருவாலங்காடு.

91. தனதன தானந்தாத்த தனதன தானந்தாத்த
தனதன தானந்தாத்த— தனதான.

வடிவது நீலங்காட்டி
முடிவிடு காலங்கூட்டி
வரவிடு தூதங்கோட்டி விடுபாச
மகனொடு மாமன்பாட்டி
முதலுற வோருங்கேட்டு
ளழிதர மாயந்தீட்டி யுயிர்போலே
படிமிசை நாளுங்காட்டி
புடலுறு நோய்பண்டேற்று
பழவினை பாவந்தீர்த்து மடியேனைப்

பரிவொடு நாளும்பார்த்து
விரிதமி ழாலுங்கூத்தர்
பார்புகழ் பாடின்றாட்கொண் டருள்வாயே

முடிமிசை சோமன்சூட்டி
வடிவுள வாலங்காட்டி
முதிர்நட மாடுங்கூத்தர் புதல்வோனே

முருகலர் தாமஞ்சூட்டி
யொருதனி வேழங்காக்க
வருதிரு மாலுந்தோற்க வசைகூறி

இடியென மேகங்கூட்டி
நெடிதரு சூலந்தீட்டி
யெதிர்பொரு சூரன்றாக்க வரவோடு

மிலகிய வேல்கொண்டேற்ற
வுடலிரு கூறன்றாக்கி
யிமையவ ரேதந்தீர்த்த பெருமானே.

(ப-ரை) முடிமிசை சோமன்சூட்டி-சிரத்தின் கண் சந்திரனைத் தரித்து, வடிவுள ஆலங்காட்டி-ரூபத்திலுள்ள ஆலகால விஷத்தைக் காட்டி, முதிர்நடமாடுங்கூத்தர் புதல்வோனே - மிகுந்த நடனஞ்செய்கின்ற கூத்தருடைய புத்திரனே, முருகு அலர் தாமஞ்சூட்டி-வாசனை பொருந்திய மலர்மாலையைத்தரித்து; ஒரு தனிவேழங்காக்க-ஒருதனி யானையைக்காத்து ரட்சிக்க, வருதிருமாலும்தோற்க-வருகின்ற விஷ்ணு மூர்த்தி தோல்வி யடைய, வசைகூறி-வசைச்சொல் சொல்லி இடியென மேகங்கூட்டி-இடியென்று மேகங்கள்சேர்த்து, நெடிதரு சூலந்தீட்டி-நீண்ட சூலத்தைதீட்டி எதிர்பொரு சூரன்தாக்க-சூரனானவன்

எதிரே பொருதுதாக்க, வரலோடும் - வரவும், இலகியவேல்கொண்டு-விளங்கின வேலாயுதத்தைக்கொண்டு, ஏற்றவுடல்-அடைந்த சரீரத்தை, அன்று இருகூறாக்கி-அக்காலத்தில் இரண்டு பிளவாக்கி, இமையவர் ஏதந்தீர்த்த பெருமாளே-தேவர்களுடைய குற்றத்தையொழித்த இளைய பெருமாளே, வடிவது நீலங்காட்டி-நீல சொரூபத்தைக் காண்பித்து, முடிவுகாலங்கூட்டி - முடிவுகாலத்தை, உணர்வித்து, வரவிடுதூது அங்கு ஓட்டி-வரவழைக்க அனுப்புகின்ற தூதுவரை அவ்விடத்திற்கு அனுப்பி, விடுபாசம்-விடுகின்ற பாசக்கயிற்றை, மகனொடு மாமன் பாட்டிமுதல் உறவோருங்கேட்டு-மகன் மாமன், பாட்டிமுதலிய சுற்றத்தார்கள் கேட்டு, உள் அழிதர-மனமழிய-மாயந்தீட்டி-மயக்கத்தையுண்டாக்கி உயிர்போல-உயிரைப்போல, படிமிசைநாளுங்காட்டி-உலகத்தில் எந்நாளும் உணர்வித்து உடல் உறுநோய் பண்டு ஏற்று-சரீரத்திலுள்ள பழைய நோயைப் பெற்று, பழவினை பாவந்தீர்த்து-பழைய வினையாகிய பாவத்தைத் தீர்த்து, உன் அடியேனை-உன்னுடைய அடிமையான என்னை, பரிவோடு நாளும்பார்த்து-தினமும் கிருபையுடன் பார்த்து, விரிதமிழ் ஆளும் கூத்தர், விரிந்த தமிழினை-ஆளுகிற கூத்தரே, நீர் பரர்புகழ் பாடின்று ஆட்கொண்டு அருள்வாய்-பரர்புகழ ஆண்டருள் செய்வாய். (எ-று)

திருப்பழநி மலை.

92\. *தனன தனன தனன தனன*
தனன தனன—தனதான.

தமருமமனையு மரசுமினிய
தனமுநிலையு மிவைபோகத்

தறுகண்மறலி முறுகுகயிறு
தலையைவளைய வெறியாதே

கமலவமல நடனவுபய
கனகமணி கொளிருபாதக்

கருதவருளி யெனதுதனிமை
கழியவறிவு தரவேணும்

குமரசமர புரியின்முருக
குலவுபழநி மலையோனே

கொடியகிரியை முடியமுடுகு
குறவர்சிறுமி மணவாளா

வமரரிடரு மவுணருடலு
மழியவமர்செய் தருள்வோனே

யறமுநிறமு மயிலுமயிலு
மழகுமுடைய பெருமாளே

(ப-ரை.) குமரசமரபுரியின் முருககுலவு பழநிமலையோனே-குமரனே! சமரபுரியி லெழுந்தருளின முருகனே! குலாவுகின்ற பழநி மலையில் எழுந்தருள்பவனே! கொடிய கிரியைமுடிய-கொடுமையான செய்கைகள் நிறைவேற, முடுகு-கோபித்த, குறவர்சிறுமி மணவாளா-வள்ளிநாச்சியாருக்கு நாயகனே! அமரர் இடரும்-தேவர்களுடைய துன்பமும், அவுணர் உடலும் அழிய-இராட்சதர்களுடைய சரீரமும் அழிய அமர்செய்து அருள்வோனே-யுத்தஞ் செய்பவனே! அறமும் நிறமும்-தருமமும் நிறமும், மயிலும் இயலும்-மயிலும் லட்சணமும், அழகும் உடைய பெருமாளே-அழகுமுள்ள இளையபெருமாளே! தமரும்மனையும், அரசும் இனிய தனமும் நிலையும் இவைபோக-சுற்றத்தாரும், பெண் சாதியும், அரசும், இனிமையான தனமும் உண்மை நிலைமையும் போக,

தறுகண்மறலிமுறுகு-வஞ்சகத்தையுடைய எமன் முறுகுகின்ற, கயிறு தலையைவளைய எறியாது-பாசக்கயிற்றை தலைவளையும்படிவீசாமல், கமல அமல நடன-தாமரையையொத்த பரிசுத்தமான திருத்தாண்டவஞ்செய்யும், உபய கனகமணிகொள் இருபாதம்-கனகம்போலும் அழகிய இரண்டு திருவடிகளையும், கருதஅருளி-நினைக்க அருள்செய்து, எனது தனிமைகழிய-என்னுடைய தனிமையானது நீங்க, அறிவுதரவேணும்-ஞானத்தைத் கொடுக்கவேண்டும். (எ-று)

திருக்குராவடி.

93. தனத்த தானன தனதன—தனதானு,

மருக்கு லாவிய மலரணை கொதியாதே
வளர்த்த தாய்தமர் வசையது மொழியாதே
கருக்கு லாவிய வயலவர் பழியாதே
கடப்ப மாலையை யினிவர விடவேணும்
தருக்குலாவிய கொடியிடை மணவாளா
சமர்த்த னேவணி மரகத மயில்வீரா
திருக்கு ராவடி நிழறனி லுறைவோனே
திருக்கை வேல்வடி வழகிய பெருமாளே.

(ப-ரை) தருகுலாவிய கொடியிடை மணவாளா-தருக்களில் விளங்குகின்ற கொடிபோலும் இடையையுடைய தெய்வயானையின் தலைவனே! சமர்த்தனே மணிமரகத மயில்வீரா-சாமர்த்திய முள்ளவனே! மரகத மணியைப்போலும் மயில்வாகனத்தையுடைய வீரனே, திருக்குராவடி நிழல்தனில் உறைவோனே-திருக்குராமரத்தின் கீழ் எழுந்தருளியுள்ளவனே! திருக்கைவேல் வடிவழகிய பெருமாளே! திருக்கரத்தில்

வேலாயதத்தையுடைய அழகிய இளைய பெருமாளே, மருக்குலாவிய மலர் அணைகொதியாதே-வாசனைபொருந்திய மலரணையானது கொதியாமலும், வளர்த்தாய் தமர்வசையது மொழியாது-வளர்த்ததாய், சுற்றத்தார் இவர்கள் வசைசொல்லாமலும், கருகுலாவிய அபலவர் பழியாது-ஜென்மமிருக்கின்ற அயலார்களெல்லாம் பழிசொல்லாமலும், கடப்பமாலையை இனிவரவிடவேணும் - கடப்பமலர்மாலையை இனிவரும்படி விடவேண்டும். (எ-று)

பொது

94. தனதன தந்ததத்த தனதன தந்ததத்த
தனதன தந்ததத்த—தனதான.

மொழியநி றங்கறுத்து மகரவி னங்கலக்கி
முடியவ ளைந்திரைத்த கடலாலே

முதிரவி டம்பரப்பி வடவைமு கந்தழற்குண்
முழுகியெ ழுந்திருக்கு நிலவாலே

மழையள கந்தரித்த கொடியிடை வஞ்சியுற்ற
மயலில்ம னந்தளர்ந்து விடலாமோ

மரகத துரகவெற்பில் விகடந டங்கொள்சித்ர
மயிலினு வந்துநித்தம் வரவேணும்

அழகியெ னுங்குறத்தி புழுகியல் சந்தனத்தி
யமுதத னம்புதைத்த திருமார்பா

அருணகிரிநாதர் எம்பதிக்கு மழகிய செந்திலுக்கு
மமரர்த லங்களுக்கு மிறையோனே

எழுபுவ னம்பிழைக்க வசுரர்சி ரந்தறித்த
வெழுசயி லந்தொளைத்த கதிர்வேலா
விரவியொ டந்தரத்த ரரகரி பங்கயத்த
ரிவர்கள்ப யந்தவிர்த்த பெருமாளே.

(ப-ரை) அழகியெனுங்குறத்தி அழகுடையவள் என்று சொல்லப் படுகின்ற வள்ளிநாய்ச்சியாரும், புழுகு இயல் சந்தனத்தி புனுகு கலந்த சந்தனப்பூச்சினை யுடையவளான தெய்வயானையும், ஆகிய இவர்க ளுடைய அமுத தனம்புதைத்த திருமார்பா - அமுர்தம் பொருந்தின தனங்கள் புதையும் திருமார்பை யுடையவனே! அருணைவளம் பதிக்கும் அழகியை யெந்திலுக்கும் - திருவண்ணு மலைக்கும் அழகிய திருச்செந்தில் பதிக்கும், அமரர் தலங்களுக்கும் இறையோனே-தேவ லோகங்களுக்கும் தலைவனே! எழுபுவனம் பிழைக்க-எழு லோகங்களும் பிழைக்க, அசுரர் சிரந்தறித்த-இராட்சதர்களுடைய சிரசை யறுத்த, எழு சயிலம் தொளைத்த கதிர்வேலா-எழு மலைகளையும் தொளைசெய்த கூர் மைபொருந்திய வேலாயுதத்தையுடையவனே! இரவியொடு அந்தரத்தர்- சூரியனும் தேவர்களும், அரஅரி பங்கயத்தர்-சிவன், விஷ்ணு, பிரமன் ஆகிய, இவர்கள், பயம் தவிர்த்த பெருமாளே-இவர்களுடைய பயத்தை யொழித்த இளைய பெருமாளே! மொழிப நிறம்கறுத்து-சொல்ல நிறங் கறுத்து, மகரவினங்கலக்கி-மகரங்கள் கலக்கி, முடியவளந் திரைத்த கட லால்-முழுமையும் இரைத்த கடலினாலும், முதிரவிடம்பரப்பி-விஷத் தைப்பரப்பி, வடவைமுகந்தழற்குள்-வடவா முகாக்கினிக்குள், முழுகி எழுந்திருக்கும் நிலவால்-மூழ்கி எழுந்த நிலவினாலும், மழையளகந்தரித்த-மேகம்போலுங் கறுத்த கூந்தலைத்தரித்த, கொடியிடை வஞ்சியுற்ற- கொடியைப்போலும் இடுப்பினையுடைய பெண்ணினுடைய, மயலில் மனந் திகைத்துவிடலாமோ - மயக்கத்தில் மனம் இளகிவிடலாமோ? மரகத துங்கவெற்பில் விகடதடம்கொள்-மரகதத்தாலான பரிசுததமான

மலையில் விகட நடனத்தைச்செய்கின்ற, சித்திரமயிலில் உவந்து நித்தம் வரவேணும்-அழகிய மயில்வாகனத்தின்மேல் மனவிருப்பத்துடன் அநுதினமும் எழுந்தருளிவரவேண்டும். (எ-று)

திருவருணை.

95. தனன தனதன தனன தனதன
தனன தனதன—தனதான,

இறகு மணிமுலை மருவு தரளமு
மெரியு மெழுமதி நிலவாலே
யிரவி லெனதுயிர் கவர தருகுயி
லிசையு முறுகட லலையாலே
தறுக ணதிபதி மதனன் விடுகொடு
சரமு மினியெனை யணுகாதே
தருண மணிபொழி லருணை நகருறை
சயில மிசையினில் வரவேணும்
முருகு திரிபுர மறுகு கனலெழ
முறுவ லுடையவர் குருநாத
முடிய கொடுமுடி யசுரர் பொடிபட
முடுகு மரகத மயில்வீரா
குறவர் மடமக ளமிர்த கனதன
குவடு படிமொரு திருமார்பா

கொடிய சுடரிலை தனையு மெழுகடல்
குறுக விடவல பெருமாளே

(ப-ரை) முறுகுதிரிபுரம்-கோபித்ததிரிபுரமானவை, மறுகுகனல் எழ-தகிக்கின்ற அக்கினிமயமாக, முறுவல் உடையவர் குருநாதா-சிரிப்பையுடைய பரமேஸ்வரனுக்குக்குருவே! முடியகொடு முடியசுரர் பொடிபட முடுகுமரகத மயில்வீரா-கொடிய கிரீடங்களணிந்த இராட்சதர்கள் பொடியாம்படி கோபித்த பச்சைமயிலில் ஆரோகணிப்பவனே! குறவர் மடமகள் அமிர்தகனதன குவடுபடும் ஒருதிருமார்பா-வள்ளிநாய்ச்சியாருடைய அமிர்தம் பொருந்தின கனத்த முலைகளான சிறுகுன்றுகள் படுகின்ற ஒப்பற்ற திருமார்பையுடையவனே! கொடிய சுடர் இலை தனையும் அழுகடல்குறுக விடவலபெருமாளே - கொடுமையையுடைய சுடர்கின்ற வேலாயுதத்தைக் கடலறவிட்ட இளைய பெருமாளே, இறுகும் அணிமுலை மருவுதரளமும் எரியும் எழுமதிநிலவால்-இறுகுகின்ற அழகிய முலைகளின்மேல் பொருந்தின முத்துமாலைகளும் வீசுகின்ற சந்திரிகையினால், இரவில் எனது உயிர் கவரவரு குயிலிசையும் உறி கடல் அலையால்-இராத்திரியால் என்னுடைய உயிரை அபகரிக்க வருகின்ற குயிலிசையும் பொருந்தின கடலினால், தறுகண் அதிபதி மதனன் விடு கொடுசரமும் இனி எனையணுகாது-வஞ்சகத்தையுடைய தலைவனான மன்மதன் விடுகின்ற கொடிய பாணமானது என்னைச்சேராமல், தருணம் அணிபொழில் அருணைநகர் உறைசயில்மிசையினில் வரவேணும்-அழகையுடைய சோலைசூழ்ந்த திருவண்ணாமலையில் எழுந்தருளி வர வேண்டும். (எ-று.)

96. தனனதத்தத் தத்ததத்தத் தனதன
தனனதத்தத் தத்ததத்தத் தனதன
தனனதத்தத் தத்ததத்தத் தனதன—தனதான.

கமலமொட்டைக் கட்டழித்துக் குமிழியை
நிலைகுலைத்துப் பொற்குடத்தைத் தமனிய
கலசமர்க்கத் தைத்தகர்த்துத் தலையற விளநீரைக்

கழிவிட்டடைப் பிற்றுரத்திப் பொருதவ
சயம்விளைத்துச் செயம்படிப்பித் துலவிய
கரிமருப்பைப் புக்கொடித்துத் திறன்மத னபிஷேகம்

அமலர்நெற்றிக் கட்டழற்குட் பொடிசெய்து
வதிகசக்ரப் புட்பரக்கக் கொடுமையி
னடையிட்டுச் சப்படுத்திச் சபதமொ டிருதாள

மறைகல்கற்பித் துப்பொருப்பைக் குலவிய
சிறகறுப்பித் துக்கதித்துப் புடைபடு
மபிநவச்சித் ரத்தனத்துத் திருடிக ளுறவாமோ

தமரமிக்குற் றுக்கலக்கப் பலபறை
தொகுதொகுத்தொக் குத்தொகுக்கத் தொகுதொகு
த்ரிகடதத்தத் தத்தரிக்கத் தரிகிட வெனவோதி

சடலவுடம்பக் கப்பழுத்துப் புகையெழு
விழிகளுட்செக் கச்சிவத்துக் குறளிகள்
நசைகள்பட்சித் துக்களித்துக் கழுகொடு கழுகாட

அமரில்மெத்தக் கொக்கரித்துப் பொருதிடு
மசுரர்பத்தற் றுக்குளித்துத் திமியென
வடிவெடுத்திட் டுக்கைகொட்டிச் சமர்செயு மயிலான

வழகுமிக்குச் சித்திரப்பொற் புரவிபி
னுலவுயிர்த்தக் கொற்றசித்துக் குருநாத
வருணையிற்சித் தத்தெனக்குத் தெளிவருள் பெருமாளே,

(ப-ரை) தமரம்மிக்குற்றுக்கலக்கப் பலபறைதொகு தொகுத் தொக்குத் தொகுக்கத் தொகு தொகுதிரிகட தத்தத்தத் தரிக்கத் தரிகிட வெனவோதி-பேரொலியானது மிகவும் சேர்ந்துகலக்க. பலவகையான வாத்தியங்கள் மேற்சொல்லியவாறு அடிக்கப்பட்டு, சட்வுடல் புக்கப் பழுத்து-சடமாகிய சரீரம் பக்குவப்படுத்தும், கைபெழுவிழிகள் - புகை கிளம்புகின்ற கண்கள், உள்செக்கச்சிவத்து-உள்ளேநன்றாய் சிவந்து, குறளிகள் தசைகள் பட்சித்து களித்து-குறளிகளெல்லாம் மாமிசங்களைப் பட்சணஞ்செய்து சந்தோஷித்து, கழுகொடு கழுகாட-கழுகும் கழுகும் ஆடவும், அமரில்மெத்த கொக்கரித்துப் பொருதிடும்-சண்டையில் மிகவும் கொக்கரித்து போராடுகின்ற! அசுரர் அங்கத்திற் குளித்து-இராட்சதர்கள் குளித்து, திமியென அடிநடத்திட்டு கைகொட்டி சமர்செயு மயிலான-திமிதிமியென்று நடஞ்செய்து கைதட்டிச்சண்டை செய்கின்ற மயிலான, அழகுமிக்கு சித்திரப்பொற்புரவியின் உலவு-அழகுமிகுந்து நல்ல புரவியின் உலர்வும், மிர்த்த செற்றசித்து குருபரநடனஞ்செய்கின்ற வெற்றியையுடைய ஞானவுருவான குருபரனே, அருணையிற் சித்தித்து எனக்கு தெளிவு அருள்பெருமாளே-திருவண்ணமலையில் ஞானபலமாக எனக்கு குருநிலையினை யருள்கின்ற இளைய பெருமாளே! கமலம் மொட்டை கட்டழித்து-தாமரை மொக்கை யழித்து, குமிழியை நிலைகுலைத்து-குமிழ் மலரைக்கெடுத்து, பொன்குடத்தை தமனியகலச வர்க்கத்தை தகர்த்து-பொன்குடத்தையும் பொன் கலசத்தையும் அழித்து, தலையற இளநீரைக் கறுவி-தலையறும்படி இளநீரைக் கறுவி! வட்டையின் திரத்தி-வட்டைப்பிறைக் திரத்தி, பொருந்தவசயம் விளைத்து-மோதுகின்ற-தவமுண்டாக்கி, செப்பு அடிப்பித்து-செப்பினை அடிக்கச்செய்து! உலாவிய கரிமருப்பைப் புக்குடைத்து-விளங்கின யா

னைக்கொம்பை யொடித்து! திறல்மதன் அபிஷேகம்-பலம்பொருந்திய மன்மதாபிஷேகத்தை, அமலர்நெற்றிக்கண் தழற்கண் பொடிசெய்து-நெற்றிக்கண்ணுற் பொடிசெய்து. அதிகசக்கர புள்பறக்க-அதிகமாக சக்கரவாகப்பட்சியானது பறக்க, கொடுமையில் நடனமிட்டு அச்சப்படுத்தி-கொடுமையாக நடனஞ்செய்து பயப்படுத்தி, சப்தமொடு-வைராக்கியத்துடன், ருதாளம் அறைதல் கற்பித்து - இரண்டுதாளம் போடுவதைக் கற்பனைசெய்து, பொருப்பை குலவிய சிறகு அறுப்பித்து-மலையின் இறகை அறுக்கச்செய்து, கதித்து - பெருத்து, புடைபடும்-சமீபத்திலுண்டாகும், அபிநவ சித்திரதன்த்து திருடிகள் உறவாமோ-அபிநயஞ் செய்கின்ற அழகினையுடைய திருடிகள் உறவினராவார்களோ? (எ-று.)

பொது.

97. தனத்தத் தானத்—தனதான.

கருப்பத் தூறிப் பிறவாதே
கனக்கப் பாடுற் றுழலாதே
திருப்பொற் பாதத் தனுபூதி
சிறக்கப் பாலித் தருள்வாயே
பரப்பற் றூருக் குரியோனே
பரத்தைப் பாலுக் கணியோனே
திருக்கைச் சேவற் கொடியோனே
செகத்திற் சோதிப் பெருமாளே.

(ப-ரை) பரப்பற்றூருக்கு உரியோனே-மேலான வஸ்துவில் பற்றுடையவர்களுக்கு சம்பந்தப்பட்டவனே! பரத்தை பாலுக்கு அணியோனே-வள்ளிநாய்ச்சியாருக்கு அணித்தானவனே! திருக்கை சேவல்

கொடியோனே-திருக்கரத்தில் சேவல்கொடியை யுடையவனே! ஜெகத்தில் சோதிபெருமாளே - உலகத்தில் தேஜோமயமான இளையபெருமாளே! கருப்பத்து ஊறிபிறவாது-கருப்பத்தில் தங்கி பிறவாமலும் கனக்கபாடுஉற்று உழலாது-அதிக கஷ்டத்தை யடைந்து வருந்தாமலும்! திருபொன்பாதத்து அநுபூதி சிறக்கபாவித்து அருள்வாய்-அழகிய பொன்போலுந் திருவடிகளில் அநுபூதியானது அதிகரிக்கப்பரிபாலித்து திருவருள் செய்யவேண்டும். (எ-று.)

திருவிடைமருதூர்.

98. தனனதன தனனதன தனனதன தனனதன
தானதானந் தானதானந்
தனனதன தனனதன தனனதன தனனதன
தானதானந் தானதானந்
தனனதன தனனதன தனனதன தனனதன
தானதானந் தானதானந்—தனதனதனதான.

அறுகுநுனி பனியனைய சிறியதுளி பெருகியொரு
வாகமாகியோர் பாலரூபமா
யருமதலை குதலைமொழி தனிலுருகி யவருடைய
வாயிதாதையார் மாயமோகமா
யருமையினி லருமையிட மொருமொரென வுடல்வளர
வாறுமாறுமாய் வாலரூபமா
யவரொருபெரியோரா,
யழகுபெற நடையுடைய கிறுதுபட மொழிபழகி
யாவியாயதோர் தேவிமாருமாய்

விழிசுவற, வரிவையர்கள் படுகுழியை நிலைமையென
வீடுவாசலாய் மாடகூடமா
யணுவளவு தவிடுமிகள் பிரதிவிட மனமுருகி
யாசையாளரா பூசிவாசியா
யவிகிற சுடர்போல,
வெறுமிடிய னொருதவசி யமுதுபடை யெனுமளவில்
மேலைவீடுகேள் கீழைவீடுகேள்
திடுதிடென நுழைவதன்மு னெதிர்முடுகி யவர்களொடு
சீறுஞாளிபோ லேறிவீழ்வதாய்
விரவினொடு வருபொருள்கள் சுவறியிட வனுகிவெறு
வீணியார்சொலே மேலதாயிடா
விதிதனைநினையாதே,
மினுகுமினு கெனுமுடல் மறுமுறுகி யிறுகிவர
வீணர்சேவையா பூணுபாவியாய்
மறுமையுள தெனுமவரை விடும்விழலை யதனில்வரு
வார்கள்போவெனு காணுமோவெனு
விடுதுறவு பெரியவரை மறையவறை வெடுவெடென
வேளமேசொலி ஞாளிவாளராய்
மிடையுறுவருநாளில்,
வறுமைகளு முடுகிவர வுறுபொருளு நழுவசில
வாதமூதகா மாலைசோகைநேர்
பெறுவயிறு வயிறுவலி படுவன்வர விருவிழிகள்
பீளைசாரிடா வீளைமேலிடா

வழுவழென வுமிழுமது கொழகொழென வொழுகிவிழ
 வாடியூனென்லா நாடிபேதமாய்

மனையவள் மனம்வேறாய்,

மனுகுமனு கெனுமனையி லனுதினமு மனையுமொரு
 மாதர்சீயென்று வாலர்சீயென்று
கனவுதனி லிரதமொடு குதிரைவா கெடியசுடு
 காடுவாவெனு வீடுபோவெனு
வலதழிய விரகழிய வுரைகுழறி விழிசொருகி
 வாயுமேலிடா வாவிபோகுநாள்

மனிதர்கள் பலபேச,

இறுதிபிதொ டறுதியென வுறவின்முறை கதறியழ
 வேழைமாதரார் மோகிபேல்விழா
வெனதுடைமை யெனதடிமை யெனுமறிவு சிறிதுமற
 வீழுமேலாவெனு வாயைபாவெனு
விடுதுபறை சிறுபறைகள் திமிலையொலி தவிலறைய
 வீமகீதசமே பேய்கள்நூத்தரா

வெளிதனி லிவோழ்வே,

மிணைபடிகள் பரவுமுன தடியவர்கள் சிவமெனா
 யேசிடார்களோ பாசநாசனே
பிருவினையு மலமுமற விரவியொடு பிறவியற
 வேகபோகமாய் நீயுநானுமா
யிருகும்வகை பரமசுக மதனையரு ளிடைமருதி
 லேகநாயகா லோகநாயகா

விமைப்வர் பெருமாளே.

(ப-ரை) அறுகுநுனி பனியனைய சிறியதுளி பெருகியொரு ஆக மாகி-புல் நுனியின்மேல் பனியைப்போன்ற சிறிய துளியான விந்து வானதுபெருகி ஒரு சரீரமாய், ஒரு பாலரூபமாய்-ஒரு குழந்தை ரூப மாய், அருமதலைகுதலை மொழிதனில் உருகி-அருமையான மதலைகுதலை என்னுஞ் சொற்களில் மனமிளகி, அவருடைய ஆயிதாதையார் மாய மோகமாய் - அவர்களுடைய பெற்றோர்கள் மாயத்தை விளைவிக்கும் மோகமாய், அருமையினில் அருமையை-அருமையிலும் அருமையைச் செய்ய, மொளுமொளென வுடல்வளர-சரீரம் சீக்கிரத்தில் வளர, ஆறும் ஆறுமாய் வாலரூபமாய்-ஆறும் ஆறும் என்னும் வயதில் வாலை ரூப மாகி, அவர் ஒரு பெரியோராய்-அவர் ஒரு பெரியவராய், அழகுபெற நடையுடைய கிறுதுபட மொழிபழகி-அழகு நடையிலும் கிறுதுசொல் லிலும் பழகி, ஆவியாயவோர் தேவிமாருமாய்-உயிரான ஒப்பற்ற தேவி மார்களாய், விழிசுவற அரிவையர்கள் படுகுழியை நிலைமையெனு-விழி சுவறும்படி பெண்களின் படுபள்ளத்தை நிலைமையானதென்று, வீடு வாசலாய் மாடகூடமாய்-வீடுவாசல்கள் மாடகூடங்கள் இவைகளாய், அணுவளவு தவிடு உமிகள் பிதிர-அணுவளவு தவிடும் உமியும் பிதிரா விட, மனம் இறுகி ஆசையாளராய்-மனம் கெட்டுப்பட்டு ஆசைகொண் டவர்களாய், ஊசிவாசியாய் அவிகிற சுடர்போல-ஊசிவாசியால் அவிந்து போகிற அக்கினியைப்போல, வெறுமிடியன் ஒரு தவசி யமுதுபடை எனும் அளவில் - வெறும்மிடியனென ஒருதவசி யமுதுகொடு என்னும் அளவில், மேலைவீடுகேள் கீழைவீடுகேள்-மேல்வீடு கீழ்வீடு இவைக ளில்கேளென்று, திடு திடு என நுழைவதன்முன்-சீக்கிரத்தில் நுழைவ தற்கு முன்னே, எதிர்முடுகி-எதிரேமுறைத்து, அவர்களொடுசீறிஞாளி போல ஏறிவீழ்வதாய்-அவர்களுடன் நாயைப்போல்சீறி ஏறிவிழுவதாய், விரவிெனாடு வருபொருள்கள் சுவறியிட அணுகி-ஆசையுடன் வருகி ன்ற பொருள்கள் சுவறச்சேர்ந்து, வெறுவீணியார் சொலேலேமேலதா

யிடா விதிதனைநினையாது-வெறுமையான வீணர்களுடைய சொற்களை மேன்மையாக விதியை நினைக்காமல், மினுகுமினுகு எனும்-மினுமினு என்கிற, உடல்அற-சரீரம்முழுமையும், முறுகி யிறகிவர-முறுகியும்இற கியும்வர, வீணர்சேவையாய்-வீணர்களுடைய சேவைசெய்து, ஊணுபா வியாய்-உண்கின்ற பாவியாய், மறுமை உளது உளதெனும் அவரை-மறு பிறப்புண்டென்று சொல்லுபவர்களை, விடும்விழிலையதனில்வருவார்கள்- விடுகின்ற விழலையில் வருபவர்கள், போனதுகாணுமோஎனு-போவென் றும் காணுமோ என்றும், விடுதுறவு பெரியவரை-யாவற்றையும் விட்ட துறவறத்தையுடைய பெரியவர்களை, மறையவரை - பிராமணர்களை வெடுவெடு என-வெடுவெடுவென்று, வேளம்சொல்லி - வேளத்தைச் சொல்லி, ஞாளிவாயராய்-நாய்வாயை யுடையவர்களாய், மிடையுறவரு நாளில்-மிடையுறு வருகின்ற நாளில், வறுமைகளும் முடுகிவர-தரித்திர ங்களும் அதிகரித்துக்கொண்டுவர, உறுபொருளும் நழுவ-இருந்த செல் வங்களும் குறைய, சில வாதம் ஊது காமாலை சோகைநோய் பெருவ யிறு வயிறுவலிபடுவன்வர-இவ்வியாதிகள் வருவதினால், இருவிழிகள் பீளைசாரிடா-இரண்டு கண்களிலும் பீளைசேர்ந்தும், ஈளைமேலிடா-கபம் அதிகரித்து, வழவழென உமிழும் அது கொழ கொழென ஒழுகவிழ்- உமிழ்நீர் வழவழளனவும், கொழகொழ எனவும் ஒழுக, வாடி ஊன்எல் லாம்-தசையெல்லாம் வற்றி, நாடிபேதமாய் - நாடி வித்தியாசப்பட்டு, மனையவள் மனம்வேறாய்-பெண்டாட்டியின் மனம் வேறுபட்டு, மனுகு மனுகுஎனும் மனையில் அனுதினமும் அணையும் ஒருமாதர்சீயெனு-தின மும் வீட்டில் சிறுமியரும் சிறுவரும் சீயென்று சொல்லி, கனவுதனில் இரதமொடு குதிரைவர - கனவின்கண் இரதம் குதிரை இவைகள் வர, நெடியசுடுகாடு வாவெனு வீடுபோவெனு-பெரிய சுடுகாடானது வாவெனவும் வீடு போவெனவும், வலது அழிய விரகு அழிய உரை குழறி விழிசொருகி வாயுமேலிடா ஆவிபோகும்நாள் - வலது முத

லியவைகள் அழிக உயிர்போகின்ற நாளில், மனிதர்கள் பலபேச-பல வகையான பேச்சுக்களை மனிதர்கள்பேசவும், இறுதி இதோடு அறுதி யென உறவின் முறை கதறி அழ-இது கடைசிகாலமாகும் இத்துடன் எல்லாம் அற்றுப்போய் விட்டதென்று சுற்றத்தார் கதறியழவும், ஏழை மாதரார் மோதிமேல்விழா - பெண்களழுது மேலேவிழவும், எனது உடைமை எனது அடிமை எனும் அறிவு சிறிதும்அற-எனது உட்மை என்னுடைய அடிமை என்பதொழிய, ஈமூலோவெனு வாயைஆவெனு-ஈக்கள் மூலோவென்று மொய்க்கவும் வாயை ஆஎன்று அங்காந்து திறந்துகொண்டு, விடுகுபறை சிறுப்றைகள் திமிலையொடுதவில் அறையபறை சிறுபறை இவைகள் பலவித வர்த்தியங்களை வாசிக்க, ஈமதேசம் பேய்கள் சூழ்தரா-சுடுகாட்டில் பேய்கள்சூழ்ந்து, எரிதனில் இடும்வாழுவே - அக்கினியிலிடும் வாழ்வேயாம், இணையடிகள் பரவும் உனது அடியவர்கள் உபயபாதங்களை வணங்கும் உன்னுடைய அடியார்கள் மிகவும் என்னை ஏசிடார்களோ-மிகவும்என்னைப் பழிக்கமாட்டார்களா, பாசநாசனே-பாசமற் பாசம் அற்றுப்போம்படி செய்பவனே! இருவினையும் மலமும் அற-நல்வினை தீவினைகளும் மும்மலங்களும் ஒழிய, இறவியொடு பிறவியற-இறப்பும் பிறப்புஒழியவும், ஏகபோகமாய்-ஏகபோகமாய், நீயுநானுமாய் இருகும் வகை-நீயும் நானுமாக இருகும்விதம், பரமசுகம் அதனை-உயர்ந்த சுகத்தை, இடைமருதில் ஏக நாயகாலோகநாயகா இமையவர் பெருமாளே-இடைமருதிலுள்ள ஏகநாயகனே! லோகநாயகனே! தேவர்களுக்குதவியாகுபவனே! அருள் - திருவருள்செய்வாய்.(எ-று)

திருக்கரபுரம்.

99. தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத் தனதனத் தனதனத்—தனதான.

ஒருவரைத் தனிமனைச் சயனமெத் தையினில்வைத்
தொருவரைத் தமதலைக் கடையினிற் சுழலவிட்
டொருவரைப் பரபரப் பொடுதெருத் திரியவிட்
டினிதாக,

ஒருவரைத் தமதனைக் கருகுறப் புணரவிட்
டொருவரைப் பரவசப் படவுட்ற் றழுவலுற்
றுயிர்பிழைப் பதுகழுத் தள்வுமுப் பசமெனச்
செயுமானர்,

தருமயற் ப்ரமைதனிற் பதனெறிக் கபலெனச்
சரியையிற் கிரியையிற் றவமுமற் றெனதுதைந்
தனமவத் தினிலிறைத் தெவருமுற் றிகழ்வுறத்
திரிவேனைச்,

சகலதுர்க் குணமறச் சகலசற் குணமுறத்
தரணியிற் புகழ்பெறக் கருணையுந் றனதுபொற்
சரணமெப் பொழுதுநட் பொடுநினைத் திடவருட்
டருவாயே,

குருமொழித் தவமுடைப் புலவரைச் சிறையில்வைத்
தரவுமுக் கிரமவினைத் திடமரக் கரைமுழுக்
கொடியதுர்க் குணவவத் தரைமுதற் றுரிசறுத்
திடும்வேலா,

குயில்மொழிக் கயல்விழித் துவரிதழ்ச் சிலைநுதற்
சசிமுகத் திளநகைக் கனகுழற் றனகிரிக்
கொடியிடைப் பிடிநடைக் குறமகட் டிருவினைப்
புணர்வோனே,
கருமுகட் சமயர்கட் கணியறக் கவையுடைப்
பரிதலைச் சமணரைக் குல்முதற் பொடிபடக்
கலகமிட் டடலுபர்க் கழுவினுச் சியினில்வைத்
திடுவோனே,
கமுகினிற் குலையறக் கதலியிற் கனியுகக்
கழையின்முத் தமுதிரக் கயல்குதித் தலவுநற்
கனவெயிற் றிகழ்திருக் கரபுரத் தறுமுகப்
பெருமாளே.

(ப-ரை) குருமொழி தவமுடை புலவரை-ஞானாசிரியருடைய உபதேசத்தால் தவஞ்செய்தலையுடைய தேவர்களை, சிறையில்வைத்து-சிறையிலிட்டு, அறவும் உக்கிரம் விளைத்திடும் அரக்கரை-மிகவும் துன்பம் உண்டாக்கின ராட்சதர்களை, முழுகொடிய துர்க்குண அவத்தரை-முழுமையும் கொடிய துர்க்குணங்கள் உடையவரை, முதல்துரிசுஅறச் திடு வேலா - முதலில் குற்றம்நீங்கின வேலாயுதத்தை யுடையவனே! குயில்மொழிகயல்விழி துவர் இதழ்-குயிலைப்போலுஞ் சொல்லையும் சேல்கெண்டைபோலுங் கண்களையும் பவழம்போலும் இதழையும், சிலைநுதல் சசிமுகம் இளநகை கனகுழல் தனகிரி கொடியிடை-வில்லைபோலும்நெற்றியையும் சந்திரன்போன்ற முகத்தையும் இளமையான பற்களையும்! மேகம்போலும், கூந்தலையும் மலைபோலும் முலைகளையும்

கொடிபோலும் இடைப்பினையும், பிடியாடை-பெண்யானைபோலும்நடை யினையுமுடைய,குறமகள் திருவினை புணர்வோனே - குறப்பெண்ணான வள்ளிநாய்ச்சியாரைப்புணர்பவனே! கருதுகட்சமயர்களுக்கு அணிபறக வையுடைபறிதலை - நினைக்கின்ற கவையுடைமையும் பறிதலையையும் உடைய, சமணரைக்குலமுதல்பொடிபட - சமணர்கள் குலமொழிந்து பொடியாம்படி ! கலகமிட்டு-கலகஞ்செய்து ! உடல் உயிர்கழுவின் உச்சியில் வைத்திடுவோனே - சரீரத்தையும் உயிரையும் கழுவில் ஏற்றினவனே ! கமுகினில்குலையற-கமுகினின்றும் குலையறவும்! கதலியில்கனியுக-வாழைவாழையினின்றுசிந்தவும், கழையின்முத்தம்-உதிரகரும்பினின்றும்முத்துஉதிரவும்! கயல்குதித்து-கயல்மீனானது குதித்து! உலவு ட்- உலாவுகின்ற. நல்கனஎயிற்றிகழ்-நல்லகனத்த மதில்விளங்குகின்ற! திருக்கோபுரத்து ஆறுமுகபெருமாளே-திருக்கரபுரத்தில் எழுந்தருளியிருக்கின்றஇளையபெருமாளே, ஒருவரைதனிமனைசயனம்மெத்தையினில்வைத்து-ஒருவரை வீட்டுச் சயனமெத்தையில்வைத்தும், ஒருவரை தமதலைக்கடையினில் சுழலவிட்டு -ஒருவரை தலைக்கடையினில்கழலவிட்டும், ஒருவரை பரபரப்பொடு:தெருத்திரியவிட்டு-ஒருவரை தெருவில்திரியவிட்டும், இனிதாக-இனிமையாக, ஒருவரை தமது அணைக்கு அருகு மருவவிட்டு-ஒருவரைத் தம்முடைய அணைக்குச் சமீபத்தில் மருவவிட்டும், ஒருவரை பரவசப்பட உடல் தழுவல் உற்று-ஒருவரைப் பரவசமடைந்து சரீரத்தோடு சரீரந் தழுவி, உயிர்பிழைப்பது கழுத்தளவும் உப்பசமெனச் செயுமானர்-உயிர்பிழைப்பது கழுத்தறவு உப்பிசமென்று செய்யும் பெண்கள், தரும்-கொடுக்கின்ற, மயல்ப்ரமைதனில் தபநெறிக்கு அயல் என-மயக்கமான மாயையில் தவநெறிக்கு அப்புறமென்று, சரியையில் கிரியையில் தவமும்அற்று - சரியையிலும் கிரியையிலும் செய்யவேண்டிய தவமும் ஒழிந்து, எனதுகைதனம், அவத்தினில் இறைத்து-என்னுடைய கைப்பொருள்களை வீணாகச் செலவழித்து, எவரும்

முன்திகழ்வுற திரிவேனை-யாவர் முன்னும் திரிகின்றஎன்னை, சகல துர்க்குணம் அற-சர்வதீக்குணங்களும் ஒழியவும், சகலசர்க்குணம்உற-சர்வநற்குணங்களும் அடையவும், தரணியில் புகழ்பெற-உலகத்தில் கீர்த்தி யடையவும், கருணை உற்று - கிருபைபெற்று, உனதுபொன்சரணம் உன்னுடைய அழகிய திருவடிகளை ! எப்பொழுதும் - சதாகாலமும் நட்பொடுநினைத்திட-ஸ்நேகத்துடன் நினைக்க, அருள் தருவாய் - திருவருள் கொடுப்பாய். (எ-று)

விநாயகமாலை.

100. தனதன தானனதானன தனதன தானனதானன
தனதன தானனதானன—தனதான

சரவண சாதாநமோநம கருணைப ஸ்ரீதேவாநமோநம
சததள பாதாநமோநம ௳விராம
தருணசு காயாநமோநம நிருபநல் வீராநமோநம
சமதள வூராநமோநம ௳சகதீசா
பரமசொ ரூபாநமோநம சுரபதி பூபாநமோநம
பரிமள நீபாநமோநம ௳விமைகாளி
பகவதி பாலாநமோநம விகபர மூலாநமோநம
பவுருஷ சீலாநமோநம ௳வருட்டாராய்
இரவிபு மாகாசபூமியு மதியமும் வாய்வாகவானவ
ரெவர்களு மீடேறவேழ்கடன் ௳முற்றியோவென்
றிடர்ப்பட மாமேருபூதர மடிபட வேதாநிசாசர
கிகல்கெட மாசேனை மேலயில் ௳விடுவோனே

மாகத வாகாரவாயனு மிரணிய வாகாரவேதனும்
வசவென்னு மாகாரவீசனு மடிபேணா

மயிலுறை வாழ்வேவிநாயக மலையுறை வேலாமகாரத
வனசரராதாரமாகிய பெருமாளே

(ப-ரை) இரவியும் ஆகாசம்பூமியும்-சூரியனும் ஆகாசமும் பூமியும், மதியமும் வாய்வாக-சந்திரனும் வாயுவும், மானவர் எவர்களும் ஈடேற-எல்லாத்தேவர்களும் உஜ்ஜீவிக்கவும், ஏழ்கடல் முறையோ என்வறு இடர்பட-சத்தசாகரங்களும்சப்திக்கவும், மாமேருபர்வதம் அடிபட-மகா மேருவானது அடிபடவும், ஏகாம் நிசாசரர் இகல்கெட-குற்றமுள்ள ராட்சதர்களுடைய பகைமை நீங்கவும், மாசேனைமேல் அயில் விடு வோனே-பெரிய சேனையின்மேல் வேலாயுதத்தை பிரயோகஞ் செய் தவனே! மரகத ஆகாரமாயனும் - மரகதம்போலும் சரீரத்தையுடைய விஷ்ணுவும், இரணிய ஆகாரவேதனும் - பொன்போலும் சரீரத்தையு டைய பிரமனும், வசுஎனும் ஆகாரஈசனும் அடிபேண - வசுவென்னும் சொரூபத்தையுடைய ருத்திரனும் ஆகிய திரிமூர்த்திகளும் திருவடிக ளில் வணங்க, மயில் உறைவாழ்வே - மயில்வாகனத்தின் ஆரோகணிக் கும் வாழ்க்கையே! விநாயகமலை உறைவேலா-விநாயகமலையில் எழுந்த ளி யிருக்கின்ற வேலாயுதனே! மகாரதவனசரர் ஆதாரமாகிய பெருமா ளே-மகாரதத்தையுடைய வேடர்களுக்கு ஆதாரமான சுப்பிரமணியக்கட வுளே! சரவணசாதா நமோநம-சரவணசாதா நமஸ்காரம், கருணைய தேவா நமோநம-கருணைக்கடவுளே! நமஸ்காரம், சததளபாதா நமோ நம-நூறிதழ்தாமரை மலர்போலும் திருவடிகளை யுடையவனே! நமஸ் காரம், அபிராம தருணசகாயா நமோநம-அழகனே! ஆபத் ஸகாயனே! நமஸ்காரம், நிருபநல்வீரா நமோநம-நல்லவீரனேநமஸ்காரம், சமதளவூரா நமோநம-சமதளவூரனே நமஸ்காரம்,பரமசொரூபாநமோநம-உயர்ந்தசொ

ருபத்தையுடையவனேநமஸ்காரம்,சுரபதிபூபா நமோநம-தேவேந்திரனுக்குதலைவனே நமஸ்காரம், பரிமள நீபா நமோநம-வாசனையுள்ளகடப்பமலர்மாலை யணிந்தவனே நமஸ்காரம், உமைகாளி பகவதிபாலா நமோநம-உமாதேவியும், காளியும் பகவதியுமானபார்வதியின் புத்திரனே நமஸ்காரம்! இகபரம்மூலா நமோநம - இம்மைமறுமைகளுக்கு ஆதாரமானவனே நமஸ்காரம், புருஷசீலா நமோநம-பரிசுத்த புருஷனே! நமஸ்காரம் (ஆகையால்)அருள்தாராய்-தேவரீர்கிருபையைசெய்யவேண்டும்.(எ-று.)

திருப்புகழ் 100-பாடல் உரையும்,

முற்றிற்று.